# உதயன்

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

விலை - 20
பக்கங்கள் - 28+4

சுடர் 32 | கதிர் 41 | வள்ளுவர் ஆண்டு 2047 | மார்கழி 22, வெள்ளிக்கிழமை 06.01.2017


## தனியார் துறை வேலைநாள் குறைக்கப் பேச்சு

கொழும்பு, ஜன. 6

வரவு - செலவுத் திட்டத்தில் அறிவிக்கப்பட்டதைப் போன்று தனியார் ஊழியர்களின் வேலை நாள்களை 5 நாள்களாகக் குறைப்பது தொடர்பில் பேச்சுக்கள் ஆரம்பிக்கப்பட்டுள்ளதாக, தொழில் ஆணையாளர் நாயகம் சாந்

>> 25

# மாவீரர்களை முன்னிறுத்தி அரசியல் மோதல் ஆரம்பம்

யாழ்ப்பாணம், ஜன. 6

தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத்திலிருந்து களமாடி வீரச்சாவடைந்த மாவீரர்களை - வீரமறவர்களை முன்வைத்துக் குழுச் சண்டைகள் - அரசியல் மோதல்கள் தாயக தேசத்திலும் ஆரம்பமாகியுள்ளன. தமிழர்கள் புலம்பெயர்ந்து வாழும் தேசங்களில் மாவீரர்களை முன்வைத்து மோதல்கள் ஏற்கனவே நடைபெற்று வருகின்றன. மாவீரர் தினத்தை ஒரே நாளில்

>> 25



## பரிந்துரைகளை வரவேற்கிறார் அல் ஹூசைன்



கொழும்பு, ஜன. 6

நல்லிணக்கப் பொறிமுறை குறித்த கலந்தாலோசனைச் செயலணியின் மக்கள் கருத்து அறியும் அறிக்கையின் பரிந்துரைகளையும் குறிப்பாக கலப்பு

>> 25

## நாடாளுமன்ற உறுப்பினரா பின்னணி?

### பொலிஸாரிடம் குழுவினர் கேள்வி

யாழ்ப்பாணம், ஜன. 6

மாவீரர் துயிலுமில்லத்தில் சட்டவிரோதமாக நினைவிடம் கட்டுவதாக, உங்களுக்கு அறிவித்தவர், கிளிநொச்சியிலுள்ள நாடாளுமன்ற உறுப்பினரா?

இவ்வாறு நினைவுக் கல்லறைக் கட்டுமானப் பணியில்

>> 25

## புதிய அரசமைப்புக்கு எதிராகப் போராட்டம்

### நாளை நுகேகொடையில்

கொழும்பு, ஜன. 6

நாட்டைப் பிளவுபடுத்தும் புதிய அரசமைப்பை எதிர்த்து நாளை கொழும்பு நுகேகொடையில் மாபெரும் மக்கள் போராட்டம் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளதாகப் பொதுபலசேனா அமைப்பு அறிவித்துள்ளது. இந்தப் போராட்டத்துக்கு சிங்கள மக்களை அணிதிரளுமாறும் அந்த அமைப்பு அறைகூவல் விடுத்துள்ளது.

பொதுபலசேனா

>> 04

# புதிய அரசமைப்பு உருவாக்கத்தில் மேலும் பின்னடைவு

கொழும்பு, ஜனவரி 6

புதிய அரசமைப்பை உருவாக்குவதற்கான முயற்சிகள் மேலும் பின்னடைவைச் சந்தித்துள்ளன. நாடாளுமன்றத்தில் எதிர்வரும் 9ஆம் திகதி முதல் 3 தினங்கள் நடைபெற இருந்த புதிய அரசமைப்பு

>> 25

**உப குழுக்களின் அறிக்கை மீதான விவாதம் திடீரென ஒத்திவைப்பு**

**வழிகாட்டல் குழுவின் அறிக்கை எப்போது என்பதிலும் முடிவில்லை**

## ராஜிதவின் கருத்தை நிராகரித்தது ஐ.நா.

### நிலைப்பாட்டில் மாற்றமில்லை என்று மீண்டும் வலியுறுத்தல்

கொழும்பு, ஜன. 6

ஐ.நா. மனித உரிமைகள் சபையின் நிலைப்பாட்டில் மாற்றமில்லை என்பதை மீண்டும் வலியுறுத்தியுள்ளதுடன், அமைச்சர் ராஜித சேனாரத்னவின்

>> 25

## அறிக்கையை அரசு ஏற்கச் செய்வோம்

### அது தம்மால் முடியும் என்கிறார் பாக்கியசோதி

கொழும்பு, ஜன. 6

இரண்டு ஆண்டுகளுக்கு முன்னர் இதே சிவில் சமூகம்தான் நாட்டில் ஆட்சி மாற்றத்தை ஏற்படுத்தியது. எமது அறிக்கையை நிராகரித்த அரசிடம், அதை ஏற்கச் செய்யும் 'மாற்றத்தை' எம்மால் ஏற்படுத்த முடியும் என்று நம்புகின்றோம்.

இவ்வாறு நல்லிணக்கச் செயலணியின் செயலர் பாக்கியசோதி சரவணமுத்து தெரிவித்தார்.

>> 25

## 2020 வரை கூட்டு அரசை குழப்ப இடமளியாது சு.க.

### அமைச்சர் அமரவீர திட்டவட்டம்

கொழும்பு, ஜன. 6

2020ஆம் ஆண்டு வரை கூட்டு அரசைக் குழப்பியடித்து நாட்டை ஸ்திரத்தன்மையற்ற நிலமைக்குக் கொண்டு செல்வதற்கு சிறிலங்கா சுதந்திரக் கட்சி ஒரு போதும் அனுமதியளிக்காது.

இவ்வாறு ஐக்கிய மக்கள் சுதந்திர

>> 25

## பிரியங்கரவின் பாதுகாவலர்கள் நால்வர் நீக்கம்

கொழும்பு, ஜன. 6

கூட்டு அரசிலிருந்து விலகிய இராஜாங்க அமைச்சர் பிரியங்கர ஜயரத்னவின் பாதுகாப்புக்கு இதுவரை வழங்கப்பட்டிருந்த 5 பொலிஸ் அலுவலர்களில் நால்வர் விலக்கப்பட்டுள்ளனர். அவருக்கு வழங்கப்பட்டிருந்த 5

>> 25

## முச்சந்தி முரளி



குழப்பமாட்டம் என்று சொல்லிக்கொண்டே நல்லா எல்லாரையும் குழப்புவினம் கண்டியளோ!

## சீன முதலீட்டு வலய ஒப்பந்தம் ஒத்திவைப்பு

### அமைச்சர் சமரவிக்ரம அறிவிப்பு



கொழும்பு, ஜன. 6

சர்ச்சையையும், எதிர்ப்பையும் சம்பாதித்துள்ள. அம்பாந்தோட்டை முதலீட்டு வலயம் தொடர்பான ஒப்பந்தம் கைச்சாத்திடும் நிகழ்வு ஒத்திவைக்கப்பட்டுள்ளது. பன்னாட்டு வர்த்தக அமைச்சர் மலிக் சமரவிக்ரம

>> 25

## கூட்டமைப்பின் பங்காளிகள் கூட்டம் இன்று

யாழ்ப்பாணம், ஜன. 6

புதிய அரசமைப்பு உருவாக்கம் தொடர்பில் பல்வேறு சர்ச்சைகள் எழுந்துள்ள நிலையில், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பங்காளிக் கட்சிகளுக்கு இடையிலான கூட்டம் இன்று மாலை நடைபெறவுள்ளது.

கூட்டமைப்பின் பங்காளிக் கட்சிகளுள் ஒன்றான ஈ.பி.ஆர்.எல்.எவ். அமைப்பு, தமிழ்த் தேசியக்

>> 25

## ஐ.தே.க.—சு.க. பிணைப்பு 3 ஆண்டுகளும் தொடரும்

கொழும்பு, ஜன. 6

ஐக்கிய தேசியக் கட்சியினதும் சிறிலங்கா சுதந்திரக் கட்சியினதும் கூட்டுப் பிணைப்பு அடுத்த மூன்று ஆண்டுகளுக்குத் தொடர்ந்தும் நிலைக்கும் என்று ஐக்கிய தேசியக் கட்சியின் மைய நிறை

>> 25




குடும்பத்தவர் அனைவரையும் சேமித்து சுபீட்சம் பெற DFCC வங்கி அழைக்கின்றது!

ரூபா.25,000 வைப்பிலிட்டு ரூபா.1,250 முதல் ரூபா.2,500 வரை வெகுமதிகளை பெற்றுக் கொள்ளுங்கள்.

இச்சலுகை 2017 ஜனவரி 31 வரை மட்டுமே. நிபந்தனைகளுக்கு உட்பட்டது.

24 மணிநேர அழைப்பு மையம்: 0112 350000

www.dfcc.lk

DFCC வங்கி

# தினமும் 8 மணித்தியாலம் மூடப்படும் கட்டுநாயக்கா

## இன்று முதல் ஓடுபாதை சீரமைப்பு

கொழும்பு, ஜன. 6

கட்டுநாயக்கா பன்னாட்டு வானூர்தித் தளத்தின் ஓடுபாதை சீரமைப்புப் பணிகள் காரணமாக வானூர்தி நிலையம் இன்று தொடக்கம் தினமும் 8 மணித்தியாலங்கள் மூடப்படவுள்ளது. பயணிகளை 5 மணித்தியாலங்களுக்கு முன்னர் வருகை தருமாறு சிவில் வானூர்தி சேவைகள் பிரதி அமைச்சர் அசோக் அபேசிங்க தெரிவித்தார்.

கட்டுநாயக்கா பன்னாட்டு வானூர்தித் தளத்தின் ஓடுபாதை 5 மில்லியன் டொலர் செலவில் மறுசீரமைக்கப்படவுள்ளது. காலை 8 மணி தொடக்கம் மாலை 4 மணி வரையான 8 மணித்தியாலங்கள் இதற்காக வானூர்தித் தளம் மூடப்பட்டிருக்கும். நெதர்லாந்து அரசின் கண்காணிப்பின் கீழ் சீன நிறுவனம் மறுசீரமைப்புப் பணிகளை மேற்கொள்ளவுள்ளது. புதிதாக நிர்மாணிக்கப்படுகின்ற வானூர்தி ஓடுப்பாதை 3 ஆயிரத்து 335 மீற்றர் நீளமும் 45 மீற்றர் அகலமும் கொண்டு அமைக்கப்படவுள்ளது.

(த-5)

# மைத்திரி - ரணில் ஆட்சியை வீழ்த்தும் அஸ்திரம் நாளை

## அம்பாந்தோட்டையில் ஏவப்படும் என்று மகிந்த அணி அறிவிப்பு

கொழும்பு, ஜன. 6

நல்லாட்சி அரசை ஆட்சியிலிருந்து விரட்டியடிப்பதற்கான முதல் அஸ்திரம் நாளை 7ஆம் திகதி அம்பாந்தோட்டையிலிருந்து ஏவப்படும்.

மகிந்த ஆதரவு அணி நாடாளுமன்ற உறுப்பினர் ரஞ்சித் டீ சொய்ஸா தெரிவித்தார்.

அரசுக்கு எதிரான இந்தப் போராட்டம் நேற்று 5 ஆம் திகதி ஆரம்பிக்கப்பட இருந்தபோதிலும் தவிர்க்க முடியாத சில காரணங்களால் அது நாளைய தினத்துக்கு ஒத்தி வைக்கப்பட்டிருக்கின்றது என்று அவர் குறிப்பிட்டார்.

அவர் தெரிவித்ததாவது:

இராஜாங்க அமைச்சர் பியங்கர ஜயரத்ன அரசிலிருந்து விலகியதைத் தொடர்ந்து மேலும் பலர் விலகவுள்ளனர். அவர்கள் ஏற்கனவே மகிந்த அணியுடன் கலந்துரையாடி வருகின்றனர். நல்லாட்சி அரசு நாளுக்கு நாள் பலவீனமாகிக் கொண்டிருக்கின்றது.

இப்படியே சென்றால் எதிர்காலம் இருண்ட யுகத்திலேயே முடிவடையுமென மக்களுக்குத் தெளிவாக விளங்கியுள்ளது. நாட்டைக் காப்பாற்றவேண்டுமானால் அரசு மாற வேண்டும் என்ற எண்ணம் அவர்களது மனதில் ஆழமாக வேரூன்றிப் போயுள்ளது.

அரசைப் பதவி இறக்குவதற்கான சகல ஏற்பாடுகளையும் நாங்கள் ஏற்கனவே செய்திருக்கின்றோம். எங்களது முதலாவது அஸ்திரம் நாளை 7 ஆம் திகதி அம்பாந்தோட்டையில் தொடுக்கப்படும் - என்றார்.

(த-5)

# இனவாதத்துக்கு மைத்திரி, ரணில் விலைபோகக்கூடாது

## ரெலோவின் கொள்கை பரப்புச் செயலர் கோரிக்கை

கொழும்பு, ஜன. 6

ஜனாதிபதி மைத்திரிபால மற்றும் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க இருவரும் இனவாதத்துக்கு விலை போகாமல், தமிழ் மக்களுக்கான நிரந்தரத் தீர்வை அடைவதற்கு, புதிய அரசமைப்பு உருவரக்க விவகாரத்தில் இதயசுத்தியுடன் செயற்படவேண்டும்.

இவ்வாறு ரெலோ அமைப்பின் கொள்கைப் பரப்புச் செயலர் கணேஸ்வரன் வேலாயுதம் தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் அனுப்பியுள்ள செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது:

இலங்கையில் தற்போது ஏற்பட்டுள்ள அரசியல் நிலவரங்கள் புதிய அரசமைப்பு விவகாரத்தை நசுக்கும் வகையில் அமைந்துள்ளன. தமிழ் மக்களின் நீண்டகாலப் பிரச்சினைக்குத் தீர்வைப் பெற்றுக் கொடுத்து நல்லாட்சிக்குரிய பெயரைப் பெற்றுக் கொள்ள வேண்டிய அரசியல் தலைமைகள், இனவாதத்துக்கு விலைபோனவர்களாகியுள்ளனர்.

புதிய அரசமைப்பில் கூட்டாட்சிக்கு இடமில்லை, பௌத்தத்துக்கே தொடர்ந்து முன்னுரிமை, பௌத்த சமயத் தலைவர்களின் ஆசீர்வாதம் இன்றி அரசமைப்பு வரையப்படாது என்ற விடயங்கள், நல்லாட்சிக்கு ஆதரவு வழங்கிய தமிழ் மக்களுக்கு ஏமாற்றமாக அமைந்துள்ளது.

தமிழ் மக்களின் எதிர்பார்ப்புக்களையும் - ஏக்கங்களையும் புரிந்து கொண்டு நல்லாட்சி அரசின் தலைவர்கள் செயற்படவேண்டும் - என்று உள்ளது.

(த-5)

### ஆழ ஊடுருவும் படையணியின்

# கிளைமோர்த் தாக்குதலில் உயிரிழந்தோருக்கு அஞ்சலி

யாழ்ப்பாணம், ஜன. 6

இராணுவத்தின் ஆழ ஊடுருவும் படையினரால் மேற்கொள்ளப்பட்ட கிளைமோர் தாக்குதலில் கொல்லப்பட்ட பணியாளர்களின் 10 ஆவது ஆண்டு நினைவு தினம், வவுனியா வடக்கு விவசாயப் போதனாசிரியர் அலுவலகத்தில் நேற்றுக் கடைப்பிடிக்கப்பட்டது.

நெடுங்கேணி பண்ணையாளர் சங்கத்தின் ஏற்பாட்டில் போதனாசிரியர் யோகேஸ்வரன் தலைமையில் நிகழ்வுகள் இடம்பெற்றன.

2007ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 5ஆம் திகதி, நெடுங்கேணிப் பகுதியில் அலுவலக வாகனத்தில் கடமையின் நிமித்தம் பயணித்துக்கொண்டிருந்த இரு பணியாளர்கள், கிளைமோர் தாக்குதலில் உயிரிழந்தனர். விவசாயத் திணைக்களப் பணியாளர்களான கணேசலிங்கம் மற்றும் மகேந்திரன் ஆகியோரே இவ்வாறு சாவடைந்தனர்.

அவர்களது திருவுருவப் படத்துக்கு மலர்மாலை அணிவித்து விளக்கேற்றி அஞ்சலி செலுத்தப்பட்டது. நிகழ்வில் உரையாற்றிய நெடுங்கேணிப் பண்ணையாளர் சங்கத்தினைச் சேர்ந்த பூபாலசிங்கம், நெடுங்கேணிப் பகுதி விவசாயிகளின் நன்மைக்காக 30 ஆண்டுகள் பணியாற்றிய இரு முக்கிய பணியாளர்களை இதே தினத்தில் 10 ஆண்டுகளுக்கு முன்னர் கிளைமோர்த் தாக்குதலில் இழந்தோம். இணைந்து பணியாற்றிய இருவரும் சாவிலும் இணைந்தே சென்றனர். எமது பகுதி விவசாயிகளின் நன்மைக்காகப் பாடுபட்ட இவர்களை விவசாயிகள் தமது வாழ்நாளில் நினைவு கூரக் கடமைப்பட்டவர்கள் - என்றார்.

அஞ்சலி நிகழ்வில் அலுவலகப் பணியாளர்கள், பண்ணையாளர்கள் என்று சுமார் 70 இற்கும் மேற்பட்டோர் கலந்து கொண்டனர்.

(த-5-10)

# ஒரே தடவையில் 14 மருத்துவர்கள் வெளிநாட்டுக்கு

## விசாரணைக்கு அமைச்சர் பணிப்பு

கொழும்பு, ஜன. 6

ஒரே தடவையில் 14 மருத்துவர்கள் வெளிநாட்டுக்குச் சென்றமை தொடர்பில் விசாரணைகளை நடத்துமாறு சுகாதார அமைச்சர் ராஜித சேனாரத்ன உத்தரவிட்டுள்ளார்.

மகரகம புற்றுநோய் வைத்தியசாலையில் பணியாற்றும் 14 மருத்துவர்கள், நோர்வேயில் நடைபெறும் செயலமர்வில் பங்கேற்பதற்குச் சென்றுள்ளனர். ஒரே தடவையில் மருத்துவர்கள் இவ்வாறு சென்றமை தொடர்பிலேயே விசாரணை நடத்துமாறு ராஜித உத்தரவிட்டுள்ளார்.

யார் இதற்கான அனுமதியை வழங்கினார்கள் என்பது தொடர்பிலும் விசாரணைகளை மேற்கொள்ளுமாறு அவர் பணித்துள்ளார். (த-5)

# சி.ஐ.டியினர் எனக் கூறி வீடு புகுந்து கொள்ளை

## முல்லைத்தீவில் நள்ளிரவு பயங்கரம்

முல்லைத்தீவு, ஜன. 6

சி.ஐ.டியினர் வந்திருக்கின்றோம். கதவைத் திறவுங்கள் எனக் கூறி முகமூடி தரித்தவாறு வீட்டினுள் நுழைந்தவர்கள் அங்கிருந்த 60 ஆயிரம் ரூபா பணத்தைக் கொள்ளையடித்துச் சென்றனர் எனப் பொலிஸார் தெரிவித்தனர்.

இந்தச் சம்பவம் நேற்று முன்தினம் இரவு 11 மணியளவில் முல்லைத்தீவு செல்வபுரம் பகுதியில் உள்ள பந்தல் வாடகைக்குக் கொடுக்கும் வீட்டில் இடம்பெற்றுள்ளது.

இதுபற்றித் தெரியவருவதாவது:

நேற்று முன்தினம் நள்ளிரவு வீட்டுநபரின் பெயரைச் சொல்லி அழைத்தவர்கள், தாம் சி.ஐ.டியினர் எனவும், புலிகளின் பணம் தொடர்பில் விசாரிக்க வேண்டும் என்றும் கூறிக் கதவைத் திறக்குமாறு கோரினர். அவர்களில் இருவர் வெளியில் நிற்க இருவர் வீட்டுக்குள் நுழைந்து, புலிகளின் பணத்தைப் பயன்படுத்தியே உங்கள் மகனை வெளிநாடு அனுப்பியுள்ளீர்கள் வீட்டாரே என்று மிரட்டியுள்ளனர். அதற்கு வீட்டு உரிமையாளர் தான் வங்கி ஒன்றில் கடன்பெற்ற ஆவணங்களைக் காட்டியுள்ளார். ஆவணங்களைப் பார்வையிட்ட சந்தேக நபர்கள் வீட்டைச் சோதனையிடவேண்டும் என்று கூறி அங்கிருந்தவர்களை வீட்டின் நடுவே அமர்த்திவிட்டுச் சல்லடை போட்டனர்.

வீட்டு உரிமையாளரின் அடையாள அட்டையை வாங்கிக் கொண்டு நாளை மறுநாள் மீண்டும் விசாரணைக்கு வருவோம் என்று கூறிச் சென்றனர்.

சந்தேகநபர்களில் ஒருவர் தமிழில் சரளமாகப் பேசியதாகவும் மற்றவர் சிங்களத்திலும் கொச்சைத் தமிழிலும் கதைத்தாகவும் கூறப்பட்டது.

இது குறித்து வீட்டின் உரிமையாளர் முல்லைத்தீவு பொலிஸ் நிலையத்தில் நள்ளிரவே முறைப்பாட்டைப் பதிவு செய்தார். பொலிஸார் அதிகாலை 2 மணியளவில் குறித்த வீட்டுக்குச் சென்றனர். வீட்டில் பணம் ஏதாவது இருந்ததா எனப் பொலிஸார் வீட்டு உரிமையாளரைக் கேட்டனர். உடனே பணமிருந்த இடத்தை வீட்டு உரிமையாளர் பார்த்தார். இதன் போது அங்கிருந்த 60ஆயிரம் ரூபா பணம் காணாமல் போயுள்ளமை தெரியவந்தது. உரிமையாளரின் அடையாள அட்டை வீட்டுக்கு வெளியே வீசப்பட்டிருந்தது எனப் பொலிஸார் தெரிவித்தனர்.

மேலதிக விசாரணைகளை மேற்கொண்டுள்ளதாகப் பொலிஸார் மேலும் கூறினர்.

(த-21,7)

# சிவஞானசோதியின் இடத்துக்கு விக்கிரமசிங்க நேற்று நியமனம்

கொழும்பு, ஜன. 6

சிறைச்சாலைகள் மறுசீரமைப்பு மறுவாழ்வளிப்பு மீள்குடியேற்றம் மற்றும் இந்து மத அலுவல்கள் அமைச்சின் புதிய செயலாளராக டப்ளியூ.எம்.பி.ஏ.விக்கிரமசிங்க நேற்று வியாழக்கிழமை பதவியேற்றார்.

இதற்கு முன்னர் இந்த அமைச்சின் செயலராக வே.சிவஞானசோதி பணியாற்றியிருந்தார். பொருத்து வீடு தொடர்பில், அமைச்சர் சுவாமிநாதனுடன் ஏற்பட்ட முரண்பாடு காரணமாக அவர் இடமாற்றம் செய்யப்பட்டிருந்தார். ஆனால் அதனை அமைச்சர் சுவாமிநாதன் மறுத்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

(த-5)



# முஸ்லிம் மக்கள் புலிகளுக்கு ஆதரவு கொடுத்திருந்தால் அவலம் நடந்திராது

## கூறுகிறார் முஜிபுர் ரஹ்மான்

கொழும்பு, ஜன. 6

புலிகளின் போராட்டத்துக்கு முஸ்லிம்கள் ஒத்துழைப்பு வழங்கவில்லை. வடக்கிலிருந்து வெளியேற்றப்பட்டனர். புலிகளுடன் ஒத்துப் போயிருந்தால் இந்த அவலம் ஏற்பட்டிருக் காது. அரசும், சகோதர சிங்கள மக்களும், மீள்குடியேற்றத்துக்குத் தடைபோடும் இன வாதிகளும் இந்த உண்மையைத் தெளிவாக விளங்கிக்கொள்ள வேண்டும். யதார்த்தத்தை விளங்காது இனவாதிகள், அமைச்சர் ரிசாத் தும், முஸ்லிம்களும் காடுகளை அழிப்பதா கக் கூப்பாடு போடுகின்றனர்.

இவ்வாறு நாடாளுமன்ற உறுப்பினர் முஜிபுர் ரஹ்மான் தெரிவித்தார்.

வில்பத்துக் காட்டை அழித்து முஸ்லிம்கள் அங்கு சட்டவிரோதமாகக் குடியேறியுள்ளதாக மேற்கொள்ளப்பட்டு வரும் பரப்புரை தொடர் பிலும், வில்பத்து சரணாலயத்தை விஸ் தரித்து வன ஜீவராசிகள் வலயமாகப் பிர கடனப்படுத்தும் ஜனாதிபதியின் அறிவிப்பி னால் முஸ்லிம் சமூகம் எதிர்கொள்ளப் போகும் பாதிப்புகள் குறித்தும் விளக்கும் பத்திரிகையாளர் சந்திப்பு நேற்றுக் காலை கொழும்பு ரேணுகா விடுதியில் நடைபெற்றது.

மேலும் கருத்துத் தெரிவித்த முஜிபுர், வடக்கு முஸ்லிம்கள் தமது பரம்பரைக் காணிகளில் குடியேறும்போது இனவாதிகளும் இனவாதச் சூழலியலாளர்களும் அவர்களைக் கொடு மைப்படுத்துகின்றனர். தமது சொந்தக் காணி களில் வளர்ந்திருக்கும் பற்றைக் காடுகளை அழித்துக் குடியேறும்போது வில்பத்தை அவர்கள் அழிக்கின்றார்கள் என்கிறார்கள். அப்படியானால் அவர்கள் கள்ளத் தோணி களாக வந்தவர்களா?

26வருடங்களாகத்தென்னிலங்கையில்மூன்று பரம்பரையாக வாழும் இவர்கள் உடுத்த உடை யோடு நிர்க்கதியாக வந்தவர்களே. அவர்கள் வாழ்ந்த காணிகள் ஆக்கிரமிக்கப்பட்டுவிட் டன. அங்கு வாழ்ந்தோர் அவர்களின் காணி களில் ஒரு பகுதியை ஆக்கிர மித்துள்ளனர். இன்னும்சிலகாணிகள்புலிகளினால்சூறையாடப் பட்டுமாவீரர்களுக்கு பகிர்ந்தளிக்கப்பட்டுள்ளன. முஸ்லிம்கள் வில்பத்துக் காட்டை ஆக்கிரமிப் பதாக ஒரு பிரமையை ஏற்படுத்திச் சிங்கள சமூகத்தின் மத்தியில் ஒரு பிழையான கருத்தை விதைத்து வரும் இனவாதச் சூழலியலா ளர்களும், ஊடகங்களும் வவுனியா மாவட் டத்திலுள்ள வன பரிபாலனத் திணைக்களத் துக்கு உரித்தான கலாபோகஸ்வெல பிர தேசத்தில் அம்பாந்தோட்டையிலிருந்து மக் களைக் கொண்டுவந்து வீடமைத்துக் கொடுத்து, தொழில் வழங்கி, அங்கு குடியமர்த்தி 'நாமல் கம' என்ற கிராமமாக அதனை ஆக்கியிருப் பதைப் பற்றி ஏன் வாய் திறக்க மறுக்கின்றனர் - என்றார்.

இங்கு பேசிய தேசிய ஐக்கிய முன்னணியின் தலைவர் அசாத் சாலி, முஸ்லிம்களாகிய நாம் ஈழம் கேட்கவில்லை. எங்களை எங்க ளது சொந்த இடங்களில் நிம்மதியாக வாழ விடுங்கள். ஒட்டாரா குணவர்த்தன போன்ற வர்கள் எவருடைய பின்புலத்தில் செயற்படு கின்றார்கள் என்பது அவர்களது நடவடிக்கை களில் தெளிவாக விளங்குகின்றது. வில் பத்துப்பிரச்சினையில்மூக்கை நுழைத்துள்ள டலஸ், உதய கம்மன்பில போன்றவர்கள் அதி காரத்துக்கு வரத் துடிக்கின்றார்கள் என்பது அவர்களது இனவாதக் கருத்துக்களிலிருந்து புலப்படுகின்றது - என்றார். (த-5)

# அம்புலன்ஸில் நீதிமன்றத்துக்கு வந்தார் துமிந்த

கொழும்பு, ஜன.6

சாவுத் தண்டனை விதிக்கப்பட்டுள்ள முன்னாள் நாடாளுமன்ற உறுப் பினர் துமிந்த சில்வா நேற்றுக் கொழும்பு நீதிவான் நீதிமன்றில் முன்னிலைப்படுத்தப்பட்டார்.

துமிந்த சில்வாவைச் சிறைச்சாலை யிலிருந்து அழைத்துச் செல்வதற்கா கச் சிறப்பு அம்புலன்ஸ் வாகனம் ஒன்று அனுப்பிவைக்கப்பட்டிருந்தது. இலஞ்ச ஊழல் ஆணைக்குழுவால், துமிந்த சில்வாவுக்கு எதிராகத் தாக்கல் செய்த வழக்குகள் தொடர்பில் அவரை நீதிமன்றில் முன்னிலைப்படுத்து ம ாறு கொழும்பு மேலதிக நீதிவான் நீதிமன்றம் உத்தர விட்டிருந்தது.

சொத்துக்கள் தொடர்பான விவரங் களைக் கடந்த 3 வருடங்களாக சமர்ப் பிக்கத் தவறியமை காரணமாகவே முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் துமிந்த சில்வாவுக்கு எதிராக வழக் குத் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் பாரத லக்ஸ்மன் கொலை வழக்கு தொடர்பில் துமிந்த சில்வாவுக் குச் சாவுத்தண்டனை விதிக்கப்பட்டுள் ளமை குறிப்பிடத்தக்கது. (த)

# கைதான இந்திய மீனவர்கள் 10 பேருக்கும் விளக்கமறியல்

யாழ்ப்பாணம், ஜன. 6

இலங்கைக் கடற்பரப்பினுள் அத்துமீறி நுழைந்து மீன்பிடியில் ஈடுபட்ட குற்றச்சாட்டில் நேற்றுக் கைது செய்யப்பட்ட இந்திய மீனவர்கள் 10 பேரையும் எதிர் வரும் 19 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக் குமாறு ஊர்காவற்றுறை நீதிமன்று உத்தரவிட்டது.

இந்திய-இலங்கை மீனவர்களின் பிரச்சினைகள் தொடர்பில் கொழும்பில் சில தினங்களுக்கு முன்னர் பேச்சு இடம்பெற்றிருந்த நிலையில் இந்திய மீனவர் கள் நேற்று அத்துமீறியுள்ளனர்.

நெடுந்தீவுக் கடற்பரப்பில் நேற்று முன்தினம் புதன் கிழமை இரவு இந்திய மீனவர்கள் 10 பேரும் இரண்டு படகுகளுடன் காங்கேசன்துறைக் கடற்படையினரால் கைதுசெய்யப்பட்டனர்.

புதுக்கோட்டை ஜனதாப்பட்டினத்தைச் சேர்ந்த ராமன் ராஜேந்திரன் (வயது- 23), அருளாணந்தம் முனியசாமி (வயது - 40), கலிகப்பெருமாள் கலை (வயது - 22), காத்தவராஜன் மணியேந்திரா (வயது - 28), முனிய சாமி ரஞ்சித்குமார் (வயது - 15), விஜயேந்திரம் சுதந் திரன் (வயது - 19), விஜயேந்திரம் சுகன் (வயது - 18), செல்லையா கோவிந்தன் (வயது - 46), தங்கப்பாண்டி அலெக்ஸ்பாண்டி (வயது - 39), சுப்பரத்தினம் குணம் (வயது - 30) ஆகியோரே கைது செய்யப்பட்டனர்.

அவர்கள் கடற்றொழில் மற்றும் நீரியல்வளத்துறைத் திணைக்கள அதிகாரிகளிடம் நேற்றுப் பிற்பகல் ஒப்படைக்கப்பட்டு ஊர்காவற்றுறை நீதிமன்றில் பதில் நீதிவான் இ.சபேசனிடம் முற்படுத்தப்பட்டனர். இதன் போதே விளக்கமறியல் உத்தரவு பிறப்பிக்கப் பட்டது. (த-4,8,106)

# சிக்கலற்றது கூட்டாட்சி

## கூறுகிறார் டிலான் பெரேரா



கொழும்பு, ஜன. 6

கூட்டாட்சி என்பது சிக்கலானது அல்ல என் பது என்னுடைய தனிப்பட்ட நிலைப்பாடாக உள்ளது. ஆனாலும் ஒற்றையாடசி என்ற சுதந்திரக் கட்சியின் நிலைப்பாட்டுடன் ஒத் துப் போகின்றேன். இவ்வாறு சிறிலங்கா சுதந் திரக் கட்சியின் பேச்சாளரும், இராஜாங்க அமைச்சருமான டிலான் பெரேரா தெரி வித் தார்.

அவர் தெரிவித்ததாவது:

சிங்கள அரசமைப்பில் ஒற்றையாட்சி என்ற வசனம் இருந்தால் பரவாயில்லை என்ற நிலைப்பாட்டுக்குத் தமிழ்த் தேசியக் கூட்ட மைப்பைக் கொண்டு வருவதற்கான நடவடிக் கைகள் இடம்பெறுகின்றன.

ஒற்றையாட்சியின் கீழே அரசமைப்பு உரு வாக்கப்படவேண்டும் என்று மகிந்த அணி நாடாளுமன்ற உறுப்பினர் ஜீ.எல்.பீரிஸ் கூறு கின்றார். ஆனால், சிறிலங்கா சுதந்திரக் கட்சிக்குள் இருந்து கொண்டு ஒற்றையாட்சி என்ற பதத்தை அரசமைப்பு வரைவில் இருந்து மூன்று தடவைகள் நீக்கியவர் அவர் தான் என்பதை இப்போது மறந்துவிட்டார்.

1995ஆம் ஆண்டு தயாரிக்கப்பட்ட அரச மைப்பு வரைவின் தலைமை ஆசிரியர் அவர் தான். அந்த வரைவில் அவர் ஒற்றையாட்சி என்ற சொல்லைச் சேர்க்கவில்லை. 1997 ஆம் ஆண்டு வரைவும் அவரைத் தலைமை ஆசிரியராகக் கொண்டே வரையப்பட்டது. அதிலும் ஒற்றையாட்சி என்ற சொல் இல்லை. மூன்றாவதாக 2000ஆம் ஆண்டு மற்று மொரு வரைவு கொண்டு வரப்பட்டு அது நாடாளுமன்றில் விவாதிக்கப்பட்டது. அதைத் தான் ஐக்கிய தேசியக் கட்சி நாடாளுமன்றில் தீ வைத்து எரித்தது. அதிலும் ஒற்றையாட்சி என்ற சொல் இல்லை.

இப்படி மூன்று தடவைகள் ஒற்றையாட்சி என்ற சொல்லை நீக்கிய ஜீ.எல்.பீரிஸ், இப் போது ஒற்றையாட்சியின் கீழ்தான் அரச மைப்பு தயாரிக்கப்படவேண்டும் என்று கூறு வது வேடிக்கையாக உள்ளது. இதைத்தான் சந்தர்ப்பவாதம் என்பது.

இதைவிடக் கேவலம் என்னவென்றால், விமல் வீரவன்ச மற்றும் உதய கம்மன்பில போன் றோர் ஜீ.எல்.பீரிஸின் பக்கம் இருந்து கொண்டு ஒற்றையாட்சி பற்றிப் பேசுவதுதான்.

ஒற்றையாட்சி தொடர்பில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பை ஓர் இணக்கப்பாட்டுக் கொண்டு வரும் முயற்சி இடம்பெறுகின்றது. அதாவது சிங்கள அரசமைப்பில் ஒற்றையாட்சி என்ற வசனம் இருந்தால் பரவாயில்லை என்ற நிலைப்பாட்டுக்கு கூட்டமைப்பைக் கொண்டு வருவதற்கான நடவடிக்கைகள் இடம்பெறு வதை நான் அறிவேன் - என்றார். (த-5)

Vacancy



பிரபல உயர்கல்வி நிறுவனமொன்றுக்கு கீழ்வரும் பதவிகளுக்கு (ஆண் / பெண்) இருபாலாரிடமும் விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

- வரவேற்பாளர்
- சந்தைப்படுத்தல் உதவியாளர்
- அலுவலக உதவியாளர்
- கணினி வடிவமைப்பாளர்

உங்கள் விண்ணப்பங்களை உடனடியாக கீழ் காணும் மின்னஞ்சல் முகவரிக்கு அனுப்பிவைக்கவும்.

collegebritishroyal@gmail.com

# கிளி. ஆசிரியர் மைய நிலையம் அமைக்கும் பணிகள் ஆரம்பம்

யாழ்ப்பாணம், ஜன.6

கிளிநொச்சி அக்கராயன் பகுதியில் 28.05 மில்லியன் ரூபா செலவில் அமைக்கப்படும் ஆசிரிய மைய நிலையத்துக்கான அடிக்கல் நாட்டும் நிகழ்வு நேற்று இடம்பெற்றது கொழும்பு அரசின் நிதியுதவியுடன் மாகாண கல்வி அமைச்சினால் கிளிநொச்சி கல்வி வலயத்துக்கான ஆசிரியர் மைய நிலையம் அமைப்பதற்கான அடிக்கல்லை நாடாளு மன்ற உறுப்பினர் சிவஞானம் சிறீதரனும் கிளிநொச்சி வலயக் கல்வி பணிப்பாளர் க.முருகவேலும் நாட்டி வைத்தனர்.

(வ-6)

# யாழ். இந்துக் கல்லூரி அதிபரின் அறிவிப்பு

யாழ்ப்பாணம், ஜன .6

யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரியில் தரம் 6 அனுமதிக்காக கல்வி அமைச்சினால் அனுப்பி வைக்கப்பட்டுள்ள பெயர்ப் பட்டியலில் உள்ள மாணவர்களின் பெற்றோருக்கு நாளை சனிக்கிழமை முற்பகல் 10 மணிக்கு கலந்துரையாடல் இடம்பெறும் என்று அறிவிக்கப்பட்டது.

இருமொழிக் கற்கை நெறியில் கல்வி கற்க விரும்பும் மாணவர்களுக்கான பரீட்சையும் நாளை நடைபெறும். பரீட்சை எழுதும் மாணவர்கள் மட்டும் நாளை வருகை தருமாறும் பாடசாலை அதிபர் கேட்டுள்ளார்.

(வ-4)

## புதிய அரசமைப்புக்கு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அமைப்பின் பொதுச் செயலர் ஞானசாரதேரரினால் வெளியிடப்பட்ட அறிக்கையில், நாட்டில் கைவைக்கவேண்டாம் என்ற தொனிப் பொருளில் நாளை சனிக்கிழமை மிகப் பெரிய கூட் டம் நடைபெறவுள்ளது. அரசசார்பற்ற நிறுவனங்கள், மேற்கத்தைய நாடுகளின் வழிகாட்டலின் கீழ் செயற்படும் எமது நாட்டின் தற்போதைய தலைவர்களால் அமைக்கப்படவுள்ள அரசமைப்பை நாம் ஒரு போதும் ஏற்றுக் கொள்ளப் போவதில்லை.

அத்துடன் கூட்டு அரசு நாட்டின் சொத்துக்களை வெளிநாட்டு நிறுவனங்களுக்கு விற் கும் செயற்பாடும் இடம்பெற்று வருகின்றது. இவற்றையெல்லாம் எம்மால் பார்த்துக் கொண்டிருக்க முடியாது. இதற்கெதிராக நாம் போராட்டங்களை மேற் கொள்ளவுள்ளோம். நாளை நுகேகொடை, ஆனந்த சமரக்கோன் மைதானத்தில் மக்கள் கூட்டமொன்றை நடத்த நாம் தீர்மானித்துள்ளோம் - என்று கூறப்பட்டுள்ளது.

(த-5)

# யாழ்ப்பாணத்தில் 10 சத வீதம் நெல் அழிவு

யாழ்ப்பாணம், ஜன.6

காலநிலை மாற்றத்தால் யாழ். மாவட்டத்தில் 10 சத வீதம் நெல் அழிவு ஏற்பட்டுள்ளது. இதனால் பாதிக்கப்பட்ட விவசாயிகளுக்கு காப்புறுதி வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என்று மாவட்ட விவசாயக் குழுக் கூட்டத்தில் தெரிவிக்கப்பட்டது.

யாழ்ப்பாணம் மாவட்ட செயலகத்தில் மாவட்ட விவசாயக் குழுக்கூட்டம் நேற்று வியாழக்கிழமை மாவட்ட செயலர் தலைமையில் நடைபெற்றது. இந்த நிகழ்விலேயே இவ்வாறு தெரிவிக்கப்பட்டது.

அந்தக் கூட்டத்தில் மேலும் தெரிவிக்கப்பட்டதாவது:

காலநிலை மாற்றத்தால் பெரும்போக நெற்செய்கையில் விவசாயிகள் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளார்கள், எதிர்வரும் மார்ச் மாதம் வரையில் மழை பெய்யக்கூடிய சாத்தியக் கூறுகள் காணப்படுவதாக இல்லை எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. இந்த வகையில் அடுத்து ஒரு மழை வராத பட்சத்தில் நெல் அழிவின் தாக்கம் அதிகரிக்க வாய்ப்புள்ளது.

கமநல சேவைகள் திணைக்கள ரீதியாக ஒவ்வொரு பிரதேச கமநல சேவைகள் நிலையங்கள் ஊடாக உரமானியம் வழங்கப்படும் விவசாயிகள் விவரங்கள் ரீதியாக நெல் அழிவு எவ்வளவு ஏற்பட்டுள்ளது என்பதன் விவரங்கள் எடுத்து விவசாய காப்புறுதி கூட்டுத்தாபத்தினால் காப்புறுதி வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என்று கூறப்பட்டது.


இந்தக் கூட்டத்தில் மாவட்ட விவசாயப் பணிப்பாளர், விவசாயத் திணைக்கள யாழ்.மாவட்டப் பணிப்பாளர், கமநல சேவைப் பணிப்பாளர், பிரதேச செயலர்கள், சமுர்த்தி உத்தியோகத்தகர்கள், கமநல சம்மேளனத் தலைவர்கள் எனப் பலதரப்பட்டோர் கலந்து கொண்டனர்.

(வ-10)

# மணிவாசகர் விழா இன்று ஆரம்பம்

காரைநகர், ஜன. 6

காரைநகர் மணிவாசகர் சபை நடத்தும் மணிவாசகர் விழா இன்று வெள்ளிக்கிழமை தொடக்கம் ஜந்து தினங்கள் காரைநகர் ஈழத்துச் சிதம்பர வசந்த மண்டபத்தில் இடம்பெற உள்ளது. இந்த விழாவை முன்னிட்டு காரைநகர் சடையாளி



ஞானவைரவர் ஆலயத்திலிருந்து மணிவாசகப் பெருமானின் திருவுருவப் படம் பவனியாக ஈழத்துச் சிதம்பரத்துக்கு நேற்று மாலை மணிவாசகர் சபையினரால் எடுத்துச் செல்லப்பட்டது.

இந்த பவனியில் பாடசாலை மாணவர்கள், சபை உறுப்பினர்கள், அடியார்கள் என பெருமளவானோர் கலந்து கொண்டனர். வீதிகள் தோறும் மக்கள் நிறைகுடம் வைத்து மணிவாசகப் பெருமானை வரவேற்றனர். இன்று தொடக்கம் ஐந்து தினங்கள் ஈழத்துச் சிதம்பரத்தில் இடம்பெற உள்ள விழாவில் ஈழத்து, தமிழக அறிஞர்களின் சொற்பொழிவுகள் இடம்பெறவுள்ளன என்று தெரிவிக்கப்பட்டது.

(வ - 4,250)

## நேற்றைய கடலுணவு விலை நிலவரம்

| | யாழ்ப்பாணம் | மன்னார் | கிளிநொச்சி | கொடிகாமம் | பருத்தித்துறை | சாவகச்சேரி | மாதகல் |
|---|---|---|---|---|---|---|---|
| இறால் | 600 | 600 | 700 | 700 | 800 | 800 | – |
| நண்டு | 250 | 350 | 300 | 400 | 400 | 200 | 500 |
| கணவாய் | 600 | 600 | 700 | 500 | 700 | 800 | – |
| பாரை | 550 | 500 | 600 | 650 | 500 | 600 | 400 |
| சுறா | 500 | 400 | 600 | 800 | 700 | 1000 | – |
| சீலா | 300 | 400 | 400 | 800 | 600 | 300 | 400 |
| விளை | 650 | 500 | 250 | 800 | 600 | 500 | 420 |
| முரல் | 300 | 400 | 300 | 400 | 400 | 300 | – |
| கும்பிளா | 400 | 300 | 350 | 450 | 400 | – | – |
| கிளாக்கன் | 800 | 800 | – | – | 500 | – | – |
| ஒரா | 400 | 400 | 400 | – | 300 | 300 | – |
| திரளி | 300 | 200 | 200 | 200 | 200 | 200 | 320 |
| நகரை | 250 | 200 | – | 300 | 300 | – | 350 |
| சூடை | 150 | 150 | 100 | 200 | 200 | 100 | – |
| ஒட்டி | 300 | 200 | 200 | 400 | 200 | 200 | 250 |
| திருக்கை | 150 | 250 | 250 | 350 | 300 | 300 | 120 |
| மதனம் | 150 | 200 | 150 | – | 300 | 300 | 200 |
| கொய் | 100 | 120 | 40 | 100 | 160 | 100 | – |
| பாலை | 400 | 100 | 200 | 400 | 300 | 400 | – |
| வாளை | 100 | 100 | – | – | 200 | 300 | 250 |

## நேற்றைய மரக்கறி விலை நிலவரம்

| | மருதனார்மடம் | சாவகச்சேரி | சுன்னாகம் | நெல்லியடி | திருநெல்வேலி | கிளிநொச்சி | வவுனியா |
|---|---|---|---|---|---|---|---|
| முள்ளங்கி | 100 | 60 | 40 | 60 | 80 | 40 | 60 |
| கத்தரி | 30 | 40 | 30 | 40 | 20 | 20 | 40 |
| கரட் | 60 | 90 | 80–120 | 100 | 80 | 120 | 160 |
| மரவள்ளி | 70 | 60 | 60 | 60 | 80 | 30 | 50 |
| பயிற்றை | 160 | 120 | 200 | 120 | 120–140 | 120 | 80 |
| பாகல் | 30 | 280 | 280 | 80 | 160 | 160 | 150 |
| கருணைக்கிழங்கு | 50 | 60 | 50 | 60 | 50 | 70 | 80 |
| பெ.வெங்காயம் | 100 | 90 | 100 | 100 | 80 | 100 | 80 |
| சி.வெங்காயம் | 80 | 80 | 100 | 140 | 70 | 120 | 160 |
| பூசணி | 50 | 50 | 60 | 60 | 60 | 60 | 80 |
| தக்காளி | 160 | 160 | 160 | 160 | 160 | 160 | 200 |
| வாழைக்காய் | 60 | 40 | 50 | 60 | 50 | 80 | 40 |
| கீரை | 20 | 30 | 30 | 20 | 20 | 30 | 20 |
| பொன்னாங்காணி | 25 | 40 | 30 | 35 | 20 | 50 | 10 |
| பச்சை மிளகாய் | 180 | 120 | 200 | 160 | 160 | 200 | 500 |
| புடோல் | 80 | 60 | 80 | 80 | 60 | 80 | 100 |
| கோவா | 30 | 30 | 20 | 40 | 20 | 20 | 140 |
| வெண்டி | 100 | 80 | 160 | 140 | 60 | 80 | 80 |
| போஞ்சி | 100 | 100 | 90 | 140 | 80–100 | 160 | 120 |
| லீக்ஸ் | 80 | 90 | 70 | 100 | 80–100 | 120 | 150 |
| தேங்காய் | 50 | 35 | 50 | 40–50 | 30 | 40–50 | 30 |
| உருளைக்கிழங்கு | 100 | 100 | 100 | 100 | 100–120 | 100 | 120 |
| தேசிக்காய் | 250 | 300 | 250 | 250 | 300 | 400 | 280 |
| வல்லாரை | 25 | 20 | 20 | 15 | 15 | 40 | 10 |
| கறிமிளகாய் | 160 | 160 | 140 | 200 | 170 | 280 | 200 |
| இராசவள்ளி | 250 | 150 | 250 | 350 | 200–220 | 300 | 120 |
| முருங்கைக்காய் | – | 450 | – | – | 350–400 | – | 350 |

# மாவட்ட ரீதியில் நியமனம் வழங்க முன்வர வேண்டும்

## முல்லைத்தீவு மாவட்ட புத்திஜீவிகள் தெரிவிப்பு

முல்லைத்தீவு, ஜன.6
வடக்கு மாகாண சபையின் கல்விக் குழு, வடக்கு மாகாணத்தில் நியமனங்களை வழங்கும்போது மாவட்ட ரீதியில் வழங்க வேண்டும்.

இவ்வாறு முல்லைத்தீவு மாவட்ட புத்தி ஜீவிகள் தெரிவித்தனர்.

முள்ளியவளை தெற்கு கிராம அபி விருத்திச் சங்கத்தில் நேற்றுமுன் தினம் கலந்துரையாடல் ஒன்று நடைபெற்றது.

அதில் கலந்து கொண்ட முல்லைத்தீவு மாவட்ட புத்தி ஜீவிகள் மற்றும் நிறுவனங்கள் சார் உறுப்பினர்கள், இன்று கூடவுள்ள வடக்கு மாகாண சபை கல்விக் குழுவுக்கு விடுத்த வேண்டுகோளின்போதே இவ்வாறு தெரிவித்தனர்.

அவர்கள் தெரிவித்ததாவது:

மாவட்ட ரீதியிலான நியமனங்களை வழங்கும் போது வட மாகாணத்திலுள்ள 5 மாவட்டங்களுக்கும் சமமான விகிதத்தில் பகிர்வுகளை மேற்கொள்ள வேண்டும்.

மாவட்ட ரீதியில் வெற்றிடங்களுக்கு ஏற்ப அந்தந்த மாவட்டத்திலுள்ள வர்களுக்கு முன்னுரிமை வழங்கப்பட வேண்டும்.

போரால் மிகவும் பாதிக்கப்பட்ட மாவட்டங்களைக் கருத்தில் கொண்டு முன்னுரிமை அடிப்படையில் நியமனங்களை அந்த மாவட்டங்களில் உள்ளவர்களுக்கு வழங்க வேண்டும். நியமனத்துக்கு ஒரு மாவட்டம், வேலைக்கு சொந்த மாவட்டம் என்ற நிலையை மாற்ற வேண்டும்.-என்றனர்.(ற-21,433)

# கிறிஸ்தவ ஆலயம் செல்லும் வீதியை அடைத்தமை தொடர்பில் விசாரணை

வவுனியா, ஜன.6
வவுனியா சிதம்பரபுரம் பகுதியிலுள்ள கிறிஸ்தவ ஆலயத்துக்குச் செல்லும் பிரதான வீதி கட்டையிட்டு அடைக்கப்பட்டமை தொடர்பான விசாரணைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளனஎன்றுவவுனியா தலைமை பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி சோமரத்ன விஜயமுனி தெரிவித்தார்.



கடந்த 20ஆம் திகதி சிதம்பரபுரத்திலுள்ள கிறிஸ்தவ ஆலயத்துக்குச் செல்லும் பிரதான வீதி கட்டைகள் நட்டு அடைக்கப்பட்டது. அது தொடர்பாக சிதம்பரபுரம் பாலிஸ் நிலையத்தில் ஆலயத்தின் அருட்தந்தை முறைப்பாடு செய்தார்.

"கிறிஸ்மஸ் சிறப்பு ஆராதனைக்குச் செல்லும் மக்களைச் செல்லவிடாது தடுக்கும் நோக்கில் திட்டமிட்டு கட்டைகள் நடப்பட்டுள்ளன. 25 வருடங்களுக்கு மேலாக இந்தப் பகுதி மக்களுக்கு சேவையாற்றி வருகின்றோம். 25 வருடங்களாக இந்தப் பாதையைப் பயன்படுத்தி 200க்கும் மேற்பட்ட மக்கள் ஆலயத்துக்கு வழிபாட்டுக்கு வந்து செல்கின்றனர். கிராம சேவகருடைய கோரிக்கைக்கு அமைவாகவே வீதி அடைக்கப்பட்டது என்று வீதியை அடைத்தவர்கள் தெரிவித்தனர்"- என்று அவர் தனது முறைப்பாட்டில் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பான விசாரணைகளை மேற்கொண்ட வவுனியா தலைமைப் பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி சோமரத்ன விஜயமுனி நேற்று அந்தப் பகுதிக்குச் சென்று நிலமைகளை ஆராய்ந்தார்.

வவுனியா பிரதிப் பொலிஸ்மா அதிபரின் பணிப்புரைக்கு அமைவாக விசாரணைகள் முன்னெடுக்கப்படுகின்றன என்று அவர் தெரிவித்தார். (ற-21)

ஜம்பு கேதீஸ்வர சம்புநாதேஸ்வரம் திருவெம்பா நிகழ்வு

திருவெம்பாவையை முன்னிட்டு 02.01.2017 - 11.01.2017 வரை பத்து நாள்களும் மிகவும் சிறப்பான முறையில் நடைபெறும்.

01. சிவன் விஷேட பூசைகள்
02. அன்னதானங்கள்

மக்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்

வை. நரசிங்க சித்தர்
வை. சின்னத்துரை

MAJESTIC CINEPLEX
A CEYLON THEATRES CINEMA Jaffna
கார்கிள்ஸ் ஸ்குவெயர்
(யாழ் போதனா வைத்தியசாலை எதிரில்)
இப்பொழுது திரையில்




மஜெஸ்டிக் ப்ளாட்டினம்
10.00 / 1.00 / 7.00 / 9.30 4.00 PM




சில்வர் 10.15 / 1.15 / 4.15 / 7.15
ப்ரொன்ஸ் 10.30 / 1.30 / 4.30 / 7.30
விசாரணை ☎ 021- 2227712
facebook CeylonTheatres
www.ceylontheatres.lk

வாடகைக்கு

நல்லூரிற்கு அண்மையாக தனியறை. இணைந்த குளியலறை, சமையலறை வசதியுடன் தனித்த பாதையுடன் வீட்டின் அனெக்ஸ் வாடகைக்குண்டு. சிறிய குடும்பத்திற்கு உகந்தது.

071 531 5500

காணி விற்பனைக்கு

கோண்டாவில் பஸ் டிப்போவுக்கு அண்மையில் 4 பரப்புக்காணி கிணற்றுடன்விற்பனைக்குண்டு. பழனி கோயிலுக்கு அண்மையில் பிரதான வீதியில் 2 பரப்பு விற்பனைக்குண்டு.

076 697 2287

Poster | Notice | Lable | Wedding Card | Bag Print | Award | Frame Item | Batch
Vehicle Brand | T-Shirt | Cap | ID Card | Key Tag | Book Mark | Pen Print
Book Printing | Woodent Print




சகல நிறுவனங்களுக்குமான பட்டியலேடு (Bill Book) காபன் பிரதி மற்றும் காபன் பிரதி அற்ற, வர்ண மற்றும் கறுப்பு வெள்ளை நிறத்தில், விரும்பிய அளவுகளில் குறித்த நேரத்தில் குறைந்த விலையில் தரமாக செய்துதரப்படும்.



ES Printers
357, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.
021 492 7471 / 021 492 7472
esprintersjaffna@gmail.com

THE HALO TRUST

கண்ணிவெடியகற்றுனர்களுக்கான பதவி வெற்றிடம்

ஹெலோ ரஸ்ட் ஆனது பிரித்தானியாவை தளமாகக் கொண்டு உலகளாவிய ரீதியில் 16 நாடுகளில் இயங்கிக்கொண்டிருக்கிறது. இலங்கையில் 2002 ஆம் ஆண்டு தொடக்கம் மிதிவெடிகள் மற்றும் வெடிக்கத்தக்க பொருள்களை அகற்றிக் கொண்டிருக்கின்றது.

ஹெலோ ரஸ்ட் இன் எதிர்கால வேலைக்காக மிதிவெடிப்பயிற்சிக்காக ஆண், பெண் இருபாலாரிடமுமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. விண்ணப்பதாரர்கள் விளங்கிக்கொள்ள வேண்டியது யாதெனில் கண்ணிவெடியகற்றலானது துப்புரவற்றதும். தேகவலுவை அதிகம் பிரயோகிக்க வேண்டிய கடினமான வேலையுமாகும், எமது தரமான நடவடிக்கைகள் மூலம் கண்ணிவெடி அகற்றுதலினுள்ள அபாயத்தை இயலுமான அளவு குறைத்துக் கொள்வதாகும். எனவே இதனைக்கருத்தில் கொள்ளும் விண்ணப்பதாரிக்களிடமிருந்து பலமாக அர்ப்பணிப்பு உணர்வு எதிர்பார்க் கப்படுகின்றது.

குறிப்பு: எமது முன்னாள் பணியாளர்களும் விண்ணப்பிக்கலாம். ஆனால் அவர்கள் புதிய விண்ணப்பதாரிகளாகவே கருதப்படுவர்.

மேற்குறிப்பிட்ட பதவிநிலைக்கு விண்ணப்பிக்க ஆர்வமுள்ளவர்கள் தங்கள் சுயவிவரக்கோவைகளை எதிர்வரும் 12 ஆம் திகதி தை மாதம் 2017 அன்று வியாழக்கிழமைக்கு முன்னதாகத் தங்களது சுயவிவரக்கோவையினை கீழ்க்குறிப்பிடப்பட்டுள்ள முகவரிக்கு பதிவுத்தபால் மூலமாகவோ அல்லது நேரிலோ அனுப்பிவைக்க முடியும்.

ஹெலோ ரஸ்ட், 450, திருநகர் மேற்கு, கிளிநொச்சி.
450 Thirunagar, Wost, Killinochchi, Sri Lanks
T: 94 (0)212 285 466 Vanni@halosrilanka.org
mail@halosrilanka.org www.halotrust.org

Rotary E-Club of Jaffna
வலி.தென்மேற்கு பிரதேச இளைஞர் கழக சம்மேளனம்

உதயன் அனுசரணையில்...

பொங்கல் கிறிக்கெட் 2017



அணிக்கு 6 பேர், 5 பந்துப் பரிமாற்றங்கள் கொண்ட யாழ் மாவட்ட ரீதியிலான விலகல் முறை மென்பந்து துடுப்பாட்டச் சுற்றுப்போட்டி

நாளை (07.01.2017) சனிக்கிழமை முதல் தைப்பொங்கல் வரை மானிப்பாய் இந்துக் கல்லூரி மைதானத்தில்

வெற்றிபெறும் அணிக்கு
-வெற்றிக்கிண்ணத்துடன் பெறுமதிமிக்கப் பணப்பரிசில்
2 வது அணிக்கு
-வெற்றிக்கிண்ணத்துடன் பெறுமதிமிக்கப் பணப்பரிசில்

ES Printers (உதயன் பணிமனை அருகாமை)
359, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.
பதிவுகளுக்கு : 076 675 1204 (அஷி)

# மருத்துவர்கள் பற்றாக்குறை வடமாகாணத்தில் நீடிக்கிறது

யாழ்ப்பாணம், ஜன. 6
வடக்கு மாகாணத்துக்குட்பட்ட வைத்தியசாலைகளுக்கு 723 மருத்துவர்கள் தேவையான போதிலும் 536 பேரே பணியாற்றுவதாக வடக்கு மாகாண சுகாதார அமைச்சின் புள்ளி விவரத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

வடக்கு மாகாணத்தின் 5 மாவாட்டத்திலும் உள்ள மாகாண அமைச்சுக்குட்பட்ட வைத்தியசாலைகளிலேயே மருத்துவர்கள் பற்றாக்குறை காணப்படுகின்றன. யாழ்ப்பாணம் மாவட்டத்தில் யாழ்.போதனா வைத்தியசாலை நீங்கலாக ஏனைய வைத்தியசாலைகளுக்கு 220 மருத்துவர்கள் தேவையாகவுள்ளபோதிலும் 157 மருத்துவர்களே சேவையில் உள்ளனர். எனினும் கிளிநொச்சி மாவட்டத்தில் 107 மருத்துவர்கள் தேவை உள்ளபோதும், 93 மருத்துவர்களே சேவையாற்றுகின்றனர்.

இதேபோன்று முல்லைத்தீவு மாவட்டத்தில் 123 மருத்துவர்களுக்கு தேவையுள்ள போதிலும் 69 மருத்துவர்கள் மட்டுமே பணியாற்றுகின்றனர். மன்னார் மாவட்டத்தினில் 124 மருத்துவர்கள் தேவையுள்ள போதும் 85 மருத்துவர்களும் வவுனியா மாவட்டத்தில் 149 மருத்துவர்கள் தேவையான நிலையில் 132 மருத்துவர்கள் பணியாற்றுகின்றனர்.

இதேவேளை, கொழும்பு அரசின் ஆளுகையின் கீழ் உள்ள யாழ்ப்பாணப் போதனா வைத்தியசாலையின் மருத்துவர்கள் எண்ணிக்கை இந்தப் புள்ளிவிவரத்தில் சேர்க்கப்படவில்லை. (வ-101)

## திருவாசக முற்றோதல்

தென்மராட்சி, ஜன. 6
மீசாலை வடக்கு சத்திய கோட்டத்தினரும் சங்கத்தானை மீனாட்சி அம்பாள் ஆலய நிர்வாகத்தினரும் இணைந்து இன்று காலை 6 மணி தொடக்கம் சங்கத்தானை மீனாட்சி அம்பாள் ஆலயத்தில் திருவாசக முற்றோதலை நடாத்தவுள்ளனர் என்று அறிவிக்கப்பட்டது. (வ-9)

✦✦✦✦✦✦✦✦✦✦✦✦

யாழ்ப்பாணம், ஜன.6
வட்டுக்கோட்டை வடக்கு பிரமாணாச்சித் தோட்டம் கற்பக விநாயகர் ஆலயத்தில் இன்று வெள்ளிக்கிழமை காலை 7 மணிக்கு நடைபெறும் வழிபாடுகளைத் தொடர்ந்து திருவாசக முற்றோதல் ஆரம்பமாகி நடைபெறும் என்று அறிவிக்கப்பட்டது. (வ-10)

## விளையாட்டு கழகங்களுக்கான கலந்துரையாடல்

கரவெட்டி, ஜன.6
கரவெட்டிப் பிரதேச செயலகத்தின் நடப்பாண்டுக்கான பிரதேச விளையாட்டு விழா தொடர்பான கலந்துரையாடல் எதிர்வரும் 10ஆம் திகதி பி.ப.3 மணிக்கு நடைபெறும் என்று அறவிக்கப்பட்டது.

செயலக மாநாட்டு மண்டபத்தில் பிரதேச செயலர் தலைமையில் நடைபெறும் இந்தக் கலந்துரையாடலில் கரவெட்டிப் பிரதேச செயலகத்தின்கீழ், பதிவு செய்யப்பட்ட விளையாட்டுக் கழகங்களின் தலைவர் மற்றும் செயலாளர்களைக் கலந்துகொள்ளுமாறு கேட்கப்பட்டுள்ளது. (வ)

## வறட்சியினை எதிர்வுகூறல் கருத்தரங்கு

யாழ்ப்பாணம், ஜன. 6
வடக்கு மாகண இலங்கைப் பொறியியலாளர் நிறுவனமும் யாழ்ப்பாணம் முகாமையாளர் சம்மேளனமும் இணைந்து' அயன மண்டல நாடுகளின் மழை வீழ்ச்சி தரவின் மாற்றங்களை வானியல் நிலைகளுடன் ஒப்பீடு செய்து வறட்சியை எதிர்வுகூறல்' கருத்தரங்கு நாளை மாலை 4.30 மணிக்கு யூரோவில் மாநாட்டு மண்டபத்தில் நடைபெறும் என்று அறிவிக்கப்பட்டது.

இதில் ஆர்வலர்கள் அனைவரையும் கலந்துகொள்ளும்படி ஏற்பாட்டாளர்கள் கேட்டுக்கொண்டனர். (வ)

## பொதுக்கூட்டம்

யாழ்ப்பாணம்,ஜன.6
சங்கானை பகிரங்க சேவை ஓய்வூதியர் நம்பிக்கை நிதியத்தின் நடப்பாண்டுக்கான வருடாந்தப் பொதுக்கூட்டம் எதிர்வரும் 9ஆம் திகதி மு.ப.10 மணிக்கு நடைபெறும் என்று அறிவிக்கப்பட்டது.

நிதியத்தின் தலைவர் ந.சிவரஞ்சன் தலைமையில் நடைபெறும் கூட்டத்துக்கு முதன்மை விருந்தினராக சங்கானை பிரதேச செயலக உதவிப் பிரதேச செயலர் கி.செந்தூரன் கலந்துகொள்வர் என்று தெரிவிக்கப்பட்டது. (வ)

# தாலிக் கொடி அறுத்த திருடனை அடையாளம் காட்டினார் பெண்

தென்மராட்சி, ஜன. 6
மோட்டார் சைக்கிளில் சென்ற பெண்ணின் தாலிக்கொடியை அறுத்தவரை நீதிமன்றில் அடையாளம் காட்டினார் தாலியைப் பறிகொடுத்த பெண். சந்தேகநபரை விளக்கமறியலில் வைக்குமாறு சாவகச்சேரி நீதிவான் மன்றம் உத்தரவிட்டது.

கைதடி கிழக்கில் கடந்த செப்ரம்பர் மாதம் 14ஆம் திகதி மோட்டார் சைக்கிளில் மகளுடன் சென்ற தாயின் தாலிக்கொடியை மோட்டார் சைக்கிளில் வந்த இருவர் அறுத்துக் கொண்டு தப்பியோடினர். சாவகச்சேரி பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டது. பாதிக்கப்பட்டவர்கள் வழங்கிய அடையாளங்களின் அடிப்படையில் சாவகச்சேரி பொலிஸார் நாவற்குழியைச் சேர்ந்த ஒருவரைக் கைதுசெய்து கடந்த 19ஆம் சாவகச்சேரி நீதிவான் மன்றில் முற்படுத்தினர். நேற்றுவரை விளக்கமறியலில் வைக்க உத்தரவிட்டு அடையாள அணிவகுப்பு நடத்த ஏற்பாடு செய்யுமாறு பொலிஸாருக்கு நீதிமன்று உத்தரவிட்டிருந்தது.

சாவகச்சேரி நீதிமன்றில் மூடிய அறையில் நேற்று அடையாள அணிவகுப்பு இடம்பெற்றபோது, மோட்டார் சைக்கிளில் பயணித்த தாயும் மகளும் சாட்சிகளாக அழைக்கப்பட்டிருந்தனர். மோட்டார் சைக்கிளில் பின் ஆசனத்தில் அமர்ந்திருந்த தாய், சந்தேக நபரை அடையாளம் காட்டினார். மோட்டார் சைக்கிளைச் செலுத்திச் சென்ற மகள் அடையாளம் காட்டவில்லை.

அதன் பின்னர் வழக்கு நீதிமன்றில் விசாரணைக்கு எடுக்கப்பட்டபோது சந்தேக நபரை எதிர்வரும் 19ஆம் திகதிவரை விளக்கமறியலில் வைக்குமாறு நீதிவான் உத்தரவிட்டார். (வ-4,9)

## ஆசிரியர்களுக்கான தரவட்டம் நாளை

தென்மராட்சி, ஜன. 6
தென்மராட்சி கல்வி வலயப் பாடசாலைகளில் தரம் 1 வகுப்பில் கற்பிக்கும் ஆசிரியர்களுக்கான தரவட்டம் நாளை சனிக்கிழமை மு.ப.9 மணி தொடக்கம் மதியம் 12 மணி வரை வரணி ஆசிரிய வள நிலையத்தில் நடைபெறும் என்று வலயக் கல்விப் பணிப்பாளர் சு.கிருஷ்ணகுமார் அறிவித்தார்

தரம் 1 வகுப்புகளில் கற்பிக்கும் ஆசிரியர்களைக் கலந்து கொள்ளுமாறு அவர் கேட்டுள்ளார். (வ- 9)

## பரிசளிப்பு விழா

யாழ்ப்பாணம்,ஜன.6
கலாநிதி அன்னலட்சுமி சின்னத்தம்பியின் உதய நாள் மற்றும் பரிசுத்தின நிகழ்வுகள் எதிர்வரும் 11ஆம் திகதி பி.ப.1 மணிக்கு நடைபெறும் என்று அறிவிக்கப்பட்டது.

சுன்னாகம் வாழ்வக செல்வா மண்டபத்தில் நடைபெறும் நிகழ்வில் முதன்மை விருந்தினராகக் கோப்பாய் தேசிய கல்வியியற்கல்லூரி பீடாதிபதி ச.அமிர்தலிங்கம் கலந்து கொள்வார் என்று தெரிவிக்கப்பட்டது. (வ)

## பரிசுக் கதைகள் தொகுதியின் அறிமுகக் கலந்துரையாடல்

யாழ்ப்பாணம், ஜன.6
தகவம் - தமிழ்க் கதைஞர் வட்டத்தின் பரிசுக் கதைகள் - தொகுதி 3 க்குகான அறிமுகமும் கலந்துரையாடலும் நாளை சனிக்கிழமை பி.ப. 4 மணிக்கு நடைபெறும் என்று ஏற்பாட்டாளர்கள் அறிவித்தனர்.

திருமறைக் கலாமன்றத்தின் இலக்கிய அவையும் யாழ்ப்பாணம் இலக்கியக் குவியமும் இணைந்து இந்த நிகழ்வை யாழ்ப்பாணம், டேவிற் சாலையில் இல.128இல் அமைந்துள்ள கலைத்தூது அழகியல் கல்லூரியில் நடத்துகின்றது.

எழுத்தாளர் ஐ.சாந்தன் தலைமையில் நடைபெறவுள்ள இந்த நிகழ்வில், தகவம் தமிழ்க் கதைஞர் வட்டம் தொடர்பான அறிமுக உரையை வட்டத்தின் செயலர் திருமதி வசந்தி தயாபரனும், பரிசுக்கதைகள் தொகுதி 3 தொடர்பான அறிமுக உரையை யாழ்.பல்கலைக்கழக சமூகவியல் துறை விரிவுரையாளர் இ.இராஜேஸ்கண்ணனும் வழங்கவுள்ளனர். தொடர்ந்து 'சமகால இலக்கியச் செயற்பாடுகள்' தொடர்பாக கவிஞர் கருணாகரன் உரையாற்றுவார்.

இந்த நிகழ்வில் கலை இலக்கியப் படைப்பாளிகள், ஆர்வலர்கள் அனைவரையும் கலந்துகொள்ளுமாறு ஏற்பாட்டாளர்கள் மேலும் தெரிவித்தனர். (வ-10)

## மோ. சைக்கிளை உரிமை கோருமாறு நீதிமன்றம் அறிவிப்பு

பருத்தித்துறை, ஜன. 6
பருத்தித்துறை நீதிவான் மன்றில் பருத்தித்துறைப் பொலிஸாரால் பாரப்படுத்தப்பட்டுள்ள (NPMC - 0047 என்ற இலக்கமுடைய) மோட்டார் சைக்கிளை உரிமை கோருபவர்கள் ஆறு மாத காலப்பகுதிக்குள் அடையாளம் காட்டிப் பெற்றுக்கொள்ளலாம்.

உரிமை கோரப்படாதவிடத்து மோட்டார் சைக்கிள் அரசுடமை ஆக்கப்படும் என்று பருத்தித்துறை நீதிவான் மன்றப் பதிவாளர் அறிவித்தார். (வ)

## பள்ளிமுனையில் இன்று மின்தடை

யாழ்ப்பாணம், ஜன. 6
உயர் அழுத்த மற்றும் தாழ் அழுத்த மின் விநியோக மார்க்கங்களின் கட்டமைப்பு மற்றும் பராமரிப்பு வேலைகளுக்காக இன்று வெள்ளிக்கிழமை காலை 8.30 மணியிலிருந்து மாலை 5.30 மணிவரையும் மன்னார் பள்ளிமுனைப் பிரதேசத்தில் மின் விநியோகம் தடைப்பட்டிருக்கும் என்று வடக்கு மாகாண மின் வழங்கல் கட்டுப்பாட்டு நிலைய மின் பொறியியலாளர் அறிவித்தார். (வ-10)

### போதையில் வாகனம் செலுத்தியோரின்

# சாரதிப் பத்திரத்துக்கு ஒரு வருடத்துக்குத் தடா

யாழ்ப்பாணம், ஜன. 6
மதுபோதையில் வாகனம் செலுத்திய 3 பேரின் சாரதி அனுமதிப் பத்திரங்களை ஒரு வருடத்துக்குத் தடுத்து வைக்குமாறு சாவகச்சேரி நீதிவான் மன்று உத்தரவிட்டது.

கடந்த செவ்வாய்க்கிழமை சாரதியொருவருக்கு எதிராகத் தாக்கல் செய்யப்பட்ட வழக்கினை விசாரித்த நீதிவான், மதுபோதையில் வாகனம் செலுத்திய சாரதிக்கு 7 ஆயிரத்து 500 ரூபா தண்டம் விதித்துச் சாரதி அனுமதிப் பத்திரத்தை ஒரு வருடத்துக்கு நீதிமன்றில் தடுத்து வைக்குமாறு உத்தரவிட்டார்.

மதுபோதையிலும் போக்குவரத்து விதிமுறைகளை மீறியும் பயணித்த 2 சாரதிகளுக்கு எதிராக சாவகச்சேரி நீதிவான் மன்றில் நேற்றுப் பொலிஸார் வழக்குத் தொடர்ந்தனர். மன்றில் இருவரும் குற்றத்தை ஒப்புக்கொண்டனர். அதன்படி ஒருவருக்கு 10 ஆயிரத்து 500 ரூபாவும் மற்றையவருக்கு 13 ஆயிரத்து 500 ரூபாவும் தண்டம் விதித்து இருவரின் சாரதி அனுமதிப் பத்திரங்களையும் ஒரு வருடத்துக்கு நீதிமன்றில் தடுத்து வைக்குமாறும் நீதிவான் உத்தரவிட்டார். (வ-4,9)

## குடும்பத் தலைவரின் அடிதடியால் குடும்பமே வைத்தியசாலையில்

யாழ்ப்பாணம், ஜன. 6
மதுபோதையில் வீட்டுக்குச் சென்று தகராறு செய்ததில் குடும்பத் தலைவர் தடுக்கி வீழ்ந்து கைமுறிந்தது. அவர் தனது மனைவியையும் 3 பிள்ளைகளையும் நிலத்தில் உட்கார வைத்துத் தாக்கியபோதே தடுக்கி விழுந்தார் என்று தெரிவிக்கப்பட்டது.

இந்தச் சம்பவம் நாவற்குழியில் நேற்றுமுன்தினம் இடம்பெற்றது. தாக்குதலில் படுகாயமடைந்த தாயும் இரண்டு பெண்களும், கைமுறிந்த குடும்பத் தலைவரும் சாவகச்சேரி வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளனர்.

கட்டடப் பணியில் ஈடுபடும் குடும்பத் தலைவர் காலையில் வேலைக்குச் சென்றார். அவரது அலைபேசி வீட்டில் காணப்பட்டதால் அவரது மனைவி மகனிடம் கொடுத்து தந்தையிடம் கொடுக்குமாறு கூறிக்கொடுத்துள்ளார். மாலையில் மதுபோதையில் வீட்டுக்கு வந்த குடும்பத் தலைவர் அலைபேசியை வேலைத்தளத்துக்குக் கொண்டு வந்த மகனைத் தாக்கியுள்ளார். இதனைத் தடுக்கச் சென்ற மனைவியையும் இரண்டு மகள்களையும் நிலத்தில் உட்கார வைத்து தாக்கியுள்ளார். அதன்போதே கால் தடுக்கி கீழே வீழ்ந்தார். காயமடைந்த ஐந்து பேரும் அயலவர்களால் சாவகச்சேரி வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டனர் என்று வைத்தியசாலைப் பொலிஸார் மேற்கொண்ட விசாரணையில் தெரிவிக்கப்பட்டது. (வ-4,9)

# டெங்கு நோய்த் தொற்று மன்னாரில் அதிகரிப்பு

## 5 நாள்களில் 25 பேர் பாதிப்பு
## பாடசாலை ஒன்றுக்குப் பூட்டு

மன்னார், ஜன. 6
மன்னார் சுகாதார மருத்துவ அதிகாரி பிரிவில் கடந்த 5 நாள்களில் மாணவர்கள் உட்பட 25 பேர் டெங்குத் தொற்றுக்கு உள்ளாகியுள்ளனர். இதன் தீவிரப் போக்கினால் பாடசாலை ஒன்று இழுத்து மூடப்பட்டது. தனியார் கல்வி நிலையங்களையும் இழுத்து மூடுமாறு அறிவுறுத்தப்பட்டது.
இவ்வாறு மன்னார் சுகாதார மருத்துவ அதிகாரி வி.ஆர்.சி.லெம்பேட் தெரிவித் தார்.
அவர் மேலும் தெரிவித்ததாவது:
மன்னாரில் 2016ஆம் ஆண்டு ஜனவரி மாதம் முதலாம் திகதி தொடக்கம் டிசம்பர் மாதம் 31ஆம் திகதி வரையிலான காலப் பகுதிக்குள் டெங்குத் தொற்றுக்கு உள்ளாகிய 185 பேர் அடையாளம் காணப்பட்டுள்ளனர்.
இந்த வருடம் நேற்று வரையான 5 நாள்களில் டெங்குத் தொற்றுக்குள்ளான 25 பேரில் 12 பேர் தாழ்வுபாடு கிராமத்தில் அடையாளம் காணப்பட்டுள்ளனர்.
தாழ்வுபாட்டு கிராமத்தில் உள்ள பாடசாலை ஒன்றில் கல்வி கற்கின்ற 7 மாணவர்கள் டெங்கு நோய்த் தொற்றுக்குள்ளாகியுள்ளனர். குறித்த பாடசாலை மன்னார் சுகாதார மருத்துவ அதிகாரி தலைமையிலான குழுவினரினால் சோதனைக்கு உட்படுத்தப்பட்டபோது, பாடசாலை வளாகத்தில் டெங்கு நோய் பரவல் அதிகரிப்பதற்கான சூழல்களைக் கொண்ட இடம் கண்டு பிடிக்கப்பட்டது. இது மன்னார் வலயக் கல்விப் பணிப்பாளரின் கவனத்துக்குக் கொண்டு செல்லப்பட்டுக் குறித்த பாடசாலை தற்காலிகமாக மூடப்பட்டது. தற்போது டெங்கு ஒழிப்பு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகின்றன.
சாவற்கட்டு, பெரியகடை உள்ளிட்ட சில கிராமங்களில் டெங்கு நோய்த் தொற்றுக்குள்ளாகிய 12 பேர் அடையாளம் காணப்பட்டு சிகிச்சை பெற்று வருகின்றனர். மன்னாரில் தனியார் கல்வி நிலையங்களிலும் டெங்கு நுளம்பு பெருகுவதற்கான சந்தர்ப்பங்கள் அடையாளம் காணப்பட்டுள்ளன.
மன்னாரில் உள்ள தனியார் கல்வி நிலையங்கள் தொடர்பான முழுமையான விவரங்கள் மன்னார் வலயக் கல்வித் திணைக்களத்திலும் மற்றும் மன்னார் பிரதேச செயலகத்திலும் இல்லை என்று தெரிவிக்கப்பட்டது. அங்கு அடையாளம் காணப்பட்ட சில தனியார் கல்வி நிலையங்கள் சோதனைகளுக்கு உட்படுத்தப்பட்ட போது பாவனைக்கு உட்படுத்தப்படாத மலசல கூடம், நீர்த்தொட்டி போன்றவற்றில் டெங்கு நுளம்பின் உற்பத்தி கண்டு பிடிக்கப்பட்டது. மாணவர்கள் தனியார் கல்வி நிலையங்களுக்கு கற்றல் நடவடிக்கைகளுக்காக செல்லும் காலை மற்றும் மாலை நேரங்களிலே டெங்கு நுளம்பின் தாக்கம் காணப்படுகின்றது. எனவே டெங்கு நுளம்பின் தாக்கத்தைக் கட்டுப்படுத்தும் வகையில் சில தினங்களுக்கு தனியார் கல்வி நிலையங்களின் கற்றல் நடவடிக்கைகளை நிறுத்தி கல்வி நிலையங்களை மூடுமாறு சுகாதாரத் துறையினரால் அறிவுறுத்தப்பட்டது.
டெங்கு ஒழிப்பு மேற்கொள்ளாது - அறிவுறுத்தலை மீறி கல்வி நிலையங்களைத் தொடர்ந்தும் இயக்குகின்ற தனியார் கல்வி நிலைய உரிமையாளர்களுக்கு எதிராக மன்னார் நீதிமன்றத்தினூடாக சட்ட நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும்.
பொதுமக்கள் அதிகாரிகளுக்கு முழு ஒத்துழைப்பை வழங்கி தமது வீடு மற்றும் சுற்றுப்புறப் பகுதிகளில் டெங்கு நுளம்பின் பெருக்கத்தைக் கட்டுப்படுத்த உரிய நடவடிக்கைகள் மேற்கொள்ள வேண்டும்.
தாழ்வுபாட்டு கிராமத்தின் சில பகுதிகளி லும் டெங்கு நுளம்பு பரவும் இடங்கள் அடையாளம் காணப்பட்டுள்ளன. மக்களின் ஒத்துழைப்பு முழுமையாகக் கிடைக்காத தன் காரணத்தினால் டெங்கு நுளம்பின் பெருக்கத்தைக் கட்டுப்படுத்த முடியாத நிலை காணப்படுகிறது - என்றார்.
(வ-4,56)



## வீட்டுக்குள் மறைத்து வைத்திருந்த ஐந்தரைக் கிலோ கஞ்சா சிக்கியது
### சந்தேகத்தில் ஒருவர் கைது
### திருமுருகண்டியில் சம்பவம்

முல்லைத்தீவு, ஜன. 6
மாங்குளம் பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட இந்துபுரம் கிராமத்தில் ஐந்தரைக் கிலோ கஞ்சா போதைப் பொருள் வைத்திருந்த குற்றச்சாட்டில் ஒருவரைக் கைது செய்துள்ளதாகப் பொலிஸார் தெரிவித்தனர்.
முல்லைத்தீவு மாவட்டம் திருமுறிகண்டிப் பகுதியில் 154ஆம் மைல்கல் பகுதியில் உள்ள வீடு ஒன்றை நேற்றைய தினம் சுற்றி வளைத்து தேடுதல் செய்த பொலிஸார் 5 கிலோ 640 கிராம் நிறையுடைய கேரளக் கஞ்சாப் பொதிகளைக் கைப் பற்றியுள்ளதுடன், சந்தேக நபர் ஒருவரையும் கைது செய்துள்ளனர்.
மாங்குளம் பொலிஸ் நிலையத்துக்குக் கிடைக்கப் பெற்ற இரகசியத் தகவல் ஒன்றின் பிரகாரம் மாங்குளம் பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி மாலின் பெரேராவின் வழிப்படுத்தலின் கீழ், உப பொலிஸ் பரிசோதகர் ரட்ணசிறி தலைமையிலான குழுவினர் சுற்றி வளைப்புத் தேடுதலில் ஈடுபட்டனர். இதன்போதே மேற்படி கேரளாக் கஞ்சா பொதிகள் மீட்கப்பட்டன.
இவ்வாறு கைப்பற்றப்பட்ட கஞ்சா மாங்குளம் பொலிஸ் நிலையத்தில் வைக்கப்பட்டிருப்பதுடன், கைதான சந்தேகநபரிடம் விசாரணைகள் நடைபெற்று வருகின்றன. விசாரணைகளின் பின்னர் சந்தேகநபர் முல்லைத்தீவு நீதிவான் மன்றில் இன்று முற்படுத்தப்படுவார். கஞ்சாவும் மன்றில் பாரப்படுத்தப்படும் என்று பொலிஸார் தெரிவித்தனர். (வ -4,6,7,10)

## வீதியில் சென்றவரைத் தாக்கி ஆற்றில் தள்ளிவிட்ட கும்பல்
### அக்கராயனில் நேற்று மாலை சம்பவம்

கிளிநொச்சி அக்கராயனில் சாலையில் பயணித்தவரைத் தாக்கிக் காயப்படுத்தி ஆற்றுக்குள் தள்ளி விட்டு கும்பல் ஒன்று தப்பிச் சென்றுள்ளது.
இந்தச் சம்பவம் அக்கராயனில் அண்ணா சிலையடியை அண்மித்து நேற்றுமாலை இடம்பெற்றது. தாக்குதலால் அக்கராயனைச் சேர்ந்த புண்ணியராசா சசிதரன் மண்ணீரல் பாதிக்கப்பட்ட நிலையில் கிளிநொச்சி மாவட்ட வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டார் என்று விசாரணையில் தெரியவந்தது.
தாக்கப்பட்டு வாய்க்காலுக்குள் வீழ்ந்து கிடந்தவரின் மோட்டார் சைக்கிள் சாலையில் கிடைந்ததை அந்த வழியால் பயணித்தவர்கள் அவதானித்து பாதிக்கப்பட்டவரினை மீட்டு அக்கராயன் வைத்திய சாலையில் சேர்த்தனர். இது தொடர்பில் அக்கராயன் பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டுள்ளனர். (வ-4,105)

## சந்தையில் கீரை விற்றபோது
# தாக்கப்பட்ட மாணவிக்கு தனவந்தர்கள் உதவிக் கரம்

சாவகச்சேரி, ஜன. 6
சாவகச்சேரி பொதுச் சந்தையில் வைத்துத் தாக்கப்பட்ட மாணவியின் கல்வி மேம்பாட்டுக்காக யாழ்.மாவட்டத்தைச் சேர்ந்த பரோபகாரிகள் பலர் முன்வந்துள்ளனர் என்று தெரிவிக்கப்பட்டது.
கடந்த செவ்வாய்க்கிழமை காலை குறித்த மாணவி கீரைக் கட்டுக்களை வியாபாரிகளிடம் விற்பதற்காக சந்தைக்குக் கொண்டு சென்றுள்ளார். அன்றையதினம் வியாபாரிகள் எவரும் கீரையைக் கொள்வனவு செய்யாததால் சந்தையின் ஒரு பகுதியில் வைத்துக் கீரையை விற்பதற்காகக் காத்திருந்துள்ளார். அவரிடத்துக்குச் சென்ற கீரை வியாபாரி ஒருவர், அந்த இடத்தில் கீரை விற்கக்கூடாது என்று கூறி மாணவியைத் தாக்கினார் என்று குற்றஞ்சாட்டப்பட்டது. தாக்குதலுக்கு இலக்கான மாணவி சாவகச்சேரி வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டார்.
பாடசாலைச் சீருடை தைத்தமைக்கான பணத்தைக் கொடுப்பதற்காகவே மாணவி சந் தைக்குக் கீரையைக் கொண்டு சென்றதாகக் கூறப்பட்டது. இது பற்றிய செய்தி 'உதயன்' பத்திரிகையில் வெளியாகியிருந்ததோடு, பலரின் மனதை உருக்கிவிட்டது.
அதனையடுத்துத் தரம் 10 இல் கல்வி பயிலும் குறித்த மாணவியின் கல்விக்காக யாழ்ப்பாண மாவட்டத்தைச் சேர்ந்த பல பரோபகாரிகள் தாமாக முன்வந்துள்ளனர்.
அவ்வாறு சாவகச்சேரி மயூராபதி ஜோதிட நிலையத்தினரும் தெட்சணா தியான மண்டபத்தினரும் இணைந்து மாணவியையும் அவரது தாயாரையும் நேற்று அழைத்து மாணவிக்கும் அவரது நான்கு சகோதரிகளுக்கும் கல்வி மேம்பாட்டுக்கென கற்றல் உபகரணங்களையும் ஒரு தொகை நிதியையும் வழங்கினர் என்று தெரிவிக்கப் பட்டது. (வ-4,9)

## துவிச்சக்கர வண்டித் திருடன் நேற்று வசமாக மாட்டினான்

யாழ்ப்பாணத்தில் பல துவிச்சக்கர வண்டிகளைத் திருடிய குற்றச்சாட்டில் ஒருவர் கைது செய்யப்பட்டார். திருடப்பட்ட துவிச்சக்கர வண்டியும் அவரிடமிருந்து மீட்கப்பட்டது. திருடப்பட்ட 30 துவிச்சக்கர வண்டிகள் இன்னும் அவரிடம் உள்ளதாக ஆரம்ப விசாரணையில் தெரிவிக்கப்பட்டது என்று பொலிஸார் தெரிவித்தனர்.
யாழ்ப்பாணத்தில் அண்மைக்காலங்களாக இடம்பெற்று வந்த துவிச்சக்கர வண்டி திருட்டு சம்பவங்களுடன் தொடர்பு பட்ட நபரை பொலிஸார் தேடி வந்த நிலையில் நேற்றுக்காலை அவர் கைது செய்யப்பட்டார்.
யாழ்ப்பாணம் அரியாலையைச் சேர்ந்த 22 வயதுடைய இளைஞனிடமிருந்து இதுவரை 26 சைக்கிள்கள் மீட்கப்பட்டன. யாழ்ப்பாணம் கோப்பாயிலுள்ள வீடு ஒன்றில் திருடப்பட்ட துவிச்சக் கர வண்டிகள் மறைத்துவைத்திருந்த நிலையில் மீட்கப்பட்டன. விசாரணை தொடர்கிறது. இன்று சில துவிச்சக்கர வண்டிகள் மீட்கப்படும் என்று யாழ்ப்பாணப் பொலிஸார் தெரிவித்தனர். (வ-4)

## சந்தேகநபரைத் தாக்கினார் அதிகாரி

பூநகரியில் மரக்கடத்தலில் ஈடுபட்ட குற்றச்சாட்டில் வன வளத் திணைக்களத்தினரால் கைது செய்யப்பட்டவரை வன வளத்திணைக்கள அதிகாரி தாக்கியதாகக் குற்றஞ்சாட்டப்பட்டது. காயமடைந்த அவர் கிளிநொச்சி மாவட்ட வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டார்.
பூநகரி முட்கொம்பனைச் சேர்ந்த சும்பிரமணியம் (வயது-40) என்பவரே காயமடைந்தவர். வன வளத் திணைக்களத்தினரால் நேற்றுமுன்தினமிரவு அவர் உள்ளிட்ட சிலர் கைதுசெய்யப்பட்டனர். ஒருவரை வன வளத் திணைக்கள அதிகாரி தலையில் தாக்கியதாக குற்றஞ்சாட்டப்பட்டது.
(வ-4,101)



*மாமனிதர் குமார் பொன்னம்பலத்தின் 17ஆவது நினைவு தினம் யாழ்ப்பாணம் கந்தர்மடத்திலுள்ள தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் அலுவலகத்தில் நேற்று நடைபெற்றது.
இந்த நிகழ்வில் கட்சி பிரமுகர்கள், பொது மக்கள் குமார் பொன்னம்பலத்தின் உருவப் படத்துக்கு மலர் தூவி அஞ்சலி செலுத்தினர். நினைவுப் பேருரையை தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் மகளிர் அணித் தலைவி பத்மினி சிதம்பரநாதன் மற்றும் அரசியல் ஆய்வாளர் ஜோதிலிங்கம் ஆகியோர் வழங்கினர். (வ-4,106)*

குருவே துணை

வாழ்க வையகம் வாழ்க வளமுடன்



## யாழ்.மனவளக்கலை மன்ற அறக்கட்டளை வழங்கும் சிறப்பு யோகா பயிற்சிகள்

மனிதனின் நிறைவான, வளமான வாழ்க்கைக்கு அடிப்படையாக இருப்பது நல்ல உடல் நலமும் மனவளமுமே. உடலும் மனமும் எவ்வளவு வளமாக இருக்கிறதோ அந்தளவு மனித வாழ்வு நிறைவாக அமையும். அவ்வாறு உடலையும் மனத்தையும் வளமாக்கிட ஒரு நிறைவான வாழ்க்கையைக் கொடுக்கும் உன்னதமான பயிற்சியே மன வளக்கலையாகும். இவற்றையே அருளாசான் வேதாத்திரி மகரிஷி அவர்கள் மனிதகுலம் மேம்பாடடையவென இவ்வுலகுக்கு அளித்துச் சென்றுள்ளார்.

### முழுமைநல வாழ்வுக்கு மனவளக்கலை யோகாப் பயிற்சிகள்

காலம் :- 07.01.2017 தொடக்கம் 13.01.2017 வரை
நேரம் :- பிற்பகல் 5 மணி தொடக்கம்
இடம் :- அறிவுத் திருக்கோவில், யாழ்ப்பாணம்.

தலைமை :- மனவளக்கலைப் பேராசிரியர்
அருள்நிதி சி.முருகானந்தவேல் அவர்கள்
(தலைவர், யாழ்.மனவளக்கலை அறக்கட்டளை)

பயிற்சி வழங்குபவர்கள் :-
மனவளக்கலை பேராசிரியர் அருள்நிதி ச.இந்திரா அவர்கள் (தமிழ்நாடு - இந்தியா),
மனவளக்கலைப் பேராசிரியர் அருள்நிதி வே.பாஸ்கரன் அவர்கள்

### வழங்கப்படும் பயிற்சிகள்

1. காயகல்ப பயிற்சி
2. எளியமுறை தியானங்கள்
3. எளியமுறை தியானப் பயிற்சிகள்
4. அகத்தாய்வுப் பயிற்சிகள்

### அகத்தாய்வு IV

07.01.2017, 08.01.2017 சனி, ஞாயிறு தினங்களில் காலை 9 மணி தொடக்கம் ஒரு மணிவரை நடைபெறும். இதில் அகத்தாய்வு III முடித்தவர் கள் பங்குபற்றலாம்.

### மௌனம்

12.01.2017 பௌர்ணமி தினத்தன்று அறிவுத் திருக்கோவிலில் அனுஷ்டிக்கப்படும். மௌனத்தில் மனவளக்கலை பயின்ற அன்பர்கள் மற்றும் விரும்புபவர்களும் கலந்துகொள்ளலாம்.

### கூட்டுத்தவம்

தினமும் காலை 6.10 மணிமுதல் 6.30 மணிவரை அறிவுத் திருக்கோயிலில் கூட்டுத்தவம் நடைபெறுகின்றது. மனவளக்கலை பயின்ற அன்பர்கள் கலந்துகொள்வதன் மூலம் உங்கள் தவ ஆற்றலை மேம்படுத்திக் கொள்ளக் கூடியதாக இருக்கும்.

மேற்படி மனவளக்கலை யோகா பயிற்சிகளைப் பயின்று பயன்பெறவென அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

வாழ்க வளமுடன்

அறிவுத்திருக்கோவில்
இல.81, பிறவுண் வீதி,
கொக்குவில், யாழ்ப்பாணம் .

(ஜே/7403)(11,17)

யாழ்.மனவளக்கலை
மன்ற அறக்கட்டளை

## மூடிய கூறுவிலைகோரலும் பகிரங்க ஏலவிற்பனையும்

**பூநகரி ப.நோ.கூ.சங்கம், பூநகரி சங்கத்தினால் பயன்படுத்தப்பட்ட பின்வரும் பொருள்கள் கூறுவிலை மூலமும், பகிரங்க ஏலத்திலும் விற்பனை செய்யப்படவுள்ளன.**

மூடிய கூறுவிலை செய்யப்படும் பொருள்களுக்கான விவரம்

- KDE 12 STA ஜெனரேற்றர் Kipor டீசல் — 01 தனி
- கொண்டா ஜெனரேற்றர் EBK 200 — 01 தனி
- மோட்டார் சைக்கிள் ஸ்ரீம் நீலம் 49cc — 01 தனி
- மோட்டார் சைக்கிள் ஸ்ரீம் சிவப்பு ST 49cc — 01 தனி

16.01.2017ஆம் திகதிக்கு முன்னதாக கூறுவிலைக்கான விண்ணப்பம் எனக் குறிப்பிட்டுத் தலைவர், பூநகரி பலநோக்குக் கூட்டுறவுச் சங்கம், வாடியடி, பூநகரி என முகவரியிட்டுப் பதிவுத்தபால் மூலம் அனுப்பி வைக்குமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

பகிரங்க ஏலவிற்பனை செய்யப்படும் பொருள்களின் விவரம்

- பாவித்த 1000x20, 900x20 லொறி ரயர் — 09
- பாவித்த உழவு இயந்திர பெட்டி ரயர் 750x16 — 02
- பாவித்த 155x12 டிமோரயர் — 13
- துவிச்சக்கர வண்டி — 02
- கட்டட மூலப்பொருள்கள்
- கனரகப் பொருள்கள்
- கிடாரம்
- தாச்சி

மேற் கூறப்பட்ட விவரப்படியான பொருள்கள் 21.01.2017 சனிக்கிழமை அன்று முற்பகல் 10.00 மணிக்குப் பூநகரி வாடியடியில் அமைந்துள்ள தலைமைக் காரியாலயத்தில் வைத்துப் பகிரங்க ஏலவிற்பனை செய்யப் படும். அன்றையதினம் முழுப்பணத்தையும் செலுத்தி பொருள்களை பெற்றுக் கொள்ளவும்.

குறிப்பு:- விடுமுறை நாள்கள் தவிர்ந்த கடமை நாள்களில் பூநகரி வாடியடியிலுள்ள தலைமைக் காரியாலயத்தில் பொருள் களைப் பார்வையிடலாம்.

தொடர்புகொள்ள வேண்டிய தொலைபேசி இலக்கம்
0212060852, 0778163029

துரஇரத்தினசிங்கம்
தலைவர்

(சி/27588) (11.17)

ம.ஜெயகுமார்
பொதுமுகாமையாளர்.

## யா/ சாவகச்சேரி இந்துக்கல்லூரி (தேசிய பாடசாலை) பழைய மாணவர் சங்கம் வருடாந்தப் பொதுக்கூட்டம்

யா/சாவகச்சேரி இந்துக் கல்லூரியின் பழைய மாணவர் சங்கத்தின் வருடாந்தப் பொதுக்கூட்டம் எதிர்வரும் (22.01.2017) ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 9.30 மணிக்குப் பாடசாலை அருணாசலம் மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

- இக்கூட்டத்தில் சமர்ப்பிப்பதற்கு பிரேரணைகள் ஏதும் இருப்பின் 20.01.2017 ஆம் திகதிக்கு முன்னர் பாடசாலை அலுவலகத்தில் சமர்ப்பிக்கலாம்.
- சங்கத்தின் அங்கத்தவர்களாக இணைய ஆர்வமுள் ளவர்கள் பாடசாலை பழைய மாணவர் சங்க புத்தக நிலையத்தில் விண்ணப்பப் படிவங்களைப் பெற்று விண்ணப்பிக்கலாம்.

(C/27500)(11,17)

ந.சர்வேஸ்வரன்
தலைவர் / அதிபர்

06.01.2017

யோ.ஜெயக்குமார்
செயலாளர்.

## UNIVERSITY OF JAFFNA, SRI LANKA
## PHYSICAL EDUCATION UNIT

University of Jaffna will entertain applications from suitably qualified persons for the following postupto**19.01.2017**

**Jaffna**

**Visiting Instructor in Chess-men / Chess-Women / Karate / Rugby**

**Kilinochchi Premises**

**Visiting Instructor in Football / Netball / Cricket / Badminton / Karate**

**Qualification**

a) A graduate of a recognized university who has been a member of a National Team/ National Champion or other equivalent attainments in the field of sports with the prior approval of the UGC

**OR**

b) A candidate who has passed the G.C.E (A/L) Examination in one and the same sitting and who has represented Sri Lanka in any sport at International Level with five (05) years experience in such sports

**OR**

c) G.C.E (A/L) Examination in at least 03 subjects in one and the same sitting and a Diploma in Sports of not less than 09 months duration with five (05)years experience in organizing and implementing sports programmes.

| Post | Salary |
|---|---|
| Visiting Instructor | Rs. 750/- per hour |

**Note:-** This appointment will be 1½ hours per day and two days per week. Total hours of appointment will be 1½ hours × 2 days × 4 weeks × 10 months = 120 hours

Selection :**Interview**

Applications for the above post shall be sent to the Deputy Registrar, Academic Establishments, University of Jaffna, Thirunelvely, Jaffna.

Application forms may be obtained from the office of the Deputy Registrar, Academic Establishments, University of Jaffna, either in person or by post, on a payment of Rs.100/- per application form. Those who wish to obtain application forms by post are requested to send a Money Order/Postal Order drawn in favour of the **Bursar, University of Jaffna** together with a self –addressed stamped envelope 23x10 c.m. in size.

Application forms will also be available in the University website www.jfn.ac.lk. Those who wish to send the application forms downloaded from the University website should attach a Money Order/Postal Order for Rs.100/- to the application form drawn in favour of the **Bursar, University of Jaffna.**

Applicants from the University System/Government Departments/ Corporations and Statutory Board should channel their applications through the Head of respective Institutions. Illegible, incomplete and late applications will be rejected without intimation. Only short listed applicants will be called for Interview.

(C/27697)(11,17)

**05.01.2017**

**REGISTRAR**
**UNIVERSITY OF JAFFNA, SRI LANKA.**

# நேர மாற்றத்தால் மாணவர் சிரமம்

முல்லைத்தீவு, ஜன.6

பாடசாலைகள் தற்போது காலை 7.30 மணிக்கு ஆரம்பிப்பதால் முல்லைத்தீவு மாவட்டத்தில் போக்குவரத்து வசதிகளற்ற மிகவும் பின்தங்கிய கிராமங்களில் வாழும் மக்களின் பிள்ளைகள்பல சிரமங்களை எதிர்நோக்கு கின்றனர் என்று தெரிவிக்கப்படுகின்றது.

"பாடசாலை ஆரம்பிக்கும் நேரத்தை தெற்கைப் போன்று வடக்கிலும் நடைமுறைப்படுத்த முனையும் அதிகாரிகள், அரசியல்வாதிகள் தெற்கைப் போன்று எமது பகுதிகளிலும் சீரான போக்குவரத்து வசதிகளை ஏற்படுத்திக் கொடுக்க வேண்டும். உரிய போக்குவரத்து வசதிகள் ஏற்படுத்தப்படாத பட்சத்தில் எமது பிள்ளைகள் பாடசாலைகளை விட்டு இடைவிலக வேண்டிய அவல நிலைக்கு ஆளாக வேண்டிவரும்."- என்று பாதிக்கப்பட்ட மக்கள் தெரிவித்தனர்.(ற-102)

## குவிவாடிகள் பொருத்த நடவடிக்கை

யாழ்ப்பாணம், ஜன.6

யாழ். மாநகரப் பகுதியில் மேலும் பத்து குவிவு ஆடிகள் இந்த மாதத்துக்குள்பொருத்தப்படவுள்ளன என்று மாநகர ஆணையாளர் பொ.வாகீசன் தெரிவித்தார்.

"யாழ்.மாநகரப்பகுதியில் முக்கிய வீதிகள் சந்திகளின் திருப்பு முனைகளில் இவை அமைக்கப்படும். ஏற்கனவே மாநகரப் பகுதிகளில்பத்துகுவிவு வாடிகள் பொருத்தப்பட்டுள்ளன. அவற்றில் இரண்டு குவிவு வாடிகள் சேதமாக்கப்பட்டுள்ளன. குவி வாடிகள் பொருத்தப்பட்டுள்ளதால் விபத்துக்கள் தவிர்க்கப்படுகின்றன. ."-என் றார். (ற-17)

## சி.கூ. சங்கத்துக்கு விரைவில் மாடிக் கட்டடம்

யாழ்.மாவட்டச் சிக்கனக் கடன் வழங்கும் கூட்டுறவுச் சங்கங்களின் சமாசத்துக்கு 3 மாடிகளைக் கொண்டகட்டம்ஒன்று விரைவில் அமைக்கப் பட உள்ளது என்று தெரிவிக்கப்படுகிறது. பல லட்சம் ரூபா செலவில் கட்டடத்துக்கான நிர்மாணப் பணிகள் விரைவில் ஆரம்பிக்கப்படும்என்று சமாசத்தி ன் தலைவர் செ. இலகுநாதன்தெரிவித்தார். கே.கே.எஸ். வீதி, தட்டாதெருச் சந்திக்கு அண்மையிலுள்ள சமாசக் காணியில் கட்டடம் அமைக்கப்படும். சமாச அலுவலகம் தற்போது தனியார் கட்டடம் ஒன்றில் இயங்கி வருகின்றது என்றும் தெரிவிக்கப்பட்டது.(ற-17)

## தரம் 1 மாணவர் கால்கோள் விழா 11 ஆம் திகதி

தென்மராட்சி, ஜன.6
தரம் 1 மாணவர்களை பாடசாலைகளில் இணைக்கும் கால்கோள் விழா எதிர்வரும் 11ஆம் திகதி புதன்கிழமை ஆரம்பப் பிரிவுப் பாடசாலைகளில் நடைபெறவுள்ளன. வடக்கு மாகாண கல்வி அமைச்சின் ஏற்பாட்டில் இந்த விழா நடைபெற வுள்ளது.
வடக்கு மாகாண கல்வி அமைச்சின் கால்கோள் விழா இந்த ஆண்டு தென்மராட்சி கல்வி வலயத்தில் உள்ள பாடசாலை ஒன்றில் நடத்தப்படவுள்ளது என்று மாகாண கல்வி அமைச்சால் அறிவிக்கப்பட்டுள்ளது.
கடந்த ஆண்டு மாகாண கல்வி அமைச்சின் கால்கோள் விழா தீவக கல்வி வலயத்தில் நடத்தப்பட்டது. மாகாண கல்வி அமைச்சு கால்கோள் விழாவை வருடாந்தம் ஒவ்வொரு கல்வி வலயத்தில் நடத்துகின்றது. (ற-9)

# ஆரம்பப் பாடசாலை திம்பிலிக்குத் தேவை

## கிராம மக்கள் கோரிக்கை

முல்லைத்தீவு, ஜன.6
தமது பிள்ளைகளின் கல்வியை மீளக் கட்டியெழுப்ப ஆரம்பப் பாடசாலை ஒன்றை அமைத்துத் தாருங்கள் என்று கோரிக்கை விடுத்துள்ளனர் முல்லைத்தீவு, புதுக்குடியிருப்பு பிரதேச செயலகப் பிரிவுக்குட்ட திம்பிலிக் கிராம மக்கள்.

“ மாணவர்கள் 4 கிலோமீற்றர் தூரத்தில் உள்ள ஆரம்பப் பாடசாலைக்கே செல்கின்றனர். அதனால் அவர்கள் ஒழுங்காகப் பாடசாலைகளுக்குச் செல்வதில்லை. ஆரம்பக் கல்வியைப் பலர் இழந்துள்ளனர் என்று கிராம மக்கள் கவலையுடன் தெரிவித்தனர்.

“போரால் நாம் பலத்த இழப்புகளைச் சந்தித்தோம். பிள்ளைகளின் கல்விக்காகவே இப்போது வாழ்கின்றோம். இந்தப் பிரதேசத்தில் 500க்கும் மேற்பட்ட குடும்பங்கள் வாழ்கின்றன. கூலி வேலை செய்தே வாழ்க்கையை நகர்த்துகின்றோம். எங்கள் பிள்ளைகள் 4 கிலோமீற்றர் தூரத்தில் உள்ள ஆரம்பப் பாடசாலைக்கே செல்கின்றனர். அதனால் 50 வீதமான பிள்ளைகள் ஒழுங்காகப் பாடசாலைக்குச் செல்வதில்லை. பல பிள்ளைகள் ஆரம்பக் கல்வியை இழந்துள்ளனர்.
சம்பந்தப்பட்ட அதிகாரிகள் எமது பிள்ளைகளின் கல்வி விடயத்தில் கரிசனை காட்ட வேண்டும். எமது பிரதேசத்தில் ஓர் ஆரம்பப் பாடசாலை உருவாக்கித் தர வேண்டும். வடமாகாண கல்வி அமைச்சர், வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சி. சிவமோகன். முல்லைத்தீவு மாவட்ட வடமாகாண சபை உறுப்பினர்கள், முல்லைக் கல்வி வலய பணிப்பாளர், புதுக்குடியிருப்பு கோட்டக் கல்வி அதிகாரி என பலருக்கு எங்கள் கோரிக்கைகளுடனான கடிதங்களை அனுப்பியுள்ளோம்.”- என்று கிராம மக்கள் தெரிவித்தனர்.(ற-21,7)

## வேலைவாய்ப்பு எனக் கூறி பணம் அபகரிக்கும் கும்பல்

யாழ்ப்பாணம், ஜன.6
கவர்ச்சிகரமான வேதனத்துடன் வேலைவாய்ப்பு என்று இளைஞர், யுவதிகளுக்கு ஆசைகாட்டி அவர்களிடம் இருந்து பணம் பிடுங்கும் சம்பவங்கள் அதிகரித்துள்ளன என்று சமூக ஆர்வலர்கள் சுட்டிக்காட்டுகின்றனர்.
“யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த இளைஞர் யுவதிகளிடம் தொலைபேசி வாயிலாக உரையாடும் சிலர் தாம் பிரபல நிறுவனங்களைச் சேர்ந்தவர்கள் என்று அறிமுகப்படுத்திக் கொள்கின்றனர். வேலைக்கு ஆள்கள் தேவை, கவர்ச்சிகரமான வேதனம் வழங்கப்படும், வேலைக்கான முற்கொடுப்பனவை வங்கியில் வைப்பிலிட வேண்டும் என்று கூறுகின்றனர். அவர்களின் பேச்சில் மயங்கும் இளைஞர், யுவதிகள் பணத்தை வைப்பிலிடுகின்றனர்.
அதன்பின்னர் தொலைபேசியில் உரையாடியவர்கள் மாயமாகி விடுகின்றனர். பணத்தை வைப்பிலிட்டவர்கள் பணமும் இன்றி, வேலை வாய்ப்பும் இன்றி ஏமாற்றப்படுகின்றனர்”- என்று அவர்கள் தெரிவித்தனர்.

### புது யுக்தி

காணி விற்பனைக்கு என்ற விளம்பரம் அண்மையில் பத்திரிகை ஒன்றில் பிரசுரமாகியிருந்தது. அதைப் பார்த்த ஒருவர் அதிலிருந்த தொலைபேசி இலக்கத்துக்கு அழைப்பெடுத்து உரையாடினார். காணியை வாங்குவதற்குச் சம்மதம் தெரிவித்தார்.
பின்னர் தான் யாழ்ப்பாணத்தில் உள்ள பிரபல நிறுவனத்தில் முகாமையாளராகக் கடமையாற்றுகின்றேன் என்று கூறினார். வேலைவாய்ப்பு உள்ளது, யாரேனும் தெரிந்தவர்கள் உள்ளனரா? என்று கேட்டார். விளம்பரம் பிரசுரித்தவரும் அதை நம்பி தெரிந்த யுவதி ஒருவரின் தொலைபேசி இலக்கத்தைக் கொடுத்துள்ளார்.
யுவதியை அந்த நபர் தொடர்பு கொண்டுள்ளார். வேலைவாய்ப்புப் பற்றி உரையாடிய அவர் வேலைக்காக கணினி ஒன்று கொள்வனவு செய்ய வேண்டும். அதற்கான பணத்தை வங்கியில் வைப்பிலிடுங்கள் என்று யுவதிக்கு கூறினார்.
யுவதி இந்த விடயத்தை தனது வீட்டினருக்குக் கூறினார். அவர்கள் அதற்கு மறுத்தனர், நேர்முகத் தேர்வின்போது பணத்தை வழங்கலாம் என்று கூறினர்.
வீட்டினரின் கருத்தைக் கேட்காத யுவதி பணத்தை வைப்பிலிட்டார். பணம் வைப்பிலிட்டதும் முகாமையாளர் என்று அறிமுகப்படுத்தியவர் மாயமானார். அவருடன் தொடர்பு கொள்ள முடியவில்லை. இந்தச் சம்பவம் நேற்றுமுன்தினம் நடந்துள்ளது.

### விழிப்பு தேவை

படித்த இளைஞர், யுவதிகளே இவ்வாறு இலக்கு வைக்கப்படுகின்றனர். இளைஞர்கள், யுவதிகள் இவை தொடர்பில் விழிப்புடன் இருக்க வேண்டும். வேலைவாய்ப்பு என்னும் வார்த்தையை நம்பி பணத்தை அநியாயமாக இழக்கக்கூடாது. இவ்வாறான ஏமாற்றுப் பேர்வழிகள் கண்டுபிடிக்கப்பட்டு தகுந்த தண்டனை வழங்கப்படவேண்டும்.”- என்று சமூக ஆர்வலர்கள் தெரிவித்தனர். (ற-21)



நீண்ட காலமாக சுத்திகரிக்கப்படாதிருந்த முல்லைத்தீவு, தண்ணீரூற்றுக் கேணியும், ஊற்றுக்கிணறும் அண்மையில் சுத்திகரிக்கப்பட்டன. ஊற்றங்கரை விநாயகர் ஆலய கேணியும், எந்தக் காலத்திலும் நீர் மட்டம் குறையாத ஊற்றுக் கிணறும் நாளாந்தம் பெரும் எண்ணிக்கையான மக்களின் தண்ணீர் தேவையைப் பூர்த்தி செய்தன. நீண்டகாலமாக அவை சுத்திகரிக்கப்படாதிருந்ததை அடுத்து அவை ஆலய அறங்காவலர்களின் ஏற்பாட்டில் இறைக்கப்பட்டு சுத்திகரிக்கப்பட்டன. (ற-21)

## ‘புறநெகும’ திட்டத்தின் கீழ் வலி.மேற்கில் வீதி திருத்தம்

யாழ்ப்பாணம், ஜன.6
2016ஆம் ஆண்டு நெல்சிப் புறநெகும அபிவிருத்தித் திட்டத்தின் கீழ் வலி.மேற்கில் இரு அபிவிருத்தித் திட்டங்கள் முன்னெடுக்கப்பட்டன.
மூளாய் முதலாம் ஒழுங்கை - இந்தியடி முதலிகோயில் இரண்டாம் வீதி (890 மீற்றர்), வட்டு. கிழக்கு தவளை வீதி (1,150 மீற்றர்) என்பன சீரமைக்கப்பட்டுள்ளன. அதற்காக 20 மில்லியன் ரூபா செலவிடப்பட்டுள்ளது.
2011 முதல் 2015ஆம் ஆண்டு வரையான காலப்பகுதியில் நவீன மீன்சந்தை, சுழிபுரம் கிழக்குப் பெரியதம்பிரான் வீதி, அராலி மேற்கு நொச்சியம்பதி பச்சந்தை வீதி, பண்ணாகம் பல்லசுட்டி வீதி, வட்டு கலை நகர் மழவராயர் வீதி, மூளாய் சைவப்பிரகாச வித்தியாசாலை வீதி, சங்கானை வல்லை 1ஆம் வீதி, யாழ். பொன்னாலை முதலாம் வீதி, விக்னேஸ்வரா வீதிச் சீரமைப்பு போன்ற திட்டங்கள் நெல்சிப் திட்டத்தில் முன்னெடுக் கப்பட்டுள்ளன. (ற-50)

# கிளி. வைத்தியசாலை முன் ஓட்டோச் சாரதிகள் அடாவடி

## மல்லாவி, யோகபுரம் ஓட்டோ உரிமையாளர் சங்கம் குற்றச்சாட்டு

கிளிநொச்சி, ஜன.6
மல்லாவி வைத்தியசாலையில் இருந்து கிளிநொச்சி வைத்தியசாலைக்கு முச்சக்கர வண்டிகளில் நோயாளர்களை ஏற்றிச் செல்லும் நாம், மீண்டும் ஏற்றிச் செல்ல முடியாதுள்ளது. கிளிநொச்சி மாவட்ட வைத்தியசாலைக்கு முன்பாக உள்ள முச்சக்கரவண்டிச் சாரதிகள் சிலர் அடாவடியில் ஈடுபடுகின்றனர்.
இவ்வாறு மல்லாவி, யோகபுரம் முச்சக்கர வண்டி உரிமையாளர் சங்கத்தினர் தெரிவித்தனர்.
அவர்கள் நாடாளுமன்ற உறுப்பினர் எஸ்.சிறிதரனுக்கு இது தொடர்பாகக் கடிதம் ஒன்றையும் அனுப்பியுள்ளனர்.
அதில் உள்ளதாவது:-
மல்லாவி, யோகபுரம் மக்கள் சிகிச்சைகளுக்காக கிளிநொச்சி மாவட்ட வைத்தியசாலைக்கு வருகின்றனர். அவர்களை நாம் முச்சக்கர வண்டிகளில் ஏற்றி வருகின்றோம். அவர்கள் உடனடியாகச் சிகிச்சை பெற்றுத் திரும்பினால்கூட அவர்களை மீண்டும் ஏற்றிச் செல்ல முடியாதுள்ளது.வைத்தியசாலை வாயிலில் உள்ள தரிப்பிட முச்சக்கர வண்டிச் சாரதிகள் சிலர் எம்மை நிறுத்தி நோயாளர்களை இறக்கி சண்டித்தனம் செய்கின்றனர்.
வைத்தியசாலைக்குள் இருந்து எவரும் நோயாளர்களை ஏற்றிச் செல்ல முடியாது என்று தெரிவித்து தேவையற்ற வார்த்தைகளைக் கொட்டுகின்றனர். வருவோர் தமது பகுதியில் உள்ள அறிமுகமான முச்சக்கர வண்டிகளில் வீடு திரும்பவே விரும்புவர். உடன் பணம் தர வசதியில்லாத பலர் தமக்குத் தெரிந்த முச்சக்கர வண்டிச் சாரதிகளை வைத்தியசாலை வருமாறு கூறுவதுண்டு. வைத்தியசாலை முன்பாகவுள்ள சாரதிகளின் அடாவடியால் நாம் அவர்களை ஏற்றிச் செல்ல முடியாதுள்ளது.
வடக்கு மாகாண போக்குவரத்து அமைச்சருக்கு இது தொடர்பாகக் கடிதம் அனுப்பினோம். எந்த நடவடிக்கையும் அவர் எடுக்கவில்லை. இது தொடர்பாக உரிய தீர்வைப் பெற்றுத்தர வேண்டும்.”- என்றுள்ளது.
“கிளிநொச்சி வைத்தியசாலைப் பகுதியில் இவ்வாறான சில சம்பவங்கள் நடக்கின்றன என்று எமக்கு முறைப்பாடுகள் கிடைத் துள்ளன. இன்னும் ஓரிரு மாதங்களில் கூட்டம் நடைபெறவுள்ளது. சம்பந்தப்பட்ட அதிகாரிகளின் ஒத்துழைப்புடன் இதற்குத் தீர்வு காணப்படும்.”- என்று கிளிநொச்சி மாவட்ட முச்சக் கரவண்டி உரிமையாளர் சங்கத் தலைவர் கங்காதரன் தெரிவித்தார். (ற-ய-21)

# சுகாதாரப் பரிசோதகர்கள் பணிப் புறக்கணிப்பால் மக்களுக்கு நெருக்கடி

## வடக்கு சுகாதார அமைச்சர் உறுதிமொழியை நிறைவேற்றாததால் இந்த நிலை எனத் தெரிவிப்பு

யாழ்ப்பாணம், ஜன.6

பொதுச் சுகாதாரப் பரிசோதகர்களின் பணிப் புறக்கணிப்புப் போராட்டம் தொடரும் நிலையில் பொதுமக்கள் பெரும் பாதிப்புகளைச் சந்தித்துள்ளனர் என்று தெரிவிக்கப்படுகின்றது. வடக்கு மாகாண சுகாதார அமைச்சர் உறுதிமொழியை நிறைவேற்றாததாலேயே பணிப் புறக்கணிப்புப் போராட்டம் தொடர்கின்றது என்றும் கூறப்படுகின்றது.

பணிநிலை இடமாற்றம் தொடர்பாக யாழ்.மாவட்டத்தைச் சேர்ந்த சுகாதாரப் பரிசோதகர்கள் கடந்த 17 நாள்களாக பணிப்புறக்கணிப்புப் போராட்டம் நடத்துகின்றனர். வடக்கு சுகாதார அமைச்சருக்கும், பொதுச் சுகாதார அமைச்சருக்கும் இடையே நேற்றுமுன்தினம் சந்திப்பு நடைபெற்றது. அதில் சில முடிவுகள் எடுக்கப்பட்டன. அவை தொடர்பான எழுத்து மூல ஆவணங்கள் இன்னமும் கிடைக்கவில்லை என்று பொதுச் சுகாதாரப் பரிசோதகர்கள் தெரிவித்தனர்.

**மக்கள் பாதிப்பு**

யாழ். மாவட்டத்தில் தற்போது டெங்குத் தொற்று அதிகரித்துள்ளது. மாவட்டத்தில் உள்ள பாடசாலைகளின் சுகாதார நிலைமைகள் பாதிப்படைந்துள்ளன. மாணவர்களுக்குச் செய்யப்படும் மருத்துவ பரிசோதனைகள், தடுப்பூசிகள் வழங்கல் என்பனவும் நிறுத்தப்பட்டுள்ளன. பாடசாலை மாணவர்கள் தொற்றுநோய்களை எதிர்நோக்க வேண்டிய சூழ்நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளனர்.

பொதுமக்கள் வீட்டுத்திட்டங்கள் மூலம் வீடுகளைக் கட்டும்போது பொதுச் சுகாதாரப் பரிசோதகர்களே காணியை ஆய்வு செய்து மலசலகூடம், கிணறுகள் அமைவது தொடர்பில் அறிக்கையிடுகின்றனர். அவர்களின் போராட்டத்தால் வீடுகளைக் கட்டும் பணிகளிலும் தாக்கங்கள் ஏற்பட்டுள்ளன.

யாழ். மாவட்டத்தில் உள்ள உணவகங்களில் பரிசோதனைகள் இடம்பெறாததால் பழுதடைந்த உணவுகளையும் பொதுமக்கள் கொள்வனவு செய்கின்ற நிலையும் ஏற்பட்டுள்ளது. கடைகளில் காலாவதியான உணவுப் பொருள்கள் தொடர்பில் ஆய்வுகள் இடம்பெறாததால் காலாவதியான பொருள்கள் விற்பனை செய்யப்படும் நிலையும் காணப்படுகின்றது.

மக்கள் கடன் திட்டங்கள் ஊடாக கடன் வசதிகளைப் பெறுவதற்கு பொதுச் சுகாதாரப் பரிசோதகர்களின் பரிந்துரைகளும் தேவைப்படுகின்றன. வீட்டுக் கடன் திட்டங்களுக்கு சுகாதாரப் பரிசோதகர்களின் பரிந்துரை முக்கிய பங்கை வகிக்கின்றது. கடன் பெற விண்ணப்பித்தவர்களும் பல நெருக்கடிகளைச் சந்தித்துள்ளனர்.

2017ஆம் ஆண்டுக்கான வியாபார அனுமதிப் பத்திரங்களைப் பெற்றுக்கொள்வதற்கு பொதுச் சுகாதாரப் பரிசோதகர்களின் பரிந்துரை தேவை என்பதால் வியாபாரிகள் தங்களின் நடப்பாண்டுக்கான வியாபார அனுமதியை பெறமுடியாதுள்ளனர். உள்ளூராட்சி மன்றங்களினால் செயற்படுத்தப்படும் பல செயற்பாடுகளும் பாதிப்படைந்துள்ளன என்று சுட்டிக்காட்டப்படுகின்றது. (ற-21,8)

# பாடசாலை நேர மாற்றத்தால் ஆசிரியர்களுக்கும் பாதிப்பே

## இலங்கை ஆசிரியர் சங்கத்தின் பொதுச் செயலாளர் சுட்டிக்காட்டு

யாழ்ப்பாணம், ஜன.6

வடக்கு மாகாணத்தில் நடைமுறைப் படுத்தப்பட்டுள்ள பாடசாலைகளின் நேர மாற்றத்தால் பெரும்பாலான ஆசிரியர்கள் பாதிப்புக்களை எதிர்கொண்டுள்ளனர்.

இவ்வாறு இலங்கை ஆசிரியர் சங்கத்தின் பொதுச் செயலாளர் ஜோசப் ஸ்டாலின் தெரிவித்தார்.

அவர் தெரிவித்தாவது:

வடக்கு மாகாணத்தைப் பொறுத்தவரையில் இந்த நடைமுறை மிகவும் பிழையானது. பல ஆசிரியர்கள் தங்கள் இருப்பிடங்களிலிருந்து நீண்ட தூரத்தில் உள்ள பாடசாலைகளுக்குச் சென்றே கற்பித்தல் செயற்பாடுகளை முன்னெடுகின்றனர்.

அவர்கள் வாகன வசதிகள் தொடர்பில் பல நெருக்கடிகளுக்கு முகம் கொடுக்கின்றனர். ஆசிரியர்கள் தூர இடங்களுக்கு செல்வதற்காக பேருந்துகளையே அதிகம் பயன்படுத்துகின்றனர். அவர்கள் பயணிக்கும் பேருந்துகளும் சிலவும் சரியான நேரத்துக்கு சென்றடைவதில்லை. இதனால் பாடசாலைகளுக்கு ஆசிரியர்கள் உரிய நேரத்துக்குச் செல்ல முடியாத நிலை உள்ளது.

சில பாடசாலைகள் பிற்பகல் 3 மணி வரை கூட இயங்குகின்றன என்று அறிய முடிகின்றது. இது யாரால் பிறப்பிக்கப்பட்ட சட்டம் என்று எங்களுக்குத் தெரியவில்லை. அவ்வாறான பாடசாலைகளில் கற்பிக்கும் பாடசாலை ஆசிரியர்களின் நிலை பற்றி யாரும் சிந்திப்பதில்லையா?.

தற்போது நடைமுறைக்கு வந்துள்ள பாடசாலை நேர மாற்றத்தில் தூர இடங்களுக்கு சென்று கற்பிக்கும் ஆசிரியர்களின் நலனையும் கருத்தில் கொள்ள வேண்டும்" - என்றார். (ற-8)




# ஆற்றுப்படுத்தும் திட்டத்தில் பாடசாலைக்கு நீர்த் தாங்கி

வவுனியா, ஜன.6

கையளிக்கப்பட்டு காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவினர்ஒன்றிணைந்து ஆற்றுப்படுத்தும் செயற்றிட்டத்தின் கீழ் செட்டிகுளம், முகத்தான்குளம் விக்னேஸ்வரா வித்தியாலத்துக்கு தண்ணீர்த் தாங்கி மூலம் குடிதண்ணீர் வழங்கும் திட்டத்தைக் கையளித்தனர். பன்னாட்டு செஞ்சிலுவைச் சங்கம், சாந்தி நிறுவனம் என்பற்றின் ஏற்பாட்டில் இந்தச்செயற்றிட்டம் முன்னெடுக் கப்பட்டது.

நேற்றுமுன்தினம் இந்த நிகழ்வு நடைபெற்றது.

தமிழ் விருட்சம் அமைப்பின் தலைவர் எஸ். சந்திரகுமார், சாந்தி நிறுவனத்தின் உத்தியோகத்தர் திலீபன், பாடசாலையின் அதிபர், கையளிக்கப்பட்டுக் காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவினர்கள் எனப் பலரும் இந்த நிகழ்வில் கலந்து கொண்டனர். (ற-21)

# முன்னாள் போராளிகளுக்கு கடனுதவி வழங்க ஏற்பாடு

யாழ்ப்பாணம், ஜன.6

புனர்வாழ்வு அதிகார சபை, முன்னாள் போராளிகளுக்கு சுயதொழில் நடவடிக்கைக்கு கடனுதவி வழங்கவுள்ளது.

இந்த நிதியுதவியை இலங்கை வங்கி, மக்கள் வங்கி மற்றும் கிராமிய அபிவிருத்தி வங்கி மூலம் பெற்றுக் கொள்ள முடியும் என்று புனர்வாழ்வு அதிகார சபை தெரிவித்தது.

2 லட்சத்து 50 ஆயிரம் ரூபா வரை கடன் வழங்கப்படும். கடன் 4 வீத வட்டியுடன் 10 ஆண்டு காலத் தவணையில் செலுத்தப்பட வேண்டும்.

12 ஆயிரத்து 156 முன்னாள் போராளிகள் புனர்வாழ்வு அதிகார சபையின் கீழ் பயிற்றுவிக்கப்பட்டு புனர்வாழ்வு பெற்றுள்ளனர். பாதுகாப்புப் படையால் கைது செய்யப்பட்டவர்கள், சரண் அடைந்தவர்களுக்கே புனர்வாழ்வு வழங்கப்பட்டது.

கடனுதவிகளுக்காக முதற்கட்டமாக 302 மில்லியன் ரூபா நிதி ஒதுக்கப்பட்டுள்ளது. இரண்டாம் கட்டமாக 525 மில்லியன் ரூபா வழங்க அமைச்சரவை ஒப்புதல் அளித்துள்ளது. வடக்கு, கிழக்கில் முதற்கட்ட கடனுதவி வழங்கும் நிகழ்வில் சுய தொழில் விழிப்புணர்வுப் பயிற்சிகள் வழங்கப்படும்.

இரு மாகாணங்களிலும் 30 இடங்கள் தெரிவு செய்யப்பட்டுள்ளன. இந்தப் பயிற்சியால் ஆயிரத்து 800 முன்னாள் போராளிகள் பயனடைவர். பயிற்சிகள் தமிழ் மொழி மூலம் வழங்கப்படும் - என்றும் தெரிவிக்கப்பட்டது. (ற-ஏ)

# நீராவிப்பிட்டி வாரச் சந்தையில் வியாபாரம் செய்யும் சிறார்கள்

## நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று சமூக ஆர்வலர்கள் கோரிக்கை

முல்லைத்தீவு, ஜன.6

முல்லைத்தீவில் கரைதுறைப்பற்று பிரதேச சபைக்கு உட்பட்ட நீராவிப்பிட்டியில் ஞாயிற்றுக்கிழமைகளில் இயங்கும் சந்தையில் சிறுவர்கள் வியாபார நடவடிக்கைகளில் ஈடுபடுகின்றனர் என்று சமூக ஆர்வலர்கள் சுட்டிக்காட்டினர்.

"இந்த வாரச் சந்தையில் பல சிறார்கள் வேலைக்கு அமர்த்தப்பட்டுள்ளதைக் காண முடிகின்றது. சிறார்களை வேலைக்கு அமர்த்துவது சட்டவிரோதமானது. அதையும் மீறி சிறார்கள் வேலைக்கு அமர்த்தப்பட்டுள்ள நிலையில் சம்பந்தப்பட்ட அதிகாரிகள் அது தொடர்பாகக் கண்டும் காணாத நிலையையே பின்பற்றுகின்றனர்.

ஞாயிற்றுக் கிழமைகளில் தனியார் கல்வி நிலையங்கள் மூடப்பட்டு மாணவர்கள் அறநெறிப் பாடசாலைகளுக்குக் கட்டாயம் செல்ல வேண்டும் என்ற கட்டுப்பாடும், சட்டமும் நடைமுறையில் உள்ளன. சிறார்களை வியாபார நடவடிக்கையில் ஈடுபடுத்தும் வியாபாரிகள் மீது சம்பந்தப்பட்ட அதிகாரிகள் சட்ட நடவடிக்கை எடுக்க வேண்டும்"- என்று அவர்கள் தெரிவித்தனர்.

"முல்லைத்தீவு மாவட்டத்தில் சிறுவர்களை வேலைக்கு அமர்த்தியமை தொடர்பான முறைப்பாடுகள் எவையும் கிடைக்கவில்லை. எமக்கு முறைப்பாடுகள் கிடைக்கும் பட்சத்தில் அது தொடர்பாக உடனடியாக சட்ட நடவடிக்கை எடுக்கப்படும்"- என்று முல்லைத்தீவு மாவட்டச் செயலாளர் குறிப்பிட்டார். (ற-7)

# பெண் தலைமைக் குடும்பங்களுக்கு இந்த ஆண்டு பல்வேறு திட்டங்கள்

## மத்திய நிலையம் முழுவீச்சில் செயற்படும் என கிளி. மாவட்ட செயலாளர் தெரிவிப்பு

கிளிநொச்சி, ஜன.6

பெண் தலைமைத்துவக் குடும்பங்களை வலுவூட்டும் வகையில் கிளிநொச்சி மாவட்டத்தில் கடந்த ஆண்டு அமைக்கப்பட்ட மத்திய நிலையத்தின் செயற்பாடுகள் இந்த ஆண்டு முழுவீச்சில் முன்னெடுக்கப்படும்.

இவ்வாறு கிளிநொச்சி மாவட்டச் செயலாளர் சுந்தரம் அருமைநாயகம் தெரிவித்தார்.

"சிறுவர், மகளிர் விவசார அமைச்சு பெண் தலைமைத்துவக் குடும்பங்களைப் பொருளாதார ரீதியில் வலுவூட்டும் நோக்கில் கடந்த ஆண்டு இந்த மத்திய நிலையத்தை ஆரம்பித்தது. அங்கு அமைச்சு அதிகாரிகளால் இப்போது சில தொழிற்பயிற்சிகள் வழங்கப்படுகின்றன. தற்போது அதன் செயற்பாடுகள் காத் திரமானதாக இல்லை. இந்த ஆண்டு பல வேலைத் திட்டங்கள் முன்னெடுக்கப் படும்"- என்று அவர் குறிப்பிட்டார்.

இரு ஆண்டுகளுக்கு முன்னர் கிளிநொச்சியில் இடம் பெற்ற கலந்துரையாடல் ஒன்றில் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க, "போரால் பாதிக்கப்பட்டு குடும்பங்களைத் தலைமைதாங்கும் பெண்களுக்கான மத்திய நிலையம் கிளிநொச்சியில் அமைக்கப்படும். அதன் மூலம் அவர்களுக்கான வேலைவாய்ப்புகள், தேவைகள் நிறைவேற்றப்படும்"- என்று தெரிவித்திருந்தார்.

அதன்படி மத்திய நிலையம் கடந்த ஆண்டு திறக்கப்பட்டது. அங்கு முன்னேற்றகரமான நடவடிக்கைகள் எவையும் இடம்பெறவில்லையென்று பொதுமக்கள் கூறுகின்றனர். (ற-21,ய)



ஐக்கிய தேசியக் கட்சியின் தலைமையகமான சிறிகொத்தவில் சூரிய சக்தியின் மூலமான மின்சாரக் கட்டமைப்பைப் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க நேற்றுமுன்தினம் ஆரம்பித்துவைத்தார். இந்த நிகழ்வில் அமைச்சர் லக்ஷ் மன் உள்ளிட்ட பலர் கலந்துகொண்டனர். (த)

# காணாமற்போன கிழக்கு மீனவரில் இருவர் நேற்று மாலைதீவில் மீட்பு

## காப்பாற்றியது அந்த நாட்டுக் கடற்படை

மட்டக்களப்பு, ஜன. 6

கல்முனையைச் சேர்ந்த 6 மீனவர்களுடன் கடலுக்குச் சென்ற 2 இயந்திரப் படகுகள் காணாமற்போன நிலையில், அவற்றில் ஒன்று 2 மீனவர்களுடன் மாலைதீவுக் கடற்படையினரால் பாதுகாப்பாக மீட்கப்பட்டதாகப் பொலிஸார் தெரிவித்தனர்.

தற்போது மாலைதீவுத் துறைமுகத்தில் தங்க வைக்கப்பட்டுள்ள இவர்கள் இருவரும் நேற்று அதிகாலை தங்களின் குடும்பங்களுக்குத் தொலைபேசி அழைப்பை மேற்கொண்டு, இந்தத் தகவலை வழங்கியதாகவும் பொலிஸார் தெரிவித்தனர்.

கடந்த டிசெம்பர் 24ஆம் திகதி மீன்பிடித் தொழிலுக்காக ஒலுவில் துறைமுகத்திலிருந்து கடலுக்குச் சென்ற 2 படகுகள், திசை மாறிச் சென்று கொண்டிருந்தன. படகுக்குள் இருந்த எரிபொருளும் தீர்ந்து போனது. கடலில் வீசும் காற்றினால் நகர்ந்துகொண்டிருந்த மேற்படி படகை மாலைதீவுக் கடற்படையினர் அவதானித்துள்ளனர். இந்த நிலையில், படகை மாலைதீவுத் துறைமுகத்துக்குக் கட்டிஇழுத்துச் சென்றுள்ளனர்.

பாதுகாப்பாக மீட்கப்பட்ட படகில் 3 மீனவர்கள் இருந்தபோதிலும், மற்றைய படகிலுள்ள மீனவர்களுக்கு உதவுவதற்காக ஒரு மீனவர் அதில் ஏறியதாகவும் பின்னர், அந்தப் படகு வேறு திசை நோக்கி நகர்ந்துவிட்டதாகவும் மீட்கப்பட்ட மீனவர்கள் கூறியுள்ளனர் எனவும் பொலிஸார் தெரிவித்தனர்.

ஹாஜா மொஹைதீன், முஹமட் அர்ஜீல் ஆகியோர் இவ்வாறு மீட்கப்பட்டுள்ளதாக அம்பாறை மாவட்ட ஆழ்கடல் மீன்பிடி இயந்திரப்படகுச் சங்க தலைவர் எம்.எஸ் நஸீர் தெரிவித்தார். (து)

# இரண்டரை மாதத்தில் விளையும் நெல்லினம்

## விவசாயிகளுக்கு வழங்க நடவடிக்கை



இரண்டரை மாதத்தில் சிறந்த விளைச்சலைத் தரக் கூடிய பிஜி–250 வகை நெல்லின விதைகளை விவசாயிகளுக்குப் பகிர்ந்தளிக்க நடவடிக்கைஎடுக்கப்பட்டுள்ளதாக விவசாயத் திணைக்களப் பணிப்பாளர் நாயகம் கலாநிதி ரொஹான் விஜயகோன் தெரிவித்தார்.

இந்த வருடத்தில் நெற்செய்கையின்போது ஏற்படக்கூடிய பாதிப்புக்களைக் குறைக்கும் வகையில் நெற்செய்கை மேம்பாட்டுத் திட்டங்களையும் மாற்றுப் பயிர்ச்செய்கைகளையும் ஊக்குவிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக அவர் சுட்டிக்காட்டினார். மழை மூலம் நான்கு இலட்சம் ஹெக்ரேயர் நிலப்பரப்பில் நெற்செய்கை மேற்கொள்ள எதிர்பார்க்கப்படுகிறது. இவ்வாறு உற்பத்தி செய்யப்படும் நெல் தொகை எதிர்வரும் ஜூலை மாதம் மட்டுமே பாவனைக்குப் போதுமாக உள்ளது.

நெற்செய்கைக்கு மேலதிகமாக மரக்கறி மற்றும் பழவகைகளைப் பயிரிடுவது தொடர்பிலும் கூடுதல் கவனம் செலுத்தப்பட்டுள்ளதாக விவசாயத் திணைக்களப் பணிப்பாளர் நாயகம் மேலும் தெரிவித்தார். (து)

# வவுனியா வடக்கு பலநோக்குக் கூட்டுறவுச் சங்கம் (வ-து)

## பதவி வெற்றிடம்

வவுனியா வடக்குப் பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத்தின் கீழ் குறிப்பிடப்படும் பதவி வெற்றிடங்களுக்கு ஆள்சேர்ப்பு செய்யப்படவுள்ளதால் தகைமையுள்ள விண்ணப்பிக்க விரும்பும் விண்ணப்பதாரர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. விண்ணப்பங்கள் யாவும் சகல விவரங்களும் உள்ளடக்கப்பட்டதாக சுயமாகத் தயாரிக்கப்பட வேண்டும். விண்ணப்பத்தினை **தலைவர், வவுனியா வடக்குப் பலநோக்குக் கூட்டுறவுச் சங்கம், நெடுங்கேணி** என்னும் முகவரிக்கு பதிவஞ்சல் மூலமாகவோ அன்றேல் நேரடியாகவோ 20.01.2017 ஆம் திகதிக்கு முன் கிடைக்கக் கூடியவாறு அனுப்பி வைத்தல் வேண்டும். கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் விண்ணப்பிக்கும் பதவியின் பெயர் குறிப்பிடப்படல் வேண்டும். வயதெல்லை 18-35 வரை சாரதி பதவிக்கு வயதெல்லை 18-45 வரை கீழ்க் குறிப்பிடப்படும் பதவிக்கு விண்ணப்பிப்பவர்கள் கூட்டுறவுச் சேவையில் இருப்பின் வயதெல்லை கவனிக்கப்படமாட்டாதென்பதுடன் கூட்டுறவு அலுவலகத்தில் கடமையாற்றுவோர் விண்ணப்பிக்கும்போது தங்களது நிறுவனத்தினூடாக விண்ணப்பிக்க வேண்டும்.

01) பதவி - பொதுமுகாமையாளர்

சம்பளக் குறியீட்டு இலக்கம் - 101/07

சம்பளஅளவுத் திட்டம் - 16375 – 210 x 10 -230 x 10 -20775

அங்கீகரிக்கப்பட்ட தகைமைகள்

(அ) கூட்டுறவு ஊழியர் 08ஆவது சம்பளத்திட்டப் பதவியில் ஆகக் குறைந்தது 03 ஆண்டுகால அனுபவம். அல்லது கூட்டுறவு ஊழியர் 09ஆவது சம்பளத்திட்ட முகாமை அல்லது மேற்பார்வை மட்டத்திலான பதவியில் ஆகக் குறைந்தது 06 ஆண்டுகால அனுபவம்

அல்லது

(ஆ) அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகப் பட்டமொன்றுடன் அல்லது அதற்கு சமனான தகைமையொன்றுடன் அங்கீகரிக்கப்பட்ட வர்த்தக / கைத்தொழில் நிறுவனம் ஒன்றில் முகாமை மட்டத்திலான பதவியொன்றில் ஆகக் குறைந்தது 06 ஆண்டுகால அனுபவம்.

அல்லது

(இ) கூட்டுறவு ஊழியர் உயர்தராதரப் பத்திரப் பரீட்சையில் சித்தியுடன் கூட்டுறவு நிறுவனம் ஒன்றில் 05 வருடகால அனுபவம் / க.பொ.த உயர்தரப்பத்திரப் பரீட்சையில் 03பாடங்களுடனான சித்தியுடன் அங்கீகரிக்கப்பட்ட வர்த்தக/ கைத்தொழில் நிறுவனம் ஒன்றில் முகாமை மட்டத்திலான பதவியில் ஆகக் குறைந்தது 08 வருட சேவையாற்றிய அனுபவம்

02) பதவி–கிளை முகாமையாளர்

சம்பளக் குறியீட்டு இலக்கம் -208/13

சம்பளஅளவுத் திட்டம் - 14230 – 120x10 – 130x10 -16730

அங்கீகரிக்கப்பட்ட தகைமைகள்

(அ) கூட்டுறவுப் பணியாளர் 14வது சம்பளத்திட்ட தொடர்புபட்ட துறைப் பதவியொன்றில் இரண்டு (02) வருடங்களுக்குக் குறையாத அனுபவம் அல்லது கூட்டுறவுப் பணியாளர் 15ஆவது சம்பளத்திட்ட தொடர்புபட்டதுறைப் பதவியொன்றில் நான்கு (04) வருடங்களுக்குக் குறையாத அனுபவம்

அல்லது

(ஆ) கூட்டுறவுப் பணியாளர் (சாதாரணதரம்) சான்றிதழ் அல்லதுக.பொ.த (சாதாரணதரம்) கணிதம் அல்லது வர்த்தக எண்கணிதம் அல்லது எண்கணிதம் மற்றும் சிங்களம் அல்லது தமிழ் மொழி உட்பட 04 பாடங்களில் திறமைச் சித்தியுடன் 06 பாடங்களில் சித்தியும் தொடர்புபட்டதுறைப் பதவியொன்றில் இரண்டு (02) வருடங்களுக்குகுறையாதஅனுபவம்.

03) பதவி–சாரதி

சம்பளக் குறியீட்டு இலக்கம் -312/14

சம்பளஅளவுத் திட்டம் - 13875 – 115x10 – 125x10 -16275

அங்கீகரிக்கப்பட்ட தகைமைகள்

(அ) 05ஆம் வகுப்பு கல்விச் சான்றிதழும் பஸ் அல்லது லொறி அல்லது இழுவைப் பெட்டியுடன் உழவு இயந்திர சாரதி அனுமதிப்பத்திரத்துடன் நான்கு (04) வருடங்களுக்கு குறையாத அனுபவம்.

04) பதவி – எரிபொருள் நிரப்புநர்

சம்பளக் குறியீட்டு இலக்கம் - 313/16

சம்பளஅளவுத் திட்டம் - 13160 – 105x10 – 115x10 – 15360

அங்கீகரிக்கப்பட்ட தகைமைகள்

(அ) கூட்டுறவுப் பணியாளர் 17ஆவது சம்பளத்திட்டப் பதவியொன்றில் ஒரு (01) வருடத்துக்கு குறையாத அனுபவம்

அல்லது

(ஆ) 08ஆம் வகுப்புக் கல்விச் சான்றிதழ்.

05) பதவி – வாகன சுத்திகரிப்பாளர்

சம்பளக் குறியீட்டு இலக்கம் - 314/16

சம்பளஅளவுத் திட்டம் - 13160 – 105x10 – 115x10 – 15360

அங்கீகரிக்கப்பட்ட தகைமைகள்

(அ) கூட்டுறவுப் பணியாளர் 17ஆவது சம்பளத்திட்டப் பதவியொன்றில் ஒரு (01) வருடத்துக்கு குறையாத அனுபவம்

அல்லது

(ஆ) 05ஆம் வகுப்புகல்விச் சான்றிதழும் நல்லதேகாரோக்கியமும் இருத்தல் வேண்டும்.

06) பதவி–காரியாலய தூதுவர்

சம்பளக் குறியீட்டு இலக்கம் -317/17

சம்பளஅளவுத் திட்டம் - 12800 – 100x10 – 110x10 -14900

அங்கீகரிக்கப்பட்ட தகைமைகள்

(அ) 8ஆம் வகுப்புகல்விச் சான்றிதழ்.

தலைவர்,
வவுனியா வடக்கு பலநோக்குக் கூட்டுறவுச் சங்கம், நெடுங்கேணி.

(ச/27565)
(11.17)

# சிறுபான்மையினரின் இருப்பு கேள்விக்குறி

## கிழக்கு மாகாண சபை உறுப்பினர் தெரிவிப்பு

கிழக்கு மாகாணத்தில் சிறுபான்மைச் சமூகங்களுக்குச் சொந்தமான 54 க்கும் மேற்பட்ட இடங்கள் புராதன இடங்களாக அடையாளப்படுத்தப்பட்ட நிலையில், அவற்றுக்குப் பெரும்பான்மைச் சமூகம் உரிமை கொண்டாடுவதானது, இங்குள்ள சிறுபான்மைச் சமூகங்களின் இருப்பைக் கேள்விக் குறியாக்கியுள்ளது என கிழக்கு மாகாண சபை உறுப்பினர் சிப்லி பாறூக் தெரிவித்தார்.

அவர் தெரிவித்ததாவது:

வில்பத்தில் முஸ்லிம் களின் காணிகள் வன இலாகாவுக்குரிய பிரதேசமாகப் பிரகடனப்படுத்தப்படவேண்டும் என்ற செயற்பாடனானது, சிறு பான்மைச் சமூகத்துக்குப் பெரும் அச்சுறுத்தலை ஏற்படுத்தியுள்ளது.

அவ்வாறே அக்கரைப் பற்று, பொத்தானைக் கிராமத்தில் 200 வருடங்கள் பழைமை வாய்ந்த பள்ளிவாசல், அதனுடன் சூழவுள்ள பிரதேசங்கள் புராதன இடங்களாக அடையாளம் காணப்பட்டிருப்பதும், மட்டக்களப்பில் 26 இடங்கள் புராதன இடங்களாக அடையாளப்படுத்தப்பட் டிருப்பதும், கிழக்கு மாகா ணத்தில் 54 க்கும் மேற்பட்ட இடங்கள் புராதன இடங்களாக அடையாளப்படுத்தப்பட்டிருப்பதுமானது அந்த இடங்களை நல்லாட்சி அரசு அபகரிக்கும் நிலைமை இப்போது உருவாகியுள்ளது.

முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்சவின் ஆட்சிக் காலத்தில் ஏற்படுத்தப்படாமல் போன முஸ்லிம் அரசியல் தலைமைகளின் ஒற்றுமை, நல்லாட்சி அரசில் ஏற்பட் டுள்ளது என்ற விடயத்தை நாம் அவதானிக்கக் கூடியதாக உள்ளது. இது மகிழ்ச்சி அளிக்கின்றது– என்றார். (து)

## ஜெயராஜ் கொலை வழக்கு; விலகிக்கொண்டார் நீதிவான்

கொழும்பு, ஜன. 6

முன்னாள் அமைச்சர் ஜெயராஜ் பெர்னாண்டோபுள்ளே உள்ளிட்டவர்கள் மீது நடத்தப்பட்ட தற்கொலைக் குண்டுத் தாக்குதல் வழக்கு விசாரணைகளிலிருந்து விலகிக் கொள்வதாக கம்பகா மேல் நீதிமன்ற நீதிபதி பிரியந்த பெர்னாண்டோ அறிவித்துள்ளார்.

இந்த வழக்கு விசாரணைகளுக்கு வேறும் ஒருவரை நியமிக்குமாறு நீதிச் சேவை ஆணைக்குழுவுக்கு அறிவித்துள்ளதாக அவர் தெரிவித்தார்.

இந்த வழக்கு நேற்றுமுன்தினம் விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்ட போது அவர் இதனைத் தெரிவித்தார். தனிப்பட்ட காரணங்களினால் தாம் வழக்கு விசாரணைகளிலிருந்து விலகிக் கொள்கிறார் என அவர் கூறினார்.

இந்த வழக்கு எதிர்வரும் பெப்ரவரி மாதம் 2ஆம் திகதி மீளவும் விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட உள்ளது. (த)

# எமது கால்களில் நல்லாட்சி அரசு விரைவில் விழும்

## பிரதியமைச்சர் ஹரீஸ் ஆசை இது



அம்பாறை, ஜன.06

இந்த ஆட்சியைக் கொண்டு வந்ததில் முஸ்லிம்களுக்கும் பங்குண்டு என்பதை அரசு மறந்து விட்டது. இன்று நமக்கெதிராகவும் செயற்படுகின்றது. எனவே அடுத்த சில மாதங்களுக்குள் இந்த அரசுக்கு பாடம் புகட்டவுள்ளோம். அப்போது தான் எங்களுடைய கால்களை அவர்கள் பிடிக்க வேண்டிய நிலை ஏற்படும்.

இவ்வாறு விளையாட்டுத் துறைப் பிரதியமைச்சரும் சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸின் பிரதித் தலைவருமான எச்.எம்.எம்.ஹரிஸ் தெரிவித்தார்.

அம்பாறை - அட்டாளைச்சேனையில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற நிகழ்வொன்றில் உரையாற்றும் போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

அவர் மேலும் கூறும்போது:

கட்சியின் ஆணிவேராக அம்பாறை மாவட்ட மக்கள் உள்ளனர். ஆனால், ஒரு குறிப்பிட்ட அதிகாரங்களோடுதான் நாங்கள் செயற்படுகின்றோம். இந்த மாவட்டத்தில் பலம் பொருந்திய அமைச்சராகத் தயா கமகே இருந்துகொண்டு இனத்துவேசம் காட்டி வருகின்றார்.

அதன் வெளிப்பாடுகள் தான் கல்முனையில் இயங்கி வந்த பல திணைக்களங்கள் அம்பாறைக்கு மாற்றப்பட்டு வருகின்றன.

இந்தப் பிரச்சினை தொடர்பாகச் சம்பந்தப்பட்ட அமைச்சரிடம் நியாயம் கேட்டால், கல்முனையில் போதிய வசதியில்லையென இதற்குப் பொறுப்பான பெண் அமைச்சர் பதிலளிக்கிறார்.

இந்த அமைச்சருக்கு எதிராக நான் நாடாளு மன்றத்தில் செயற்பட முற்பட்டபோது எனது கையையும்-வாயையும் கட்டிப்போட ஒருத்தர் முனைகின்றார்.

அவரின் பெயரை இந்த இடத்தில் சொல்லி அசிங்கப்படுத்த நான் விரும்பவில்லை. நாம் எவருக்காகவும் பயப்பட வேண்டிய அவசியம் எமக்கில்லை. ஒரு நாகரிகமான முறையில் நடந்து கொள்ளவேண்டும் என்பதற்காகவே அமைதியாக இருக்கின்றோம் - என்றார். (த-ய-48)

## 25 இலட்சம் சுற்றுலாப் பயணிகளை கவரத் திட்டம்

கொழும்பு, ஜன. 6

இந்த வருடம் 25 இலட்சம் சுற்றுலாப் பயணிகளைக் கவர்வதற்கு அரசு திட்டமிட்டிருப்பதாகச் சுற்றுலாத்துறை அபிவிருத்தி மற்றும் கிறிஸ்தவ சமய அலுவல்கள் அமைச்சர் ஜோன் அமரதுங்க தெரிவித்தார்.

2016 ஆம் ஆண்டு 20 இலட்சம் சுற்றுலாப் பயணிகள் இலங்கை வந்திருந்ததாக அவர்கூறினார். சீனா, இந்தியாவைச் சேர்ந்த சுற்றுலாப் பயணிகளே கூடுதலாக இலங்கை வந்திருந்தமை குறிப்பிடத்தக்கது. (த)

## மாணவருக்கு பகல் உணவு

கொழும்பு, ஜன. 6

பாடசாலை மாணவர்களின் போசாக்கை மேம்படுத்துவதற்காக 5,185 மில்லியன் ரூபா ஒதுக்கப்பட்டுள்ளதாகவும், அதனைக் கொண்டு பகல் உணவு வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகவும்-கல்வி இராஜாங்க அமைச்சர் வீ.இராதாகிருஷ்ணன் தெரிவித்தார்.

மிகவும் பின்தங்கியுள்ள பாடசாலைகளுக்காக இந்தத் திட்டம் முன்னெடுக்கப்பட்டதாகவும் அவர் கூறினார்.

7911 பாடசாலைகளைச் சேர்ந்த 12 இலட்சம் மாணவர்களுக்கு இவ்வாறு பகல் உணவு வழங்கப்படவுள்ளதாக அவர் தெரிவித்தார். (த)

## சசி வெல்கமவின் மறியல் நீடிப்பு

கொழும்பு, ஜன. 6

இலங்கைப் போக்குவரத்துச் சபையின் முன்னாள் தலைவர் சசி வெல்கமவின் விளக்கமறியல் நீடிக்கப்பட்டுள்ளது. சசி வெல்கமவின் விளக்கமறியலை எதிர்வரும் 19 ஆம் திகதிவரை நீடிக்குமாறு கொழும்பு மேலதிக நீதிவான் நேற்று உத்தரவிட்டார்.

இலங்கைப் போக்குவரத்துச் சபைக்குச் சொந்தமான 135 மில்லியன் ரூபாவை முறைகேடாகப் பயன்படுத்தியமை தொடர்பில் குற்றப்புலனாய்வுப் பிரிவினர் சசி வெல்கமவை கடந்த மாதம் 20 ஆம் திகதி கைது செய்திருந்தனர். (த)

## மரண அறிவித்தல்



### திருமதி மாலினி சுபாச்சந்திரன்

கணயன் தோட்டம் பருத்தித்துறை புலோலிகிழக்கு, பருத்தித்துறையை பிறப்பிடமாகவும், ஜேர்மனி கேர்ணவை வதிவிடமாகவும் கொண்ட திருமதி மாலினி சுபாச்சந்திரன் 03.01.2017 செவ்வாய்க்கிழமை காலமானார்.

அன்னார் சுபாச்சந்திரனின் அன்பு மனைவியும் முத்துக்குமாரு - தங்கேஸ்வரி (யோகம்மா) தம்பதிகளின் அன்பு மகளும் காலஞ்சென்றவர்களான தவரத்தினம் - அன்னலக்சுமி தம்பதியரின் அன்பு மருமகளும் சஸ்மியா, சுந்தர்ராஜ் ஆகியோரின் பாசமிகு தாயாரும் சிவலிங்கம் (லண்டன்), ஜெயக்குமாரி (ஆசிரியர் கலாசாலை, கோப்பாய்), சாந்தினி (K.R.S), யோகேஸ்வரி, குமுதினி (C.T.B கணக்கு பதிவாளர்), Dr றாஜினி (ஆயுள் வேத மத்திய மருந்தகம், கிளிநொச்சி) காலஞ்சென்ற சுந்தர்ராஜ் ஆகியோரின் அன்புச் சகோதரியும் புஸ்பவதி (லண்டன்), ஸ்ரீஸ்கந்தராஜா (கொனிக்கா கலர்லாப்), காலஞ்சென்ற தயாபரன் மற்றும் தியாகராஜா, கணேஷன், Dr ஸ்ரீகஜன் (இலவச ஆயுள்வேத வைத்தியசாலை, உருத்திரபுரம்), கலாஜினி, சுபாஜினி, சுகந்தி(ஜேர்மனி),சுகந்தன் (லண்டன்) ஆகியோரின் மைத்துனியும் Dr.கோபிக்கிருஸ்ணா, துர்க்கா ஆகியோரின் பாசமிகு அத்தையும் சுஞ்சிதகிருஷ்ணாவின் சித்தியும் கபிலேசன், பிரணவன், கபிசேகா, கொலுஷனன், ஆத்மிகா, அபிஷன், ஆர்த்தியா, அவிநீசன் ஆகியோரின் பெரியம்மாவும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் ஜேர்மனியில் நடைபெறும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
குடும்பத்தினர்.

021 373 4026, 077 958 1531

## நாடாளுமன்ற விதிகள் கட்டளைகளில் மாற்றம்

### சபாநாயகர் அறிவிப்பு



கொழும்பு, ஜன. 6

நாடாளுமன்ற விதிகள் மற்றும் நிலையியற் கட்டளைகளில் இந்த ஆண்டில் மாற்றத்தை ஏற்படுத்தவுள்ளதாகச் சபா நாகயர் கருஜயசூரிய தெரிவித்தார்.

நாடாளுமன்ற நடைமுறைகளில் மாற்றத்தை ஏற்படுத்த அரசு தீர்மானித்துள்ளதாக அவர் தெரிவித்தார்.

அத்துடன் நாட்டில் ஜனநாயகத்தை நிலைநிறுத்துவதற்காக இந்த ஆண்டில் அரசு புதிய ஆரம்பங்களை மேற்கொள்ள எதிர்பார்ப்பதாகவும் சபாநாயகர் கூறினார்.

தகவலறியும் உரிமைச் சட்டத்தை அறிமுகப்படுத்தியமை, சுயாதீன ஆணைக்குழுக்களை நிறுவியமை மற்றும் மேற்பார்வைக் குழுக்கள் ஊடாக நாடாளுமன்றம் சக்திப்படுத்தப்பட்டமை முதலான பணிகள் நாட்டில் ஜனநாயகத்தை நிலைநிறுத்துவதற்காக மேற்கொள்ளப்பட்டுள்ளதாக சபா நாயகர் சுட்டிக் காட்டினார். (த)

## கிழக்குப் பல்கலைக் கழகத்தில் தொழில் நுட்பப் பட்டப்படிப்பு

கிழக்குப் பல்கலைக்கழகத்தில் தொழில்நுட்பவியல் பட்டப் படிப்புகள் கற்கைநெறி இந்த வருடம் ஆரம்பிக்கப்படவுள்ளதாகவும், இந்தக் கற்கை நெறிக்காக 83 மாணவர்கள் உள்வாங்கப்பட்டுள்ளனர் என்றும்-கிழக்குப் பல்கலைக் கழகப் பதிவாளர் வி. காண் டீபன் தெரிவித்தார்.


அவர் தெரிவித்ததாவது:

தொழில்நுட்பவியல் துறை சார் பட்டதாரிகளின் உருவாக்கம் மிகவும் அவசியமான தென்பதைக் கருத்தில் கொண்டு 2013 ஆம் ஆண்டிலிருந்து தொழில்நுட்பக் கல்விக் கற்கை க.பொ.த. உயர்தரத்தில்உட்புகுத்தப்பட்டது. இதன் காரணமாக அனைத்துப் பல்கலைக்கழகங்களும் புதிய தொழில்நுட்பவியல் பட்டப்படிப்புப் பாடநெறிகளை இந்த ஆண்டில் இருந்து ஆரம்பிக்கின்றன.

உயிரியல் முறைமைத் தொழில்நுட்பவியல் துறை மற்றும் பல்துறைக் கற்கைகள் துறை ஆகிய இரு துறைகள் ஆரம்பத்தில் அமைக்கப்படும். மேலதிகமாக சக்தி மற்றும் சூழல் துறை, தகவல் மற்றும் தொடர்பாடல் தொழில்நுட்பவியல் துறை ஆகிய இரு துறைகள் வருங்காலத்தில் இணைக்கப்படும் - என்றார். (த-ய-46,47)

# பதவியை காத்திரமாக பயன்படுத்த வேண்டும் எதிர்க்கட்சித் தலைவர்

## ஜே.வி.பி. கேட்கின்றது



கிளிநொச்சி, ஜன.6
கூட்டாட்சி அரசு அம்பாந்தோட்டை துறைமுகம், திருகோணமலை எண்ணெய்க் குதங்கள் உட்பட பொதுச் சொத்துக்களை வெளிநாடுகளுக்கு விற்பனை செய்கின்றமை தொடர்பாக எதிர்க்கட்சித் தலைவர் இரா. சம்பந்தன் மௌனம் காக்கக்கூடாது, பதவியைப் பயன்படுத்த வேண்டும்.

இவ்வாறு மக்கள் விடுதலை முன்னணியின் நாடாளுமன்ற முன்னாள் உறுப்பினர் இராமலிங்கம் சந்திரசேகரன் தெரிவித்தார்.

கிளிநொச்சி பொதுச்சந்தை உட்பட, கிளிநொச்சி நகரின் பல பகுதிகளிலும் நேற்றுக் காலை மக்கள் முன்னணியினர், நாடாளுமன்ற முன்னாள் உறுப்பினர் இராமலிங்கம் சந்திரசேகரன் தலைமையில் துண்டுப் பிரசுரங்களை விநியோகித்தனர். கூட்டாட்சி அரசு அம்பாந்தோட்டை துறை முகம், திருகோணமலை எண்ணெய்க் குத்ங்கள், உட்பட பொதுச் சொத்துக்களை வெளிநாடுகளுக்கு விற்பனை செய்வதைக் கண்டித்தே இந்த நடவடிக்கை முன்னடுக்கப்பட்டது.

அதன்போதே அவர் இவ்வாறு கருத்துத் தெரிவித்தார்.

அவர் தெரிவித்ததாவது:

"கூட்டாட்சி எனக் கூறும் அரசு நாட்டில் உள்ள காணிகளை இந்தியாவுக்கும், சீனாவுக்கும் விற்பனை செய்கின்றது. விற்பதற்கு திட்டமிடுகின்றது. 99 வருட குத்தகை அடிப்படையில் அம்பாந்தோட்டை துறைமுகம், விமான நிலையம் உள்ளிட்ட பலவற்றை விற்பதற்கு திட்டமிட்டுள்ளது.

இடங்களை விற்பனை செய்யும் பிரதமர் ரணிலோ, அல்லது வேறு எவருமோ இன்னும் 99 வருடங்கள் உயிருடன் இருக்க மாட்டார்கள். எதிகாலச் சந்ததிகள் பாதிக்கப்படுவார்கள். எதிர்க்கட்சித் தலைவர் பதவியை காத்திரமாகக் கடைப்பிடிக்க வேண்டும். இவ்வாறு நாட்டை விற்கும் செயற்பாட்டு தொடர்பில் மௌனம் காக்காது எதிர்க்கட்சித் தலைவர் பதவியை பயன்படுத்த வேண்டும்- என்று அவர் தெரிவித்தார்.

(ற-21,6)

## வவுனியாவுக்கு கடந்த ஆண்டு 8,000 மில்லியன் ரூபா நிதி

வவுனியா, ஜன.6
கடந்த ஆண்டில் வவுனியா மாவட்டத்தில் 4 ஆயிரத்து 734 அபிவிருத்தித் திட்டங்கள் முன்னெடுக்கப் பட்டன. அவற்றுக்காக 8 ஆயிரத்து 156 மில்லியன் ரூபா நிதி கிடைத்தது என்று மாவட்டச் செயலகத் தகவல்கள் தெரிவித்தன.

910 வீடுகளுக்காக 728 மில்லியன் ரூபாவும், 50 வீடுகள் திருத்தத்துக்காக 10 மில்லியன் ரூபாவும், 158 குடும்பங்களின் வாழ்வாதாரத்துக்காக 150 மில்லியன் ரூபாவும் ஒதுக்கப்பட்டது. குடிதண்ணீர் மற்றும் மலசலகூட வசதிக்காக 55 மில்லியன் ரூபாவும், நீர்விநியோகத்துக்காக 28 மில்லியன் ரூபாவும், உட்கட்டுமான வசதிகளுக்காக 40 மில்லியன் ரூபாவும், பரிசன் குளம் குடியமர்வுக்காக 20 மில்லியன் ரூபாவும், சின் னடம்பன் கிராமத்துக்கான சூரிய மின்கலத் திட்டத்துக்கு 5 மில்லின் ரூபாவும் மீள் குடியேற்ற அமைச்சின் ஊடாகக்கிடைத்தது.

ஒரு கிராம் ஒரு வேலை எனும் செயற்றிட்டத்தின் கீழ் 102 கிராமங்களுக்கு 102 மில்லியன் ரூபாவும், 316 பெரும் திட்டங்களுக்காக 40 மில்லியன் ரூபாவும், விசேட திட்டத்தின் கீழ் புதுக் குளம் பகுதிக்கான நீர் விநியோகத் தொடர் திட்டத்துக்கு 5 ஆயிரத்து 800 மில்லியன் ரூபாவும் கிடைத்துள்ளது. (ற-101)

## பொருத்து வீடுகள் பெறுவதற்கு தென்மராட்சி மக்கள் ஆர்வம்!

தென்மராட்சி, ஜன. 6
தென்மராட்சி பிரதேசத்தில் பொருத்து வீடுகள் பெறுவதற்கான விண்ணப்பங்களை நேற்றுமுன்தினம் வரை 2 ஆயிரத்துக்கு மேற்பட்டோர் பெற்றுள்ளனர் எனத் தெரிவிக்கப்படுகிறது.

மாவட்ச்செயலகத்தால்தென்மராட்சி பிரதேச செயலகத்துக்கு ஆயிரம் படிவங்கள் வழங்கப்பட்டிருந்தன. அவை ஒரேநாளில் விநியோகம் செய்யப்பட்டன. மக்கள் தொடர்ச்சியாக விண்ணப்பப் படிவங்களைப் பெற வந்ததால் மாவட்டச் செயலகத்தின் அனுமதியுடன் பிரதேச செயலகத்துக்கு முன்பாக உள்ள வர்த்தகர் படிவத்தை புகைப்படப் பிரதி செய்து பொது மக்களுக்கு நேற்றுமுன்தினமும், அதற்கு முதல்நாளும் விநியோகிக்கின்றார்.

விண்ணப்ப முடிவு திகதிக்கு முன்னர் தென்மராட்சி பிரதேசத்தில் நிரந்தர வீடில்லாத 5 ஆயிரம் குடும்பங்கள் பொருத்து வீடுகளுக்கு விண்ணப்பிக்கக் கூடும் என்று தெரிவிக்கப்படுகின்றது. (ற-9)

## பொலிஸ் உத்தியோகத்தர் மாரடைப்பால் உயிரிழப்பு

வவுனியா, ஜன.6
பொலிஸ் நிலையத்தில் கடமையில் இருந்த பொலிஸ் உத்தியோகத்தர் ஒருவர் மாரடைப்பால் உயிரிழந்துள்ளார். வவுனியா, ஈரப்பெரியகுளம் பொலிஸ் நிலையத்தில் நேற்றுக்காலை இந்தச் சம்பவம் இடம்பெற்றுள்ளது. குருநாகலைச் சேர்ந்த பாலசூரிய கருணாரட்ன (வயது-52) என்பவரே உயிரிழந்தார்.

அவரது உடல் வவுனியா பொது வைத்தியசாலையில் வைக்கப்பட்டுள்ளது என்று தெரிவிக்கப்பட்டது. (ற-21)

## திருவடிநிலை த.க.பாடசாலைக்கு சுற்றுமதில் அமைக்கக் கோரிக்கை

யாழ்ப்பாணம், ஜன.6
வலி.மேற்குப் பிரதேச செயலர் பிரிவுக்குட்பட்ட திருவடிநிலை சைவத் தமிழ்க் கலவன் பாடசாலை சுற்றுமதில்கள் இன்றி உள்ளது. நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கும், மாகாண சபை உறுப்பினர்களுக்கும் இது தொடர்பாக தெரியப்படுத்திய போதும் பயன்கிட்டவில்லை.

இவ்வாறு பாடசாலையின் அதிபர் துரை சிவஞானம் தெரிவித்தார்.

அவர் தெரிவித்ததாவது:

திருவடி நிலை சைவத் தமிழ்க் கலவன் பாடசாலையில் 83 மாணவர்களுக்கு எமது வினைத்திறன் மிகு ஆசிரியர்களைக் கொண்டு கல்விவழங்குகிறோம். இந்தப் பாடசாலைக்கு நீண்டகாலத்தின் பின்னர் தண்ணீர்த் தாங்கி வசதியும் மின்சார இணைப்பும் வலி.மேற்குப் பிரதேச செயலாளர் மற்றும் வலயக் கல்விப் பணிப்பாளரின் உதவியுடன் வழங்கப்படுகின்றன.

குடிதண்ணீர் வசதியை வலி.மேற்கு பிரதேச சபை வழங்குகின்றது. யாழ்.மாவட்டத்தைப் பிரதிநிதித்துவப்படுத்தும் நாடாளுமன்ற உறுப்பினர்கள், வடக்கு மாகாண சபை உறுப்பினர் எமது பின் தங்கிய திருவடி நிலை சைவத் தமிழ்க் கலவன் பாடசாலைக்குச் சுற்றுமதில், நிழல் பிரதி இயந்திரம், இணைய வழியுடனான கணினி மற்றும் அலுமாரி வசதிகளை ஏற்படுத்தித் தர வேண்டும்- என்றார்.

(ற-50)

## ஆசிரிய மத்திய நிலையத்துக்கு அடிக்கல்

கிளிநொச்சி, ஜன.6
கிளிநொச்சி- அக்கராயனில் 28.05 மில்லியன் ரூபா செலவில் அமைக்கப்படவுள்ள ஆசிரிய மத்திய நிலையத்துக்கான அடிக்கல் நேற்று நடப்பட்டது.

முதன்மை விருந்தினராக நாடாளுமன்ற உறுப்பினர் சி.சிறிதரனும், சிறப்பு விருந்தினராக கிளிநொச்சி வலயக் கல்விப் பணிப்பாளர் க. முருகவேலும் இணைந்து அடிக்கல் நட்டனர்.

நிகழ்வில் அதிபர்கள், ஆசிரியர்கள், கல்வியியலாளர்கள் எனப் பலர் கலந்து கொண்டனர்.

மத்திய அரசின் நிதியுதவியுடன் மாகாணக் கல்வி அமைச்சால் கிளிநொச்சி கல்வி வலயத்துக்கான ஆசிரிய மத்திய நிலையம் அக்கராயனில் அமைக்கப்படவுள்ளது. (ற-21)

BCHS
British College of Higher Studies
வழங்கும் சர்வதேச கற்கை நெறிகள்

Settlement Visa மூலமாக UK செல்பவர்களுக்கான

A1 IELTS Life Skills

இப்பாடநெறியானது எளிதாகக் கற்கக்கூடிய முறையிலும், உத்தரவாதத்துடனான பரீட்சை வெற்றியையும் கவனத்திற் கொண்டு தயாரிக்கப்பட்டு எமது நிறுவனத்தில் நடாத்தப்படுகின்றது. 2015 புதிய வீசா நடைமுறையின் கீழ் British High Commission இனால் அங்கீகரிக்கப்பட்ட பாடநெறி.

Student, Migration Visa மூலமாக UK செல்பவர்களுக்கான

IELTS (Academic / General)

ஆரம்பத்தில் பயில சிரமப்படுபவர்களுக்கு பிரத்தியேக வகுப்புகள் மூலமாக கூடுதல் பயிற்சிகள் வழங்கப்படும்.

Spoken English with Grammar - Quick Learning Course 1½ Months

ஆங்கிலத்தில் சரளமாகக் கதைக்க விரும்புபவர்களுக்காகவே நடாத்தப்படுகிறது. நீங்கள் ஆங்கிலத்தில் உரையாட 100% உத்தரவாதம் தரப்படும். மாணவர்களின் நலன்கருதி Dictionary, CD/DVD, Tutes போன்றவை இலவசமாக வழங்கப்படும்.

இக் கற்கை நெறிகள் பரீட்சை எழுதிய மாணவர்கள், தொழில் தேடுவோர், தொழில் புரிவோர் மற்றும் ஆங்கிலம் கற்க விரும்பும் அனைவருக்கும் ஏற்றது.

Diploma in English 2½ Months

ஒரு தொழில் தேடுவதாயினும் சரி, உயர் கல்வியினைத் தொடருவதாயினும் சரி ஆங்கிலத்தின் தேவையும், அதிலே உங்களின் புலமையும் இன்றியமையாதது. இவை யாவையும் கருத்திலே கொண்டு இக் கற்கைநெறி வடிவமைக்கப்பட்டுள்ளது. Spoken English Course முடித்த அனைவரும் பயில வேண்டிய பாடநெறி.

வகுப்புகள் யாவும் புதிய தொழில்நுட்பத்திற்கமைவாக (Audio & Video Visuals) கூடுதல் பயிற்சிகளுடன் நடாத்தப்படும்.

எமது கற்கை நெறிகள் Reading, Writing, Speaking, Listening என வகைப்படுத்தப்பட்டு ஒவ்வொரு பிரிவும் மிகச் சிறந்த ஆசிரியர்களினால் கற்பிக்கப்படுகின்றது.

Excellent Teacher's Panel & Individual Attention

கிழமை, வார இறுதி நாட்களில் காலை, மாலை நேர வகுப்புகள் உண்டு. குழுக்களாக அல்லது நிறுவனங்களைச் சேர்ந்தோர் குழுவாக வரின் அவர்களுக்கு விசேட வகுப்புகள் ஆரம்பிக்கப்படும்.

புதிய பிரிவுகள் ஆரம்பமாகின்றன

No.15, Sirambiyadi Lane, (Off Stanley Road,) Jaffna
(Above Sathosa SM & Near Ariyakulam Junction)
Tel: 021 222 4550 Hotline: 077 730 4545



## மான நட்டமாக 100 கோடி ரூபா கேட்கும் சம்பிக்க

கொழும்பு, ஜன. 6
ஊழலுக்கு எதிரான குரல் அமைப்பின் ஏற்பாட்டாளர் வசந்த சமரசிங்கவிடம் நட்டஈடு கோரி அமைச்சர் சம்பிக்க ரணவக்க கொழும்பு மாவட்ட நீதிமன்றத்தில் வழக்குத் தாக்கல் செய்துள்ளார்.
நிலக்கரி கொள்வனவு மோசடியுடன் சம்பிக்கவுக்குத் தொடர்பு இருப்பதாக, வசந்த சமரசிங்கவால் பத்திரிகை ஒன்றுக்கு வழங்கியதாகக் கூறப்படும் செவ்வி தொடர்பிலேயே வழக்குத் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.
சமரசிங்கவின் கூற்றினால், தனது நற்பெயருக்குக் களங்கம் ஏற்பட்டுள்ளதாகவும், இதற்காகத் தனக்கு 100 கோடி ரூபா நட்டஈடு பெற்றுத் தரவேண்டும் எனவும் சம்பிக்க அந்த மனுவில் கோரியுள்ளார். (தி)

# கடல்சார் பங்களிப்பை வலுவாக்க தீர்மானம்

### இந்திய- இலங்கைக் கடலோர காவற்படை அதிகாரிகள் பேச்சு

கொழும்பு, ஜன.6
கடல்சார் ஒத்துழைப்புகளை மேலும் வலுப்படுத்திக் கொள்வது தொடர்பாக, இந்திய- இலங்கை கடலோரக் காவற்படை உயர் அதிகாரிகள் பேச்சுக்களை நடத்தினர்.
இலங்கை கடலோரக் காவல்படையின் பணிப்பாளர் றியர் அட்மிரல் சமந்த விமலதுங்க தலைமையிலான மூன்று பேர் கொண்ட, அதிகாரிகள் குழு மூன்று நாள்கள் பயணமாக இந்தியா சென்றுள்ளது.
இந்தக் குழுவினரை இந்தியக் கடலோரக் காவற்படையின் பணிப்பாளர் நாயகம், ராஜேந்திர சிங் நேற்று முன்தினம் சந்தித்துப் பேச்சு நடத்தினார்.
இரு நாடுகளுக்கும் இடையிலான கடல்சார் ஒத்துழைப்பை மேலும் வலுப்படுத்துவது, பரஸ்பர கரிசனைக்குரிய கடல்சார் விவகாரங்கள், கூட்டு அணுகுமுறையை உருவாக்குவது தொடர்பாக இந்தப் பேச்சுக்களில் முக்கிய கவனம் செலுத்தப்பட்டது. அத்துடன், இரண்டு நாடுகளின் கடலோரக் காவற்படைகளுக்கும் இடையிலான தொடர்பாடலை அதிகரிப்பது குறித்தும் ஆலோசனை நடத்தப்பட்டது.
இலங்கைக் கடலோரக் காவற்படை அதிகாரிகள் குழுவினர், இந்தியாவின் பாதுகாப்புச் செயலர் ஜி.மோகன் குமாரையும் சந்தித்து, பொதுவான கடல்சார் நலன்கள் குறித்துக் கலந்துரையாடினர். (தி)

> “
> இலங்கை கடலோரக் காவல்படையின் பணிப்பாளர் றியர் அட்மிரல் சமந்த விமலதுங்க தலைமையிலான மூன்று பேர் கொண்ட, அதிகாரிகள் குழு மூன்று நாள்கள் பயணமாக இந்தியா சென்றுள்ளது.



## ஹர்ஸ டி சில்வாவுக்கு கட்சியில் புதிய பதவி

கொழும்பு, ஜன.6
பிரதி வெளிவிவகார அமைச்சர் ஹர்ஸ டி சில்வாவுக்கு ஐக்கிய தேசியக் கட்சி புதிய பதவியொன்றை வழங்கியது.
ஐக்கிய தேசியக் கட்சியின் புதிய துணைச் செயலாளராக ஹர்ஸ டி சில்வா நியமிக்கப்பட்டார்.
கட்சியின் தலைவர் ரணில் விக்கிரமசிங்க தலைமையில் நேற்று முன் தினம் கூடிய கட்சியின் செயற்குழுவினால் இந்தத் தீர்மானம் எடுக்கப்பட்டது.
தற்போது காணப்படும் கட்சியின் பிரதிப் பொதுச் செயலாளர் பதவிக்கு மேலதிகமாகவே இந்தத் துணைச் செயலாளர் பதவி வழங்கப்பட்டுள்ளது.
தேசிய அரசின் ஒற்றுமையைப் பேணுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படவேண்டுமெனக் கட்சியின் செயற்குழு தீர்மானம் நிறைவேற்றியது. (தி)

## ரஷ்யக் குடிமகன் நீரில் மூழ்கிச் சாவு

கொழும்பு, ஜன 6
கொஸ்கொட கடற்பகுதியில் நீராடச் சென்ற ரஸ்யக் குடிமகன் ஒருவர் நீரில் மூழ்கி உயிரிழந்துள்ளார்.
ரஷ்ய நாட்டைச் சேர்ந்த குறித்த நபர், பெண் ஒருவருடன் நீராடச் சென்றவேளை, நீரில் அடித்துச் செல்லப்பட்டுள்ளார். இதனையடுத்து, அவரை மீட்ட பிரதேச மக்கள் பலப்பிட்டிய வைத்தியசாலையில் அனுமதித்தனர்.
எனினும் சிகிச்சை பலனின்றி 29 வயதான அந்த நபர் உயிரிழந்து விட்டார் எனப் பொலிஸார் கூறினர். சடலம் பிரேதப் பரிசோதனைகளுக்காகப் பலப்பிட்டிய வைத்தியசாலையில் வைக்கப்பட்டுள்ளது. (தி)


## 31 ஆம் நாள் நினைவஞ்சலியும் நன்றி நவில்லலும்

அமரர்

### அடைக்கலம் அமிர்தநாதன்

(சித்த வைத்தியர்)

மன்னார் விடத்தல் தீவை பிறப்பிடமாகவும், மன்னார் தோட்டவெளி ஜோசப் வாஸ் நகரை வதிவிடமாகவும் கொண்ட சித்த வைத்தியர் அடைக்கலம் அமிர்தநாதன் அவர்களின் 31 ஆம் நாள் நினைவஞ்சலி அழைப்பிதழும், நன்றி நவிலலும்.

அன்னாரின் மறைவுச் செய்தி கேட்டு நேரில் வருகைதந்து ஆறுதல் கூறிய மன்னார், யாழ். மறை மாவட்ட ஆயர்கள், குரு முதல்வர், அருட்தந்தையர் கள், அருட்சகோதரிகள், பாராளுமன்ற சபாநாயகர், எதிர்க்கட்சித் தலைவர், பிரதி சபாநாயகர், அமைச்சர்கள், பிரதி அமைச்சர்கள், பாராளுமன்ற உறுப்பினர்கள், வடமாகாண முதலமைச்சர், கட்சித் தலைவர்கள், முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர்கள், மாகாண சபை அமைச்சர்கள், . மாகாண சபை உறுப்பினர்கள், உள்ளூராட்சி மன்றங்களின் முன்னாள் தலைவர்கள், உப தலைவர்கள், உறுப்பினர்கள், கிராம மட்ட அமைப்புக்களின் பிரதிநிதிகள், அரச, அரச சார்பற்ற அமைப்புக்களின் பிரதிநிதிகள், பாடசாலை அதிபர்கள், ஆசிரியர்கள் அனைவருக்கும் எமது குடும்பம் சார்பாக மனமார்ந்த நன்றிகளைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.

மேலும் தொலைபேசி மூலமாக ஆறுதல் கூறியதோடு பல வழிகளில் உதவி புரிந்த உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவருக்கும் எமது மனமார்ந்த நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

அன்னாரின் ஆத்ம சாந்திப் பிரார்த்தனை நாளை (07.01.2017) சனிக்கிழமை மன்னார் தோட்டவெளி ஜோசப்வாஸ் நகரில் உள்ள அவரின் இல்லத்தில் நடைபெற்று அதனைத் தொடர்ந்து இடம்பெறும் மதியபோசன நிகழ்விலும் அனைவரையும் கலந்துகொள்ளும்மாறு வேண்டிக்கொள்கின்றோம். இந்த அழைப்பைத் தனிப்பட்ட அழைப்பாக ஏற்று அனைவரையும் கலந்து கொள்ளுமாறு தாழ்மையுடன் கேட்டுக்கொள்ளுகின்றோம்.

**தகவல்: மகன் - செல்வம் அடைக்கலநாதன்**

– வன்னி மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் –

(பாராளுமன்ற குழுக்களின் பிரதி அவைத்தலைவர்)



பிறப்பு 12.03.1932

இறப்பு 04.12.2016

(c. 27592) (13.17) 077 776 0795





"40 உறுப்பினர்களுடன் செயற்பட்டு வரும் இலங்கை மருத்துவ உபகரண தொழிற்துறை வர்த்தக சம்மேளனமானது 70 உறுப்பினர்களுக்கான வினைத்திறனைக் கொண்டுள்ளதுடன் சமுதாய பொறுப்புணர்வைக் கட்டியெழுப்புவதில் கவனம் செலுத்தி வருகிறது".

# இலங்கை மருத்துவ உபகரண தொழிற்துறை வர்த்தக சம்மேளனத்தின் வருடாந்த பொதுக்கூட்ட நிகழ்வு

2015 ஆம் ஆண்டு நிறுவப்பட்ட இலங்கை மருத்துவ உபகரண தொழிற்துறை வர்த்தக சம்மேளனமானது தனது இரண்டாவது வருடாந்த பொதுக்கூட்டத்தை கடந்த டிசெம்பர் மாதம் 9 ஆம் திகதி நடத்தியுள்ளது.

இந்த நிகழ்வில் விருந்தினர்களாக கலாநிதி ரஜித்த சேனாரத்ன,தேசிய மருந்துகள் ஒழுங்கமைப்பு ஆணையத்தின் தலைவரான பேராசிரியர் அசித்த டி சில்வா ஆகியோர் கலந்துகொண்டிருந்ததாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

தவிர சுகாதார அமைச்சு, தேசிய மருந்துகள் ஒழுங்கமைப்பு ஆணையம், அரச மருந்தக கூட்டுத்தாபனம் மற்றும் உயிர்மருத்துவ பொறியியல் சேவைகள் நிறுவனத்தின் முக்கிய பங்குதாரர்களும் கலந்துகொண்டிருந்தனர்.

# தேசிய பொருளாதார அபிவிருத்தித் திட்டம் தொடர்பில் பிரதமர் விளக்கம்

சுற்றுலாத்துறை, விவசாயம் மற்றும் மீன்பிடி உள்ளடங் கலான அனைத்து துறைகளையும் இனங்கண்டு கொண்டு அந்த துறைகளை அபிவிருத்திப் பாதையில் முன்னேற்ற இரண்டு வலயங்களை அமைக்கவுள்ளதான தகவல் பிரதமர் ரணில் விக்கிரமசிங்காவால் வெளிப்படுத்தப்பட்டுள்ளது. அலரி மாளிகையில் நடைபெற்ற வைபவம் ஒன்றின் போது தேசிய பொருளாதார அபிவிருத்தித் திட்டத்தை ஊடகங்களுக்கு வெளியிட்டதுடன் அது குறித்து விளக்கமளிக்கும் போதே மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

மேலும் திருகோணமலைத் துறைமுகத்தின் அபிவிருத்தி குறித்து சிங்கப்பூர், இந்தியா,ஜப்பான் ஆகிய நாடுகளின் அரசுடன் நாம் பேசி வருகிறோம். போர் காரணமாக சிதைவடைந்துள்ள வட மாகாணத்தில் விவசாயம், கைத்தொழில் துறை ஆகியவற்றை அபிவிருத்தி செய்ய வடக்கு வலயத்தில் விசேட திட்டம் ஒன்றினை முன்னெடுக்கவுள்ளோம்- என்றார்.

"தேசிய பொருளாதார அபிவிருத்தி என்ற எண்ணக்கருவின் கீழாக அமையவுள்ள இரண்டு பெரிய வலயங்களுள் இரண்டு விமான நிலையங்கள் மற்றும் இரண்டு துறைமுகங்கள் அமையப்பெறவுள்ளன."

## வணிகம்



# ஆசிய இளம் அலங்கார வடிவமைப்பாளர் விருது நிகழ்வு

### இலங்கையர் இருவருக்கு தங்க விருதுகள் கிடைத்துள்ளன

நிபொன் பெயின்ட் நிறுவனத்தின் ஆசிய இளம் அலங்கார வடிவமைப்பாளர் விருதுக்குரித்தான வெற்றியாளர்கள் தெரிவில் தேர்வு செய்யப்பட்டவர்களை கௌரவிக்கும் நிகழ்வில் இலங்கையிலிருந்து இரு தங்க விருது வெற்றியாளர்கள் விருதுகளை பெற்றுக்கொண்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

கட்டடக்கலைப் பிரிவு மற்றும் உள்ளக அலங்கார வடிவமைப்பு பிரிவு என்பவற்றிலேயே இவர்கள் கௌரவத்தைப் பெற்றுக்கொண்டுள்ளனர். இவர்களுக்கான பணப் பரிசுத் தொகையாக தலா 100,000 ரூபா வழங்கப்பட்டுள்ளதுடன் எதிர்வரும் மார்ச் மாதம் இந்தோனேசியாவின், யொகார்த்தா நகரில் நடைபெறும் பயிற்சியில் பங்கேற்பதற்கான வாய்ப்பும் பெற்றுக்கொடுக்கப்பட்டுள்ளது.

இது குறித்து கருத்துரைத்துள்ள நிபொன் பெயின்ட் லங்கா முகாமைத்துவப் பணிப்பாளர் ராஜா ஹேவாபோவல, "நாட்டின் கட்டடக்கலை தொடர்பான பிரதான அமைப்பாக திகழும் இலங்கைக் கட்டடக்கலைஞர்கள் கல்வியகத்திடமிருந்து பங்களிப்புகளைப் பெற்றுக்கொள்வதையிட்டு நிபொன் பெயின்ட் சிறீ லங்கா திருப்தியடைகிறது" – என்றார்.



கடந்த ஆண்டில் 20 லட்சம் சுற்றுலாப் பயணிகள் இலங்கைக்கு வருகை தந்துள்ளனர்.கட்டுநாயக்க விமான நிலையம் எதிர்வரும் ஏப்ரல் மாதம் வரை சில மணித்தியாலங்களுக்கு மூடப்படவுள்ள செயற்பாடுகள் சுற்றுலாப் பயணிகளின் வருகையில் தாக்கம் செலுத்துமென சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

# நடப்பாண்டில் 25 இலட்சம் சுற்றுலாப் பயணிகள் வருவர்

### சுற்றுலாத்துறை அமைச்சர் ஜோன் அமரதுங்க தெரிவிப்பு

2017 ஆம் ஆண்டில் 25 இலட்சம் சுற்றுலாப் பயணிகள் இலங்கைக்கு வரவுள்ளதான தகவல் எதிர்வுகூறல் சுற்றுலாத்துறை அமைச்சர் ஜோன் அமரதுங்கவால் வெளிப்படுத்தப்பட்டுள்ளது.

சர்வதேச செய்திச் சேவை ஒன்றுக்கு சுற்றுலாத்துறை முன்னேற்றம் தொடர்பிலும் சுற்றுலா வரும் வெளிநாட்டவர்கள் குறித்தும் கருத்துரைக்கையிலேயே இவ்வருடம் நாட்டினுள் வருகை தருவார்கள் என அரசு எதிர்பார்த்துள்ள சுற்றுலாப் பயணிகளின் எண்ணிக்கை குறித்தான மேற்படி தகவலை வெளிப்படுத்தியுள்ளார்.

மேலும் இதுகுறித்து கருத்துரைத்துள்ள அமைச்சர், "கட்டுநாயக்க விமான நிலையம் எதிர்வரும் ஏப்ரல் மாதம் வரை சில மணித்தியாலங்களுக்கு மூடப்படவுள்ளமையால் சுற்றுலாப்பயணிகளின் உள்வருகையில் உள்ள பிரச்சினைகள் குறித்து அதிகாரிகள் மட்டத்தில் கவனம் செலுத்தப்படுகின்றது. இவ்வாண்டிலும் இயன்றளவு செயல்திறனோடு நடவடிக்கைகளை மேற்கொண்டு எதிர்ப்பார்த்த இலக்கை அடைவதுடன் அந்நிய செலாவணியை பெற்றுக்கொள்ளவும் திட்டமிடப்பட்டுள்ளது.

அதேநேரம் இலங்கையின் சுற்றுலாத்துறையை அபிவிருத்தி செய்வதற்காக உலகின் பல்வேறு நகரங்களில் விளம்பரப்படுத்தல் திட்டங்களை முன்னெடுக்க தீர்மானங்கள் மேற்கொள்ளப்பட்டுள்ளன" – என்றார்.

**விவோ வி–5 பிளஸ் கைபேசியின் சிறப்பம்சங்கள்**

- இரட்டை சிம் வசதி
- 5.5 இன்ச் திரை
- மின்கல சேமிப்புச் சக்தி 3000 மெகாகேட்ஸ்
- ரேம் வசதி
- 4 ஜிகா பைட் ஒளிச் சமிக்கை வசதி கொண்ட 13 மெகா பிக்சல் அளவுடைய முன்பக்க காமரா
- 20 மெகா பிக்சல் முன்பக்க காமரா




# விவோ வி-5 பிளஸ் கைபேசி அறிமுகம்

தொழில்நுட்ப நவீனத்துவங்கள் அதிகாரம் செலுத்துகின்ற இன்றைய காலகட்டத்தில் புதுமைத்தனத்துடன் கூடியதான கைபேசிகள் எல்லோர் கரங்களிலும் உலவித்திரிகின்றன. இளைஞர்கள் செல்பிப் பிரியர்களாக இருப்பதுடன் புதிய வகையான அதிதிறன் பேசிகளின் சந்தைவரவுகளை எதிர்நோக்கிக் காத்திருக்கின்றனர்.

அந்தவகையிலே உலகின் முன்னணி அதிதிறன் பேசி நிறுவனமான விவோ இம் மாதம் 23 ஆம் திகதி தனது புதிய விவோ வி-5 பிளஸ் கைபேசியினை அறிமுகம் செய்ய வுள்ளது. இந்தக் கைபேசியானது செல்பிப்பிரியர்களை கருத்தில் கொண்டு தயாரிக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.




பாவனையாளர்கள் கைபேசியின் பின்புற கமராவை அதிகமாக பயன்படுத்துவதில்லை என்ற அவதானத்தின் அடிப்படையை கருத்திலெடுத்து வெளிவரவுள்ள விவோ வி-5 பிளஸ் கைபேசியானது இரண்டு முன்பக்க கமராவுடன் அறிமுக மாக உள்ளதாகக் கூறப்படுகிறது. கடந்த நவம்பர் மாதம் வெளியான விவோ வி-5 இனை விட தற்போதைய தயாரிப்பானது முற்றிலும் மாறுபட்டதாக இருக்கும் எனவும் விவோ வி-5 இனைவிட விலை நிர்ணயம் அதிகமாக இருக்கும் எனவும் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.




# பொருளாதாரத் தீவிரவாதத்தை கட்டவிழ்த்து விட்டுள்ளார் மோடி

## மேற்கு வங்க முதல்வர் விமர்சனம்

புதுடெல்லி, ஜன. 6
பண மதிப்பு நீக்க நடவடிக்கையின் மூலம், நாட்டு மக்கள் மீது பொருளாதார தீவிரவாதத்தை பிரதமர் நரேந்திர மோடி கட்டவிழ்த்து விட்டுள்ளார் என்று மேற்குவங்க மாநில முதல்வர் மம்தா பானர்ஜி விமர்சித்தார்.

இந்தியாவில் அதிகரித்துள்ள கறுப்புப் பணப் பதுக்கல்கள் மற்றும் ஊழலை இல்லாமல் செய்ய பல்வேறு திட்டங்களைப் பரிசீலித்து வந்தார் மோடி. சில வாரங்களுக்கு முன்னர் இதுவரை காலமும் நடைமுறையிலிருந்த 500 ரூபாய் மற்றும் 1,000 ரூபாய் நோட்டுக்களைத் தடைசெய்தார். இதன் மூலம் பதுக்கப்பட்ட கறுப்புப் பணமெல்லாம் குப்பையாகும் என்பது பொதுவான கருத்து. ஆனால் நாட்டின் முக்கிய கட்சிகள் உட்பட அரசியல் பிரமுகர்கள் இந்தத் திட்டத்துக்கு எதிர்ப்புத் தெரிவித்தனர். மேற்குவங்க மாநில முதல்வர் மம்தா பானர்ஜி, ஆரம்பத்திலிருந்தே இந்தத் திட்டத்தை விமர்சித்து வருகிறார். மிட்னாபூர் மாவட்டத்தில் நேற்றுமுன்தினம் நடைபெற்ற நிகழ்வுஒன்றில்உரையாற்றுகையில், பிரதமர் மேற்கொண்டது பொருளாதாரத் தீவிரவாதம் என்று விமர்சித்தார்.

கடந்த நவம்பர் மாதம் 8ஆம் திகதி பிரதமர் மோடி அறிவித்த பண மதிப்பு நீக்க நடவடிக்கையால், சாதாரண மக்கள் சொல்ல முடியாத துன்பங்களை அனுபவித்து வருகின்றனர். 10 கோடி பேர் வேலையிழந்துள்ளனர். நாட்டு மக்கள் மீது பொருளாதார தீவிரவாதத்தை பிரதமர் மோடி கட்டவிழ்த்து விட்டுள்ளார் என்று பானர்ஜி மேலும் தெரிவித்தார். (ம-எ)

# சிரியாவில் துருக்கியின் தாக்

# 38 ஆயுததாரிகள் கொன்று



டமஸ்கஸ், ஜன. 6
சிரியாவில் துருக்கி நடத்திய வான் தாக்குதலில் ஐ.எஸ். ஐ.எஸ். அமைப்பைச் சேர்ந்த 38 ஆயுததாரிகள் கொல்லப்பட்டனர் என்று துருக்கி இராணுவத்தால் அறிவிக்கப்பட்டது.

ஈராக், சிரியா நாடுகளின் சிலபகுதிகளைக்கைப்பற்றி அவற்றை தனி இஸ்லாமிய நாடு என்று ஐ.எஸ்.ஐ.எஸ். அமைப்பு அறிவித்துள்ளது. சிரியாவிலிருந்து ஐ.எஸ். ஐ.எஸ். அமைப்பைத் தோற்கடிக்கும் முயற்சிக்கு ரஷ்யாவும் துருக்கியும் ஆதரவாகவும் பக்கபலமாகவும் உள்ளன. இதனால் துருக்கி, ரஷ்ய நாடுகளை ஐ.எஸ். அமைப்பு தனது முக்கிய இலக்குகளில் சிலவாகக் கொண்டுள்ளது. துருக்கியின் இஸ்தான்புல் நகரில் புதுவருடம் பிறந்த சில மணி நேரங்களில் இரவு விடுதி ஒன்றுக்குள் நுழைந்த ஆயுததாரி நடத்திய துப்பாக்கிச் சூட்டில் 39 பேர் உயிரிழந்தனர். 69 பேர் காயமடைந்து மருத்துவமனையில் சேர்க்கப்பட்டனர். தாக்குதலுக்கு ஐ.எஸ். ஐ.எஸ். அமைப்பு பொறுப்பேற்றது. இதனால் துருக்கி எப்போது வேண்டுமானாலும் பதில் தாக்குதலை நடத்தும் என்று எதிர்பார்க்கப்பட்டிருந்த நிலையில் இந்தத் தாக்குதல் நடத்தப்பட்டது. இதன்படி சிரியாவில் ஐ.எஸ்.ஐ.எஸ். அமைப்பினர்உள்ள இடங்கள்என்று சந்தேகித்த சில தளங்கள் மீது நேற்றுமுன்தினம் தொ
தாக்குதலை நடத்திய
துருக்கி. 38 ஆயுத தாரிக
கொல்லப்பட்டனர். ஐ.எ
ஐ.எஸ். அமைப்பின் இரா
வத் தளபாடங்களும் நொ
கப்பட்டன. இன்னும் சி
தாக்குதல்கள் துருக்கிய

# தத்தளிக்கிறது மலேசியா 23,000 பேர் இடம்பெயர்வு




கோலாலம்பூர், ஜன. 6
மலேசியாவின் வடகிழக்கு பகுதியில் கடும் வெள்ளப்பெருக்கு ஏற்பட்டுள்ளதை அடுத்து 23 ஆயிரம் மக்கள் வீடுகளை விட்டு வெளியேறினர்.

கெலந்தான் மற்றும் ரெறெங்கனு பகுதிகளில் பெய்த தொடர் மழை காரணமாகவே இந்த வெள்ளப்பெருக்கு ஏற்பட்டது.

இந்த நிலையை அடுத்து 101 பாடசாலைகளுக்கு விடுமுறை வழங்கப்பட்டது. அத்துடன் பிரதான வீதிகள் வெள்ளத்தில் மூழ்கின. இடம்பெயர்ந்த 23 ஆயிரம் மக்களும் 139 தற்காலிக முகாம்கள் அமைக்கப்பட்டு தங்க வைக்கப்பட்டனர். படகுகளில் மீட்புப் பணிகள் இடம்பெற்று வருகின்றன. (ம-எ)

# இஸ்லாத்துக்கு எதிராக உலகத் தலைவர்கள்

## ஐ.எஸ்.ஐ.எஸ். கொதிப்பு

டமஸ்கஸ், ஜன. 6
அமெரிக்க ஜனாதிபதி ஒபாமா, பாப்பரசர், துருக்கி ஜனாதிபதி ரயிப் ஏர்டகன், இந்தியப் பிரதமர் நரேந்திர மோடி ஆகியோர் இஸ்லாத்துக்கு எதிராகச் செயற்படுகின்றனர் என்று ஐ.எஸ்.ஐ.எஸ். அமைப்பு வெளியிட்ட காணொலியில் தெரிவிக்கப்பட்டது.



19 நிமிட காணொலி அரேபிய, துருக்கிய மொழிகளின் உப தலைப்புக்களுடன் வெளியிடப்பட்டது. துருக்கியைக் குறிவைத்து பல விடயங்கள் காணொலியில் பதிவேற்றப்பட்டிருந்தது. சிரியப் போரில் துருக்கியின் தலையீடு தேவையற்றது என்றும் ஐ.எஸ். ஐ.எஸ். அமைப்பு விமர்சித்துள்ளது. நடப்பு வருடத்தில் தனது முதல் தாக்குதலை துருக்கியில் நடத்தியது ஐ.எஸ்.ஐ.எஸ். அமைப்பு இரவு விடுதியொன்றில் நடத்தப்பட்ட குறித்த தாக்குதலில் 39 பேர் உயிரிழந்தமை குறிப்பிடத்தக்கது. (ம-எ)



# ட்ரம்ப் பதவியேற்பு நிகழ்வில் ஹிலாரி கிளிங்டன் பங்கேற்பு

வொஷிங்ரன், ஜன.6
அமெரிக்க ஜனாதிபதியாக டொனால்ட் ட்ரம்ப் பதவியேற்கும் நிகழ்வில் ஹிலாரி கிளிங்டனும் அவரது கணவரான பில் கிளிங்டனும் பங்கேற்பர் என்று அறிவிக்கப்பட்டது.

அமெரிக்காவின் 58 ஆவது ஜனாதிபதித் தேர்தல் அண்மையில் நடைபெற்றது. குடியரசுக் கட்சியின் வேட்பாளரான டொனால்ட் ட்ரம்ப், ஜனநாயகக் கட்சியின் வேட்பாளரான கிலாரியை வீழ்த்தி ஜனாதிபதியானார். அவர் பதவியேற்கும் நிகழ்வு இந்த மாதம் 20 ஆம் திகதி நடைபெறவுள்ள நிலையில் குறித்த நிகழ்வில் ஹிலாரியும் பங்கேற்பார் என்று அறிவிக்கப்பட்டது.

முன்னாள் ஜனாதிபதியான ஜோர்ஜ் புஷ் உடல் நலக் குறைபாடு காரணமாக பங்கேற்கார் என்று அறிவிக்கப்பட்டது. (ம-எ)

# அரேபியப் பெண்களுக்கான இராணுவப் பயிற்சி ஆரம்பம்


டமஸ்கஸ், ஜன. 6
ஐ.எஸ்.ஐ.எஸ். அமைப்புக்கு எதிராகப்போரிடத்தயாராக உள்ள அரேபியப் பெண்களுக்கு பயிற்சிகள் ஆரம்பிக்கப்படவுள்ளன என்று சிரியாவின் ரக்கா நகர இராணுவ ஊடகப் பேச்சாளர் தெரிவித்தார்.



இந்த முயற்சிக்கு குர்திஷ் போராளிகள் அமைப்பு, குர்திஷ் பெண்கள் பாதுகாப்பு அமைப்பு என்பன ஆதரவு வழங்கியுள்ளன.

இந்த முயற்சி ஆயுததாரி களுக்கு எதிரானது மட்டுமல்ல, மாறாக பெண்களுக்கான சமத்துவத்தை நிலைநாட்டக் கூடிய சந்தர்ப்பம் என குர்திஷ் அமைப்பின் ஊடகப் பேச்சாளர் தெரிவித்தார். (ம-எ)

# …க்குதலில் …ு குவிப்பு



…னம்தொடர் …டத்தியது …தாரிகள் …. ஐ.எஸ். …ன் இராணு …ம் நொறுக் …னும் சில …ருக்கியிட

மிருந்து அரங்கேறலாம் என்று கருதப்படுகிறது. முன்னதாக ஐ.எஸ்.ஐ.எஸ். அமைப்பு வெளியிட்ட காணொலி ஒன்றில் துருக்கி இஸ்லாத்துக்கு எதிராகச் செயற்படுகிறது என்று குற்றஞ்சாட்டப்பட்டிருந்தது. (ம-எ)



## புதிய உடலுறுப்பு கண்டுபிடிப்பு

டப்ளின், ஜன. 6

அயர்லாந்து மருத்துவரான ஜே.கல்வின் கொபே என்பவரால் மனித உடலில் உள்ள புதிய சமிபாட்டு அங்கம் ஒன்று கண்டுபிடிக்கப்பட்டது.

அடி வயிற்றையும் குடற்பகுதியையும் இணைக்கும் அங்கமாக இரட்டை மடிப்பைப் போன்று குறித்த பகுதி காணப்படுகிறது. ஏனைய அங்கங்கள் போன்று நாம் இதனை அடையாளப்படுத்தி இருந்தாலும், குறித்த அங்கத்துக்குரித்தான தனிப்பட்ட இயல்புகளை ஆய்வு செய்வதன் மூலம் வயிற்று நோய்களுக்கான தீர்வுகளைக் காண முடியும் என மருத்துவர் கல்வின் தெரிவித்தார். (ம-எ)

## நியூயோர்க்கில் தடம் புரண்டது ரயில்; 100 பேர் மருத்துவமனையில் சேர்ப்பு



வொஷிங்ரன், ஜன. 6

அமெரிக்காவின் நியூயோர்க் நகரத்தில் ரயிலொன்று நேற்றுத் தடம் புரண்டதில் 100 பேர் காயமடைந்து மருத்துவமனையில் சேர்க்கப்பட்டனர்.

ரயிலில் 600 தொடக்கம் 700 பயணிகள் பயணித்துக் கொண்டிருந்தனர். புருக்ளின் நிலையத்துக்கு அண்மையில் ரயில் வந்த போது, தண்ட வாளத்தில் ஏற்பட்ட தடைகாரணமாக இந்தத் தடம்புரள்வு ஏற்பட்டது என்று தெரிவிக்கப்பட்டது. மேலதிக விசாரணைகளை நியூயோர்க் நகர பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (ம-எ)

## பிலிப்பைன்ஸ் சிறையிலிருந்து கைதிகள் தப்பியோட்டம்

மனிலா, ஜன. 6

பிலிப்பைன்ஸ் சிறைச் சாலையில் இருந்து 150 இற்கும் அதிகமான கைதிகள் தப்பித்துச் சென்றனர் என்று பன்னாட்டு ஊடகங்கள் செய்திகளை வெளியிட்டன.



மின்டானோ தீவுப்பகுதியில் அமைந்துள்ள சிறைச் சாலையிலேயே குறித்த சம்பவம் இடம் பெற்றது. அத்துமீறி உள் நுழைந்த ஆயுததாரிகள் சிறைக் காவலரைக் கொலை செய்து கைதிகளைத் தப்பிக்கச் செய்தனர். பொலிஸாருடன் இணைந்து இராணுவத்தினரும் கைதிகளைத் தேடி வருகின்றனர். வழக்குப் பதிவுசெய்யப்பட்டு விசாரணைகள் இடம்பெற்று வருகின்றன. (ம-எ)

## சைக்கிளோட்டத்தில் சாதித்துக் காட்டிய 105 வயது முதியவர்

பாரிஸ், ஜன. 6

பிரான்ஸைச் சேர்ந்த 105 வயது முதியவர் ஒருவர் சைக்கிள் ஓட்டத்தில் சாதனை படைத்தார்.

மார்சன்ட் எனும் பெயருடைய குறித்த முதியவர் ஒரு மணி நேரத்தில் 22.54 கிலோ மீற்றர்கள் பயணித்து பன்னாட்டு ஊடகங்களின் கவனத்தைப் பெற்றார். முன்னதாக 3 வருடங்களுக்கு முன்னர் 26.927 கிலோ மீற்றர்கள் சைக்கிளில் பயணித்து உலக சாதனைப் பதிவை மேற்கொண்டார். இயற்கையில் அவரது இதயம் அளவில் பெரியதாக இருப்பதால் அவரால் இவ்வாறு அடைவுகளை நிலைநாட்ட முடிகிறது என்று தெரிவிக்கப்பட்டது. (ம-எ)





# VACANCIES

## UNIVERSITY OF JAFFNA, SRILANKA

University of Jaffna will entertain applications from qualified persons for the under mentioned posts.

**FACULTY OF MEDICINE**

1. **Senior Professor/Professor of**
   Anatomy/ Physiology/ Community & Family Medicine/ Pathology/ Forensic Medicine/ Pharmacology/ Medicine/ Psychiatry/ Obstetrics &Gynaecology/ Paediatrics / Surgery
2. **Senior Lecturer Grade I / Senior Lecturer Grade II/ Lecturer (Probationary) in**Anatomy/ Biochemistry/ Physiology/ Community & Family Medicine/ Pathology/ Microbiology/ Forensic Medicine /Pharmacology/ Medicine/ Psychiatry/ Paediatrics

Note:
- i. Applications will be entertained from candidates with **MBBS** degree as their first degree for the above posts.
- ii. Preference will be given to those who have **post graduate qualification in Haematology** for the posts in **Pathology**.

**SALARY AND OTHER BENEFITS**

| Post | Salary scale |
|---|---|
| Senior Professor | Rs.128870- 11x2740 – 159010/-p.m |
| Professor | Rs.108490 - 13x2520 – 141250/-p.m |
| Senior Lecturer Gr.I | Rs.87415 – 7x2020 – 101555/-p.m |
| Senior Lecturer Gr.II | Rs.76275 – 11x1520 – 92995/-p.m |
| Lecturer (Probationary) | Rs.53235 – 10x1240 – 65635/-p.m |

Note:

The above salary scales are fully operative w.e.f 01.01.2020 and the placement of salary applicable to the posts for the years 2017, 2018, 2019 & 2020 will be made in accordance with the University Grants Commission Circular No.17/2016 dated 05.12.2016.

In addition to the above salary,

1. The following allowances will be paidin the percentage of the basic salary to the financial value existed as at 31.12.2015:
   - i) Academic allowance
     - Senior Professor – 152%
     - Professor – 147%
     - Senior Lecturer Gr.I/Gr.II – 136%
     - Lecturer (Probationary) – 100%
   - ii) Additional monthly allowance – 20% of the basicsalary
   - iii) Research allowance - 35% (based on the research activity)
2. Cost of living allowance of Rs.7,800/-p.m.

**Statutory benefits:**

1) Sabbatical leave entitlement for the holder of the Post of Senior Lecturer Gr.II and above
2) Membership in Universities Provident Fund and Pension Scheme in the University system
3) Gratuity payments
4) Employees Trust Fund benefits
5) Free Medical Services

**Closing date:**

**Post of Senior Professor/Professor** - 24.03.2017

**Other posts** - 10.02.2017

Applications and other documents for the Post of Senior Professor/Professor shall be sent to the **Vice-Chancellor** with a covering letter. Applications for the other posts shall be sent to the Deputy Registrar/Academic Establishments, University of Jaffna, Sri Lanka.

Application forms and other details may be obtained from the office of the Deputy Registrar/ Academic Establishments, University of Jaffna, Sri Lanka, either in person or by post, on a payment of Rs.100/- per application form. Those who wish to obtain application forms by post are requested to send a Money Order/Postal Order drawn in favour of the **Bursar, University of Jaffna** together with a self –addressed stamped envelope 23x10 c.m. in size.

Application forms and other details will also be available in the University website www.jfn.ac.lk. Those who wish to send the application forms downloaded from the University website should attach a Money Order/Postal Order for Rs.100/- to the application form drawn in favour of the **Bursar, University of Jaffna.**

Those who wish to apply for **more than one** post should apply in **separate forms.**

Applicants from the University System/Government Departments /Corporations and Statutory Board should channel their applications through the Head of respective Institutions. Illegible, incomplete and late applications will be rejected without intimation. Only short listed applicants will be called for an interview.

REGISTRAR
UNIVERSITY OF JAFFNA
SRI LANKA.
03.01.2017

உண்மை - நேர்மை - அஞ்சாமை

உதயன்

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

தலைமையகம்: 361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்

செய்தி : 021 493 0000
விளம்பரம் : 021-493 1111
விநியோகம் : 021-493 2222, 021 - 492 7450

செய்தி : uthayahprint@gmail.com கருத்து: comments@uthayan.com
விளம்பரம்: advt@uthayan.com

# மீனவர் முடிவே முக்கியம்

இந்திய – வடக்குத் தமிழ் மீனவர்கள் பிரச்சினை தொடர்பில் இரு நாடுகளினதும் அரசு அதிகாரிகளும் கூடிப் பேசி எடுத்த முடிவு கள் என்ன என்பதைப் பகிரங்கப்படுத்த வேண்டும் என்று சரியாகவே வலியுறுத்தியிருக்கிறார் வடக்கு மாகாண கடற்றொழிலாளர் இணையத்தின் தலைவர் எஸ்.வி.சுப்பிரமணியம். இந்தப் பிரச்சினையில் சாதகமான தீர்வு எட்டப்படுவதற்கான சாத்தியங்கள் ஏற்பட்டுள்ளன என்று கூறிக்கொண்டு இந்திய மீன்பிடிப் படகுகளை விடுவிப்பதற்கு கொழும்பு அரசு எடுத்துள்ள நடவடிக்கையை நியாயப்படுத்த பேச்சின் முழுமையான விவரங்களைக் கொழும்பு பகிரங்கப்படுத்துவது அவசியம்.

இந்தியா – பாகிஸ்தானில் இருந்து வரும் எல்லை மீறிய பயங்கரவாதத்தை உலக அரங்கில் இஸ்லாமாபாத்தைத் தனிப்படுத்துவதற்குப் பயன்படுத்துகிறது. ஆனால், எல்லை தாண்டும் தனது நாட்டு மீனவர்கள் விடயத்தை மட்டும் மனிதாபிமானத்துடன் அணுக வேண்டும் என்கிறது.

வடக்கு– கிழக்கு மீனவர்களைப் பொறுத்தவரையில் இந்திய மீனவர்கள் மேற்கொள்வதும் எல்லைதாண்டும் பயங்கரவாதம்தான். ஈழத் தமிழ் மீனவர்களின் வளங்கள் கொள்ளையிடப்படுகின்றன, வலைகள் உள்ளிட்ட உபகரணங்களைச் சேதமாக்குவதுடன் அழிப்பதும் நடக்கின்றது, மீனவர்களின் வாழ்வாதாரத்தை முடக்கி அவர்களின் வாழ்க்கையைப் பாதிக்கிறார்கள். சமயங்களில் கடலில் இரு தரப்பு மீனவர்களுக்கும் இடையில் ஏற்படும் மோதல்களால் நபர்கள் காயமடைவதும் நடக்கிறது.

இவ்வளவும் இடம்பெற்றாலும் இந்த எல்லை மீறும் விவகாரத்தை பயங்கரவாதமாக – அதுவும் இந்திய அரசின் ஆசீர்வாதத்துடன் நடக்கும் பயங்கரவாதமாக – இல்லாமல் மனிதாபிமானமாக அணுகும்படி புதுடில்லி தொடர்ந்து வலியுறுத்துகிறது.

தமிழகத்துக்கும் வடக்குக்கும் இடைப்பட்ட கடலில் இருபகுதி மீனவர்களும் மீன்பிடிப்பதற்கான பாரம்பரிய உரிமையைக் கொண்டிருக்கிறார்கள் என்பதில் மாற்றுக் கருத்துக்களில்லை. ஆனால், பாரம்பரிய உரிமையை நிலைநாட்டி எமது மீனவர்களின் வாழ்வாதாரத்தையே கொள்ளையிடும் இந்திய முதலாளிகளின் பேராசைக்கு ஒருபோதும் இடமளிக்க முடியாது; கூடாது. இவர்களின் பேராசையே இழுவைமடி மீன்பிடி முறையில் மீன் வளத்தைக் கொள்ளையிடுவதுடன் அழிப்பதற்குமான அடிப்படையாக அமைகின்றது.

தமிழக மீனவர்கள் தமது பாரம்பரிய முறைப்படி வடக்குக் கடல் எல்லைக்குள்ளும் மீன்பிடிப்பதற்கு இங்குள்ள மீனவர்கள் ஒருபோதும் எதிர்ப்புத் தெரிவிக்கவில்லை. அவர்கள் முழுக்க முழுக்க மீன்வளத்தை அழிக்கும் இழுவைமடி முறைமையையே எதிர்க்கிறார்கள். அந்த முறைமை இங்கு தடைசெய்யப்பட்டிருக்கிறது. அந்தத் தடை முடிந்தளவுக்கு இறுக்கமாகவே நடைமுறைப்படுத்தப்பட்டும் வருகின்றது. ஆனால், இந்திய அரசோ தனது மீனவர்களின் அத்துமீறலை நியாயப்படுத்தி எமது மீனவர்களின் வாழ்வாதாரத்தை பாதித்துவருகின்றது.

இப்போதும், பிடித்து வைக்கப்பட்ட மீனவர்களையும் நூற்றுக்கும் மேற்பட்ட படகுகளையும் விடுவிப்பதற்காகவே இழுவை மடி முறையை இந்தியாவிலும் தடை செய்வதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்படும் என்றும் – இந்தப் பிரச்சினையை தீர்ப்பதற்கான சாத்தியங்கள் இருக்கின்றன என்றும் – ஒரு பேச்சுக்கு – சொல்லப்பட்டிருக்கின்றன என்கிற சந்தேகம் எழுவது இயல்பே.

இந்தப் பேச்சின் பின்னர் யாழ்ப்பாணம் வந்திருந்த இந்திய அயலுறவுத்துறை அமைச்சின் இணைச் செயலர் சஞ்ஜெய் பாண்டேயின் கருத்து இதனை உறுதிப்படுத்துகிறது. “மீனவர் பிரச்சினை விடயத்தில் இரு நாட்டுக் குழுவினரும் இணக்கமான சூழலில் உள்ளபோதும் பிரச்சினைக்கு ஒரே நாளில் தீர்வு காண முடியாது” என்று அவர் சொல்லியிருக்கிறார். அதன் அர்த்தம் இந்தியத் தரப்பில் சொல்லப்படுவது போன்று இழுவை மடி மீன்பிடியைத் தடை செய்வதோ எல்லை தாண்டும் பயங்கரத்தை உடனடியாக நிறுத்துவதே இப்போதைக்கு நடக்கப் போவதில்லை என்பதைத்தான்.

மீனவர்களையும் படகுகளையும் விடுவித்துக்கொள்ளும்போதும் உள்ளூர் மீனவர்கள் அதற்கு எதிர்ப்புத் தெரிவித்துக் கொந்தளித்து விடாமல் இருப்பதற்காகத்தான் இந்தத் தேன் தடவிய வார்த்தைகளை இரு தரப்புகளும் பயன்படுத்துகின்றன. அதனால்தான் மீனவர்களான தம்மைக் கேட்காமல் கொழும்பு அரசு இது விடயத்தில் எந்த முடிவையும் எடுக்கக்கூடாது என்று சுப்பிரமணியம் வலியுறுத்துகிறார். அதுதான் நியாயமும்கூட. இரு நாட்டு அரசுகளுமே தமிழர்களை இரண்டாம் பட்சமாகத்தான் நடத்துகின்றன என்பது மீனவர்களுக்குப் புரியாதா என்ன!

# பெண்களுக்கான தேசிய ஆணைக்குழு உடன் அவசியம்

## நல்லிணக்கப் பொறிமுறை தொடர்பான கலந்தாலோசனைச் செயலணி பரிந்துரை

**பெண்களுக்கான தேசிய ஆணைக்குழு ஒன்றை உடனடியாக நிறுவ வேண்டும் என்று பரிந்துரைத்துள்ளது. நல்லிணக்கப் பொறிமுறைகள் பற்றிய கலந்தாலோசனைச் செயலணி.**

**பிரதமர் ரணில் விக்கிரம சிங்கவால் நியமிக்கப்பட்ட இந்தச் செயலணி தனது அறிக்கையை 4 ஆம் திகதி வெளியிட்டது. நேற்றைய உதயனில் வெளியான அந்த அறிக்கையின் தொடர்ச்சி வருமாறு:**

இ உயர்மட்ட நீதித்துறை உட்பட நீதிமன்றங்கள் வழக்குகளை முகாமை செய்வதிலும் – விசாரிப்பதிலும் காட்டும் தாமதங்கள் உட்பட நீதிக்கு இடையூறு செய்கின்ற தற்போதைய நடைமுறையை மேம்படுத்துவதற்குரிய நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்பட வேண்டும்.

ஈ குறிப்பாகசட்டமாஅதிபர்திணைக்களத்திலும் பொலிஸ் துறையிலும் காணப்படும் முக்கிய பிரச்சினையான சார்பு நலன்களின் தலையீட்டைக் களைவதற்கு அரசு நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும். அரச அலுவலர்களுக்கு எதிரான குற்றங்களை விசாரிப்பதில் சார்பு நலன்களின் தலையீட்டைத் தவிர்ப்பதற்கு சட்டமா அதிபர் திணைக்களத்தைப் பிரித்துப் பொது விசாரணைகள் பணிப்பாளரை ஒரு தனியான சுயாதீன அலகாக மாற்றுவது பரிந்துரைக்கப்படுகின்றது. பொலிஸ் துணையைப் பொறுத்தவரை பொலிஸாருக்கு எதிராக குற்றச்சாட்டுக்களை விசாரிப்பதற்கு கலந்தாலோசனைச் செயலணி ஒரு தனியான அலகைப் பரிந்துரைக்கின்றது. இது விசேட விசாரணை அலகுகளுடன் உள்ள சார்பு நலன் தலையீட்டைத் தடுக்கும். இந்த அலகின் அலுவலர்கள் பொலிஸ் பிரிவில் இருந்து விலகியும் சுதந்திரமாகவும் இயங்குவர்.

உ) பொதுமக்களின் நம்பிக்கை வெளிப்படைத்தன்மை, பொறுப்புக்கூறல் என்பவற்றை மேம்படுத்தும் வகையில் விசாரணை மற்றும் நீதித்துறைச் செயற்பாடுகளில் ஈடுபட்டுள்ள முக்கிய அலுவலர்கள் மனித உரிமை மீறல்கள், சர்வதேசக் குற்றங்கள், பாலியல் வன்முறைகள் தொடர்பான வழக்குகளைக் கையாள்வது தொடர்பான தங்கள் கொள்கைகளையும், நடைமுறைகளையும் உருவாக்கி அவற்றைப் பகிரங்கப்படுத்த வேண்டும்.

ஊ) தற்போதைய நீதிமுறை பாதிக்கப்பட்டோரின் உரிமைகள், குறிப்பான தேவைகள் என்பவற்றைக் கருத்தில் கொள்ளத் தவறுகின்றது என்பதை ஏற்றுக்கொண்டு கலந்தாலோசனைச் செயலணி பாதிக்கப்பட்டோரை மையமாக்குதல் பற்றிய ஒரு தேசியக் கொள்கையை உருவாக்குவதை கலந்தாலோசனைச் செயலணி பரிந்துரைக்கின்றது. இது சர்வதேச ரீதியில் ஏற்றுக்கொள்ளப்பட்ட குற்றஞ்சாட்டப்பட்டோரின் உரிமைகளை உறுதிப்படுத்தும் அதேவேளை நீதிமுறையின் ஒவ்வொரு கட்டத்திலும் நடைமுறை ரீதியானதும் அமைப்பு ரீதியானதுமான அம்சங்களை உள்ளடக்குகின்றது. சரியாக நடைமுறைப்படுத்துவதை உறுதிப்படுத்துவதற்கான குறிப்பான திணைக்களச் சுற்றறிக்கைகள் மூலம் இந்தக் கொள்கை நடைமுறைக்குக் கொண்டுவரப்பட வேண்டும். நீதிமுறை முழுவதிலும் இருமொழிக் கொள்கை முழுமையாக ஏற்றுக்கொள்ளப்பட்டு, நடைமுறைப் படுத்தப்பட வேண்டும். இவ்வகையில் நீதிமன்றங்களில் போதிய எண்ணிக்கையில் நன்கு தேர்ச்சி பெற்ற மொழிபெயர்ப்பாளர் இருக்க வேண்டும்.

எ) நீதி வழங்குவதில் சம்பந்தப்பட்டுள்ள எல்லா அமைப்புக்களையும் கண்காணிக்கவும் பொதுமக்களின் முறைப்பாடுகளைப் பரிசீலிக்கவும் செயற்றிறனுடைய முறைமை ஒன்று உருவாக்கப்பட வேண்டும் என கலந்தாலோசனைச் செயலணி பரிந்துரைக்கின்றது. நீதி பெறுவதற்கு இடையூறாக இருக்கும் அரசின் செயலின்மை தாமதம் மற்றும் வேறு செயற்பாடுகள் என்பவற்றை இனங்கண்டு முன்னுரிமை அடிப்படையில் தீர்வு காண்பதற்கு இது உதவும்.

ஏ) தங்கள் அலுவலகப் பணிகளின்போது தங்களுக்கு வழங்கப்பட்ட ஆணையின்படி – செயற்படத் தவறுகின்ற அல்லது தங்கள் அதிகார எல்லையை மீறிச் செயற்படுகின்ற அரச அதிகாரிகளுக்கு எதிராக வெளிப்படையான ஒழுங்கு நடவடிக்கை மேற்கொள்வதற்கான ஒரு முறைமை இன்மையை கலந்தாலோசனைச் செயலணி அவதானிக்கிறது. இது இனத்துவம் – மதம் – பால்நிலை – சாதி – வர்க்கம் என்பவற்றுக்குள் மட்டும் மட்டுப்படாத பக்கச்சார்பு பற்றிய முறைப்பாடுகளை உள்ளடக்குகின்றது. தவறிழைத்த அரச அதிகாரிகளின் பொறுப்புக்கூறல் வெளிப்படையானதாகவும் குற்றஞ்சாட்டப்படும். அத்துமீறல்களுக்கு ஏற்றதாகவும் அமைய வேண்டும். சித்திரவதை காப்பிலிருக்கும்போது இழைக்கப்படும் வன்முறை முதலிய குற்றம் புரிந்தவர்கள் மீண்டும் அந்தக் குற்றங்களைப் புரியமாட்டார்கள் என்பதை உறுதிப்படுத்தும் மேல்நடவடிக்கைகள் ஏதுமின்றி இடமாற்றம் செய்யும் நடைமுறை பொதுமக்களின் நம்பிக்கையை இழக்கச் செய்வதோடு, தண்டனைக் காப்புக் கலாசாரத்தையும் ஊக்கப்படுத்துகின்றது என்பதையும் கலந்தாலோசனைச் செயலணி அவதானிக்கிறது.

ஐ பொலிஸ்துறையைப் பொறுத்தவரை, நடைமுறையிலுள்ள பொலிஸின் சமூகக்கண்காணிப்பு முயற்சிகளை, இத்தகைய சேவைகளை விரிவுபடுத்தும் நோக்கில் மீள் பரிசீலனை செய்வதை கலந்தாலோசனைச் செயலணி பரிந்துரைக்கின்றது. அதேவேளை பெண்களையும், மதச் சிறுபான்மையினரையும் கண்காணிப்பது போன்ற இப்போதுள்ள சமூகப் பிரச்சினைகளை இது மேலும் வலுப்படுத்தாதிருப்பதை உறுதிப்படுத்த வேண்டும்.

### 3. போருக்குப் பிந்திய அபிவிருத்தி, இடப்பெயர்ச்சி மற்றும் காணி

1.25 பிராந்திய மற்றும் உள்ளூர்ப் பொருளாதார அழிவுகளும் போரால் பாதிக்கபட்ட வடக்கு - கிழக்கு மற்றும் எல்லைப் பிரதேசங்களில் ஏற்பட்ட இழப்புகளும் அபிவிருத்தித் திட்டங்களில் கருத்தில் கொள்ளப்பட வேண்டும். பிராந்திய ஏற்றத்தாழ்வுகள் மேலும் மோசமடையாதிருப்பதை உறுதிப்படுத்த இது அவசியமாகும். சமூக மட்டத்திலான உட்கட்டமைப்புகளையும் உள்ளூர்ப் பொருளாதாரத்தையும் மீண்டும் கட்டியெழுப்பவும்- விஸ்தரிக்கவும்- அழுத்தம் கொடுக்கப்பட வேண்டும். நிதிப்பிரிவின் செயற்பாட்டைச் சீர்மைப்படுத்தவும் பாதிக்கப்பட்டவர்களுக்கான நிவாரணத்தை உறுதிப்படுத்தவும் கடன் தேவைகள் உட்பட நடைமுறையில் உள்ள பிரச்சினைகள் பரிசீலிக்கப்படுவது அவசியமாகும்.

1.26 போரால் பாதிக்கப்பட்டு உள்நாட்டில் இடம் பெயர்ந்தவர்களுக்கும் அகதிகளுக்கும் நிலையான தீர்வுகளைக் காண்பதற்குஅரசுமுன்வரவேண்டும. இன்னும் இடம்பெயர்ந்து வாழ்பவர்களை அல்லது நிலையான தீர்வுகளை காணமுடியாதவர்களை அடையாளம் காண்பதற்கும். நிலம், ஆவணங்கள், உட்கட்டமைப்பு பிற உதவிகள் உட்பட இதனோடு தொடர்பான தடைகளை அடையாளம் கண்டு அவற்றுக்குத் தீர்வு காண்பதற்கும் திட்டவட்டமான நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும்.

1.27 போரோடு சம்பந்தப்பட்ட நிலம் தொடர்பான முக்கியமான அநேக பிரச்சினைகள் முன்வைக்கப்பட்டன .இவை அவசரமாகநடவடிக்கைஎடுக்கப்படவேண்டியவை. அரச முகவர்களாலும் பிற இனக் குழுமங்களைச்

சேர்ந்த குடிமக்களாலும் நிலம் கையகப்படுத்தப்படுவதான குற்றச்சாட்டுக்கள் இதில் அடங்கும்.

1.28 வடக்கு - கிழக்கில் உள்ள நிலப் பிரச்சினைக்குத் தீர்வு காண்பதற்கு முன்னர், பிற பிரதேசங்களில் உள்ளவர்களைக் குடியமர்த்துவதில் ஈடுபடாதிருக்கும் அதேவேளை, வடக்கிலும்-கிழக்கிலும் எல்லைப்பிரதேசங்களிலும் போரோடு தொடர்பான நிலப் பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கு அரசு நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும். ஆவணங்களின் அழிவு, சிதைவு, குறைப்பாடு - அரச முகவர்கள் அல்லது வேறு குடிமக்களால் நிலம் பயன்படுத்தப்படுதல், மீன்பிடி, நீர்வளம் போன்ற பொது மூலவளங்களின் கட்டுப்பாடுகள் போன்ற பிரச்சினைகளை இது உள்ளடக்குகின்றது.

1.29 இவற்றுக்கு உடனடியான தாக்கமான அரசின் எதிர்வினையை உறுதிப்படுத்தும் வகையில் திட்டவட்டமான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட வேண்டும். தொலைந்துபோன ஆவணங்களை வழங்குவதற்கான நடமாடும் சேவை இனத்துக்குள்ளும் இனங்களுக்கிடையிலும் அதுபோல் குடிமக்களுக்கும் அரச முகவர்களுக்கிடையிலும் உள்ள சிக்கலான நிலப்பிரச்சினைகளைத் தீர்ப்பதற்காகச் சமூகத்தலைவர்கள், மாவட்ட அதிகாரிகள், அரசியல்வாதிகள் ஆகியோரை ஒன்றிணைத்து மாவட்ட நிலையிலான பொறிமுறைகளை நிறுவுதல் போன்ற நடவடிக்கைகள் இவற்றுள் அடங்கும்.

1.30 அரசியல் யாப்பில் அடிப்படையில் தேசிய காணி ஆணைக்குழு நியமிக்கப்பட வேண்டும்

**4.பெண்கள்**

1.31 போரால் பாதிக்கப்பட்ட இராணுவமயமான வடக்கு - கிழக்குப் பிரதேசங்களில் மட்டுமன்றி அச்சுறுத்தும் ஒரு சமூகச் சூழலில் மோதலின்போது நடைபெற்ற பெண்களுக்கெதிரான பாரதூரமான மனித உரிமை மீறல்கள் பாலியல் வல்லுறவை ஒரு தண்டனையாகப் பயன்படுத்துவதன் ஊடாக வெளிப்படும் நீண்டகால அமைப்புரீதியான பெண் வெறுப்பு அதிகாரத்தில் உள்ளவர்களால் தொடர்ச்சியாகப் பெண்கள் துன்புறுத்தப்படுதல் ஒரே நேரத்தில் பெண்கள் பராமரிப்பு மற்றும் வருமானம் தேடல் ஆகிய சுமைகளைச் சுமக்கவேண்டிய நிலை முதலிய அவசரமான கவனஈர்ப்பைக் கோருகின்ற கருத்துரைகளை ககலந்தாலோசனைச் செயலணி பெற்றது. பெண்கள் பராமரிப்புப் பணியை சம்பாதிக்க வேண்டிய தேவையுடன் சமரசப்படுத்த நிர்ப்பந்திக்கப்படுகிறார்கள். ஆனால் அநேக அரச அலுவலர்கள் தங்களிடம் சேவைகளை நாடி வரும் பெண்களின் பலவீன நிலையைப் பயன்படுத்த முனைகிறார்கள். நாடுமுழுவதும் உள்ள விசேடமாக போரால் பாதிக்கப்பட்ட பெண்கள் மீது திணிக்கப்பட்டுள்ள இச்சுமையை அரசு உரிய முறையில் புரிந்து கொள்ள வேண்டும். கலந்தாலோசனைச் செயலணி பின்வரும் பரிந்துரைகளை முன்வைக்கின்றது.

அ)பெண்களின் பொருளாதார, சமூக, அரசியல், சட்ட மற்றும் கலாசார உரிமைகள், சம்பிரதாயம் சாதி அல்லது வேறு எவ்விதமான வரையறைகளும் இன்றி அரசியல்யாப்பு, சட்டம், கொள்கை, நடைமுறை முதலிய எல்லாவற்றிலும் உறுதிப்படுத்தப்பட்டுப் பாதுகாக்கப்பட வேண்டும்.

ஆ)பெண்களுக்கான தேசிய ஆணைக்குழு தாமதமின்றி நிறுவப்பட வேண்டும்.

இ)எல்லாப் பொறிமுறைகளிலும் முடிவெடுக்கும் முக்கியமான பதவிகளிலும் அன்றாடம் செயற்படுத்தும் பதவிகளிலும் பெண்களின் பிரதிநிதித்துவம் உறுதிப்படுத்தப்பட வேண்டும்.

ஈ)முன்மொழியப்பட்டுள்ள நான்கு பொறிமுறைகளிலும் பாதிக்கப்பட்ட பெண்களின் பங்குபற்றலுக்குத் தேவையான எல்லா நடவடிக்கைகளும் கருத்தில் கொள்ளப்பட வேண்டும். பரிந்துரைகள் 2.15, 2.16 பார்க்கவும்

உ)கல்வி நிறுவனங்கள், பகிரங்க சேவைகளுக்கான பயிற்சிகள் உட்பட சமூகத்தின் எல்லா நிலைகளிலும் பால்நிலைக் கூருணர்வுப் பயிற்சி.

ஊ) பெண்களைத் துன்புறுத்துதல் தண்டனைக்குரிய குற்றம் என்பதைப் பகிரங்க சேவைகள் தாபனக் கோவையில் உள்ளடக்குதல், அத்தகைய துன்புறுத்தல்களுக்கு எதிரான முறைப்பாடுகளுக்கான ஒரு பொறிமுறையை நிறுவுதல்.

எ) தனியார் துறைகளும் மேற்கூறியவற்றைக் கடைப்பிடிப்பதை உறுதிப்படுத்துதல்.

**சிறுவர்களும், இளைஞர்களும்**

1.32 சிறுவர்களும், இளைஞர்களுமே நாட்டின் எதிர்காலம். நிலைமாறுகால நீதி மற்றும் நல்லிணக்கச் செயற்பாட்டின் வெற்றியானது திட்டமிடுதல், வடிவமைத்தல், செயற்படுத்துதல் செயற்பாட்டைக் கண்காணித்தல் முதலிய அனைத்து நிலைகளிலும் அவர்களையும் இணைத்துக்கொள்வதிலேயே தங்கியுள்ளது. நாட்டின் பொதுத் துறைகளில் பங்குபற்றுவதிலும், தலைமைப் பாத்திரம் ஏற்பதிலும் இளைஞர்களை ஊக்கப்படுத்த வேண்டும். தங்களை வெளிப்படுத்துவதற்கும் குறிப்பாக இனத்துவக் கலப்பு மற்றும் பாலினக் கலப்புச் சூழல்களில் அர்த்தங் காண்பதற்கும் கலைப்படைப்பாக்கம் ஊடகத்துறை, நவீன தொழில்நுட்பம், விளையாட்டு, சமூகச் செயற்பாடுகள் போன்றவற்றில் அவர்களுக்கான வாய்ப்புகளும் வசதிகளும் ஏற்படுத்திக் கொடுக்கப்பட வேண்டும்.

1.33 வேற்றுமைகளை உள்வாங்குகின்ற ஒரு பன்மைத்துவச் சமூகத்தை முன்னெடுப்பதற்கு உரிய வகையில் கல்வித்திட்டங்களும் கல்வி வெளிகளும் வடிவமைக்கப்பட வேண்டும். ஒருபரந்த அளவிலான உள்வாங்கும் தன்மையையும், பொதுமைக்கான இடங்களையும், பொதுவான வரலாறு பற்றிய உணர்வையும் உறுதிப்படுத்தும் வகையில் கலைத்திட்டத்தை மீள்பரிசீலனை செய்து, மீள வடிவமைத்தல் நல்லிணக்கத்துக்கு அடிப்படையாகும். இலங்கைப் பல்கலைக்கழகங்கள் தேசியவாதம், பெரும்பான்மைவாதம், தந்தை வழி முறைமை போன்ற சிலவகையான வகைமாதிரிகளை மாணவர்கள் கேள்விக்கு உட்படுத்துவதை ஊக்கப்படுத்தும் ஓர் ஆய்வறிவுத் தளத்தை உருவாக்கவும் ஆராய்ச்சிகளை மேற்கொள்ளவும் வேண்டும். எல்லாவகையான அநீதிகளுக்கும் அசமத்துவங்களுக்கும் எதிராக இயங்குவதற்கும் அவர்கள் ஊக்கப்படுத்தப்பட வேண்டும். பெண்கள், பால்மைச் சிறுபான்மையினர் (தேசிய மற்றும் பிராந்தியச்) சிறுபான்மையினர் தாழ்த்தப்பட்ட சாதியினர் விளிம்பு நிலை மனிதர்கள் - மாற்றுத் திறனாளிகள் - மனநோயாளிகள் போன்றவர்களை மதித்து மரியாதை காட்டும் விழுமியங்கள் பாடசாலைக் கலைத்திட்டத்திலும் ஊடகங்களிலும் சமூக நிறுவனங்களிலும் முறையாக அறிமுகப்படுத்தப்பட வேண்டும்.

1.34 . இளம் அகதிகள், உள்நாட்டில் இடம்பெயர்ந்த இளைஞர்கள் முன்னாள் குழந்தைப் போராளிகள், கணவனை இழந்த இளம் தாய்மார் போன்ற போரால் பாதிக்கப்பட்ட இளைஞர்களுக்கு விசேட கவனம் செலுத்தப்படுவதோடு அவர்களுக்குத் தேவையான சேவைகளும் வழங்கப்பட வேண்டும். கல்வியைத் தொடர்தல், தொழிற்பயிற்சி என்பவற்றிலிருந்து மருத்துவம், மறு உற்பத்திச் சுகாதாரம், மது மற்றும் போதைப் பொருள் பாவனை தொடர்பான உள சமூகப் பராமரிப்பு உளவள ஆலோசனைகள் வரை பலவேறு விடயங்களை இவை உள்ளடக்கும்.

**6. சிவில் சமூகம்**

1.35 நிலைமாறுகால நீதி, நல்லிணக்கம் என்பவற்றுக்காகச் செயற்படுவது அரசின் பிர்தான கடமை என்பதை ஏற்றுக்கொள்ளும் அதேவேளை அரசின் முன்னெடுப்புக்களுக்கு ஆதரவு அளிப்பதிலும் தாமே சொந்தமாக முன்னெடுப்புக்களை மேற்கொள்வதிலும் பொதுவாகச் சமூகத்தினதும் குறிப்பாக அரசியல் கட்சிகள், ஊடகங்கள், வர்த்தக சமூகம், மதத் தலைவர்கள், தொழில் வாண்மை அமைப்புகள் மற்றும் அனைத்து சிவில் சமூகக் குழுக்கள் என்பவற்றின் முக்கியமானதும் துணையானதுமான பாத்திரத்தை கலந்தாலோசனைச் செயலணி வலியுறுத்துகின்றது. பெரும்பாலான பொதுமக்களின் சமர்ப்பித்தல்கள் பரிகார நடவடிக்கைகளுக்கு அரசையே எதிர்பார்த்திருப்பதையும் வேறு சமூக நிறுவனங்களுக்கு மிகக் குறைவான இடமே கொடுத்திருப்பதையும் அவதானிக்க முடிகின்றது. ஒரு தாக்கமான நிலைமாறுகால நீதிச் செயல்முறையைப் பொறுத்தவரை தேசிய மட்டத்திலிருந்து உள்ளூர் மட்டம் வரை பல்வேறு நிலைகளில் செயற்படும் இந்தப் பிரிவுகள் எல்லாவற்றினதும் ஈடுபாடும்- பங்குபற்றலும் முக்கியமானது.


1.36 நிலைமாறுகால நீதிச் செயல்முறையில் சிவில் சமூகத்தின் மதிப்பிடற்கரிய பங்கு அங்கீகரிக்கப்பட வேண்டியதாகும். அரசுசாரா நிறுவனங்களினதும் வேறு சிவில் சமூக அமைப்புக்களினதும் சட்டரீதியான சட்டகம் வலுப்படுத்தப்பட வேண்டும். அதேவேளை குறிப்பாக மாவட்ட நிலை அரச அதிகாரிகளால் சிவில் சமூகத்துக்கான இயங்கு வெளி வழங்கப்பட வேண்டும்.

1.37 பொதுமக்களின் மிகப் பெரும்பாலான பரிந்துரைகள் சட்டம், கொள்கை அல்லது அரசியல் யாப்பு மாற்றங்கள் அல்லது உள்ளூர் மட்டப் பிரச்சினைகளில் தேசிய மட்டச் செயற்பாட்டாளர்களின் பங்குபற்றுதல் பற்றியே முதன்மைப்படுத்தின. அதேவேளை பொறிமுறைகளின் வடிவமைப்பிலும் நடைமுறைப்படுத்துவதிலும் உள்ளூர்மட்டப் பங்குபற்றுதலும் உடைமையும் தேவை என்பதையும் ஒரு கணிசமான பரிந்துரைகள் குறிப்பிட்டன. அந்தவகையில் சிவில் சமூகமும் கொள்கை வகுப்பாளர்களும் ஏற்கனவே இருக்கும் அமைப்புக்கள் அல்லது வலையமைப்புக்கள் என்பவற்றை வலுப்படுத்துவதற்கும் இடைக்கால நீதியில் தேசிய முயற்சிகளுக்குச் சமாந்தரமாக சாவாழ்வு முறுகல் நிலை என்பவற்றைக் கையாள்வதற்கான புதிய அமைப்புகளை நிறுவுவதற்கும் தங்கள் சக்தியைச் செலவிடுவது அவசியமாகும்.

1.38 ஆலோசனைகள் ஒரே முறை தான் பெறப்படும் என்று கருதப்படக் கூடாது.

அது தொடர்ச்சியான ஒன்றாக வும் இடைக்கால நீதிச் செயன் முறையில் ஒன்றிணைந்ததாகவும் நோக்கப்பட வேண்டும். இது தனித் தனிப் பொறிமுறைகளை வடிவமைப் பதையும் அவற்றின் செயற்பாட்டையும் தாக்கத்தையும் வலுப்படுத்தும்.

(மிகுதி நாளை தொடரும்)



# வாசகர் திருமுகம்

## சுத்தம் என்றும் சுகம் தரும்

பிள்ளைகள் மட்டுமல்ல எல்லோருமே அங்கங்களையும், ஆடைகளையும் சுத்தமாகப் பேணிப் பாதுகாப்பது அவசியமாகும். முக்கியமாக சாப்பிட முன்னரும், சாப்பிட்ட பின்னரும், மலசலம் கழித்த பின்னரும், கை கால்களைச் சுத்தம் செய்து பேணுதல் அவசியம். பொது இடங்களிலும், பாடசாலைகளிலும், ஆலயங்களிலும் நீர் வசதியும், மலசலகூட வசதிகளும் கண்டிப்பாக நல்ல தரத்தில் இருப்பது தருமகாரியங்களாகும். குறிப்பாக மாணவர்கள் விடயத்தில் இதற்கு முக்கியத்துவம் வழங்கிச் செயற்படுவதன் மூலம் சமூக ஆரோக்கியத்தைச் செவ்வனே பேண இயலும். எல்லோருமே கவனத்தில் இருத்த வேண்டிய விடயம் இது.

*கே.எஸ்.சிவஞானராஜா*

## பொருத்து வீடுகளை வலோற்காரமாகத் திணிப்பதேன்?

தமிழர்கள் என்ற காரணத்துக்காக அவர்கள் விரும்பாத பொருத்து வீடுகளை அமைப்பதில் அமைச்சருக்கு என்ன இலாபம். மக்களால் உருவாக்கப்பட்ட அமைச்சர்கள் மக்களின் மனநிலைமையை அறிந்துசெயற்பட வேண்டியது அவசியம்.

எமது சூழலுக்குச் சற்றும் பொருந்தாத பொருத்து வீடுகளை அமைப்பதற்குப் பதிலாக கல்வீடு அமைத்து வாழ்வதையே மக்கள் விரும்புகின்றனர்.

மக்கள்விருப்பம் கல்வீடே. எமது கலாசாரத்துக்கும் காலநிலைக்கும் பாரம்பரியத்துக்கும் ஏற்ற கல் வீட்டை அமைத்து மக்கள் விருப்பத்தை நிறைவேற்ற அமைச்சர் முன்வருவாரா?

*மக்கள் நலன் விரும்பி*
*கட்டுடை,*
*மானிப்பாய்.*

# மோனாலிசா ஓவியம்

உலகப்புகழ் மிக்க மோனாலிசா ஓவியத்தை பிரான்ஸ் ஓவியர் லியோனார் டோ டா வின்சி என்பவர் வரைந்தார். ஓவியர் லியோனார்டோ டா வின்சியின் ஓவியங்கள் பாரிஸ் நகரின் லூவர் அருங்காட்சியகத்தில் உள்ளன. அங்குள்ள மோனாலிசா உள்ளிட்ட 7 ஓவியங்களை விஞ்ஞானிகள் பிலிப்வால்டர் தலைமையிலான விஞ்ஞானிகள் குழு ஆய்வு செய்தனர்.

மோனாலிசா உள்ளிட்ட ஓவியங்கள் மீது எக்ஸ்ரே கதிர்களை பாய்ச்சி பரிசோதனை செய்தனர். அதில் மோனாலிசா ஓவியத்தை லியோனார்டோ டா வின்சி 30 அடுக்கு பெயிண்டிங் (வண்ணம்) செய்து இருப்பது தெரிய வந்தது.

மேலும் ஒவ்வொரு வண்ண கலவை அடுக்குகளும் 40 மைக்ரோ மீற்றர் அளவுக்கு நுண்ணியமாக வரையப்பட்டிருப்பது கண்டறியப்பட்டது.

மேலும், மோனாலிசா ஓவியத்தில் மேங்கனிஷ் ஆக்சைடு என்ற இரசாயனக்கலவையின் மூலம் ஓவியர் டா வின்சி வரைந்துள்ளார். ஓவியம் பளபளப்பாக இருப்பதற்கு அதன் மீது அவர் காப்பர் உலோகத்தை பயன்படுத்தியுள்ளார்.

இந்தத் தகவலை விஞ்ஞானி பிலிப்வால்டர் தெரிவித்துள்ளார். ஓவியர் டாவின்சி பயன்படுத்திய தொழில் நுட்பத்துக்கு ஸ்புமோடோ என்று பெயர் என அவர் கூறினார். மோனாலிசா ஓவியத்தை டாவின்சி கடந்த 1503ஆம் ஆண்டு வரைய தொடங்கினார்.



## எளிமை

எளிமைதான்
முன்னேற்றம் தரும்.
எளிமையாக இருங்கள்.
எளிமைதான் உண்மையாக
வாழக் கற்றுக் கொடுக்கும்.
மாபெரும் கண்டு பிடிப்புகளுக்குத்
தேவையான அறிவைத் தரும்
சாவி எளிமையில் தான் அடங்கி
இருக்கிறது.
நல்லவற்றுக்கு உடனே எம் மனதைத் திறக்கவும், கெட்டதற்கு மனக்கதவைத் திறக்கவும் முடியும் எளிமையாக வாழத்தான் எமக்கு நிறையத் துணிச்சல் வேண்டும். அது இருந்தால் நாம் நினைத்ததைச் சாதிக்கலாம்.

*- ஜே.ஆர். லோவெல்*



# வரலாற்றில் இன்றைய தினம்

1993 - சுப்பசோனிக் விமானங்களால் இடர்; சித்தன்கேணி குண்டு வீச்சில் 9 பேர் உடல் சிதறி உயிரிழப்பு.15 பேர் காயம்; முற்பகல் 10.15 மணியளவில் சம்பவம்.

1994 - எம்பிலிப்பிட்டிய புதைகுழி விவகாரம்; பாதுகாக்கவந்த தொண்டர்கள் அகற்றப்பட்டனர்.

1995 - நள்ளிரவு முதல் போர் நிறுத்தம்; பிரபா - சந்திரிகா ஒப்பமிட்டுப் பிரகடனம்.

1997 - அனுரா முறைப்பாடு; 2 மணி நேரம் ரத்வத்தையை சி.ஐ.டி விசாரணை.

2000 - குடாநாட்டில் கைதாவோர்; தொடர்பாகக் கொழும்பில் ஆலோசனைக் கூட்டம் எனப் பயங்கரவாதத் தடுப்புப் பொலிஸ் அதிகாரி மனித உரிமை ஆணைக்குழு அதிகாரிக்குத் தெரிவிப்பு.

2008 - பெனாலிர் படுகொலை செய்யப்பட்ட இடம் உடனடியாகத் துப்புரவு செய்யப்பட்டதால் ஸ்கொட்லாண்ட் யாட் துப்புத் துலக்குவதற்குத் தடயம் கிடைக்காது தள்ளாட்டம்.



# கஞ்சனும் புதையலும்

ஓர் ஊரில் கஞ்சன் ஒருவன் இருந்தான். அவனுக்கு ஒருநாள் இரவு கனவு ஒன்று வந்தது. அந்தக் கனவில் தோன்றிய தேவதை, மகனே! உன் வீட்டுத் தோட்டத்தில் உள்ள வேப்பமரத்துக்கு அடியில் புதையல் உள்ளது என்று கூறிவிட்டு மறைந்தது. தூக்கத்திலிருந்து கஞ்சன் விழித்தான்.

பகலில் சென்றால் பிறருக்குத் தெரிந்துவிடும் என்று எண்ணி உடனே சென்று தோண்டினான். அங்கிருந்த நல்ல பாம்பு ஒன்று அவனைக் கடித்துவிட்டது. விஷம் ஏறியது.

விசக்கடி மந்திரவாதியிடம் ஓடினான் கஞ்சன் . அவர் தன்னிடம் வரும் நோயாளிக்கு மந்திரம் சொல்லியே நோயைக் குணமாக்குவார் .

பூரான் கடிக்கு 5 ரூபாய்
தேள் கடிக்கு 10 ரூபாய்
பாம்பு கடிக்கு 25 ரூபாய்
என்றார் மந்திரவாதி .

அந்த நேரத்தில் கஞ்சன் யோசிக்க ஆரம்பித்தான். எந்தக் கடியானாலும் ஒரே மந்திரம் தானே சொல்லப் போகிறார். எதற்குப் பாம்பு கடித்தது என்று சொல்லி 25 ரூபாய் கொடுக்க வேண்டும் என்று எண்ணி, பூரான் கடித்து விட்டது என்று கூறினான். மந்திரவாதி பூரான்கடி மந்திரத்தை சொல்லப் பயன் கிடைக்கவில்லை. மீண்டும் வைத்தியரே! எனக்குத் தேள் கடித்து விட்டது என்றான். மந்திரவாதி தேள்கடி மந்திரத்தை சொல்ல, இப்போதும் பயன் இல்லை.

பயந்து போன கஞ்சன் மெதுவாக , பா... பா... பாம்பு கடித்தது என்றான் .

அவன் சொல்லி முடிப்பதற்குள் விஷம் தலைக்கு ஏறி இறந்து விட்டான் .

# வர்ணம் தீட்டுவோம் வாங்க....




# அன்பு

*உ.சங்கீத்*
*தரம் - 10D*
*கிளிநொச்சி இந்துக் கல்லூரி*



கூடிப் பிறந்தோம்! அன்னை தம்மை
கொஞ்ச மகிழ்ந்தோம்! கல்வியை
நாடிப் பெற்றோம்! தம்மையென
தாலும் கற்றோம்! செல்வத்தைத்
தேடி அலைந்தோம்! கிடைத்த
வுடன்
தீமை அஞ்சோம் தெளி
வின்றி
ஆடிஅடங்கும்வாழ்க்கை
நாமறிந்துவைத்த
செய்தியென்ன?
அன்பு என்ற
அமிர்தத்தை
அன்னை
ஊட்ட அறி
கின்றோம்!
அன்பை
அறியும் முன் னாலே
அதனுள் மூழ்கிப் போகின்றோம்!
தன்னுள் புகுந்த உயிரிடத்தில்
தானும் கலந்து தங்குவதால்
மின்னும் இந்தப் பூமியிலே
மீளாச்சிறை தான் அன்பற்றோ!

அன்பு... அறிவில் இருந்து விட்டால்
ஆன்ம சக்தி கிடைத்து விடும்!
அன்பு.. மனத்தில் இருந்து விட்டால்
ஆழ்ந்த கருணை பிறந்து விடும்!

அன்பு... உணர்வில் இருந்து விட்டால்
மனதில் காதல் பிறந்து விடும்!
அன்பு செயலில் இருந்து விட்டால்
அகிம்சை ஞானம் பிறந்து விடும்!

## தகவல் களம்

1. மிகப்பெரிய கடல் எது?
தென் சீனக் கடல்
2. மிகப் பெரிய மகா சமுத்திரம் எது?
பசிபிக் சமுத்திரம்
3. ஆந்திரப் பிரதேசம் முழுவதும் ஓடி வரும் நதி எது?
கிருஷ்ணா நதி
4. உலகிலேயே மிகப்பெரிய துறைமுகம் எது?
நியூயார்க் நியூசெர்சி துறைமுகம்
(இங்கு ஒரே நேரத்தில் 39 கப்பல்கள் நிற்க முடியும்)

"La educ... n es una arma de construcción masiva"

# ஆங்கில புத்தாண்டுப் பலன் 2017



## துலாம்

உங்களின் ராசிக்கு 3ஆம் வீட்டில் லாபாதிபதியான சூரியன் வலுவாக அமர்ந்திருக்கும் நேரத்தில் இந்தப் புத்தாண்டு பிறப்பதால் எப் படியும் வெற்றி பெறுவோம் என்ற தன்னம் பிக்கை வரும். தன்னிச்சையாக செயற்படத் தொடங்குவீர்கள். தைரியமாக சில முக்கிய முடி வுகள் எடுப்பீர்கள். மற்றவர்களின் ரசனைக் கேற்ப உங்களை மாற்றிக் கொள்வீர்கள். உங்கள் ராசிக்கு 4ஆம் வீட்டில் இந்த 2017ஆம் ஆண்டு பிறப்பதால் எதிர்பார்ப்புக்கள் நிறைவேறும். பிரபலங்களின் பட்டியலில் இடம்பிடிப்பீர்கள். பணம் வரத்தொடங்கும். உங்களிடம் பழகும் சொந்த-பந்தங்களின் பலம், பல வீனத்தை அறிந்து செயற்படத் தொடங்குவீர்கள். பேச்சில் கம்பீரம் பிறக்கும். வழக்கு சாதகமாகும். நகர எல்லையை ஒட்டியுள்ள பகுதியில் வீடு, மனை வாங்குவீர்கள். வேலைக்கு விண்ணப்பித்துக் காத்திருந்தவர்களுக்கு நல்ல நிறுவனத்திலிருந்து அழைப்பு வரும். மகளுக்கு நீங்கள் எதிர் பார்த்ததைப் போல் நல்ல குடும் பத்திலிருந்து வரன் அமையும்.

ஏப்ரல் 11ஆம் திகதி முதல் மே 26ஆம் திகதி வரை உங்கள் ராசிக்கு 8இல் செவ்வாய் அமர்வதுடன் செவ் வாயை சனி பார்க்கயிருப்பதாலும் வீண் விரைய செலவுகள், முன் கோபம், குருதியில் ஹீமோ குளோபின் குறைபாடு, மனைவிக்கு மாதவிடாய் கோளாறு, அடிவயிற்றில் வலி வந்து போகும். சொத்து விற்பதாக இருந்தால் ஒரே தவணையில் பணத்தைக் கேட்டு வாங்குங்கள். சகோதரங்கள் உங்களைத் தவறாகப் புரிந்து கொள்வார்கள். ஜுலை 26ஆம் திகதி வரை உங்கள் ராசிக்கு 5ஆம் வீட்டில் கேது நிற்பதால் பிள்ளைகளின் எதிர் பார்ப்புகள் அதிகமாகிக் கொண்டே போகும். அவர்களை அன்பாக நடத்துங்கள். உங்களு டைய கனவுகளை அவர்கள் மீது திணிக்க வேண் டாம். கர்ப்பிணிப் பெண்கள் மருத்துவரின் ஆலோசனையின்றி எந்த மருந்தையும் உட்கொள்ள வேண்டாம். கர்ப்பச் சிதைவு ஏற்படக் கூடும். பூர்வீகச் சொத்தைச் சரியாகப் பராமரிக்க முடியவில்லையே என வருத்தப்படுவீர்கள். ராகு லாப வீட்டில் நிற்பதால் வசதி, வாய்ப்புகள் ஓரளவு பெருகும். புது பதவி, பொறுப்புகள் தேடி வரும். மூத்த சகோதர வகையில் ஆதரவு கிட்டும். சமூக சேவையில் ஈடுபாடு அதிகரிக்கும். பயணங்களால் புத்துணர்ச்சிப் பெறுவீர்கள்.

ஆனால் ஜுலை 27ஆம் திகதி முதல் வருடம் முடியும் வரை கேது 4ஆம் வீட்டிலும், ராகு 10ஆம் இடத்திலும் அமர்வதால் சுற்றியிருப்பவர்களின் சுய ரூபம் தெரிய வரும். ஒரே நாளில் முக்கியமான நான்கைந்து வேலைகளைப் பார்க்க வேண்டிவரும். இதை முதலில் முடிப்பதா, அதை முதலில் முடிப்பதா என்ற ஒரு பதற்றம் இருக்கும். தோல்வி மனப்பான்மையால் மன இறுக்கம் உண்டாகும். அவ்வப்போது நேர் மறை எண்ணங்களை உள்மனதில் வளர்த்துக் கொள்வது நல்லது. வழக்கு விவகாரங்களில் அடிக்கடி வழக்கறிஞரை மாற்றவேண்டாம். சிலர் உங்களுடைய இடத்தை ஆக்கிரமிக்கவும் வாய்ப்பிருக்கிறது.

இலவசமாக சில கூடாப்பழக்க வழக்கங்களை உங்களைத் தொற்றிக் கொள்ள வாய்ப்பிருக்கிறது. எனவே உங்களுடைய அடிப்படை நடத்தைக் கோலங்களை மாற்றிக் கொள்ளாதீர்கள். உங்களுடைய தனித் தன்மையை இழந்து விடாதீர்கள். இதுவரை கட்டிக் காப்பாற்றிய கௌரவத்தை இழந்துவிடுவோமோ, என்ற கவலையும் தலை தூக்கும். உடல் எடை அதிகமாகும். நேரம் தவறிச் சாப்பிட வேண்டாம். சின்னச் சின்ன உடற்பயிற்சி மேற்கொள்வது நல்லது. தாயாருக்கு கழுத்து எலும்புத் தேய்வு, மூட்டு வலி, கை, கால் வலி, அசதி வந்து போகும். அவருடன் மனத்தாங் கலும் வரக்கூடும்.

புத்தாண்டின் தொடக்கம் முதல் செப்ரெம்பர் முதலாம் திகதி வரை உங்களின் சேவகாதிபதியும்-சஷ்டமாதிபதியுமான குரு உங்கள் ராசிக்கு 12ஆம் வீட்டில் மறைந்து நிற்பதால் திடீர் பயணங்களால் அலைச்சல், செலவுகள் இருக்கும். சிக்கனமாக இருக்கலாம் என்று நீங்கள் எப்போது திட்டமிட்டாலும் முடியாமல் போகும். தூக்கமின்மை, கனவுத் தொல்லை, ஒருவித படபடப்பு வந்து செல்லும். யாருக்கும் பணம் வாங்கித் தருவதில் குறுக்கே நிற்கவேண்டாம்.

ஆனால் செப்ரெம்பர் 2ஆம் திகதி முதல் வருடம்முடியும்வரைகுருஉங்கள்ராசிக்குள்நுழைந்து ஜென்ம குருவாக அமர் வதால் ஒரு தேடலும், நிம்மதியற்ற போக்கும் அதிகரிக்கும். அவ்வப்போது கோபப்படுவீர்கள். யாரிடமாவது சண்டை போட வேண்டுமென நினைப்பீர்கள். சாப்பாட்டில் உப்பைக் குறையுங்கள். குருதி அழுத்தம் அதிகமாகும். இருவரும் ஒருவருக்கொருவர் விட்டுக் கொடுத்துப் போவது நல்லது. எனக்கு மட்டும் ஏன் இத்தனை சோதனை வருகிறது. எனக்கு அதிர்ஷ்டமே இல்லையா, எதைத் தொட்டாலும் இப்படி பிரச்சினையாகவே இருக்கிறதே, யாரும் என்னை மதிப்பதைப்போல் தெரியவில்லையே என்றெல்லாம் அவ்வப்போது புலம்புவீர்கள். உங்கள் இயல்புக்கு மாறான நடவடிக்கைகளில் ஈடுபட வேண்டாம். திடீரென்று அறிமுகமாகுபவரை நம்பி முடிவுகள் எடுக்க வேண்டாம். முதுகுக்குப் பின்னால் விமர் சிப்பவர்களைப் பற்றி கவலைப்படாதீர்கள்.

டிசெம்பர் 14ஆம் திகதி வரை சனி 2இல் அமர்ந்து ஏழரைச் சனியின் இறுதி கட்டமான பாதச் சனி நடைப் பெற்றுக் கொண்டிருப்பதால் இருப்பதால் பல் வலி, காது வலி வந்து நீங்கும். கண் பார்வையை பரிசோதித்துக் கொள்ளுங்கள். காலில் அடிபட வாய்ப்பிருக்கிறது. பிள்ளைகளை படிப்பின் பொருட்டு கசக்கிப் பிழியவேண்டாம். பணப் பற்றாக்குறை ஏற்படும். வருடத்தின் இறுதியில் டிசெம்பர் 15ஆம் திகதி முதல் 3ஆம் வீட்டில் சனி அமர்வதால் சோர்ந்திருந்த நீங்கள் புத்துயிர் பெறுவீர்கள். வாழ்க்கையின் நெளிவு, சுளிவுகளைக் கற்றுக் கொள்வீர்கள். பிரிந்திருந்த கணவன்- மனைவி ஒன்று சேருவீர்கள். உங்கள் இருவருக்கும் இடையே குழப்பங்களை ஏற்படுத்தியவர்களை இனங்கண்டறிந்து ஒதுக்குவீர்கள். தைரியம் கூடும். உங்களை ஏளனமாகப் பேசியவர்களெல்லாம் வலிய வந்து நட்புப் பாராட்டுவார்கள். வழக்கில் வெற்றி பெறுவீர்கள். தோலில் நமைச்சல், அடிவயிற்றில் வலி வந்து போகும். படித்த துறையில் வேலை கிடைக்காவிட்டாலும் கிடைக்கும் வேலையில் சேருவது நல்லது. மாணவர்கள் சினிமா எல்லாம் விட்டு விட்டு படிப்பில் முழு கவனம் செலுத்துங்கள். மறதியால் மதிப்பெண் குறையும். நொருக்குத் தீனிகளை குறையுங்கள். அறிவியல், கணித சூத்திரங்களையெல்லாம் எழுதிப் பார்ப்பது நல்லது. நல்லவர்களின் நட்பை வளர்த்துக் கொள்ளுங்கள்.

ஆகமொத்தம் இந்த 2017ஆம் ஆண்டு சகிப்புத்தன்மை தேவை என்பதையும் தன் கையே தனக்குதவி என்பதையும் உணர்த்தும்.

**நாளை**
**மார்கழி-23**
சனிக்கிழமை -07.01.2017
திதி: தசமி பி.இ.05.01
நட்சத்திரம்: அச்சுவினி மு.ப.11.39
ராகுகாலம்:09.32-11.02 வரை
சுபநேரம்:03.32-05.02 வரை

# சுட்டுப் போட்டாலும் இவர்களுக்குப் புத்தி வராது

"நிவாரணத்தையோ பரிகாரத்தையோ வழங்குவதற்குத் தவறிய கடந்த காலத்தின் படுமோசமான தவறுதல் மற்றும் முடிவுறாத தன்மையின் மத்தியில், மற்றுமொரு முயற்சி தொடர்பில் நாடெங்கிலும் உள்ள மக்கள் குறிப்பிடத்தக்களவு விரக்தியையும், கசப்பையும், கோபத்தையும் வெளிப்படுத்தினர். எனினும் இந்த உணர்வு, அந்தக் குறிப்பிட்ட செயற்பாடு வேறுபட்டதாக இருக்கும் என்ற எதிர்பார்ப்பு மற்றும் ஏக்கத்துடன் கலந்திருந்தது".

கலந்தாலோசனைக்கான நல்லிணக்கச் செயலணி மக்கள் கருத்து அறியும் அறிக்கையில், தனது அவதானிப்புக்களும் பரிந்துரைகளும் என்ற விடயத்தில் முக்கியத்துவம் கொடுத்து மேற்படி விடயத்தைத் தெரிவித்துள்ளது.

இலங்கையை ஆட்சி செய்த கடந்த கால அரசுகளால் பல்வேறு ஆணைக்குழுக்கள் நியமிக்கப்பட்டன. அவை ஒவ்வொன்றும் பரிந்துரைகள் பலவற்றை முன்வைத்தன. அந்தப் பரிந்துரைகளில் தமிழர்களுக்குப் பாதகமான விடயங்களும் அடங்கியிருந்தன. சில சாதகமான விட யங்களும் உள்ளடங்கியிருந்தன.

முன்வைக்கப்படும் பரிந்துரைகளில் தமிழருக்குப் பாதகமான விடயங்களையும் ஆட்சியாளர்களுக்குப் பாதிப்பில்லாத விடயங்களையும் மாத்திரமே நிறைவேற்றி வந்தனர். இந்த விவகாரம் பாதிக்கப்பட்ட மக்கள் மத்தியில் இலங்கை அரசுகளினால் நியமிக்கப்படும் ஆணைக்குழுக்கள் மீதான நம்பிக்கையீனத்தை அதிகரித்திருந்தது.

கலந்தாலோசனைக்கான நல்லிணக்கச் செயலணி இதனைத் தனது அறிக்கையில் கோடிட்டுக் காட்டியுள்ளது. மக்கள் மத்தியில் ஏற்பட்டுள்ள நம்பிக்கையீனம், கோபமாகவும் - விரக்தியாகவும் - கசப்புணர்வாகவும் வெளிப்பட்டுள்ளது. இதனைச் செயலணி தனது பரிந்துரையில் பதிவு செய்துள்ளது.

தமது செயலணியின் முயற்சி, கடந்த கால முயற்சிகளிலிருந்து வேறுபட்டதாக இருக்கும் என்ற எதிர்பார்ப்பு மற்றும் ஏக்கம் மக்களிடம் இருந்ததையும் செயலணியின் அறிக்கை குறிப்பிட்டுக் காட்டத் தவறவில்லை.

கடந்த காலப் பாதிப்புக்களையும் அதன் எதிர்வினைகளையும் சுட்டிக்காட்டி வெளிவந்த அறிக்கையைக் கூட, ஆட்சியில் இருக்கின்ற அரசு 'வழமைபோன்று' தூக்கி எறிந்திருக்கின்றது.

ஆட்சியில் எவர் இருக்கின்றார்கள் என்பது முக்கியமல்ல. ஆட்சியில் எவர் இருந்தாலும், உண்மையைச் சொல்லுகின்ற-பாதிக்கப்பட்ட தரப்புக்கு நியாயம் பெற்றுக் கொடுக்கின்ற எந்தவொரு அறிக்கையையும் அவர்கள் ஏற்றுக் கொள்வதற்குத் தயாராக இல்லை.




ஐ.நா. மனித உரிமைகள் சபையில் நிறைவேற்றப்பட்ட தீர்மானத்தில், பாதிக்கப்பட்ட தரப்புடன் கலந்துரையாடல் நடத்தி விசாரணைப் பொறிமுறை அமைக்கப்பட வேண்டும் என்று குறிப்பிடப்பட்டிருந்தது. இலங்கை அரசு இந்தத் தீர்மானத்துக்கு இணை அனுசரணை வழங்கியிருந்தது. அதற்கு அமைவாக பாதிக்கப்பட்ட தரப்புடன் கலந்துரையாடல் நடத்தி அறிக்கையும் தயாரிக்கப்பட்டிருக்கின்றது.

அதில் பாதிக்கப்பட்ட தரப்புக் கோருகின்ற பரிந்துரையை மாத்திரம் ஏற்கோம் என்பதில் விடாப்பிடியாக இருக் கின்றது கொழும்பு அரசு. என்ன நோக்கத்துக்காக செய லணி அமைக்கப்பட்டதோ அந்த நோக்கத்துக்கான பரிந்துரையை 'வெரி சிம்பிளாக' ஒதுக்கியுள்ளது அரசு. ஆணைக்குழுக்கள் அமைப்பதையும் பின்னர் அதன் அறிக்கைகளையும் - பரிந்துரைகளையும் குப்பைத் தொட்டிக்குள் போடுவதையும் செய்கின்ற அரசு அமைந்து விடக்கூடாது என்ற எதிர்பார்ப்பில்தான் தமிழ் மக்கள் வாக்களித்து 2015 ஆம் ஆண்டு ஆட்சி மாற்றத்தை ஏற்படுத்தினர். ஆனால் நடப்பவை எல்லாமே கடந்த அரசின் பாணியிலேயே இருக்கின்றன.

Facebook : UTHAYAN.PRINT
Twitter : UTHAYANPRINT

இரா.நிஷாந்தன்

# மார்கழி நீராட மகிழ்ந்தேதுவாய் எம் பாவாய்

மார்கழி மாதம் இந்துக்களின் புனித மான மாதங்களில் ஒன்று. இந்த மாதத்தில் திருவெம்பாவை, திருப் பாவை முதலிய விரதங்கள் சிறப்புப் பெறுகின்றன. மேலும் மாதங்களில் 'நான் மார்கழி' என கிருஷ்ண பகவான் பகவத்கீதையில் மொழிந்திருக்கின் றார். அந்த வகையில் இந்த மாதத்தில் அனுஷ்டிக்கப்படும் சிவனுக்குரியதான திரு வெம்பாவை விரதம் நாம் அனைவரும் நன்கு அறிந்ததே. ஆனால் பலர் அறியாத அறிந்திருக்க முடியாத மற்றமொரு நோன்பு திருப் பாவையாகும். இது விஷ்ணுவுக்குரிய சிறப்புக்குரிய நோன்பாகும். எனவே தி ருப்பாவை நோன்பின் மகத்துவம் அதன் சிறப்புக்கள் பற்றி ஆரய்வோம்.

விஷ்ணுவைப் பாடித்துதித்த பன்னிரு ஆழ் வார்களில் ஆண்டாளும் ஒருவர். ஆண்டாள், விஷ்ணுவே தனக்குக் கணவனாகக் கிடைக்க வேண்டும் எனும் குறிக்கோளில் வாழ்ந்து வந்தவள். அதன்படி தான் பிறந்த ஸ்ரீ வில் லிபுத்தூரை ஆயர்பாடியாகவும் தன்னை கோபிகையாக பாவனை செய்து இதர தோழிகளுடன் ஆயர்பாடியில் கண்ணன் இல்லத்துக்குச் சென்று துயில் எழுப்பி அவனை வணங்கி வந்தாள். இவ்வாறு முப்பது நாள்கள் இந்தத் திருப் பாவை நோன்பு அனுஷ்டிக்கப்படுகிறது. இந்த நோன்பின் போது ஆண்டாள் அருளிச்செய்த திருப்பாவை முப்பது பாடல்களும் பாடப்படும். இந்தப் பாடல்களில் பாவை நோன்பு பற்றிச் சிறப்புக்கள் எல்லாம் அழகுற வெளிப்படுகிறது.

*மார்கழித் திங்கள் மதிநிறைந்த நன்னாளில்*
*நீராடப் போதுவீர் போதுமினோ நேரிழையீர்*
*சீர்மல்கும் ஆயர்பாடிச் செல்வச் சிறுமீர்காள்*
*கூர்வேல் கொடுந்தொழிலன் நந்தகோபன் குமரன்*
*ஏராந்த கண்ணி யசோதை இளம் சிங்கம்*
*கார்மேனி செங்கன் கதிர்மதியம் போல் முகத்தான்*
*நாராயணனே நமக்கே பறை தருவான்*
*பாரோர் புகழ் படிந்தேலோர் எம்பவாய்*

இது திருப்பாவையில் முதலாவது பாடலாகும். இதில் மார் கழித் திங்கள் அதாவது திங்கள் என்பது மாதம் எனப் பொருள்படும். ஆகவே மார்கழி மாதத்தில் சந்திரன் ஒளி நிறைந்த நாளில் ஆயர்பாடியின் சிறுமியராகிய நாம் யசோதையின் இளம் சிங்கம் போன்றவனும் கரியநிற மேனி கொண்டவனும் சிவந்த கண்களை உடையவனும் மதி போன்ற முகத்தைக் கொண்டிருப்பவனுமாகிய கண்ணனைப் போற்றிப் பாடினால் அந்த நாராயணன் நமக்கு அருள் தந்திடுவான் என ஆண்டாள் பாடுகிறாள். திருப்பாவை நோன்பின்போது அதிகாலை எழுந்து நீராடி நெய், பால் என்பவற்றை உண்ணுதல், கண்களுக்கு மையிடுதல், கூந்தலில் மலர் சூடுதல் என்பவற்றைத் தவிர்த்து செய்யக் கூடாத செயல்களைச் செய்யாது தீய வார்த்தைகளை உரைக் காது கண்ணன் திருநாமங்களை உரைத்து வந்தால் அவன் திரு வருள் பெறலாம். இது விரதம் அனுஷ்டிக்கும் நியதியாகும்.

*வையத்து வாழ்வீர்காள் நாமும் நம் பாவைக்கு*
*செய்யும் கிரிசைகள் கேளீரோ பாற்கடலில்*
*பையத் துயின்ற பரமன் அடிபாடி*
*நெய்யுண்ணோம் பாலுண்ணோம் நாட்காலே நீராடி*
*மையிட்டு எழுதோம் மலரிட்டு நாம் முடியோம்*
*செய்யாதன செய்யோம் தீக்குறள்களைச்*
*சென்றோதோம்*
*ஐயமும் பிச்சையும் ஆந்தனையும் கைகாட்டி*
*உய்யுமாறெண்ணி உகந்தேலோர் எம்பாவாய்*

மேலும் இப் பாவை நோன்பு அனுஷ்டிக்கும் பெண்கள் நீர்நிலையில் நீராடிய பின் மண லால் ஒரு பாவை செய்து அதற்கு மலர், நீர் என் பவற்றை கண்ணன் திருநாமங்களைக் கூறி சாற்றி வழிபடுவர். இவ்வாறு பாவை நோன்பை நோற்கும்போது நாடு செழிக்கும் வகையில் தீமை ஏற்படாது மாதம் தவறாது மூன்று மழை பெய்திடும் என ஆண்டாள் திருப்பாவை பாடல் மொழிகின்றது.

*ஓங்கி உலகளந்த உத்தமன் பேர் பாடி*
*நாங்கள் நம் பாவைக்குச் சாற்றி நீராடினால்*
*தீங்கின்றி நாடெல்லாம் திங்கள் மும்மாரி*
*பெய்து..."*

இவ்வாறு பாவை நோன்பு நோற்பதற்காக ஆயர்பாடியில் சிறுமியர் அதிகாலைப் பொழுதில் சென்று ஏனைய தோழியர்களையும் துயில் எழுப்புகின்றனர். ஆயர்பாடி, பசுக்கள் நிறைந்த இடம். அவ் இடத்தில் வாழும் கோபியர்கள் மத்தினால் தயிர் கடைவர். அப்போது அதன் ஓசையானது வெளிப்பட்டு மற் றவர் செவிகளில் விழும். அத்தகைய தயிர் கடையும் ஓசை உனக்குக் கேட்கவில்லையா? விரைவாக எழுவாய், கேசவன் எனும் நாமம் படைத்தவனைச் சென்று நாம் பாட வேண்டும் என சிறுமியர் ஓர் ஆயர் குலச் சிறுமியைத் துயில் எழுப்புகின்றனர்.

*'வாச நறுங்குழல் ஆய்ச்சியர் மத்தினால்*
*ஓசைப் படுத்த தயிரரவம் கேட்டிலையோ*
*நாயகப் பெண்பிள்ளாய் நாராயணன் மூர்த்தி*
*கேசவனைப் பாடவும் நீ கேட்டே கிடத்தியோ*
*தேச முடையாய் திறவேலோர் எம்பாவாய்'*



இவ்வாறு ஆயர்குல சிறுமியர் எல்லோரும் கண்ணன் வசிக்கும் பவனத்திற்கு வருகை தந்து அங்கு வாயில் காப்போனி டம் கண்ணனைக் கண்டு அவனை தரிசிப்பதற்கு அனுமதி வழங்குமாறு வேண்டுகின்றனர். ஆயர் சிறுமியருக்கு பறை தருவதாக முன்னமே கண்ணன் கூறியிருந்தான். ஆகவே எம்மைத் தடுக் காது உள்ளே சென்று கண்ணனைக் காண்பதற்கு மணிக்கதவை திறப் பாயாக என அச் சிறுமியர் மேலும் வேண்டுகின்றனர். வாயில் காப்போன் உள்ளே செல்ல அனுமதி தந்ததும் உள்ளே சென்ற ஆயர்ச் சிறுமிகள் கண்ணன் துயில் எழப் பாடுகின்றனர். இதனை திருப்பாவையில் பதினேழாவது பாடல்

*அம்பரமே தண்ணீரே சோறே*
*அறஞ்செய்யும்*
*எம்பெருமான் நந்தகோபாலா*
*எழுந்திராய்*
*கொம்பனார்க்கு எல்லாம் கொழுந்தே*
*குலவிளக்கே எம் பெருமாட்டி*
*யசோதாய் அறிவுறாய்*
*அம்பரம் ஊடறுத்து ஓங்கி உலகளந்த*
*உம்பர் கோமானே உறங்காது எழுந்திராய்(17)*

மேலும் கண்ணனிடம் நாம் நீராடி பாவை நோன்பை நோற்பதற்கு இப்போதே எமக்கு விசிறியும் கண்ணாடியும் தருமாறு கேட்கின்றனர்.

இவ்வாறு கண்ணனையும் தம்முடன் மார்கழி நீராட வரு மாறு அழைத்து பாவை நோன்பை நோற்று முடித்தபின் தாம் என்னவெல்லாம். செய்வோம் என்பதை யும் ஆண்டாள் நாச்சியார் தன் திருப் பாவையில் கூறியுள்ளார். அதாவது பாவை நோன்பின் முடிவில் பல வகை யான ஆபரணங்களை அணிந்து அழகான ஆடைகளை உடுத்து நெய்கலந்த பாற்சோறு உண்டு ஒன்றாக கூடியிருந்து மார்கழி நீராடுவோம் என கூறுகின்றாள்.

*சூடகமே தோள்வளையே*
*தோடே செவிப்பூவே*
*பாடகமே என்றனைய பல்*
*கலனும் யாம் அணிவோம்*
*ஆடை உடுப்போம் அதன்*
*பின்னே பாற்சோறு*
*மூடநெய் பெய்து முழங்கை*
*வழிவாரக்*
*கூடி இருந்து குளிர்ந்தேலோர்*
*எம்பாவாய்(27)*

மேலும் இப்பாவை நோன்பு நோற்பதனால் தமக்குக் கிடைக் கும் நன்மைகள், தாம் பெற வேண்டிய பயன்கள் என் பவற்றை ஆயர்குலச் சிறுமியர் கண்ணனிடம் உரைக்கின்றனர். கோவிந்தனாகிய உன்னைப் இப்பிறவியில் பெற்று பெரும் புண்ணியம் செய்துள்ளோம். அது மட்டுமன்றி உன்னுடன் நாம் கொண்டுள்ள இவ் உறவை யாராலும் எக்காலத்திலும் பிரிக்க முடியாது. இன்று மட்டுமல்ல ஏழேழு பிறப்புக்களிலும் உன் னுடன் பொருந்தியிருக்கும்படி உனக்கு தொண்டு புரிபவர் களாக நாம் இருக்கும் வண்ணம் அருள் புரிவாயாக. இவற்றை

*அறிவு ஒன்றும் இல்லாத ஆய்க்குலத்து உன்தன்னைப்*
*பிறவி பெறுந்தனைப் புண்ணியம் யாம் உடையோம்*
*குறை ஒன்றும் இல்லாத கோவிந்தா உந்தன்னோடு*
*உறவேல் நமக்கு இங்கு ஒழிக்க ஒழியாது"(28)*

மற்றொரு பாடல்

*பெற்றம் மேய்த்து உண்ணும் குலத்தில் பிறந்து நீ*
*குற்று ஏவல் எங்களைக் கொள்ளாமல் போகாது*
*எற்றைக்கும் ஏழ்ஏழ் பிறவிக்கும் உன்தன்னோடு*
*உற்றேமே ஆவோம் உனக்கே நாம் ஆட்செய்வோம்".(29)*

எனவாறு ஆண்டாள் திருப்பாவை பாடல்கள் வெளிப்படுத்து கின்றன. மேலும் இப் பாவை நோன்பை நோற்று பெரியாழ் வாரின் மகளாகிய கோதையாம் ஆண்டாள் அருளிய திருப் பாவைப் பாடல்கள் முப்பதையும் பாடுகின்றவர்கள் பெரும் மலைகளை ஒத்த திருத்தோள்களையும் சிவந்த கண்களை யும் செல்வம் நிறைந்த திருமாலின் திருவருளையும் பெற்று இம்மையிலும் மறுமையிலும் பேரானந்தம் பெற்று வாழ்வார்கள்.

*சங்கத் தமிழ்மாலை முப்பதும் தப்பாமே*
*இங்கு இப் பரிசுரைப்பார் ஈரிரண்டு மால்வரைத்தோள்*
*செங்கான் திருமுகத்து செல்வத்திருமாலால்*
*எங்கும் திருவருள் பெற்று இன்புறுவர் எம்பாவாய்(30)*

எனவே இத்தகைய சிறப்பு மிகுந்த மார்கழி பாவை நோன் பானது குறிப்பாக கன்னிப் பெண்கள் அனுஷ்டிக்க வேண்டி யது அவசியமானது. பெண்கள் மட்டுமன்றி ஆண்களும் இவ் நோன்பை அனுஷ்டிக்கலாம். மேலும் இப்பாவை நோன்பு தற்போது விஷ்ணு ஆலயங்களில் சிறப்புற நடைபெற்றுக் கொண்டிருக்கின்றது. ஆகவே நோன்பை நோற்க முடியாவிடி னும் அதிகாலை எழுந்து கண்ணனை நினைத்து திருப் பாவைப் பாடல்களைப் பாடுவதும் உசிதமானதாகும்.

இவ்வாறு மார்கழி திருப்பாவை நோன்பை அனுஷ்டித்து தேவர்களின் துயர் நீக்கியருளும் நாராயணனின் திருவருள் பெற்று இன்புற்றுவாழ்வோம். திருப்பாவைநோன்புகடந்த 16ஆம் திகதிதொடங்கி தற்போது நடைபெற்றுக் கொண்டிருக்கின்றது.

> பாவை நோன்பு நோற்பதற்காக ஆயர்பாடியில் சிறுமியர் அதி காலைப் பொழுதில் சென்று ஏனைய தோழியர்களையும் துயில் எழுப்புகின்றனர். ஆயர்பாடி பசுக்கள் நிறைந்த இடம். அவ் இடத்தில் வாழும் கோபியர்கள் மத்தினால் தயிர் கடைவர். அப்போது அதன் ஓசையானது வெளிப்பட்டு மற் றவர் செவிகளில் விழும். அத்தகைய தயிர் கடையும் ஓசை உனக்குக் கேட்கவில் லையா? விரைவாக எழுவாய், கேசவன் எனும் நாமம் படைத்த வனைச் சென்று நாம் பாட வேண் டும் என சிறுமியர் ஓர் ஆய்குலச் சிறுமியைத் துயில் எழுப்புகின்றனர்.

# சுடோக்கு
## எண் விளையாட்டு

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| | | 4 | | 5 | | | 6 | |
| 5 | | 1 | | 8 | | 4 | | |
| | | 3 | 1 | | | | | |
| 1 | 5 | | | 6 | | | | |
| 8 | | 7 | | | | | 4 | |
| 4 | | | | | 5 | 7 | | |
| | 1 | | | | | | 2 | |
| | 2 | | 9 | | | | 8 | |
| 7 | 4 | | | | 3 | 5 | | |

### நேற்றைய சுடோக்கின் விடை

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 3 | 1 | 9 | 2 | 6 | 7 | 8 | 5 | 4 |
| 2 | 8 | 4 | 5 | 3 | 1 | 9 | 7 | 6 |
| 5 | 7 | 6 | 8 | 4 | 9 | 2 | 3 | 1 |
| 4 | 2 | 5 | 6 | 8 | 3 | 7 | 1 | 9 |
| 1 | 9 | 8 | 7 | 2 | 5 | 6 | 4 | 3 |
| 7 | 6 | 3 | 9 | 1 | 4 | 5 | 8 | 2 |
| 9 | 5 | 1 | 3 | 7 | 6 | 4 | 2 | 8 |
| 8 | 4 | 7 | 1 | 9 | 2 | 3 | 6 | 5 |
| 6 | 3 | 2 | 4 | 5 | 8 | 1 | 9 | 7 |

சுடோக்கு ஒரு எண் விளையாட்டு. தர்க்கரீதியான ஒழுங்குபடுத்தல் தான் இதன் அடிப்படை. 1-9 வரையான எண்களை ஒழுங்குபடுத்தி ஒரே கோலத்தை ஏற்படுத்த வேண்டும். இந்தப் பெட்டி 9 நிரல்களையும் 9 நிரைகளையும் கொண்டது. 3X3ஆக உள்ளேயும் 3 நிரல்களையும் 3 நிரைகளையும் கொண்டிருக்கிறது. (உள்ளே இருப்பவற்றை பெட்டிகள், கட்டங்கள், பகுதிகள், உப சதுரங்கள் என்றும் அழைக்கிறார்கள்). இந்த ஒவ்வொரு நிரையிலும், நிரலிலும் 1-9 வரையான எண்கள், இரண்டு தடவைகள் (மீண்டும் மீண்டும்) வராது நிரப்பப்பட வேண்டும். அவ்வாறு நிரப்பப்படுகையில் உள் பெட்டிகளுக்குள்ளும் அவ்வாறே 1-9 இலக்கங்கள் இரட்டைப்படாமல் வர வேண்டும். சில கட்டங்கள் ஏற்கனவே நிரப்பப்பட்டிருக்கும். தர்க்க ரீதியில் ஏனைய வற்றை நிரப்பவேண்டியதே வேலை. சுடோக்கு என்பது ஜப்பானியச் சொல். அதன் பொருள் தனி எண் என்பதாகும். 1986இல் ஜப்பானிய நிறுவனமான நிகோலி இதனை அறிமுகப்படுத்தி வெற்றிகரமாகப் பரவலாக்கியது. 2005இல் இது உலக அளவில் பிரபல்யமானது.



**இளைஞன்:** டாக்டர்! என் நண்பன் தூக்கத்தில "ஃபோர்" "சிக்ஸ்"... "நோ பால்", "அவுட்"ன்னு சொல்லிச் சொல்லி என் தூக்கத்தைக் கெடுக்கிறான். என்ன பன்றதுன்னு தெரியல, நீங்கதான் ஒரு வழி சொல்லனும்.

**டாக்டர்:** தம்பி! நீங்க உங்க நண்பனுக்காக 'ஓவரா' பயப்படாதீங்க இந்த மாத்திரைய 'சிக்ஸ்' டோஸ் டெய்லி 'ஃபோர்' டைம்ஸ் கொடுங்க. தூக்கத்தில புலம்பிற வியாதி 'அவுட்' ஆயிடும்.

**இளைஞன்:** அய்யோ....?

# மரணப்படுக்கையில் பாட்டி.. சுயபடம் எடுத்து வெளியிட்ட நடிகை



இங்கிலாந்தைச் சேர்ந்த பிரபல நடிகை சோலி பெர்ரி இணையத்தில் வெளியிட்ட ஒரு புகைப்படம் தற்போது சர்ச்சையை ஏற்படுத்தி உள்ளது.

பெர்ரியின் பாட்டி உடல்நலக்குறைவினால் மருத்துவமனையில் சேர்க்கப்பட்டிருந்தார். அவர் சிகிச்சை பயனளிக்காமல்இறந்தார். அவரது இறப்புக்கு வருத்தம் தெரிவித்த பெர்ரி புத்தாண்டு அன்று தனது பாட்டியுடன் சேர்ந்து எடுத்த ஓர் ஒளிப்படத்தை வெளியிட்டார்.

அந்தப் புகைப்படத்தில் மருத்துவமனையில் அவரது பாட்டி படுக்கையில் இருக்கிறார்.

சமூக வலைத்தளமான இன்ஸ்டாகிராமில் பதிவேற்றப்பட்ட இந்த ஒளிப் படத்துக்கு அவரது ரசிகர்கள் கடும் கண்டங்களைத் தெரிவித்தனர். ரசிகர்களின் தொடர் எதிர்ப்பினால் பெர்ரி அந்த ஒளிப்படத்தை நீக்கி விட்டார்.

முதுகிலே பல்லி விழுந்தால்
பஞ்சாங்கத்திலே 'குழப்பம்' என்று
போட்டிருக்கு...



நம்ம முதுகிலே பல்லி விழுந்தா
பஞ்சாங்கத்திலே ஏண்டா
குழப்பம் வரனும்...!

எமனுக்கு பிடித்த மாதம்



டிசெம்பர்



இதுக்குத் தான்
நான் அப்பவே சொன்னேன்...
விடிய, விடிய தூங்காமல்,
முகநூல் பார்க்காதீங்க என்று...
நான் சொன்னா யாரு கேக்கிறீங்க...

பொண்டாட்டி என்றால்
தேவதையாம் இங்க ஒருத்தன்
சொல்லுறான்...



அடேய்.... தேவதை
என்றைக்கடா எட்டி
மிதிச்சிருக்கு...?

**கோழியின் கிறுக்கல்!!** @Kozhiyaar
செவிடர்கள் வாழும் ஊரில் தொண்டை கிழிய கத்துவதால் பயனில்லை என்று அறிந்தவன் புத்திசாலி!

# இன்றைய நாள் உங்களுக்கு எப்படி?

**மேடம்:** எளிய பணி கூட நிறைவேற்றுவதில் தாமதம் உண்டாகும். தொழில், வியாபாரத்தில் வளர்ச்சி சுமாராக இருக்கும். மிதமான லாபம் கிடைக்கும். பெண்கள் குடும்ப நலனுக்காகப் பாடுபடுவர். மாணவர்கள் அக்கறையுடன் படிப்பர்.

**இடபம்:** குடும்ப விடயத்தைப் பிறரிடம் சொல்ல வேண்டாம். தொழில், வியாபாரத்தில் உள்ள அனுகூலத்தை பாதுகாக்கவும். அளவான வருமானம் கிடைக்கும். உடல் நலத்துக்கு ஒவ்வாத உணவு உண்ண வேண்டாம்.

**மிதுனம்:** உறவினர்களின் அன்பும், ஆதரவும் கிடைக்கும். தொழில், வியாபாரம் அபரிமிதமாக வளர்ச்சி பெறும். பணவரவும், நன்மையும் அதிகரிக்கும். குடும்பத்தில் சுப நிகழ்ச்சி நடத்த திட்டமிடுவீர்கள்.

**கடகம்:** சமயோசிதமாகச் செயற்பட்டு வருவீர்கள். தொழில், வியாபாரத்தில் தாராள அளவில் பணவரவு கிடைக்கும். பெண்கள் வீட்டு உபயோகப் பொருள் வாங்குவர். பணியாளர்களுக்கு விரும்பிய சலுகை கிடைக்கும்.

**சிங்கம்:** தகுதிக்கு மீறி எவருக்கும் வாக்களிக்க வேண்டாம். தொழில், வியாபாரத்தில் முயற்சிக்கேற்ப முன்னேற்றம் உண்டாகும். பெண்கள் வீட்டுச் செலவுக்காக கடன் வாங்க நேரிடலாம். உடல்நலத்திற்கு சிகிச்சை தேவைப்படலாம்.

**கன்னி:** குடும்பத்தினரின் ஆதரவால் முன்னேற்றம் உண்டாகும். தொழில், வியாபாரம் வளர்ச்சி பெற அதிக உழைப்பு அவசியம். பணவரவு சுமாராக இருக்கும். இஷ்ட தெய்வ வழிபாடு மன அமைதிக்கு வழிவகுக்கும்.

**துலாம்:** நண்பரிடம் கேட்ட உதவி கிடைக்கும். தொழில், வியாபாரத்தில் வருமானம் அதிகரிக்கும். பணியாளர்கள் பாராட்டு வெகுமதி பெறுவர். புத்திரரின் நற்செயல் மனதை மகிழ்விக்கும். பெண்கள் ஆன்மிகச் சுற்றுலா செல்வர்.

**விருச்சிகம்:** நல்லவர்களின் அறிமுகம் கிடைக்கும். தொழில், வியாபாரத்தில் எதிர்பார்த்த லாபம் வரும். பணியாளர்கள் பணி விடயமாக வெளியூர் செல்வர். வாகனத்தில் மிதவேகம் பின்பற்றவும்.

**தனுசு:** சமூகத்தில் அந்தஸ்து மிக்கவராக விளங்குவீர்கள். தொழில், வியாபாரத்தில் அதிக லாபம் கிடைக்கும். பிள்ளைகளின் வழியில் தாராள மனதுடன் செலவு செய்வீர்கள். மாணவர்களுக்கு படிப்பில் சிறந்த தர தேர்ச்சி கிடைக்கும்.

**மகரம்:** உங்களின் நற்செயலை சிலர் பரிகாசம் செய்யலாம். தொழில், வியாபாரத்தில் அதிக மூலதனம் தேவைப்படும். லாபம் படிப்படியாக உயரும். குடும்ப ஒற்றுமையைக் காப்பாற்ற முயல்வீர்கள்.

**கும்பம்:** உற்சாக மனதுடன் செயற்படுவீர்கள். தொழில், வியாபாரத்தில் இலக்கு எளிதில் முழுமையாகும். சேமிக்கும் விதத்தில் ஆதாயம் கிடைக்கும். பெண்களுக்கு பொன், பொருள் சேரும். மாணவர்கள் படிப்பில் முன்னேறுவர்.

**மீனம்:** நண்பர்களிடம் எதிர்பார்த்த உதவி கிடைக்கும். தொழில், வியாபாரத்தில் ஆதாயம் அதிகரிக்கும். பெண்களுக்கு வீட்டுத் தேவை தாராள செலவில் நிறைவேறும். அரசியல்வாதிகள் பதவி பெற அனுகூலம் உண்டாகும்.






## தட்டுகள்

பனை ஓலையால் உருவான தட்டுகள் அறிமுகமாகியுள்ளன. பொதுவாக பூக்கள் வைக்கவும், வடகம், வத்தல், ஊறுகாய் போன்ற வற்றுக்கு மரக்கறிகளை காய வைக்கவும் உதவும். இவை 150 ரூபாவில் இருந்து விற்பனை செய்யப்படுகின்றன.

## வழுக்கை தலையில் முடி வளர

முதலில் 5-6 உருளைக்கிழங்கை எடுத்து, தோலுரித்துக் கொள்ள வேண்டும். பின் அதை மிக்ஸியில் போட்டு அரைத்து, மஸ்லின் துணி பயன்படுத்தி வடிகட்டிக் கொள்ள வேண்டும். பின்பு தயாரித்து வைத்துள்ள உருளைக்கிழங்கு சாற்றை ஸ்கால்ப்பில் படும்படி நன்கு மசாஜ் செய்ய வேண்டும். 30 நிமிடம் கழித்து, தலை முடியை நீரில் நன்கு அலச வேண்டும். ஒருவேளை தலைமுடி எண்ணெய் பசையுடன் இருந்தால், சம்பு பயன்படுத்தி அலசுங்கள்.

இச்செயலை வாரத்திற்கு ஒருமுறை பின்பற்றி வந்தால், தலை முடி நன்கு வளர்வதுடன், முடி நன்கு பொலிவோடும், நல்ல நறுமணத்துடனும் இருக்கும்.

உருளைக்கிழங்கு போன்று வெங்காயத்தையும் பயன்படுத்தலாம்.



## குழந்தைகளை பள்ளிக்கு அனுப்பும் முன் கடைப்பிடிக்க வேண்டியவை

விடுமுறையில் வீட்டுக்குள்ளேயே இருந்த குழந்தைக்கு, பள்ளி என்பது சிறிது காலத்துக்கு மன அழுத்தத்தை ஏற்படுத்தும் விடயமாகவே தோன்றும். பெற்றோரை விட்டு பிரிந்து புது இடத்தில், சிலமணிநேரங்களுக்கு இருப்பது என்பதை, அவர்களால் ஏற்றுக்கொள்ளவே முடியாது. பள்ளியை பற்றிய உங்களின் வார்த்தைகள், மிகவும் நேர்மறையானதாக இருக்கட்டும். நீ விரும்புகிற விடயங்கள் எல்லாம் பள்ளியில் இருக்கு, சந்தோசமாக பள்ளிக்கு போ, அங்கே இருக்கிற எல்லோரும் உன்னுடைய நண்பர்களே... என்கிற ரீதியில் பேச வேண்டும்.

அம்மா சொல்லும் எந்த ஒரு விடயமும், உண்மையாகத்தான் இருக்கும் என்று குழந்தைகள் நினைப்பார்கள். அத்துடன் ஏன் பள்ளிக்கு செல்ல வேண்டும்? என்பது போன்ற கேள்விகளை, குழந்தைகள் கேட்க ஆரம்பிக்கும். அவர்களுக்கு புரியும் வகையில் தெளிவாகச் சொல்லுங்கள்.

பள்ளி செல்வதற்கு முதல் நாள் இரவு நேரத்தோடு தூங்க வைப்பதுடன், மறுநாள் காலை, சரியான நேரத்துக்கு எழுப்பி, குழந்தையை பள்ளிக்கு தயார் செய்வதை, தினசரி வேலையாகக் கொள்ளுங்கள். தெய்வ நம்பிக்கை கொண்டவர்கள் என்றால். குழந்தைக்கும், கடவுள் வழிபாடு போன்ற விடயங்களைச் சொல்லிக் கொடுங்கள். இது அவர்களது தன்னம்பிக்கையை வளர்க்க உதவும்.



குழந்தையை பள்ளிக்குள் அனுப்புவதற்கு முன், முத்தம் கொடுப்பது, அணைத்துக்கொள்வது, டாட்டா காட்டுவது என்று அவர்களை வழி அனுப்பி வையுங்கள். ஆனால் குட்பை சொன்ன பின், குழந்தையிடமே நின்று கொண்டு இருக்காமல் பள்ளியை விட்டு வந்து விடுங்கள் அப்போது தான், குழந்தை புது சூழ்நிலையை சகஜமாக எடுத்துக் கொள்ளும். அதனால், சில விடயங்களை அவர்களே கையாள தேவையான இடைவெளியை சிறிது கொடுக்கவும் வேண்டும்.

## வாழ்க்கையை வசப்படுத்த 9 வழிகள்

புத்தாண்டு மகிழ்ச்சி தரும் வருடம். வாழ்க்கை முழுவதும் தொடரவேண்டும் என்றால் நீங்கள் 9 விடயங்களில் உறுதியாக இருக்க வேண்டும்.

**1. உறுதிமொழி**

நிறையப் பேர் புத்தாண்டில் உறுதிமொழி எடுத்துக்கொள்கிறார்கள். ஆனால் 90 சதவீதம் பேர் அந்த உறுதியை பாதியிலேயே கைவிட்டுவிடுகிறார்கள். அதனால்தான் வெகுசிலரே திட்ட மிட்டபடி வெற்றி சிகரத்தை அடைகிறார்கள். உங்கள் உறுதிமொழி என்னவாக இருக்கும்? இந்த வருடம் உடல் எடையை குறைப்பேன், அரசு வேலைக்குச் செல்வேன், வீடு கட்டுவேன், வாகனம் வாங்குவேன், திருமணம் செய்வேன், தொழில் தொடங்குவேன், பிரச்சினைக்குரிய ஏதாவது ஒரு பழக்கத்தை கைவிடுவேன். என்று எதுவாகவும் இருக்கலாம். அதை குறிப்பிட்டு நீங்கள் உறுதிமொழி எடுத்துக்கொள்ளுங்கள். அந்த லட்சியத்தில் உறுதியாக இருங்கள்.

அந்த உறுதிமொழியில் இருந்து ஒருவர் பின்வாங்குகிறார் என்றால் அதற்கு, வழக்கமான சில பலவீனங்களே காரணம். சோம்பலும், முயற்சியின்மையுமே அதற்கு முக்கிய காரணம். உடற் பயிற்சி மேற்கொண்டு உடல் பருமனை குறைப்பேன் என்று உறுதியெடுப்பவர்கள் ஓரிரு வாரங்களுக்கு மட்டுமே அதே உற்சாகத்தில் பயிற்சி செய்கிறார்கள். பிறகு சின்னச் சின்ன தடைகளைக் காரணமாக காட்டி, இலக்கை கோட்டை விட்டுவிடுகிறார்கள். எனவே புத்தாண்டில் நினைத்ததை சாதிக்க உறுதிமொழியில் உறுதியாக இருங்கள்.

**2. வெளிப்படைத்தன்மை**

உடல் எடையை குறைக்க வேண்டும் என்பது உங்கள் உறுதிமொழி என்று வைத்துக்கொள்வோம். அது உங்கள் சொந்த விடயம் என்றாலும், அதை வெளிப்படையாக மற்றவர்களிடம் பகிர்ந்துகொள்வதில் தவறு இல்லை. பகிர்ந்து கொள்ளும்போது உங்கள் நலம் விரும்பிகளால் அதில் உங்களுக்கு நேரடியாகவோ, மறைமுகமாகவோ உதவ முடியும். என்ன எடையை குறைச்சிடுவேன் என்று சபதம் போட்டே? என்று எதிர்மறையாக குத்திக் காட்டிப் பேசுபவர் கூட உங்களின் லட்சியத்திற்கு உத்வேகம் தரலாம். அதனால் ஆரோக்கியமான உறுதிமொழிகளை இரகசியமாக வைக்க வேண்டிய தேவையில்லை.

**3. நல்ல இலக்குகள் மட்டும்**

உங்கள் புத்தாண்டு உறுதிமொழிகள் தெளிவானதாக இருக்கவேண்டும். தேவையற்றதாகவும், போலிப் பகட்டுக்காகவும் அது இருக்கக்கூடாது. அவசியமற்ற இலக்குகளை நிர்ணயித்துக் கொண்டு அவஸ்தை பட்டு விடவும் கூடாது. உயர்ந்த வேலைக்கு போவேன் என்று உறுதி எடுத்துக்கொண்டு, இருக்கிற வேலையையும் இழந்து விடக்கூடாது. இப்படி அதிரடியான செயல் எதிலாவது ஈடுபட்டால், வாழ்வின் அடுத்தகட்ட வளர்ச்சிகளான திருமணம், குழந்தைப் பேறு, வீடு வாங்குதல் போன்ற எல்லா திட்டங்களிலும் நெருக்கடி ஏற்பட்டுவிடும். பின்பு வருடத்தின் முடிவில் வாழ்க்கையை திரும்பிப் பார்த்து, தனக்கு எதுவுமே சரியாக அமையவில்லை என்று ஏங்க வேண்டியதாகிவிடும்.

(தொடரும்)

# இலவங்கப்பட்டை.! நறுமணத்தின் நாயகன்





கறுவா

இந்தியாவில் மரத் தில் விளையும் முக்கிய மான நறுமணப் பொருள்களில் ஒன்றாக இல வங்கப்பட்டை என்னும் கறுவாப்பட்டை விளங்கு கிறது. சின்னமோமம் வேறும் (Cinnamo mum verum) என்றழைக்கப்படும் மேற்படி பட்டை மரமானது வெப்ப மண்டலத்தின் பசுமை மாறா மரமாகும். இது 10 தொடக்கம் 15 மீற்றர் உயரம் வரை வளரக்கூடியது. லாரேசியா என்ற தாவர குடும்பத்தைச் சர்ந்தவை. சின்னமோமம் வேறும் மற்றும் சின்னமோமம் சைலானிகம் என்பதான இலவங்கப்பட்டையின் இரு வகைகளும் இலங்கை, இந்தியா, ஜாவா, சுமாத்திரா, போர்னியோ, மடகாஸ்கார், வியட்நாம், பிரேசில் மற்றும் மேற்கிந்தியத் தீவுகளில் பயிரிடப்படுவதாக சொல்லப்படுகிறது.

உலகம் முழுவதும் ஏறத்தாழ 250 வகை யான இலவங்க மரங்கள் காணப்படு கின்றன. இவற்றில் மிக உயர்ந்த தரம் கொண்டது. இலங்கையின் இலவங்கமே. சீனப் பட்டை கொஞ்சம் தரம் தாழ்ந்தது என கூறப்படுகிறது. இலவங்கப் பட்டை மரம் அதிக சுகவாசியானது. இவற்றுக்கு அதிக வெப்பமோ அதிக குளிரோ ஒவ்வாதவை. மிதமான வெப்பம், ஈரப்பதனான சீதோஷ்ண நிலை என்பவை பட்டை மரம் செழித்து வளர அவசியம் தேவையென தாவரவியலாளர்கள் கூறுகின்றனர்.

### இலவங்க மரத்தின் அமைப்பு

இலவங்கமரத்தின் பட்டையானது அறுவடை செய்யப்படாத நிலையில் அடிமரமானது 30 தொடக்கம் 60 சென்ரி மீற்றர் அகலத்தில் இருக்கும். மேல் பட்டையானது கனமாகவும் சாம்பல் படர்ந்த நிறத்திலும் இருக்கும். இவற்றின் கிளைகள் எப்போதும் தாழ்வாகவே தொங்கும். இலைகள் எதிரெதிரே காணப்படும். இலையின் துளிர் சிவந்த வண்ணத்தில் இருக்கும். இலவங்கத்தின் மலர்களும் பச்சையாகவே இருக்கும். ஆனால் அவை அற்புதான மணத்தைக் கொண்டிருக்கும்.

### இலவங்கப் பட்டையின் உருவகம்

பழம் கறுப்பாகவும் 1.5 தொடக்கம் 2 சென்ரி மீற்றர் நீளத்தில் நீள்வட்டமாக அமைந்திருக்கும். இலவங்கப் பட்டை இலவங்க மரத்தின் உள்பகுதி பட்டையிலிருந்தே பெறப்படுகிறது. நன்கு முதிர்ந்த மரத்தின் பட்டையை உரித்து வெயிலில் உலர வைப்பார்கள். பட்டை சூரிய வெப்பத்தில் காயும்போது சுருள் சுருளாக மெல்லிய குழல்போல சுருண்டு தன் உருவை மாற்றிக்கொள்ளும். இவற்றை 5 தொடக்கம் 10 சென்ரி மீற்றர் நீளமுள்ள சிறிய துண்டுகளாக வெட்டுகின்றனர். இவை இலவங்கப்பட்டை குச்சி என்று சொல்லப்படுகிறது; சந்தையில் விற்பனைக்கு வருகிறது.

### இலவங்கத்தின் பயன்பாடு

பட்டையானது மென்பானங்களிலும், (24ஆம் பக்கம் பார்க்க)

## கண்ணீர் அஞ்சலி

தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகார சபையில்
முகாமைத்துவ உதவியாளராக கடமையாற்றும்
செல்வி. சுமணா அவர்களின் தந்தையார்

**இராசரத்தினம் இரவீந்திரரட்ணம்**

அவர்கள் மரணமானதையிட்டு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்வதுடன் அவரின் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கின்றோம்.

மாவட்ட முகாமையாளரும், ஊழியர்களும்
தேசிய வீடமைப்பு அபிவிருத்தி
அதிகார சபை, யாழ்ப்பாணம்.

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி

தோற்றம்
20.03.1965



மறைவு
19.12.2015

அமரர் **செல்வராசா தர்மபாஸ்கரன்** (சின்னப்பு)
திதி:நவமி

வஞ்சனை இல்லா உள்ளம்
யாவர்க்கும் உதவிடும் குணம்
வேசமில்லா நேசந்தந்த சின்னப்புவே
பாசக்கயிறு வீசிப் பறித்துச் சென்றதேனோ?
ஊருக்கொரு பெருவிருட்சம் உம் நிழலில் நாம் ஆற
கடமை முடிந்ததுவோ? இராப்பொழுதில்
எம்மைக் கலங்க வைத்த மாயமென்ன?
விழி கசிந்து இங்கே வேதனையில் தவிக்கிறோமே
எங்கள் சின்னப்புவே எமைவிட்டு ஏன் பிரிந்தீர்?
காலன் அழைத்தானோ? யாவும்
கனவாகிப் போனதுவே......

செட்டி சீமா வீதி,
பத்தமேனி,
அச்சுவேலி.

(J 7411)
(22,17,18)

என்றும் நினைவில்
குடும்பத்தினர்

## நெஞ்சம் நெகிழும் பத்தாண்டு (10) நினைவுகள்



விஸ்வகுல திலகர்
கலாபூஷணம் **வல்லிபுரம்**
**கந்தையா** (மணியம் மாஸ்ரர்)

தோற்றம்
14.01.1924

மறைவு
27.12.2006

ஈரவிழிகள் இன்னமும் காயவில்லை
இதயத்தின் வேதனைகள் குறையவில்லை
நினைவகலா நினைவுகளுடன்
இறைவனடி இணைந்தீர்கள்
பத்தாண்டுகள் நிறைந்ததப்பா
மறக்க முடியவில்லை
அப்பா உங்களைக் காணமுடியாமல்

தினமும் தவிக்கின்றோம்
இருபத்தைந்து ஆண்டுகள்
பல்தொழில்நுட்ப நிறுவனத்தில்
விரிவுரையாளராகக் கடமையாற்றினீர்களே
அந்த நினைவுகளை எங்களால் மறக்கமுடியவில்லை
காலத்தால் அழியாத கற்பக விருட்ஷமே
உங்கள்ஆத்மா சாந்தியடைய
இறைவனை வேண்டி நிற்கின்றோம்.

மனைவி, பிள்ளைகள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்.
40/1. கலைமகள் வீதி. அரியாலை.

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



அமரர்
**சித்திரம் செல்லையா**

தோற்றம்
17.12.1938

மறைவு
19.12.2015

எம்மையே நினைத்து எமக்காகவே வாழ்ந்த
எங்கள் அன்புத் தெய்வத் தாய்
உயரிய சான்றோர் ஞானம் போதித்து
தன்னலமற்ற தாய்மைக்கு புகழ் சேர்த்து
எம்மை விட்டகன்று ஓராண்டாகியும்
பதிபதம் இணைந்து பத்தினியாய் வாழ்வீரம்மா

கந்தரோடை,
மடத்தடி, சுன்னாகம்.

குடும்பத்தினர்.

(J/7351)
(14,17,18)

## 23ஆம் ஆண்டு நினைவலைகள்

வருடங்கள் பலசென்றாலும்
உங்கள் நினைவுகளுடன் என்றும் வணிகர்கள்

மண்ணில்
22
08
1937



விண்ணில்
06
01
1994

அமரர்
**சங்கரப்பிள்ளை நமசிவாயம்**
(முன்னாள் தலைவர் -சாவகச்சேரி கைத்தொழில் வணிகர் மன்றம் , முன்னாள் உரிமையாளர் - அம்பிகா பார்மசி -சாவகச்சேரி)

மன்றச் சேவைக்கென வந்து அமரத்துவமடைந்த
அமரரின் நினைவுநாளும் நினைவுக் கூட்டமும்
இன்று (06.01.2017) வெள்ளிக்கிழமை மு.ப 10.00 மணிக்கு
மன்ற அலுவலகத்தில் உள்ள அமரரின் நினைவு மண்டபத்தில்
நடை பெறவுள்ளதால் இந்த நிகழ்வில் அங்கத்தவர்கள் அனைவரும் கலந்து சிறப்பிக்குமாறு அன்பாக வேண்டிக் கொள்கின்றோம்.

சாவகச்சேரி கைத்தொழில் வணிகர் மன்றம்

## 23ஆம் ஆண்டு நினைவு அஞ்சலி

மண்ணில்
22
08
1937



விண்ணில்
06
01
1994

அமரர்
**சங்கரப்பிள்ளை நமசிவாயம்**
( உரிமையாளர் -அம்பிகா டிஸ்பென்சரி )

எங்கள் குடும்பத்தலைவரே
உங்கள் ஆத்மா சாந்தியடைய
எங்கள் குலதெய்வமான நுணுவில்
சிதம்பர விநாயகரைப் பிரார்த்திக்கின்றோம்.

தெய்வங்கேணி வீதி,
சரசாலை வடக்கு,சாவகச்சேரி.

குடும்பத்தினர்.

# துருக்கியில் குண்டு வெடிப்பு; பொலிஸார் உட்பட இருவர் சாவு

துருக்கியின் மேற்கு நகரான இஸ்மீரில் நீதிமன்ற கட்டடத்துக்கு அருகாமையில் நடைபெற்ற குண்டு வெடிப்பில் பொலிஸார் ஒருவரும் நீதிமன்ற அதிகாரியும் உயிரிழந்தனர் என்று துருக்கி பாதுகாப்பு அதிகாரிகள் தெரிவித்தனர்.

இந்தத் தாக்குதலில் மேலும் பலர் கொல்லப்பட்டுள்ளனர் என்று தெரிவிக்கப்பட்டது. தாக்குதலில் ஈடுபட்டதாக சந்தேகிக்கப்பட்ட இரண்டு தீவிரவாதிகளை கொன்றுவிட்டதாகவும் மேலும் ஒருவரைத் தேடி வருவதாகவும் பாதுகாப்பு அதிகாரிகள் கூறியுள்ளனர்.

புத்தாண்டுக் கொண்டாட்டத்தின் போது இஸ்தான்புல் இரவு விடுதியில் 39 பேரைக் காவுகொண்ட தாக்குதலையடுத்து புதன்கிழமையன்று சந்தேகத்துக்குள்ளான 20 இஸ்லாமியவாத தீவிரவாதிகளை இஸ்மீர் பொலிஸார் கைது செய்தனர். இதனை அடுத்தே இந்தத் தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது. (வ)

# இந்தியாவை சீண்டும் நவாஸ்

இஸ்லாமாபாத், ஜன. 6

இந்தியாவைச் சீண்டும் வகையில், காஷ்மீரில் சுட்டுக்கொல்லப்பட்ட பயங்கரவாதி புர்கான் வானியை பாகிஸ்தான் பிரதமர் நவாஸ் ஷெரீப் பாராட்டிப் பேசியுள்ளார்.

காஷ்மீர் மக்கள் படும் துயரங்கள் முடிவுக்கு வரவேண்டும். காஷ்மீர் தொடர்பான கொள்கையை இத்துடன் நிறுத்திக் கொள்ள வேண்டும் என்று இந்தியாவிடம் உலக நாடுகள் தெரிவிக்க வேண்டும். புர்கான் வானி, துடிப்பான மற்றும் அனைவரையும் கவர்ந்திழுக்கும் தலைவராக உள்ளார்.

அவனது சாவுதான் சுதந்திரத்தை விரும்பும் மக்களின் போராட்டத்தின் ஆரம்ப புள்ளியாக இருந்தது. மக்களின் சுய அதிகாரம் குறித்து ஐ.நா. மட்டுமல்ல இந்தியாவும் உறுதிமொழி வழங்கியுள்ளது. காஷ்மீர் மக்கள் படும் துயரம் குறித்து உலக நாடுகளிடம் எடுத்துக் கூறப்பட்டுள்ளது. அந்த மக்கள் நடத்தும் போராட்டத்துக்கு தார்மீக ஆதரவை பாகிஸ்தான் தொடர்ந்து வழங்கும் என்று காஷ்மீர் மாநாட்டில் உரையாற்றினார் பிரதமர் நவாஸ் ஷெரீப்.



SUPER BALL
சுப்பர் போல
உத்தியோகபூர்வ முடிவுகள்
சீட்டிழுப்பு வாரம் 598
சீட்டிழுப்பு திகதி 05.01.2017 வியாழக்கிழமை
வெற்றி இலக்கங்கள்
07 11 46 59 G
அடுத்த சுப்பர் ஜக்பொட்
ரூ. 46,641 475/=
Web: www.dlb.lk

உத்தியோகபூர்வ முடிவுகள்
Development Fortune
சீட்டிழுப்பு வாரம் 05
சீட்டிழுப்பு திகதி 05.01.2017 வியாழக்கிழமை
06 29 31 56 06 ஜூலை
அடுத்த மிகப்பெரிய ஜக்பொட் 5, 995, 770/=
அடுத்த சுப்பர் ஜக்பொட் 2, 021,038/=
அடுத்த ஜக்பொட் 1, 139, 165/=
2017.01.07 திகதி சனிக்கிழமை இலக்சிலைப்புறீத டிக்கட்டுகள் சீட்டிழுப்புக்கு செல்லுபடியாகும்.
வெற்றி பெறும் டிக்கட்டுகள் 6 மாதங்களுக்கு செல்லுபடியாகும்.
அபிவிருத்தி லொத்தர் சபை
www.dlb.lk

# வேலை இல்லாதோருக்கு ரூ. 100, 000 உதவித் தொகை

ஹெல்சிங்கி, ஜன. 6

பின்லாந்து நாட்டில், வேலை இல்லாதவர்களுக்கு, மாதந்தோறும், ஒரு லட்சம் ரூபாய் வழங்கப்படும் என்று அந்த நாட்டு அரசு அறிவித்துள்ளது.

ஐரோப்பிய நாடுகளில்ஒன்றான பின்லாந்தில், தனியார் துறையில் பணிபுரிவோர், சராசரியாக மாதந்தோறும், 5 லட்சம் ரூபாய் சம்பாதிக்கின்றனர். இந்த நிலையில், நாட்




டில் வறுமையை ஒழிக்கும் வகையில், வேலை இல்லாத, 2 ஆயிரம் பேருக்கு, மாதத்துக்கு ஒரு லட்சம் ரூபா வழங்கப்படுமென அந்நாட்டு அரசுஅறிவித்துள்ளது.

'சோதனை முறையில், இரு ஆண்டுகளுக்கு, இந்த உதவித் தொகை வழங்கப்படும். முதற் கட்டமாக, 2,000 பேர், இதற்காக தேர்வு செய்யப்பட்டு உள்ளனர். உதவித்தொகை பெறுவோர், செலவுக்கான ஆதாரங்களை அரசுக்குத் தெரிவிக்க வேண்டியதில்லை' என்று பின்லாந்து அரசு அறிவித்துள்ளது.

இதேபோல், சுவிட்சர்லாந்து நாட்டு அரசு, உதவித்தொகை வழங்குவதாக அறிவித்த போது, 'வேலை கொடுத்தால் போதும் உதவித்தொகை தேவையில்லை' என அந்த நாட்டு மக்கள் அதை ஏற்க மறுத்துவிட்டனர்.

(வ)

# ஏழு வகையான புற்றுநோய்கள் சாராயத்தால் ஏற்படும் அபாயம்

## ஆய்வில் கண்டறிவு

நியூசிலாந்து பல்கலைக்கழக விஞ்ஞானிகள் மேற்கொண்ட புதிய ஆய்வில் அல்ககோல் (மதுசாராயத்தின் செறிவு) காரணமாக மனித உடலில் 7 விதமான புற்றுநோய்கள் ஏற்படக்கூடிய அபாயம் உள்ளதாகக் கண்டறியப்பட்டுள்ளது.

உலக சுகாதார நிறுவனம், உலக புற்றுநோய் ஆராய்ச்சி நிதியம் உட்பட பல அமைப்புக்களின் சார்பில் கடந்த 10 ஆண்டுகளாக இந்த ஆய்வு மேற்கொள்ளப்பட்டது.

புள்ளிவிவரங்களைத் தாண்டிய உண்மைப் பிணைப்பு புற்றுநோய்க்கும் மதுவுக்கும் இருப்பதையே இந்த ஆய்வு உறுதிப்படுத்தியுள்ளது. தொண்டை, குரல்வளை, உணவுக்குழாய், கல்லீரல், பெருங்குடல், மலக்குடல், மார்பு ஆகிய 7 பகுதிகளில் புற்றுநோய் ஏற்படுவதற்கு மதுசாராயம் முக்கிய காரணமாக இருக்கிறது.

மது அருந்துபவர்களுக்கும் அருந்தாதவர்களுக்கும் இடையில் புற்றுநோய் ஏற்படுவதற்கான சாத்தியக் கூறுகளை ஆராய்ந்த ஆய்வாளர்கள், புதிய வகையான புற்றுநோய்களில் 5 வீதமானவை அல்ககோல் காரணமாக ஏற்படுவதாகக் கண்டறிந்துள்ளனர்.


மேலும், ஆண்டுக்கு 4.5 வீதமான இறப்புக்கள் ஏற்படுவதாகவும் கணக்கிடப்பட்டுள்ளது. தவிர, அல்ககோல் காரணமாக புற்றுநோய் ஏற்படும் அபாயம் இருப்பதை பெரும்பாலானவர்கள் அறிந்திருக்கவில்லை என ஆய்வாளர்கள் தெரிவித்துள்ளனர். புதிய வகை மார்பகப் புற்றுநோயுடன் அல்ககோல் பாவனை தொடர்புபட்டிருப்பதும் கண்டறியப்பட்டது.

வட அமெரிக்கா, ஆஸ்திரேலியா, ஐரோப்பிய நாடுகளில் உள்ள பணக்காரர்களுக்கு இந்த அபாயம் அதிகம் என கூறப்பட்டு வந்த நிலையில், தற்போது வளர்ந்து வரும் நாடுகளில் மெதுவான அதிகரிப்பு தென்படுவதாகவும் ஆய்வாளர்கள் சுட்டிக்காட்டியுள்ளனர்.

2012ஆம் ஆண்டில் நடத்தப்பட்டிருந்த ஆய்வொன்றில், குறிப்பாக பணக்கார நாடுகளில் 700,000க்கும் அதிகமான புதிய வகை புற்றுநோயாளர்கள் இனங் காணப்பட்டதுடன், அந்த ஆண்டில் 366,000 பேர் புற்றுநோயால் உயிரிழந்தமை கண்டறியப்பட்டது.

(வ)

# மரண அறிவித்தல்



## பொன்னம்பலம் ஐங்கரன்

காங்கேசன்துறையைப் பிறப்பிடமாகவும் உரும்பிராயை வசிப்பிடமாகவும் கொண்ட பொன்னம்பலம் ஐங்கரன் 03.01.2017 செவ்வாய்க்கிழமை அகால மரணமானார்.

அன்னார் காலஞ்சென்ற வைத்தியகலாநிதி பொன்னம்பலம் மற்றும் மாலினி தம்பதிகளின் கனிஷ்ட புத்திரனும் குகபாலன்(கனடா),அகல்யா(ஆசிரியை, யா/ஊரெழு கணேச வித்தியாசாலை) ,சுபத்திரா (D . O கோப்பாய் தேசிய கல்வியியற் கல்லூரி), மிதிலா (ஆஸ்திரேலியா) ஆகியோரின் அன்புச் சகோதரனும் அஜந்தா (கனடா), கணேசன் (SLPS - யா/கொட்டடி நமசிவாய வித்தியாலயம்),பாஸ்கரன் (ஆசிரியர், யா/உரும்பிராய் சைவத்தமிழ் வித்தியாலயம்),தமிழ்ச்செல்வன்(ஆஸ்திரேலியா) ஆகியோரின் அன்பு மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் உரும்பிராயிலுள்ள பலாலி றோட் இல்லத்தில் 08.01.2017 ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 11 மணியளவில் நடைபெற்று பூதவுடல் உரும்பிராய் வேம்பன் இந்து மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

**தொடர்பு:-**
**பஞ்சாட்சரம் கணேசன்(அதிபர்)**
**உரும்பிராய்.**
**077 691 1773**


**தகவல்:**
**குடும்பத்தினர்**
**பலாலி றோட், உரும்பிராய் தெற்கு,**
**உரும்பிராய்.**

# மரண அறிவித்தல்

## கதிரவேலு அன்னலிங்கம்

மலர்வு
25.09.1952

உதிர்வு
05.01.2017



கொக்குவில் மேற்கு, வராலி அம்மன் கோயிலடியைப் பிறப்பிடமாகவும், வட்டக்குளம், கட்டப்பிராயை, வசிப்பிடமாகவும் கொண்ட கதிரவேலு அன்னலிங்கம் 05.01.2017 வியாழக் கிழமை காலமானார்.

அன்னார் காலஞ் சென்றவர்களான கதிரவேலு - ஆச்சிமுத்து தம்பதியரின் மகனும் காலஞ்சென்றவர்களான ஆறுமுகம் -சின்னாச்சி தம்பதியரின் அன்பு மருமகனும் தங்கரத்தின்த்தின் பாசமிகு கணவரும் அ.பிரதீபன் (சுவிஸ்), அ.றஜிதீபன், அ.துஸ்யந்தன் ஆகியோரின் தந்தையும் பி.கவிதா, ற.பிரியா ஆகியோரின் மாமனாரும் பி.திசங்கா, ற.சாகித்தியா, ற.ஆதித், பி.சேயோன், பி.செறோன் ஆகியோரின் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (06.01.2017) வெள்ளிக் கிழமை பி.ப. 2 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக செம்மணி இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**வட்டக்குளம்,**
**கட்டப்பிராய்.**

**தகவல்:**
**குடும்பத்தினர்.**

# வன விலங்குகளை வளர்க்க ஐக்கிய அரபு எமிரேட்ஸில் தடா

டுபாய், ஜன. 6
ஐக்கிய அரபு எமிரேட்ஸில், புலி, சிங்கம் போன்ற வன விலங்குகளை செல்லப் பிராணிகளாக வைத்திருப்பது சட்டவிரோதம் என அறிவிக்கப்பட்டுள்ளது. எண்ணெய் வளம் மிக்க வளைகுடா மாநிலத்தில் சிலர் சிறுத்தை போன்ற விலங்குகள் வளர்ப்பதை தங்கள் தகுதிநிலையின் அடையாளமாக கருதுகின்றனர். பல ஆண்டுகளாக சிறுத்தைகள் அங்கு வீதிகளில் அலைவதைப் போன்ற புகைப்படங்கள் சமூக ஊடகங்களில் வெளியாகின. அந்தப் புகைப்படங்களில் கார்களின் பின் பகுதியில் சிங்கங்கள் இருப்பது போன்ற புகைப்படங்களும் அடங்கும். மேலும் டுபாய் கடற்கரையில் ஐந்து புலிகள் இருப்பது போன்ற காணொலி ஒன்றும் வெளியிடப்பட்டிருந்தது. அதில் உள்ள ஆபத்துத்துக்களை அதிகாரிகள் அறிந்திருப்பதாகவும் எனவே வன விலங்குகளை பொதுவெளிக்கு அழைத்து வருபவர்களுக்கு சிறைத் தண்டனையும் தண்டமும் விதிக்கப்படும் என தெரிவிக்கப்பட்டுள்ளது. (வ)


## கடைகள் வாடகைக்கு

யாழ். ஆஸ்பத்திரி வீதியில் கடைகள் வாடகைக்கு உண்டு. நிறுவனாங்களுக்கும் ஏற்றது. தொடர்புக்கு :- 077 162 0626

## சேவைநலன் பாராட்டு



**திரு. ச. பாஸ்கரன்**

பிரதிக்கல்விப் பணிப்பாளர் (நிர்வாகப்பிரிவு)
தீவகவலயம்.

எமது கல்வி வலயத்தில் பிரதிக்கல்விப் பணிப்பாளராக கடமை உணர்வுடனும் பக்தி சிரத்தையுடனும் தமது பணியை செவ்வனே செய்து மொத்த சேவைக்காலம் **31 வருடங்களை** நிறைவு செய்து அகவை அறுபதில் 06.01.2017 இன்று ஓய்வு பெறுகின்ற திரு. ச. பாஸ்கரன் அவர்களை ஓய்வுக்காலத்தில் தனது குடும்பத்துடன் குதூகலமாகவும் சுகபலத்துடன் வாழ இறைவனைப் பிரார்த்தித்து மனதார வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

நலன்புரி கழகம்,
வலயக் கல்வி அலுவலகம்,
தீவகம், வேலணை.

## ஜயோதா

உத்தியோகபூர்வ முடிவுகள்
சீட்டிழுப்பு இலக்கம் 1329
சீட்டிழுப்பு திகதி 2017.01.05

வெற்றி இலக்கங்கள்
13 17 23 33 X

அடுத்த திங்கட்கிழமைக்கான ஜக்பொட்
ரூ. 15,797,615/-

## SPOKEN ENGLISH
WITH DIPLOMA CERTIFICATE

இம்முறை O/L எழுதியோர், இளைஞர், யுவதிகள், தொழில் தேடுவோர், வெளிநாடு செல்வோர் உயர்கல்வி மாணவர்கள் இணைய முடியும்.

ஆங்கிலத்தில் ஒரெழுத்துத்தெரியாதவர்கள்கூட மூன்றே மாதங்களில் சரளமாக ஆங்கிலத்தில் பேசமுடியும்

சனி, ஞாயிறு பிரிவுகள் ஆரம்பம்

| | | | |
|---|---|---|---|
| 1. காலை | 08.00-10.00 | 3. பி.பகல் | 01.00-03.00 |
| 2. காலை | 10.00-12.00 | 4. மாலை | 03.00-05.00 |

பயிற்சியில் இணைவோர் 07.01.2017 வரை பதிவுகளை மேற்கொள்ளமுடியும்
8 பாடப்புத்தகங்கள் மற்றும் video DVD என்பன இலவசம்.

SAAMSON
Experts in English Training
279, ஆஸ்பத்திரி பின்புறம், யாழ்நகர்.
021 320 3313
077 1570 486


## கண்ணீர் அஞ்சலி

நல்லூர்பிரதேச செயலகத்தில் அபிவிருத்தி
உத்தியோகத்தராகக் கடமையாற்றும்
திருமதி வாசுகி பிரியாந்தன்
அவர்களின் அன்புத்தந்தை

**சபாரத்தினம் மனோகரன்**

அவர்களின் மறைவினால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபத்தை தெரிவித்து கொள்வதோடு அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கிறோம்.

நல்லூர் பிரதேச செயலக உத்தியோகத்தர் நலன்புரிசங்கம்


## பொருளியற் கல்லூரி
இணுவில்

**தரம் - 05**
புலமைப்பரிசில் வகுப்பு
ஆசிரியர் - திரு. ரவீந்திரராஜா
சனி, ஞாயிறு 11.00 Am
வியாழன் 4.00 Pm
புதிய வகுப்பு ஆரம்பம் - 07.01.2017
சனிக்கிழமை - 11.00 Am
அனுமதிகளை பெற்றுக்கொள்ளவும்.
Note : பாடக்குறிப்புகள், விசேட பயிற்சிகள், தொடர்பரீட்சைகள் நடைபெறும்.

எமது மற்ற நிறுவனமான
BARATHY சித்தன்கேணியில்
தரம் - 05 சனி, ஞாயிறு 8.30 Am
புலமைப்பரிசில் வகுப்புக்கள்
புதன் 4.00 Pm நடைபெறுகின்றன.
இங்கு புதிய அனுமதிகளை
பெற்றுக்கொள்ளலாம்.

## சிறுநீரகம் தேவை

11 வயதுடைய சிறுநீரக நோயாளி ஒருவருக்கு B/O குருதி வகையை உடைய சிறுநீரகம் உடன் தேவை.
தொடர்புக்கு :- 077 536 7911, 076 354 3971

## பொருளியற் கல்லூரி

நாவலர் றோட் = கே.கே.எஸ் றோட்
யாழ்ப்பாணம் இணுவில்
(இரு இடத்திலும்)

**A/L 2019**

தொழில் நுட்பம், கலை, வர்த்தகம்
மீண்டும் புதிய பிரிவு

நாளை ஆரம்பம் -
07.01.2017 சனிக்கிழமை
நீங்கள் விரும்பிய இடங்களில்
உங்கள் அனுமதிகளை பெற்றுக்கொள்ள முடியும்
Note: சித்தன்கேணி BARATHHY
கல்வி நிறுவனத்திலும்

## ஆங்கிலத்திற்கு No.1 பயிற்சி மையம்



முழுமையான ஆங்கிலப் புலமைக்கு ஓர் டிப்ளோமா கற்கைநெறி

**Spoken English**
Veta Fluency Diploma

புதிய பிரிவுகள் 9/1/2017 முதல் ஆரம்பம்.
Experts in English Training

| யாழ்ப்பாணம் | நெல்லியடி | சாவகச்சேரி | சுன்னாகம் | கிளிநொச்சி |
|---|---|---|---|---|
| Sat, Sun 3.30 p.m.<br>Mon, Wed, Fri 9.30 a.m.<br>Mon, Wed, Fri 3.30 p.m. | Tue, Thu 3.30 p.m.<br>Sat, Sun 3.30 p.m. | Tue, Thu 8.00 a.m.<br>Sat, Sun 9.00 a.m. | Mon, Wed, Fri 11.30 a.m. | Sat, Sun 8.00 a.m. |

O/L பரீட்சை எழுதிய மாணவர்களுக்கு விசேட பிரிவுகள்

சர்வதேச ஆங்கிலப் பரீட்சைகள்

DMI COMPUTER EDUCATION

**IELTS**
IELTS Life Skills (A1,B1)
திருமணம் செய்து UK செல்பவர்களுக்கு


DMI, British Council இன் அங்கீகரிக்கப்பட்ட IELTS பரீட்சை பதிவு மையமாகும்

# DMI COMPUTER EDUCATION

| | | | | |
|---|---|---|---|---|
| No.113, கஸ்தூரியார் வீதி, (சயன்ஸ் ஹோல் அருகாமை) யாழ்ப்பாணம் Tel.: 021-222 4403 | M.M.V. வீதி, நெல்லியடி Tel.: 021-226 2470 | No. 174 கண்டி வீதி, HNB வங்கி அருகில் சாவகச்சேரி Tel.: 021-227 0775 | No. 130 K. K. S வீதி NSB வங்கி அருகில் சுன்னாகம் Tel.: 021-224 1970 | No.19, A9 வீதி, ஆனந்தபுரம் (மத்திய கல்லூரி முன்பாக) கிளிநொச்சி Tel.: 021-228 5655 |


## பணி சிறக்க வாழ்த்துகின்றோம்





Best Wishes

திருமதி ச.மகிலேஸ்வரன்    திரு. க. சந்திரபவான்

Congratulations


எமது பாடசாலையில் ஆசிரியர்களாக சேவையாற்றி இலங்கை அதிபர் சேவை தரம் 3 பரீட்சையில் சித்திபெற்று 2017.01.02 ஆம் நாள் கிளி/உமையாள்புரம் அ.த.க பாடசாலையில் கடமையை பொறுப்பேற்கும்.
**திருமதி ச.மகிலேஸ்வரன்**
யா/புற்றளை மகாவித்தியாலயத்தில் கடமையேற்கும்
**திரு. க. சந்திரபவான்**
ஆகியோர் அவர் தம் சேவையில் சிறப்புக்காக பாராட்டி வாழ்த்தி நிற்கின்றோம்.

பணி சிறக்க பாடுபட்டு பயனால் உயரடைவீர்.

Congratulations

வாழ்த்துவோர் :
பாடசாலைச் சமூகம்
**கிளி/ பூநகரி நல்லூர் ம.வி**

# 31ஆம் நாள் நினைவஞ்சலியும் அந்தியேட்டி வீட்டுக்கிருத்திய அழைப்பும்



**அமரர் தம்பையா இராஜேந்திரம்**
(கிளியண்ணை)

மண்ணில்
17.02.1941

விண்ணில்
07.12.2016

அன்பினால் எம்மை யாண்டு
ஆதரவாய் உதவி நல்கி
இன்பமாய் நாம் வாழ
ஈகங்கள் புரிந்த ஐயா!
உம்பாதம் போற்று கின்றோம்
உம் நினைவில் வாழுகின்றோம்

அமரரின் அந்தியேட்டிக் கிரியைகள் இன்று (06.01.2017) வெள்ளிக்கிழமை காலை கீரிமலை புனித தீர்த்தக்கரையில் நடைபெறும். 08.01.2017 ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 11 மணியளவில் அவரின் இல்லத்தில் நடைபெறும் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும். அதனைத் தொடர்ந்து இடம்பெறும் மதியபோசன நிகழ்விலும் கலந்துகொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

குடும்பத்தினர்.
சிவபூதராயர் வீதி, சுன்னாகம் தெற்கு.

# இலவங்கப்பட்டை.!

(23ஆம் பக்கத் தொடர்ச்சி)

மருந்துப் பொருள்களிலும், அழகு சாதனப் பொருள்களிலும் குறிப்பாக கழிப்பறைப் பொருள்களிலும் வாசனைக்காக கலக்கின்றனர். உணவுப் பொருள்களில் பிரதானமாக மசாலாவின் நாயகனான இலவங்கப் பட்டை சுவை தருவியாக விளங்குகிறது. குஜராத் மற்றும் அதனோடு சேர்ந்த வட மாநிலங்களில் காதி எனப்படும் தயிர் பானத்திலும் தேநீரிலும் பட்டையைக் கலப்பதாக சொல்கின்றனர்.

இவை உணவுப் பொருள்களைப் பதப்படுத்தும் குணத்தையும் கொண்டுள்ளன. பட்டையிலுள்ள பினால் என்னும் வேதிப் பொருள் உணவின் மீது பக்றிறியாவளர்ந்து அவை கெட்டுப் போவதைத் தடுக்கிறது.

இதன் காரணமாக மாமிசத்தைப் பதப்படுத்துவதில் முக்கியத்துவம் பெறுகின்றன.

மேலும் பட்டையானது உணவுக்குரித்தான தனித்துவ மணத்தைக் கொடுக்கின்றது. இனிப்பின் சுவையை அதிகரித்துக் காண்பிக்க இலவங்கப்பட்டையானது இனிப்பில் கலக்கப்படுகிறது. மதுவிலும், மருந்திலும், சவர்க்காரம் மற்றும் பற்களின் சுத்தம் பேணத் தயாரிக்கப்படும் பற்பசை தவிர மருந்து, தைலம் போன்ற வற்றிலும் இலவங்கம் கலக்கப்படுகிறது. மிட்டாய், சுவிங்கம் மற்றும் உடலுக்குத் தெளிக்கப்படும் வாசனைத் திரவியங்களிலும் இது சேர்க்கப்படுகிறது.

அது மட்டுமன்றி கேக், ரொட்டி, பிஸ்கட், சொக்லேட் போன்ற பொருள்களிலும் பட்டையானது மணம் மற்றும் சுவைக்காக கலக்கப்படுகிறது. அவை தாண்டிய தாய் இனிதான சுவை உணர்வோடு குவிக்கப்படுகிறது. நறுமணத்தின் நாயகனாக முன்னிலை பெறுகிறது.




## மரண அறிவித்தல்



திருமதி
**தவமணி மாணிக்கவாசகர்**

மாவிட்டபுரத்தைப் பிறப்பிடமாகவும் கொக்குவில் மேற்கு சொர்ணவடலியை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி தவமணி மாணிக்கவாசகர் 04.01.2017 புதன்கிழமை காலமானார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

கொக்குவில் மேற்கு,
சொர்ணவடலி, கொக்குவில்.

தகவல் :
குடும்பத்தினர்.

071 279 7003/ 077 987 7293/
075 835 2195



## Shan School Service

(சிறுவர் பாதுகாப்பு அதிகார சபையில் பதியப்பட்டது)

சேவை 01: யாழ். நகர பாடசாலைகளுக்கிடையிலான சேவை. (நவாலி, மானிப்பாய், ஆனைக்கோட்டை ஊடாக

சேவை 02: தரம் 01, 02 மாணவர்களுக்கான யாழ் நகரப் பாடசாலைகளுக்கிடையிலான சேவை.

சேவை 03: யாழ். வேம்படி மகளிர் கல்லூரிக்கான சேவை.

எமது சேவையானது 12 வருட அனுபவமிக்க சேவை. இருக்கைகளுக்கு அளவான சேவை. முறையான சட்டதிட்டங்களுக்கு உட்பட்ட சேவை.

மேலதிக விவரங்களுக்கு: வலம்புரி T.C (சூட்டிகடை)
நவாலி : 077 739 3078



## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



பிறப்பு
05 . 05 . 1949

இறப்பு
06 . 01 . 2016

திருமதி **ஞானசீலன் கொன்சன்ரீனம்மா**
(மம்மி)

ஆறுபிள்ளைகளை ஆளுமையுடன் ஆளாக்கி...
அனைத்துக் கடமைகளையும் ஆத்ம திருப்தியுடன் முடித்து...
ஆறாத்துயரத்தில் எமை ஆழ்த்தி...
ஆண்டவன் மடி சென்றாயோ... அம்மா (மம்மி)
என்றும் நினைவுகளுடன்...

வைத்தியகலாநிதி ஜீ.குணசீலன்
(வடக்கு மாகாண சபை உறுப்பினர்) மற்றும் பிள்ளைகள்



## 10ஆம் ஆண்டு நினைவஞ்சலி



திருமதி **இலட்சுமிப்பிள்ளை துரைச்சாமி**
(ஓய்வுபெற்ற ஆசிரியர்)

மறைந்து ஆண்டுகள் பத்து ஆயினும்
இன்றும் எம் மனதில் அழியாதுள்ளீர்.
குடும்ப தலைவியாக இருந்து
எம்மையெல்லாம் காத்த தாயே
தரணிதனில் இறைபணியும்
கல்விப்பணியும் நிறைவுடன்
செய்ததால் நாமும் நிறைவுடன்
வாழ வழிவகுத்தீர்
என்றும் எம் நினைவிலிருந்து
எம்மை வழி நடத்திடுவீர்.

தோற்றம் 24.05.1929
மறைவு 27.12.2006

ஜெயகிரி,
உடுவில் வடக்கு,
சுன்னாகம்.

(J 7422)
(22.17)

ச.துரைச்சாமி (கணவர்)
பிள்ளைகள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்.



## அந்தியேட்டி வீட்டுக்கிருத்திய அழைப்பு



கடந்த 08.12.2016
வியாழக்கிழமை இறைவனடி
சேர்ந்த எமது குடும்பத் தலைவர்
அமரர்
**முருகுப்பிள்ளை பரஞ்சோதி**
அவர்களின் அந்தியேட்டி
வீட்டுக்கிருத்தியம் நாளை
(07.01.2017) சனிக்கிழமை காலை
5 மணியளவில் இன்பர்சிட்டி புனித
தீர்த்தக்கரையிலும்
வீட்டுக்கிருத்தியக்
கிரியைகள் முற்பகல் 10 மணியளவில் அவரது
இல்லத்திலும் நடைபெற இருப்பதால் அத்தருணம்
தாங்கள் தங்கள் குடும்ப சகிதம் வருகை தந்து
அன்னாரின் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத்
தொடர்ந்து நடைபெறும் மதியபோசன நிகழ்விலும்
கலந்துகொள்ளும் வண்ணம் அன்புடன்
அழைக்கின்றோம்.

பழவத்தை,
வியாபாரிமூலை,
பருத்தித்துறை.

பொ.சின்னையா
(மருமகன்)



## நினைவலைகள்

12ஆம் ஆண்டு | 29ஆம் ஆண்டு



தோற்றம் 30.04.1934
மறைவு 20.12.2004

அமரர் **சொக்கலிங்கம் துரைஐயா**



தோற்றம் 12.07.1959
மறைவு 19.10.1987

அமரர் **துரைஐயா பாலச்சந்திரன்**

திதி: 06.01.2017
(உரிமையாளர்கள் - கமலா ஸ்ரோர்ஸ், சந்திரன் பான்சி பலஸ்)

ஈன்றோரைச் சான்றோராக்கி இல்லை என்ற சொல்லை நீக்கி
இமையாணன் பதிதனிலே இலக்கணமாய் வாழ்ந்துவிட்டு
இமையளவும் எண்ணாது எங்கே மறைந்தாயோ எங்கள் ஐயா?
சிறீமுருகன் அடிசேர சித்தம் கலங்கியே நித்தம் வணங்குகிறோம்.

உங்கள் நினைவுடன் வாழும்:
கமலா ஸ்ரோர்ஸ்,
நவாலி வீதி, ஆனைக்கோட்டை.
(சி.16625) (13.17)
குடும்பத்தினர்.



## மாவீரர்களை...

வெவ்வேறு இடங்களில் பிரிந்து நினைவு கூருவதும் இடம்பெறுகிறது. போர் நிறைவடைந்த பின்னர் இராணுவ பயன்பாட்டில் இருந்த கனகபுரம் மாவீரர் துயிலும் இல்லக் காணி கடந்த வருடம் விடுவிக்கப்பட்டிருந்தது. அதில் கடந்த நவம்பர் 27ஆம் திகதி மாவீரர் நாள் நினைவு கூரப்பட்டிருந்தது.

அங்கு ஒரு தரப்பினர் நேற்றுக்காலை பொது நினைவிடம் ஒன்றைக் கட்டும் பணியில் ஈடுபட்டனர். கரைச்சிப் பிரதேச சபைச் செயலாளர் அந்த இடத்துக்கு நேற்று நண்பகல் சென்று அதனைக் கட்ட அனுமதிக்க முடியாது. கரைச்சி பிரதேச சபையின் கீழ் உள்ள இந்தத் துயிலுமில்லத்தில் கட்டடம் கட்டுவதாயின் அனுமதி பெறவேண்டும். அறிவுறுத்தலை மீறினால் நீதிமன்றத் தடை உத்தரவுக்கு அமைய கட்டடம் அகற்றப்படும் என்று தெரிவித்தார். நினைவிடம் அமைக்கும் பணிகளை இடைநிறுத்துமாறும் அவர் பணித்தார். அதனைக் கட்டுமானப் பணிகளை மேற்கொண்ட குழுவினர் ஏற்க மறுத்தனர். இருதரப்பினருக்கும் இடையே கருத்து முரண்பாடு ஏற்பட்டது.

சிறிது நேரத்தில் அங்கு பொலிஸார் வந்தனர். கிளிநொச்சி மாவட்ட உதவி பொலிஸ் அத்தியட்சகர் றொசான் ராஜபக்ச பொது நினைவிடம் அமைக்கும் பணியில் ஈடுபட்டிருந்தவர்களிடம் சில அறிவுறுத்தல்களை வழங்கினார். கொழும்பில் மயானங்கள் உள்ள இடங்கள் பிரதேச சபையின் கீழ் இருப்பின் அனுமதி பெற்றே கட்டடங்களை அமைக்கின்றனர். இந்த இடம் பிரதேச சபையின் ஆளுகைக்குள் உள்ளதால் சபையின் அனுமதி பெறவேண்டும். சட்டத்தின்படி உங்களைக் கைது செய்து நீதிமன்றில் முற்படுத்த முடியும். எனினும் உங்களைக் கைது செய்யவில்லை. இதற்கான தீர்வை மனிதாபிமானத்தோடு பார்க்கவேண்டும். இந்த விடயம் தொடர்பாகச் சம்பந்தப்பட்டவர்களை அழைத்துக் கலந்துரையாடித் தீர்வைப் பெற்றிருக்கலாம். நானும் இந்த இடத்தில் பிறந்து இருந்தால் இது போன்ற செயலில் ஈடுபட்டிருக்கலாம். அந்தந்த சம்பவங்களில் பாதிக்கப்பட்டவர்களுக்குத்தான் அதன் வலி தெரியும்' என்று தெரிவித்த பொலிஸ் அதிகாரி, இந்த விடயம் தொடர்பில் மேற்கொண்டு சம்பந்தப்பட்டவர்களுடன் கலந்துரையாடி நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று தெரிவித்து பொலிஸ் நிலையத்துக்கு வருமாறு கூறியுள்ளார். அதன்படி நினைவிடம் அமைக்கும் முயற்சிகளை மேற்கொண்ட குழுவினரும் பிரதேச சபைச் செயலாளரும் பொலிஸ் நிலையத்துக்குச் சென்றனர். தீர்வு காணப்படவில்லை.

பொலிஸ் நிலையத்துக்கு நினைவிடம் கட்டும் பணியில் ஈடுபட்டவர்களில் அழைக்கப்பட்ட 6 பேரிடம் பொலிஸார் வாக்குமூலங்கள் பெற்றனர். பின்னர் அவர்கள் விடுவிக்கப்பட்டனர். கிளிநொச்சி நீதிமன்றில் அவர்கள் இன்று வெள்ளிக்கிழமை முற்படுமாறும் அதன் பொலிஸாரால் அவர்களுக்கு அறிவிக்கப்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டது. (வ-4,5,6,35)

## அறிக்கையை....

நல்லிணக்கச் செயலணியின் மக்கள் கருத்து அறியும் குழுவின் அறிக்கை தொடர்பில் விளக்க மளிக்கும் பத்திரிகையாளர் சந்திப்பு, அரச தகவல் திணைக்களத்தில் நேற்று நடைபெற் றது. அவர் தெரிவித்ததாவது:

உள்நாட்டுப் பொறிமுறையில் மக்களுக்கு பாதிக்கப்பட்ட தரப்புகளுக்கு நம்பிக்கையில்லை. உள்நாட்டு நீதித்துறை மீது நம்பகத்தன்மை இல்லை. பல தரப்புக்களும் பன்னாட்டு நீதிபதிக்கான பரிந்துரைகளை முன்வைத்திருந்தார்கள். அதனாலேயே எமது பரிந்துரையில் கலப்பு நீதிமன்றுக்கும், பன்னாட்டுப் பொறிமுறைக்கும் பரிந்துரைத்துள்ளோம்.

உள்நாட்டுப் பொறிமுறையில் - உள்நாட்டு நீதித் துறையில் படிப்படியாக நம்பிக்கை கட்டியெழுப்பப்பட்டால், பன்னாட்டு நீதிபதிகள் - பங்களிப்பைப் படிப்படியாகக் குறைக்கலாம். எமது கருத்து அறியும் நடவடிக்கை சுயாதீனமாக மேற்கொள்ளப்பட்டது. மக்களின் கருத்தை அப்படியே பிரதிபலித்துள்ளோம். எமது அறிக்கையின் பரிந்துரையில் சொல்லப்பட்ட விடயங்களை அரசு இலகுவில் நிராகரிக்க முடியாது. அதற்கு சிவில் அமைப்புக்கள் இடமளிக்காது என்றார். (த-5)

## கூட்டமைப்பின்...

கூட்டமைப்பின் அங்கத்துவக் கட்சிக் கூட்டத்தைக் கூட்டுமாறு கட்சியின் தலைவரும், எதிர்க் கட்சித் தலைவருமான இரா.சம்பந்தனிடம் கோரிக்கை விடுத்திருந்தது. இன்றைய தினம் மாலை 4.30மணிக்குஎதிர்க்கட்சித் தலைவரின் அலுவலகத்தில் கூட்டம் நடைபெறும் என்று அறிவிக்கப்பட்டது.

முக்கியமாக புதிய அரசமைப்பு உருவாக்கம் தொடர்பில் ஆராயப்படவுள்ளது. வழிநடத்தல் குழுவிலிருந்து இரா.சம்பந்தன், எம்.ஏ.சுமந்திரன் ஆகியோர் வெளியேறவேண்டும் என்ற கோரிக்கையை, கூட்டமைப்பின் பங்காளிக் கட்சித் தலைவர்களுள் ஒருவரான சுரேஸ் பிரேமசந்திரன் முன்வைத்திருந்தார். இந்த விடயமும் இதன்போது முக்கியமாக ஆராயப்படவுள்ளது. (த-5)

## சீன முதலீட்டு...

இந்தத் தகவலை வெளியிட்டார். ஆட்சி மாற்றம் ஏற்பட்டு இரண்டாவது ஆண்டுப் பூர்த்தியை முன்னிட்டு, ஒப்பந்தம் கைச்சாத்திடும் நிகழ்வு நாளை மறுதினம் 8 ஆம் திகதி ஞாயிற்றுக் கிழமை நடைபெற இருந்தது. காரணங்கள் எதுவும் தெரிவிக்கப்படாமல் பிற்போடப்பட்டுள்ளது.

அம்பாந்தோட்டைத் துறைமுகப் பகுதியில் தெரிவு செய்யப்பட்டுள்ள 15 ஆயிரம் ஏக்கர் காணியைச் சீன முதலீட்டு வலயமாக்கும் திட்டத்துக்கு அம்பாந்தோட்டை மக்கள் உட்பட எதிர்க் கட்சியினரும் எதிர்ப்புக்களை வெளியிட்டு வருகின்றனர். நீண்ட காலத்துக்கு குத்தகைக்கு வழங்குவது தொடர்பிலும் சர்ச்சை எழுந்துள்ளது.

திட்டம் தொடர்பான வரைவு அமைச்சரவைக்குச் சமர்ப்பிக்கப்பட்டு, அங்கீகாரம் பெற்ற பின்னர் அதனை சட்டமா அதிபர் திணைக்களத்துக்கு அனுப்பி வைப்பதாக அமைச்சர் மலிக் சமரவிக்ரம கூறியுள்ளார். நடவடிக்கைகளைக் கையாள்வதற்கு உப குழுவும் நியமிக்கப்பட்டுள்ளது.

அமைச்சர்களான சரத் அமுனுகம, ரவி கருணாநாயக்க, அர்ஜுன ரணதுங்க, சாகல ரத்நாயக்க மற்றும் நிமல் சிறிபாலடி சில்வா ஆகியோர் குழுவில் உள்ளனர்.

அம்பாந்தோட்டை சீன முதலீட்டு வலய ஒப்பந்தம் இரத்துச் செய்யப்படவில்லை என்றும் மாறாக ஒப்பந்தம் கைச்சாத்திடும் திகதியே ஒத்திவைக்கப்பட்டிருப்பதாகவும் அமைச்சர் மலிக் சமரவிக்ரம குறிப்பிட்டார். (த-5)

## ராஜிதவின்...

கருத்தையும் மனித உரிமைகள் சபை நிராகரித்துள்ளது. 2015 ஆம் ஆண்டு செப்ரெம்பர் மாதம் நடைபெற்ற ஐ.நா. மனித உரிமைகள் சபை அமர்வில், இலங்கையின் இணை அனுசரணையுடன் தீர்மானம் நிறைவேற்றப்பட்டிருந்தது. போர்க்குற்ற விசாரணைப் பொறிமுறையில் பன்னாட்டு நீதிபதிகள் உள்ளடக்கப்படவேண்டும் என்ற பரிந்துரையும் தீர்மானத்தில் உள்ளடக்கப்பட்டிருந்தது.

அரச தகவல் திணைக்களத்தில் நேற்று முன்தினம் புதன்கிழமை நடைபெற்ற பத்திரிகையாளர் சந்திப்பில் தகவல் வெளியிட்ட அமைச்சர் ராஜித, போர்க் குற்ற விசாரணைப் பொறிமுறையில் பன்னாட்டு நீதிபதிகளுக்கு ஒரு போதும் அனுமதியில்லை. ஐ.நா. மனித உரிமைகள் ஆணையாளர் சயிட் அல் ஹுசைன் இலங்கைக்குப் பயணம் மேற்கொண்டபோது அரசு இந்த நிலைப்பாட்டை அவரிடம் தெரிவித்திருந்தது. அவரும் இதற்கு இணங்கியிருந்தார் என்று குறிப்பிட்டிருந்தார்.

அமைச்சர் ராஜிதவின் கருத்துத் தொடர்பில் ஐ.நா. மனித உரிமைகள் சபையிடம் கொழும்புச் செய்தியாளர் ஒருவர் ருவிட்டர் ஊடாகக் கேள்வி எழுப்பியிருந்தார். அதற்குப் பதிலளித்துள்ள ஐ.நா. மனித உரிமைகள் சபை, 'ஐ.நா. மனித உரிமைகள் ஆணையாளர் சயிட், இலங்கையில் கலப்பு நீதிமன்றப் பொறிமுறை அமைக்கப்படவேண்டும் என்பதையே வலியுறுத்துகின்றார். இலங்கை தொடர்பான நிலைப்பாட்டில் எந்த மாற்றமும் இல்லை' என்று குறிப்பிடப்பட்டுள்ளது. (த-5)

## ஐ.தே.க...

வேற்றுக் குழு தெரிவித்துள்ளது. இரு பிரதான கட்சிகளின் கூட்டுப் பிணைப்பில் உருவாக்கப்பட்டிருக்கும் கூட்டு அரசை தொடர்ந்தும் பலமாக வைத்துக் கொள்வதற்காகவும், அரசைக் கலைக்க விரும்பும் விசமிகளுக்கு இடமளிக்காமல் இருப்பதற்காகவும் இரு கட்சிகளின் உறுதியான பிணைப்பு அவசியம் என்று மையக் குழு தெரிவித்துள்ளது.

ஐக்கிய தேசியக் கட்சியின் சிறிகொத்த தலைமையகத்தில் கட்சியின் தலைவரும் கொழும்பு அரசின் தலைமை அமைச்சருமான ரணில் விக்கிரமசிங்கவின் தலைமையில் கூடிய மைய நிறைவேற்றுக் குழுக் கூட்டத்திலேயே மேற்கூறிய தீர்மானம் ஏகமனதாக நிறைவேற்றப்பட்டது.

உள்ளூராட்சிச் சபைத் தேர்தலுக்கு முகம் கொடுப்பதற்காக நடவடிக்கைக் குழுவொன்றை நியமிக்கவும் இந்தக் கூட்டத்தில் எடுக்கப்பட்டது. (த-5)

## பிரியங்கரவின்...

மெய்ப்பாதுகாப்பாளர்களில் தலைமைப் பொலிஸ் பரிசோதகர், உப பொலிஸ் பரிசோதகர் மற்றும் இரு கொன்ஸ்டபிள்கள் விலக்கிக் கொள்ளப்பட்டுள்ளனர் என்று பொலிஸ் தலைமையக உயரதிகாரி தெரிவித்தார்.

இது தொடர்பில் கருத்துத் தெரிவித்த பியங்கர ஜயரத்ன, இராஜாங்க அமைச்சரான எனக்கு 6 மெய்ப்பாதுகாப்பாளர்கள் வழங்கப்பட வேண்டியிருந்தபோதிலும் 5 பேர் மாத்திரமே வழங்கப்பட்டிருந்தது. அவர்களிலும் தற்போது 4 பேர் விலக்கப்பட்டு ஒரேயொருவர் மாத்திரமே இருக்கின்றார்.

பொலிஸ் பாதுகாப்பு குறைக்கப்பட்டிருந்தாலும் எனக்கு மக்களின் பாதுகாப்பும், ஆசீர்வாதமும் தொடர்ந்தும் இருக்கும். நான் பதவியிலிருந்து விலகிய நாள் தொடக்கம் மக்களின் ஆதரவை முன்னைவிட அதிகமாகப் பெற்றிருகின்றேன் - என்றார். (த-5)

## பரிந்துரைகளை...

நீதிமன்றப் பொறிமுறை தொடர்பான பரிந்துரையையும் வரவேற்பதாக ஐ.நா. மனித உரிமைகள் ஆணையாளர் சயிட் அல் ஹுசைன் தெரிவித்தார். கொழும்பு அரசு இந்தப் பரிந்துரையை நிராகரித்துள்ள நிலையிலேயே, ஐ.நா. மனித உரிமைகள் ஆணையாளர் இதனை வரவேற்றுள்ளார்.

நல்லிணக்கப் பொறிமுறை குறித்த கலந்தாலோசனைச் செயலணியின் மக்கள் கருத்து அறியும் அறிக்கை 3 ஆம் திகதி இரவு வெளியிடப்பட்டது. போர்க் குற்றப் பொறிமுறைக்கு கலப்பு நீதிமன்றப் பொறிமுறை, பன்னாட்டு நீதிபதிகள் நியமிக்கப்படுதல் உள்ளிட்ட விடயங்களைப் பரிந்துரைத்துள்ளது.

இந்த அறிக்கை தொடர்பில் ஐ.நா. மனித உரிமைகள் சபையின் ருவிட்டர் தளத்தில், நல்லிணக்கப் பொறிமுறை குறித்த கலந்தாலோசனைச் செயலணியின் மக்கள் கருத்து அறியும் அறிக்கையின் பரிந்துரைகளை ஆணையாளர் சயிட் வரவேற்றுள்ளார். போர்க் குற்றப் பொறிமுறைக்கு கலப்பு நீதிமன்றம் அமைக்கப்படுதல், பன்னாட்டு நீதிபதிகள் உள்ளடக்கப்படுதல் விடயத்தை குறிப்பாக வரவேற்றுள்ளார் என்று பதிவிடப்பட்டுள்ளது. (த-5)

## நாடாளுமன்ற...

ஈடுபட்ட குழுவினர் பொலிஸாரிடம் கேள்வி எழுப்பினர். கனகபுரம் மாவீரர் துயிலுமில்லத்தில் நேற்று குழுவொன்று மாவீரர் நினைவிடம் கட்டும் பணியில் ஈடுபட்டபோது, பொலிஸார் தடுத்து நிறுத்தினர். அதன்போது அவர்கள் இவ்வாறு கேள்வியெழுப்பினர்.

அரசியல் தலைவர்கள் யாரும் எமக்கு அறிவிக்கவில்லை. மாவீரர் துயிலுமில்லத்தில் சட்ட விரோத செயற்பாடு இடம்பெறுவதாக 119 என்ற அவசர இலக்கத்துக்கு பொதுமக்கள் தகவல் வழங்கியிருந்தனர். அந்தத் தகவலின் படியே இங்கு வந்தோம்என்று கிளிநொச்சி மாவட்ட உதவிபொலிஸ்அத்தியட்சகர்றொஸான் ராஜபக்ச அந்தக் குழுவினரிடம் தெரிவித்தார். (வ-4,6)

## 2020 வரை...

முன்னணியின் பொதுச் செயலரும் அமைச்சருமான மகிந்த அமரவீர தெரிவித்தார்.

மருதானையில் அமைந்துள்ள சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் தலைமையகத்தில் நேற்று நடைபெற்ற பத்திரிகையாளர் சந்திப்பிலேயே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் தெரிவித்ததாவது:

அரசிலுள்ள சில குறைகளை நிவர்த்தி செய்ய வேண்டும் என்பது எமது நோக்கமாக உள்ளது. ஐக்கிய தேசியக் கட்சியை விமர்சிக்க வேண்டும் என்று நாம் எப்போதும் நினைத்தது கிடையாது. ஜனாதிபதியுடனும் பேச்சுக்களை நடத்தினோம்.

2017ஆம் ஆண்டு டிசெம்பர் வரை கூட்டு அரசைக் கொண்டு செல்வது என்று முடிவெடுக்கப்பட்டுப் பின்னர் தான், 2020 ஆம் ஆண்டு வரை நீடிக்கப்பட்டது. எம்மைப் பொறுத்தவரை குறைகளை இல்லாது செய்து முன்னோக்கி நகரவேண்டும். மாறாக நாட்டை ஸ்திரமற்ற நிலமைக்கு ஒரு போதும் நாம் தள்ளமாட்டோம். அப்படிச் செய்தால் நாட்டின் வெளிநாட்டு முதலீடுகள் நிறுத்தப்பட்டு அபிவிருத்திக்குத் தடையேற்படும். இதனை நாமும் நன்கு அறிவோம். சில தரப்பினர் எமது அரசு கவிழும் என்று தற்போது கதைகளைக் கூறிக் கொண்டு இருக்கிறார்கள்.

நல்லாட்சி அரசை எவராலும் கவிழ்க்க முடியாது. இது அவர்களுக்கும் தெரியும். வெளிநாட்டு முதலீடுகளைத் தடுத்து நாட்டை [illegible] வீனப்படுத்தும் நோக்கிலேயே இவ்வாறான கதைகளைப் பரப்பி வருகிறார்கள். நாம் இதற்கெல்லாம் அஞ்சப் போவதில்லை [illegible]றார். [illegible]

## புதிய...

யோசனைகள் தொடர்பான விவாத[illegible] போடப்பட்டுள்ளது. அதேநேரத்தில் புதி[illegible] சமைப்புத் தொடர்பான வழிகாட்டல் குழு[illegible] அறிக்கை எப்போது நாடாளுமன்றத்[illegible] முன்வைக்கப்படும் என்பதும் முடிவு செ[illegible] படவில்லை. வழிகாட்டல் குழுவின் கூட்[illegible] நேற்று நடை பெற்றது. அதிலேயே விவா[illegible]தைப் பிற்போடுவதற்கான முடிவு எடுக்கப்பட்[illegible] நாடாளுமன்றம் 2016 ஜனவரி மாதம் அர[illegible]மைப்புச் சபையாக மாற்றப்பட்டது. புதிய அரசமைப்புக்கான யோசனைகளை முன்வைப்பதற்கான அனைத்துக் கட்சிகளின் உறுப்பினர்களையும் உள்ளடக்கிய வழிகாட்டல் குழு நியமிக்கப்பட்டது. இந்தக் குழுவுக்கு உதவுவதற்காக 6 உப குழுக்கள் நியமிக்கப்பட்டன. 7ஆவதாக ஓர் உபகுழுவை பிரதமர் நியமித்திருந்தார். 6 உபகுழுக்களின் அறிக்கையும் நவம்பர் மாதம் 19ஆம் திகதி நாடாளுமன்றத்தில் முன்வைக்கப்பட்டது. அதைத் தொடர்ந்து டிசெம்பர் 10ஆம் திகதி வழிகாட்டல் குழுவின் அறிக்கை முன்வைக்கப்படும் என்று அறிவிக்கப்பட்டது. ஆனால், அன்றைய தினம் அந்த அறிக்கை முன்வைக்கப்படவில்லை. 7 ஆவது குழுவின் அறிக்கையே முன்வைக்கப்பட்டது. எனினும் உப குழுக்களின் அறிக்கை மீது விவாதம் நடத்துவதற்காக ஜனவரி 9 ஆம், 10 ஆம், 11ஆம் திகதிகள் குறிக்கப்பட்டன. இந்த நிலையில் வழிகாட்டல் குழுவின் கூட்டம் நேற்றுக் கொழும்பில் பிரதமர் தலைமையில் கூடியது. உப குழுக்களின் அறிக்கை மீதான விவாதத்தை ஒத்தி வைப்பது என்று அந்தக் கூட்டத்தில் முடிவெடுக்கப்பட்டது.

"வழி நடத்தல் குழுவின் இடைக்கால அறிக்கையையும் நாடாளுமன்றத்தில் முன்வைத்து அதையும் விவாதத்திற்கு எடுத்துக் கொள்வதற்கு வசதியாகவே அரசியல் நிர்ணய சபையின் கூட்டம் ஒத்தி வைக்கப்பட்டது" என்று கூட்டமைப்பின் பேச்சாளர் நாடாளுமன்ற உறுப்பினர் எம்.ஏ.சுமந்திரன் தெரிவித்தார்.

எனினும் வழிநடத்தல் குழுவின் இடைக்கால அறிக்கையை எப்போது வெளியிடுவது என்ற முடிவு நேற்றைய கூட்டத்தில் எடுக்கப்படவில்லை. அத்துடன் நேற்றும் இன்றும் என இரு நாள்கள் நடைபெற்ற இருந்த வழிகாட்டல் குழுவின் கூட்டமும் நேற்றைய தினத்துடன் முடித்துக்கொள்ளப்பட்டது. (உ-5)

## தனியார்....

தனி அமரதுங்க தெரிவித்தார். நடப்பு ஆண்டுக்குரிய வரவு-செலவுத் திட்டம், 2016 ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 10 ஆம் திகதி நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டது. தனியார் துறை ஊழியர்களின் வேலை நாள்களை 5 நாள்களாகக் குறைப்பதுடன், வேலை நேரத்தை நாள் ஒன்றுக்கு 9 மணித்தியால[illegible]க அதிகரிப்பதற்கு யோசனை முன்வைக்க[illegible]ட்டிருந் தது. இது தொடர்பிலேயே தற்போது [illegible]ராயப்பட்டு வருகின்றது. தேசிய தொழில[illegible]ர் பேரவையில் இந்த விடயம் குறித்து கவ[illegible] செலுத்தப்பட்டுள்ளது. சம்பந்தப்பட்ட ச[illegible]ரப்புகளுடனும் எதிர் காலத்தில் கலந்து[illegible]டல்களை மேற்கொள்ளவுள்ளதாகவும் தொ[illegible]ல் ஆணையாளர் நாயகம் குறிப்பிட்டார். (த-5)

## இன்றைய மோதல்கள்

யாழ்ப்பாணம், ஜன. 6

**யங்ஸ்ரார் வி.க.**
**கால்பந்தாட்டம்**

வவுனியா வைரவ புளியங்குளம் யங்ஸ்ரார் விளையாட்டுக் கழகத்தின் 22ஆவது ஆண்டு நிறைவை முன்னிட்டு சாந்தன், யூட் கயன் ஞாபகார்த்த கிண்ணத்துக்காக நடத்தப்பட்டுவரும் கால்பந்தாட்டத் தொடரின் ஆட்டங்கள் குறித்த கழக மைதானத்தில் இடம்பெற்று வருகின்றன. இந்தத் தொடரில் இன்றுவெள்ளிக்கிழமைமாலை6.30மணிக்கு இடம்பெறும்ஆட்டத்தில்அல்மதினாஅணியை எதிர்த்து யங்ஸ்ரார் 'பி' அணி மோதவுள்ளது.

**எவ்.ஏ. கிண்ணம்**
**யாழ். லீக்**

இலங்கை கால்பந்தாட்ட சம்மேளனம் தேசிய ரீதியில் எவ்.ஏ. கிண்ணத் தொடரை நடத்தி வருகிறது. யாழ். லீக்கில் பதிவுசெய்துள்ள கழகங்களுக்கு இடையிலான ஆட்டங்கள் அரியாலை கால்பந்தாட்ட பயிற்சி நிலைய மைதானத்தில் இடம்பெற்று வருகின்றன. இன்று பிற்பகல் 3 மணிக்கு இடம்பெறும் ஆட்டத்தில், நாவற்குழி அன்னை அணியை எதிர்த்து யாழ். ஐக்கிய அணி மோதவுள்ளது. தொடர்ந்து மாலை 4.30 மணிக்கு இடம்பெறும் ஆட்டத்தில் புத்தூர் வீனஸ் அணியை எதிர்த்துஉரும்பிராய்திருக்குமரன் அணிமோதவுள்ளது.

**எவ்.ஏ. கிண்ணம்**
**வவுனியா லீக்**

இலங்கை கால்பந்தாட்ட சம்மேளனம் தேசிய ரீதியில் எவ்.ஏ. கிண்ணத் தொடரை நடத்தி வருகிறது. வவுனியா லீக்கில் அங்கம் வகிக்கும் கழகங்களுக்கு இடையிலான ஆட்டங்கள் யங்ஸ்ரார் விளையாட்டுக் கழக மைதானத்தில் இடம்பெற்று வருகின்றன. இன்று பிற்பகல் 2 மணிக்கு இடம்பெறும் ஆட்டத்தில் யுனிபைட் அணியை எதிர்த்து மருதநிலா அணி மோதவுள்ளது. தொடர்ந்து மாலை 4 மணிக்கு இடம்பெறும் ஆட்டத்தில் ஈகிள்ஸ் அணியை எதிர்த்து யங்ஸ்ரார் அணி மோதவுள்ளது.

**குறிஞ்சிக்குமரனின்**
**கால்பந்தாட்டம்**

குப்பிளான் குறிஞ்சிக் குமரன் விளையாட்டுக் கழகம் வடமாகாண ரீதியாக நடத்தும் கால்பந்தாட்டத் தொடரின் ஆட்டங்கள் குறித்த கழகத்தின் மைதானத்தில் இடம்பெற்று வருகின்றன. இந்தத் தொடரில் இன்று இரவு 7.30 மணிக்கு இடம்பெறும் ஆட்டத்தில் ஊரெழு றோயல் அணியை எதிர்த்து உடுப்பிட்டி நவஜீவன்ஸ் அணியும்-தொடர்ந்து இடம்பெறும் இரண்டாவது ஆட்டத்தில் குருநகர் பாடுமீன் அணியை எதிர்த்து மன்னார் ஜோசவாஸ் நகர் ஐக்கிய விளையாட்டுக் கழகமும் மோதவுள்ளன. (ம-23-422-108)



## அன்ரனிஸ், யூனியன் அணிகள் இரண்டாவது சுற்றுக்குத் தகுதி

யாழ்ப்பாணம், ஜன. 6

எவ்.ஏ. கிண்ணத் தொடரில் பாசையூர் சென். அன்ரனிஸ் அணி, ஆனைக் கோட்டை யூனியன் அணி என்பன இரண்டாம் சுற்றுக்குத் தகுதி பெற்றன.

**ஞானமுருகன் - சென். அன்ரனிஸ்**

இலங்கை கால்பந்தாட்ட சம்மேளனம் தேசிய ரீதியில் எவ்.ஏ. கிண்ணத்தொடரை நடத்தி வருகிறது. யாழ். லீக்கில் பதிவு செய்துள்ள கழகங்களுக்கு இடையிலான ஆட்டங்கள் அரியாலை கால்பந்தாட்ட பயிற்சி நிலைய மைதானத்தில் இடம்பெற்று வருகின்றன. நேற்றுமுன்தினம் இடம்பெற்றமுதலாவது ஆட்டத்தில் மயிலங்காடு ஞானமுருகன் அணியை எதிர்த்து பாசையூர் சென். அன்ரனிஸ் அணி மோதியது. ஆட்டத்தின் 20ஆவது நிமிடத்தில்அன்ரனிஸின்முதல்கோலைப் பதிவு செய்தார் கலிஸ்ரஸ். 25 ஆவது நிமி டத்தில் பதிலடி கொடுத்தார் வாகிசன். 1:1 என்ற நிலையில் முதல் பாதி முடிவுக்கு வந்தது. இரண்டாம் பாதியில் மாற்றங்கள் நிகழவில்லை. சமநிலைத் தவிர்ப்பு உதைகளில் வெற்றியைத் தீர்மானிக்க வேண்டிய நிலை ஏற்பட்டது. 4:3 என்ற கோல் கணக்கில் சென். அன்ரனிஸ் அணி வெற்றிபெற்றது.

**யூனியன் - சரஸ்வதி**

தொடர்ந்து இடம்பெற்ற ஆட்டத்தில் ஆனைக்கோட்டை யூனியன் அணியை எதிர்த்து புத்தூர் சரஸ்வதி அணி மோதியது. ஆட்டத்தின் 5 ஆவது மற்றும் 10 ஆவது நிமிடங்களில் யூனியனின் கோல்களைப் பதிவுசெய்தார் நிரோசன். யூனியனின் ஏக ஆதிக்கத்துடனேயே முதற் பாதி முடிவுக்கு வந்தது. இரண்டாம் பாதியின் 10 ஆவது நிமிடத்தில் நிரோசன் தனது அணியினதும் மூன்றாவது கோலைப் பதிவுசெய்தார். மதி 15 ஆவது நிமிடத்திலும் ரகு 20 ஆவது நிமிடத்திலும் கோல்களைப் பதிவுசெய்ய முடிவில் 5:0 என்ற கோல் கணக்கில் வெற்றிபெற்றது ஆனைக்கோட்டை யூனியன் அணி. (ம-23)



இலங்கை பெண்கள் துடுப்பாட்ட அணியின் தரத்தினை மேம்படுத்தும் நோக்குடனும் புதிய வீராங்கனைகளை இனங்காணும் நோக்குடனும் இலங்கை கிரிக்கெட் சபை தேசிய ரீதியில் பயிற்சிமுகாம்களை பரவலாக முன்னெடுத்து வருகிறது. சென். பற்றிக்ஸ் கல்லூரியில் நேற்று ஒரு பயிற்சி முகாம் இடம்பெற்றது. (ம-23)

மனோகராவின் கால்பந்தாட்டம்;

## டயமன்ஸ் அணி இறுதிக்குத் தகுதி



யாழ்ப்பாணம், ஜன. 6

அல்வாய் மனோகரா விளையாட்டுக் கழகம் நடத்தும் சவால் கிண்ணத்துக்கான கால்பந்தாட்டத் தொடரில் வதிரி டயமன்ஸ் அணி இறுதிக்குத் தகுதி பெற்றது.

மனோகராவின் மைதானத்தில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற இரண்டாவது அரையிறுதியில் வதிரி டயமன்ஸ் அணியை எதிர்த்து கம்பர்மலை யங்கம்பன்ஸ் அணி மோதியது. ஆட்டத்தின் 12 ஆவது நிமிடத்தில் டயமன்ஸ் அணியின் துசிகரன் தனது அணிக்கான முதற் கோலைப் பதிவுசெய்தார். வேறு எந்த மாற்றங்களும் ஏற்படாத நிலையில் டயமன்ஸின் ஆதிக்கத்துடனேயே முதல் பாதி முடிவுக்கு வந்தது.

இரண்டாவது பாதியில் டயமன்ஸின் ஆதிக்கம் மேலும் அதிகரித்தது. யங்கமன்ஸ் அணியால் டயமன்ஸின் ஆட்டத்துக்கு ஈடுகொடுக்க இயலவில்லை. 44 ஆவது, 53 ஆவது, 56 ஆவது நிமிடங்களில் துசிகரன் தொடர்ந்து கோல்களை அடுக்கினார். முடிவில் 4:0 என்ற கோல் கணக்கில் டயமன்ஸ் அணி வெற்றிபெற்று இறுதிக்குத் தகுதி பெற்றது. துசிகரன் ஆட்ட நாயகனானார். (ம-108-422)

## தேசிய அணித் தெரிவு

யாழ்ப்பாணம், ஜன. 6

16 வயதுக்கு உட்பட்ட ஆசிய காலபந்தாட்டத் தொடருக்கான இலங்கை அணித் தெரிவு நாளை, நாளை மறுதினம் எதிர்வரும் 15 ஆம் திகதிகளில் இடம்பெறவுள்ளன.

கொழும்பு சிற்றி லீக் மைதானத்தில் அணித் தெரிவு நடைபெறவுள்ளது. 2000ஆம் ஆண்டு பிறந்தவர்களுக்கான தெரிவு நாளை காலை 7.30 மணிக்கும், 2001ஆம் ஆண்டு பிறந்தவர்களுக்கான தெரிவு 8 ஆம் திகதி காலை 7.30 மணிக்கும், 2002 ஆம் ஆண்டு மற்றும் 2003 ஆம் ஆண்டு பிறந்தவர்களுக்கான தெரிவு எதிர்வரும் 15 ஆம் திகதி காலை 7.30 மணிக்கும் நடைபெறவுள்ளன. (ம-422)

யங்ஸ்ராரின் கால்பந்தாட்டம்;

## யுனிபைட் அணி அபார ஆட்டம்

யாழ்ப்பாணம், ஜன. 6

வவுனியா வைரவ புளியங்குளம் யங்ஸ்ரார் விளையாட்டுக் கழகத்தின் தொடரில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற ஆட்டத்தில் யுனிபைட் அணி அபார வெற்றிபெற்றது.

யங்ஸ்ராரின் மைதானத்திலேயே தொடரின் ஆட்டங்கள் அனைத்தும் இடம்பெற்று வருகின்றன. நேற்றுமுன்தினம் மாலை 6.30 மணிக்கு இடம்பெற்ற ஆட்டத்தில் யுனிபைட் 'ஏ' அணியை எதிர்த்து மருதநிலா. பி அணி மோதியது. இதில் யுனிபைட் 'ஏ' அணி 9:1 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்றது. (ம-23)

## பாடும்மீன் – ரட்ணம்ஸ் அரையிறுதியில் நாளைமறுதினம்

யாழ்ப்பாணம், ஜன. 6

இலங்கை கால்பந்தாட்டச் சம்மேளனத்தினால் நடத்தப்படும் பிரிவு இரண்டுக்கான தொடரின் அரையிறுதி ஆட்டமொன்று நாளை மறுதினம் நடைபெறவுள்ளது.

யாழ். துரையப்பா விளையாட்டு மைதானத்தில் மின்னொளியில் இடம்பெறவுள்ள இந்த ஆட்டத்தில்குருநகர்பாடும்மீன்அணியை எதிர்த்து கொழும்பு ரட்ணம்ஸ் அணி மோதவுள்ளது. (ம-23)

# செவில்லாவை தோற்கடித்தது ரியல் மட்ரிட்

செவில்லா, ரியல்மட்ரிட் அணிகளுக்கு இடையே நேற்று நடைபெற்ற ஆட்டமொன்றில் ரியல் மட்ரிட் அணி வெற்றிபெற்றது.

ஆட்டத்தின் 11 ஆவது நிமிடத்தில் மட்ரிட்டின் இளம் வீரர் ஜேம்ஸ் றொட்றிகாஸ் முதல் கோலைப் பதிவுசெய்தார். வரோன் 29 ஆவது நிமிடத்தில் மட்ரிட்டின் இரண்டாவது கோலைப் பதிவுசெய்தார். 44 ஆவது நிமிடத்தில் றொட்றிகாஸ் பிறிதொரு கோலைப் பதிவுசெய்ய முதல் பாதியின் முடிவில் 3:0 என்று ஆதிக்கம் செலுத்தியது ரியல் மட்ரிட்.

இரண்டாவது பாதியில் செவில்லாவால் பதிலடி கொடுக்க இயலவில்லை. அதே நேரம் மாற்றங்களும் ஏற்படவில்லை. முடிவில் 3:0 என்ற கோல் கணக்கில் ரியல் மட்ரிட் வெற்றிபெற்றது. (ம)





# அடுத்த உலகக் கிண்ணம் வரையில் அணியில் தொடர வேண்டும் டோனி

## கபில்தேவ் வலியுறுத்தல்

இந்திய அணியின் முன்னாள் தலைவரான டோனி, அடுத்த உலகக்கிண்ணத் தொடர் வரை ஒரு வீரராக அணியில் தொடர வேண்டும் என்று அந்த அணியின் முன்னாள் தலைவர் கபில் தேவ் தெரிவித்தார்.

மூன்று வகை ஆட்டங்களுக்கும் தலைவராக இருந்த டோனி கடந்த 2015 ஆம் ஆண்டு இறுதிப் பகுதியில் டெஸ்ட் ஆட்டங்களில் இருந்து ஓய்வை அறிவித்தார். இருப்பினும் ரி-20 மற்றும் ஒருநாள் அணிகளின் தலைவராக அணியில் நீடித்து வந்தார். மட்டுப்படுத்தப்பட்ட ஆட்டங்கள் கொண்ட தொடருக்காக இங்கிலாந்து அணி இந்தியாவுக்கு சுற்றுப் பயணம் செய்துள்ளது. இந்தத் தொடருக்கான இந்திய அணி இன்று அறிவிக்கப்படவுள்ள நிலையில் டோனி, தலைமைத்துவத்திலிருந்து விலகும் தனது முடிவை நேற்று முன்தினம் இரவு அறிவித்தார். ஒரு வீரராக அணியில் தொடரும் நம்பிக்கையையும் அவர் வெளிப்படுத்தியுள்ள நிலையில் 2019 ஆம் ஆண்டு உலகக்கிண்ணம் வரை அவர் அணியில் இருக்க வேண்டும் என்று கபில் தேவ் வலியுறுத்தினார்.

டோனியின் முடிவுகளை நான் எப்போதும் மதிக்கிறேன். தற்போதும் அப்படியே. அடுத்த உலகக் கிண்ணத் தொடர் வரை விளையாடக் கூடிய திறமை டோனியிடம் இருக்கிறது. இன்று வரை அவர் தான் திறமையானவர். இதனால் உலகக்கிண்ணத் தொடரில் டோனி விளையாட வேண்டும். கோக்லி அனைத்து நிலைக்கும் தலைவராக இருக்கும்போது நெருக்கடி ஏற்படும். அப்போது டோனி அவருக்கு உதவியாக இருந்தால் சிறப்பாக இருக்கும் என்று கபில்தேவ் மேலும் தெரிவித்தார். (ம)

# டோனிக்கு மோடி வாழ்த்து வீரர்களும் தவறவில்லை

மட்டுப்படுத்தப்பட்ட ஆட்டங்களுக்கான தலைமைப் பொறுப்பிலிருந்து விலகியதை அடுத்து அவரது வெற்றிகளுக்காகவும் எதிர்கால திட்டங்களுக்காகவும் டோனிக்கு இந்தியப் பிரதமர் நரேந்திர மோடி உள்பட முன்னாள் வீரர்கள் இந்நாள் வீரர்கள் என்று பலரும் தமது வாழ்த்துக்களைத் தெரிவித்து வருகின்றனர்.

**நரேந்திர மோடி:** டோனியின் எதிர்கால இலக்குகளுக்கு எனது வாழ்த்துக்கள். தலைவராக நீங்கள் இந்திய கிரிக்கெட்டுக்கு செய்த பங்களிப்புகளுக்கு நன்றி.

**சச்சின் ரெண்டுல்கர்:** ஒருநாள், ரி-20 உலகக் கிண்ணங்களை வென்ற தலைவர் டோனிக்கு என் வாழ்த்துக்கள். ஓர் ஆக்ரோசமான வீரர் என்ற நிலையிலிருந்து நிதானமும் உறுதியும் மிக்க ஒரு தலைவராக அவர் உருவெடுத்தது வரை நான் அவரை அருகிலிருந்து பார்த்து வருகிறேன். அவரது வெற்றிகரமான தலைமைத்துவத்தைக் கொண்டாடும் தருணம் இது. அவரது முடிவை மதிக்கிறேன். களத்தில் அவர் மேலும் நம்மை உற்சாகப்படுத்தப் போகிறார்.

**ஹர்திக் பாண்டியா:** டோனி நீங்கள் லட்சக் கணக்கானோரின் உத்வேகம். உங்கள் தலைமையின் கீழ் நான் விளையாடிய ஒவ்வொரு கணத்தையும் பெரிய புதையலாகக் கருதுகிறேன்.

**சுரேஸ் ரெய்னா:** இந்திய அணியின் வெற்றிகரமான தலைவர். தனது தொலைநோக்கை நிஜமாக மாற்றியவர். அனைவரையும் முன்னேற்றுவதில் உத்வேகமாகத் திகழ்ந்தவர்.

**மைக்கல் வாகன்:** உண்மையில் ஓர் அதி சிறந்த தலைவர். போதுமென்ற மனமே பொன் செய்யும் மருந்து என்று முடிவெடுத்து விட்டார். ஈடு இணையற்ற தலைமைத்துவத்திற்கு எனது வாழ்த்துக்கள்.

**ரோகித் சர்மா:** உண்மையான வழிகாட்டி, தலைவர், நிறைய வீரர்களின் கிரிக்கெட் வாழ்க்கையில் தாக்கம் செலுத்தியவர். என்னை ஐ.சி.சி. சம்பியன்ஸ் கிண்ணத் தொடரில் தொடக்க வீரராகக் களமிறக்கியதன் மூலம் என்னிலும் டோனி தாக்கம்செலுத்தினார். என்னை எனக்கு அறிமுகம் செய்தார்.

**இர்பான் பதான்:** தலைவராக அவரது வழிமுறையை விவரிக்க வார்த்தைகள் இல்லை.

**சிறிகாந்:** தலைமைத்துவத்தை அடுத்தவருக்கு கொடுக்கும் தருணத்தை அறிந்த ஓர் உண்மையான தலைவரின் அடையாளமே அவரது விலகல். எங்களை உற்சாகப்படுத்தியமைக்கு நன்றி.

**ஹர்சா போக்ளே:** ஓர் அருமையான சேவகரை எழுந்து நின்று கரகோசம் செய்து வாழ்த்தும் தருணம். இந்தியக் கிரிகெட்டின் ஈடு இணையற்ற தலைவர். உலகக்கிண்ணம், சம்பியன் லீக், ரி-20 உலகக்கிண்ணம், ஐ.பி.எல். கிண்ணங்கள், ஆசியக் கிண்ணம் என்று அத்தனையும் கையில். கைப்பற்றாத கிண்ணங்கள்என்றுஒன்றுமில்லை. வாழ்த்துக்கள்.

**கைப்:** 9 ஆண்டுகளாக வெற்றிகளுடன் தலைமைப் பொறுப் பாற்றிய டோனிக்கு சிரம் தாழ்த்துகிறேன். உங்களைத் தலைவராக அடைய இந்திய அணி பெற்ற பேறு என்னவோ. இவர்களும் இன்னும் பலரும் மேற்குறிப்பிட்டவாறாகவும், பல்வேறு விதமாகவும் டோனியை வாழ்த்தி தமது சமூகவலைத்தளங்களில் பதிவுசெய்துள்ளனர். (ம)



# தொடரைக் கைப்பற்றியது தென்னாபிரிக்கா

இலங்கைக்கு எதிரான இரண்டாவது டெஸ்ட் ஆட்டத்திலும் வெற்றிபெற்று தொடரைக் கைப்பற்றுவதை உறுதி செய்தது தென்னாபிரிக்கா.

நாணயச் சுழற்சியில் வெற்றிபெற்ற இலங்கை முதலில் களத்தடுப்பைத் தீர்மானித்தது. இதன்படி முதலில் துடுப்பெடுத்தாடிய தென்னாபிரிக்கா 392 ஓட்டங்களில் சகல இலக்குகளையும் இழந்தது. அதிகபட்சமாக எல்கர் 129 ஓட்டங்களையும், குயின்டன் 101 ஓட்டங்களையும், பிளாசிஸ் 38 ஓட்டங்களையும் சேர்த்தனர். பந்துவீச்சில் லகிரு குமார 6 இலக்குகளையும், கேரத், லக்மல் இருவரும் தலா இரு இலக்குகளையும் கைப்பற்றினர்.

பதிலுக்குக் களமிறங்கிய இலங்கை 110 ஓட்டங்களில் சகல இலக்குகளையும் இழந்தது. அதிகபட்சமாக தரங்க ஆட்டமிழக்காமல் 26 ஓட்டங்களைப் பெற்றார். பந்துவீச்சில் பிளன்டர், ரபாடா இருவரும் தலா 4 இலக்குகளையும், மகாராஜ் 2 இலக்குகளையும் வீழ்த்தினர்.

இரண்டாவது இன்னிங்ஸிற்காக களமிறங்கிய தென்னாபிரிக்கா 224-7 என்றநிலையில் இருந்த பொழுது ஆட்டத்தை இடைநிறுத்தியது. அதிகபட்சமாக எல்கர் 55 ஓட்டங்களையும், பிளாசிஸ் 41 ஓட்டங்களையும், குக் 30 ஓட்டங்களையும் சேர்த்தனர். பந்துவீச்சில் லக்மல் 4 இலக்குகளையும், குமார, கேரத் இருவரும் தலா ஓர் இலக்கையும் வீழ்த்தினர்.



முதல் இன்னிங்ஸில் முன்னிலை பெற்றமை தென்னாபிரிக்காவுக்கு கைகொடுக்க இலங்கைக்கு இலக்காக 507 ஓட்டங்கள் நிர்ணயிக்கப்பட்டது. மூன்றாம் நாள் முடிவில் இலங்கை 130-4 என்றிருந்தது. மத்தியூஸ் 29 ஓட்டங்களுடனும் சந்திமல் 28 ஓட்டங்களுடனும் நான்காம் நாளுக்காக நேற்றுக் களமிறங்கினர். மேலதிகமாக இரு ஓட்டங்களைப் பெற்றிருந்த நிலையில் ரபாடாவால் வெளியேற்றப்பட்டார் சந்திமல். தரங்கவால் முடிந்தது 12 ஓட்டங்கள் மட்டுமே. ஓர் ஓட்டத்தால் அரைச்சதத்தைத் தவற விட்டார் மத்தியூஸ். கேரத் நிலைத்து நின்றாலும் மறு முனையால் இலக்குகள் சரிய 224 ஓட்டங்களில் சுருண்டது இலங்கை. 282 ஓட்டங்களால் வென்றது தென்னாபிரிக்கா. தொடரில் மூன்று ஆட்டங்கள். முதல் இரு ஆட்டங்களிலும் வென்றுள்ள காரணத்தால் அடுத்த ஆட்டத்தின் முடிவு எவ்வாறு அமைந்தாலும் தென்னாபிரிக்காவே கிண்ணம் வெல்லும். (ம)

# நெருக்கடி நிலையில் பங்களாதேஷ் இரண்டாவது ரி-20 இன்று ஆரம்பம்

நியூசிலாந்து - பங்களாதேஷ் அணிகளுக்கு இடையிலான ரி-20 தொடரின் இரண்டாவது ஆட்டம் இன்று நடைபெறவுள்ளது. தொடரில் மூன்று ஆட்டங்கள். ஏற்கனவே முடிவடைந்த முதலாவது ஆட்டத்தில் நியூசிலாந்து 6 இலக்குகளால் வெற்றிபெற்றது. இதனால் இன்றைய ஆட்டத்தில் வெற்றி பெற வேண்டும் என்ற நெருக்கடி நிலைக்கு பங்களாதேஷ் தள்ளப்பட்டுள்ளது. மாறாக இன்றைய ஆட்டத்திலும் நியூசிலாந்து வெற்றிபெற்றால் இறுதி ஆட்டத்தின் முடிவு எவ்வாறு அமைந்தாலும் கிண்ணத்தை கொண்டு செல்வது நியூசிலாந்து என்ற வாறாகவே அமையும். எனவே வெற்றி அவசியம் என்ற நிலையில் பங்களாதேஷ் களமிறங்குகிறது. (ம)

## யாழில் புதிய பிரிவுகள் ஆரம்பம்

புதிய ஆண்டில் சுயதொழில் ஒன்றைப் பெற்றுக் கொள்ள அரிய சந்தர்ப்பம்.

கையடக்கத் தொலைபேசி திருத்தும் பாடநெறி Mobile Phone Repairing Course திருத்தும் துறையில் 10 வருடத்துக்கும் மேல் அனுபவம் கொண்ட முதல்தர ஆசிரியர் Ganesh Sir அவர்களினால் நடத்தப்படுகின்றது.

January 07, 08, 09, 10 ஆகிய நான்கு நாள்களில் Smart Phone கள் உட்பட அனைத்து Phone களும் பயிற்சியளிக்கப்படும்.

சுயமாக வேலை செய்யும் அளவிற்கு பயிற்சி வழங்கப்படும் குறைந்த முதலீட்டில் உடனடியாக ஆரம்பிக்கக் கூடிய ஒரு சுய தொழில்.

பதிவுகளுக்கு முந்துங்கள்.

Softview IT & Computer Academy
No. 221, Kandy Road, Jaffna.
077 747 5783, 077 425 2201

## விஸ்டம்

தொழில் நுட்பக் கல்லூரி
இல 63 சிவன் வடக்கு வீதி, வண்ணார்பண்ணை, யாழ்ப்பாணம்.

## தொழில் நுட்பப் பிரிவு

A/L 2019

ஆரம்பம்
07ம் திகதி சனிக்கிழமை
காலை 8.30

தொடர்புக்கு
077 248 7774

அனுமதிகளைப் பெற்றுக் கொள்ளுங்கள்.

## CHEMISTRY COURT

80, ARASADY ROAD, JAFFNA

இரசாயனவியல்
2019 A/L
(தமிழ், ஆங்கில மொழி மூலம்)
ஆரம்பம்: 06.01.2017
நேரம்: (5.00 - 6.00) PM
By:
RAJAH

## FRENCH LANGUAGE CENTRE

FOR THE BEST FRENCH FOREVER

பிரெஞ்சு மொழி வகுப்பு

No. 40, பலாலி வீதி, ஆரியகுளம்.
0779 789 456 / 021 221 7781
ஆரம்பம் : 07.01.17 சனி 10 am

பிரதான வீதி, நெல்லியடி
TP: 021 3202973
ஆரம்பம் 09.01.17 திங்கள் 3.30pm.

திருமணமாகி U.K. செல்வோர்களுக்கான IELTS Life Skills A1,B1 Classes.

Bus நிலையம் → ஆரியகுளம் → 100M → பலாலி வீதி → FLCentre

## ALLIANCE FRANCAISE DE JAFFNA

பிரெஞ்சு மொழியை பிரெஞ்சு முறையில் கற்றுக்கொள்ளுங்கள்.

### பிரெஞ்சு வகுப்புக்கள்



பிரான்ஸ் FOREIGN MINISTRY & FRENCH EMBASSY யின் கீழ்

யாழில் 40 வருடங்களாக AF இன் பயணம்

இயங்குகின்ற ஒரே சர்வதேச நிறுவனம் AF.
உலகம் முழுவதும் 1000 கிளைகள்.
(இலங்கையில் சர்வதேச பிரெஞ் CERTIFICATES ஐ AF மட்டுமே வழங்குகின்றது.)



பிரெஞ்சு மொழிபெயர்ப்புக்கள்.
(யாழில் வேறு அங்கீகரிக்கப்பட்ட நிறுவனங்கள் இல்லை.)
இலவசம்: PHOTOCOPIES, படிப்பதற்கான LETTER, VISA FORM நிரப்புதல், CD, BOOKS பாவனை....

**International Diploma A1 பரீட்சைகட்டணம்**

AF இல் படிப்போருக்கு 4000/=, ஏனையோருக்கு 10300/= யாழில் எங்கு படித்தாலும் இப்பரீட்சையை எமது AF இல் மட்டுமே எழுத முடியும்.

ஆரம்பம் சில தினங்களில், உடன் பதிவுகளை மேற்கொள்ளவும்.
021 222 8093 61, கச்சேரி - நல்லூர் வீதி, யாழ்ப்பாணம்.
கச்சேரி பஸ்நிலையம் → புகையிரதக்கடவை → AF (வெள்ளை மாடிக்கட்டடம்)

## Dubai நாட்டில் அதிஉயர் சம்பளத்துடன்உடனடி வேலைவாய்ப்பு

Dubai நாட்டில் உள்ள Dairy Company இல் Assistant Salesman (15 பேர்)
Salary:-1600 Age Limit:-20-28 (Fluently in English Spoken)
தங்குமிடம், மருந்துவம் என்பன முற்றிலும் இலவசம். தகுதியுடையோர் உங்கள் சுயவிவரக் கோவையை எமக்கு அனுப்பி வைக்கவும். (நேர்முகப் பரீட்சை விரைவில்)
உடன் தொடர்புகொள்ள
Jobslanka International
077 721 5291, 077 730 1757.
Email:- Jobslankane@gmail.com

## AL, OL பரீட்சைக்குத் தோற்றிய மாணவர்களுக்கான இலவசக்கணினிப்பயிற்சி

ஐ.நா. அபிவிருத்தி திட்ட ஆதரவுடன் 2000ம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்டு ஆயிரக்கணக்கான அரச ஊழியர்கள் மாணவர்களிற்கு பயிற்சியினை வழங்கிய நிறுவனம். இன்று 17 வது ஆண்டு நிறைவில் உலகின் தரமானதும் அதிக வேலைவாய்ப்பினை உடைய நிறுவனங்களாகிய Oracle Campus, Microsoft IT academy, Cisco Academy, CIMA மற்றும் கொழும்பு பல்கலைக்கழக தகவல் தொழில்நுட்ப பிரிவு என்பனவற்றுடன் இணை நிறுவனமாக தொழிற்படும் MCS IT CAMPUS இலவசக்கணினிப்பயிற்சித்திட்டம் ஒன்றை முன்னெடுத்துள்ளது. பங்கு பற்ற விரும்பும் மாணவர்கள்
Type<FREE><Name><DOB><District>sendTo772395895

**MCS IT CAMPUS**

34 Sir Pon Ramanathan Rd, near University of Jaffna
சிறந்த பெறுபேற்றுக்காக கொழும்பு பல்கலைக்கழகம், Microsoft, CIMA-UK விருதுகளை வென்ற நிறுவனம்

## போட்டிப் பரீட்சை வகுப்புக்கள்

வழமையான விரிவுரையாளருடன் துறைசார் வளவாளர்களின் வழிகாட்டலில்

**முகாமைத்துவ உதவியாளர்**
திறந்த மட்டுப்படுத்தப்பட்ட பரீட்சைக்கு

**பிரிவு I**
பிரதி ஞாயிறு
10.30 - 2.00 மணி வரை

**பிரிவு II**
பிரதி ஞாயிறு
2.00 - 5.00 மணி வரை

**இலங்கை வங்கி மற்றும் ஏனைய வங்கிகள்**
சனி, ஞாயிறு 1.00 - 5.00

**திறந்த பல்கலைக்கழக சட்டமாணி நுழைவு**
பிரதி ஞாயிறு 1.00 - 5.00

**காணி வெளிக்கள போதனாசிரியர்**
பிரதி ஞாயிறு 2.00 - 5.00

**தொழில் அலுவலர்**
திறந்த பரீட்சைக்கு
பிரதி ஞாயிறு 2.00 - 5.00

**தொழில் அலுவலர்**
மட்டுப்படுத்தப்பட்டது
பிரதி ஞாயிறு 2.00 - 5.00

**கணக்காளர் சேவை**
சனி, ஞாயிறு 9.30 - 4.00

**அதிபர் EB**
புதிய பிரிவு சனி 11.00 - 3.30

தொடர்புகளுக்கு:
076 686 3394
021 222 3382
யாழ்ப்பாணக்கல்லூரி பட்டப்படிப்புக்கள் பிரிவு
(யாழ். ஆஸ்பத்திரி வீதி, கொமர்ஷல் வங்கிஅருகில்)

## SHAMROCK

ஈச்சமோட்டை

A/L 2019
- கலை
- வர்த்தகம்
- கணிதம்
- விஞ்ஞானம்

புதிய பிரிவுகள்
ஆரம்பம்
நாளை
07.01.2017
சிறந்த பெறுபேறுகளுக்கு.
SHAMROCK
ஈச்சமோட்டைவீதி

## போட்டிப்பரீட்சை வகுப்புக்கள்

- முகாமை உதவியாளர் (MA)
- சட்டமாணி (LLB)
- வங்கியியல்
- காணி வெளிக்கள போதனாசிரியர்

ஆகிய போட்டிப்பரீட்சை வகுப்புக்கள்
ஆரம்பம்-08.01.2017
ஞாயிறு 2.00-5.00 pm
பிரதிஞாயிறு
2.00-5.00 pm
விரிவுரையாளர்கள்
[illegible].உமாசங்கர்
[illegible].கமல்தாசன்
நாவலர் கல்வி நிலையம்
ஆனைப்பந்தி
யாழ்ப்பாணம்
T.P - 077 4696695

## NEC

பருத்தித்துறை வீதி ஆனைப்பந்தி
இரு இடத்திலும்
மணிக்கூட்டு வீதி யாழ்நகர்.

A/L 2019
கலை
வர்த்தகம்
தொழில்நுட்பம்
ஆரம்பம்
07-01-2017
சனி
8.00 மணி

## தென் இந்தியயாத்திரை

தமிழ்நாடு, ஆந்திரா, கேரளா, கர்நாடகா, பாண்டிச்சேரி ஊடான யாத்திரை

**ஆரம்பம் 07.02.2017 நாள்கள் 16, யாத்திரீகர்கள் 10 பேர்**

**தரிசிக்குமிடங்கள்** மலைக்கோட்டை விநாயகர், திருப்பதி, அலமேலுமங்கா, சிதம்பரம், திருவெண்ணாமலை, ஏகாம்பரேஸ்வரர், காளகஸ்திரி, திருவானைக்காவல், இராமேஸ்வரம், நவபாஷாணம், திருத்தணி, திருச்செந்தூர், திருப்பரம்குன்றம், சுவாமிமலை, பழனி, மேல்மருவத்தூர், திருவிடைமருதூர், குருவாயூர், மைசூர், சாமுண்டீஸ்வரி, நந்திகோயில், கோடிலிங்கேஸ்வரர், ராகுகேது, செவ்வாய், சூரியன், சுக்கிரன், புதன், திங்கள், வியாழன், சனிபகவான் (நளன்குளத்தில் நீராடல்), காஞ்சிபுரம், காமாட்சி, ஆதிகும்பேஸ்வரர், கன்னியாகுமாரி, திருக்கடையூர் பட்டீஸ்வரம் உட்பட 60 இற்கும் மேற்பட்ட ஆலயங்களை தரிசிக்கலாம். தங்களிடம் பெற்றுக்கொள்ளும் ரூபாவிற்கு எமது சேவை இருவழி விமான ரிக்கட், யாத்திரை முழுவதும் A/C வாகன வசதி மூன்று வேளை சுத்தமான சைவ உணவு, குடிநீர், தரமான 2 பேருக்கு கட்டில்மெத்தை குளியலறை இணைந்த அறைகள், கொழும்பில் இருந்து ஏயர்போட் போக வர, வரகன வசதி, சகல ஆலயங்களுக்கும் நாமே அழைத்துச்செல்வோம்.

இது தவிர கோயில்களில் குறுப்பாக எடுக்கும் புகைப்படங்கள் 60 படங்கள் அன்பளிப்பாக வந்தபின் தபாலில் அனுப்பிவைக்கப்படும். விருப்பமுடையவர்கள் பதிவுசெய்யவும். விவரங்களைக்கேட்டு அறிந்து. (அ 27575) (13)

விவரங்களுக்கு: கலாநிதி T. ஸ்ரீரெங்கநாதன் - மகன் - ராஜன் தொ.பே. 077 768 0102
077 736 2154
# 59,3/6,செட்டியார்தெரு கொழும்பு - 11 FB:sridevisrirangananthanthuraiappa

## ஒளி அழகனின் British-College-of-Beauty-Studies



**இலங்கையில் முதல் தடவையாக பெண்களுக்கான அழகுக்கலைக்கல்லூரி**

- அழகுக்கலை
- தையற்கலை
- சமையற்கலை
- ஆங்கிலம்
- கேக் ஐசிங்
- Ladies skills Development

→ குறுகியகால பயிற்சி வகுப்புக்களையும் முழுநேர பயிற்சி வகுப்புகளையும் பெற்றுக் கொள்ள முடியும்.
→ அனைத்து பாடநெறிகளும் புதிய பாடத்திட்டங்களே!
→ அனைத்து பாடநெறிகளும் பெண் ஆசிரியர்கள் மூலமாகவே பயிற்சியளிக்கப்படும்.
→ பெண்களே இது உங்களுக்கு மட்டுமான கல்லூரி!
→ பெண்களும் இந்த உலகில் பல துறைகளில் சாதனை படைத்து முன்னேறமுடியும்.

மாணவர்களின் வேண்டுகோளுக்கிணங்க பல இடங்களில் எமது கிளைகளை விஸ்தரிக்க தீர்மானித்துள்ளோம்.
வேலணை, நெல்லியடி, கிளிநொச்சி போன்ற இடங்களில் பயிற்சி வகுப்புகளை ஆரம்பிக்க உள்ளோம்.
07.01.2017 அன்று 02.30 P.M க்கு ஒரு புதிய High Diploma in Advance Make up பயிற்சி வகுப்பு ஆரம்பிக்கவுள்ளோம்.
நேரில் பதிவுகளை மேற்கொள்ளுங்கள்.
மட்டுப்படுத்தப்பட்ட மாணவர்களே அனுமதிக்கப்படுவர். முதல் இணையும் 10 மாணவர்களுக்கு Hair Style போடும் 3500/= பெறுமதியான Dummy (பொம்மை) இலவசம்.

தலைமை காரியாலயம்
கஸ்தூரியார் றோட்,
யாழ்ப்பாணம்.
(உதயன் அருகில்)

076 701 1645
021 320 4150

கிளை,
பலாலிறோட்,
திருநெல்வேலி,
யாழ்ப்பாணம்.

## புத்தக கண்காட்சியும், மலிவு விற்பனையும்

58 ஆவது ஆண்டில் அடிஎடுத்துவைக்கும்

**ஆல்சிலோனின்** பண்டிகைக்கால தள்ளுபடி விற்பனை

☆ மருத்துவமாணவர்களுக்கான புதிய வரவு புதிய பதிப்பு 25 % தள்ளுபடி



விஜயராகவன், புஷ்பாதங்கதுரை, முத்துலக்ஷ்மிராகவன், சாண்டில்யன், சுஜாதா, ரமணிச்சந்திரன், இந்திரா, சௌந்தரராஜன், ராஜேஷ்குமார் இன்னும் பல எழுத்தாளர்களின் பிரபல நாவல்கள் 25% வரை தள்ளுபடி



அனைத்து விதமான பாடநூல்கள், ஸ்ரேசனறி பொருள்கள், இறக்குமதியாளர்களும், விநியோகஸ்தர்களும் ஒரே கூரையின் கீழ் பெற்றுக்கொள்ள ஒருமுறை விஜயம் செய்து பாருங்கள்.

ஆல்சிலோன் டிஸ்ரிபியூட்டர்ஸ்
212, 214, கே.கே.எஸ். வீதி, யாழ்ப்பாணம். தொ.பே. 021 222 5542, 021 5671527 மின்னஞ்சல் - acdil@ymail.com

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிக்கேசன் (பிறைவேற்) லிமிட்ரெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 06.01.2017 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.